மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்
பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

தொகுப்பு – 1

மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

சிறப்பு வெளியீடு எண். 29

தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2019

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

தொகுப்பு – 1

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 22.01.2018 அன்று சென்னை, சி. கந்தசாமி நாயுடு கல்லூரி வளாகத்தில் பச்சையப்பன் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள அம்மா அரங்கத்தை திறந்து வைத்து, 21 ஜோடிகளுக்கு இலவச திருமணங்களை நடத்தி வைத்து ஆற்றிய உரை.	1
2.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.01.2018 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற 68ஆவது தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி நிறைவு விழாவில் ஆற்றிய உரை	5
3.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.01.2018 அன்று சென்னையில் நடைபெற்ற "Master Class in Liver Diseases 2018" கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.	13
4.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.01.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் எரிசக்தித் துறை சார்பில் நடைபெற்ற உடன்குடி அனல் மின் திட்டம் நிலை–I அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை	19
5.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.02.2018 அன்று சேலம், பள்ளப்பட்டி விழாவில் ஆற்றிய உரை.	27

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

6. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.02.2018 அன்று சேலம், காவேரி மருத்துவமனை தொடக்க விழாவில் ஆற்றிய உரை. 37

7. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.02.2018 அன்று ரூ.21.42 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட எடப்பாடி நகர் புறவழிச்சாலை (பகுதி–I)ஐ திறந்து வைத்து ஆற்றிய உரை..... 42

8. காவேரி நதிநீர் பிரச்சினை குறித்து 22.02.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் உரை. 47

9. Jain International Trade Organisation சார்பில் 23.02.2018 அன்று நடைபெற்ற JITCO CONNECT 2018 நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை....... 55

10. கிரெடாய் அமைப்பின் சார்பில் 23.02.2018 அன்று சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நடைபெற்ற FAIRPRO 2018 வீட்டுவசதி கண்காட்சியை தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை........ 60

11. **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் 70ஆவது பிறந்தநாளையொட்டி 24.02.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
	அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் மரக்கன்றுகள் நடும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.......	66
12.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 05.03.2018 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை..........	74
13.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.03.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை.	83
14.	06.03.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய நிறைவுரை..........	93
15.	காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.03.2018 அன்று ஆற்றிய உரை.	97
16 .	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.03.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை..........	106

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
17.	கைவினைஞர்கள் தினத்தையொட்டி 08.03.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.....	122
18.	சேலம் மாவட்டம் சோனா பொறியியல் கல்லூரியில் 12.03.2018 அன்று நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கிய விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.....	133
19.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.03.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை விழாவில் ஆற்றிய உரை...	144
20.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 25.03.2018 அன்று சேலம் விமான நிலையத்தில், உடான் விமான சேவை திட்டத்தின் கீழ், சேலம்–சென்னை இடையே Trujet விமான நிறுவனத்தின் முதல் விமான சேவையை தொடங்கி வைத்து ஆற்றிய உரை.	171
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.03.2018 அன்று கோயம்புத்தூர், தொண்டாமுத்தூரில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை..	182

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
22.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.03.2018 அன்று கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சி அருங்காட்சியகத்தை திறந்து வைத்து விழாப் பேருரை.	187
23.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.03.2018 அன்று நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.	194
24.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.03.2018 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரம், பக்கநாட்டில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை.	205
25.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.03.2018 அன்று சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வட்டாரம், சமுத்திரத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை.	214
26.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 30.03.2018 அன்று மதுரையில், 120 ஜோடிகளுக்கு நடைபெற்ற திருமண விழாவில் ஆற்றிய உரை.	224
27.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 03.04.2018 அன்று சென்னையில் காவேரி நதிநீர் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆற்றிய உரை.	236

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
28.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.04.2018 அன்று, சென்னை, ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு காவல்துறை சார்பில் நடைபெற்ற காவலர் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா மற்றும் இந்திய குடியரசுத் தலைவர், மத்திய உள்துறை அமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.	249
29.	சென்னை, அடையாறு புற்றுநோய் சிகிச்சை மைய விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.04.2018 அன்று ஆற்றிய உரை.	265
30.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.04.2018 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமாக்கல் விழாவில் ஆற்றிய உரை.	271
31.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.04.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.	276
32.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.04.2018 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.	287

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
33.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.04.2018 அன்று சேலம் மாநகரில் நடைபெற்ற அரசு விழாவில் நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை	302
34.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.05.2018 அன்று சென்னை, பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பச்சையப்பன் கல்லூரியின் 175ஆவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.	314
35.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.05.2018 அன்று சென்னை, பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பச்சையப்பன் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை	325
36.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 11.05.2018 அன்று தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை	334
37.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.05.2018 அன்று சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடைபெற்ற 43ஆவது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை	355

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
38.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.05.2018 அன்று சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை	373
39.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.05.2018 அன்று ஈரோடு மாவட்டம், பவானி அரசு மேல்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை	385
40.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.05.2018 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நடைபெற்ற 122ஆவது உதகை மலர்க்கண்காட்சி மற்றும் குந்தா நீரேற்று புனல் மின் திட்டப்பணிகள் தொடக்க விழாவில் ஆற்றிய உரை	397
41.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.05.2018 அன்று திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் நடைபெற்ற கொடைக்கானல் கோடை விழா 2018 மற்றும் 57ஆவது மலர்க் கண்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை	425
42.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி**அவர்கள் 25.05.2018 அன்று சென்னை, எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்தில் நேரு பூங்காவிலிருந்து சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் சின்னமலை முதல் ஏ.ஜி.–டி.எம்.எஸ். வரையிலான மெட்ரோ இரயில் சுரங்கப்பாதைகளில் பயணிகள் சேவையைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை	455

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
43.	அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட இப்தார் நோன்பு திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை (07.06.2018)	467
44.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.06.2018 அன்று, மயிலாடுதுறை பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய உரை	475
45.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 30.06.2018 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை	498

மக்கள் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், நாம் அவர்கள் மீது கொண்ட அக்கறையும்தான் நல்ல தலைமையை பறைசாற்றும்!

பச்சையப்ப முதலியார் அவர்கள் எளிமை, அன்புள்ளம், கடவுள்பற்று, இரக்க மனப்பான்மை, ஏழையர்க்கு என்றும் இரங்கும் இயல்பு முதலிய குணங்களின் உருவமாக விளங்கி, தம் செல்வத்தையும், செல்வாக்கினையும் எழை, எளிய மக்களின் துயரங்களை போக்க தனது செல்வங்கள் அனைத்தையும் மக்களின் நன்மைக்காக அர்ப்பணித்தவர் என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இவர் இளம்வயதில் தந்தையை இழந்த நிலையில், இளம் வயதில் தான் கற்ற கல்வியை ஆதாரமாகக்கொண்டு, 22 வயதிலேயே சென்ற இடங்களில் எல்லாம் சிறந்து விளங்கினார்.

பச்சையப்பன் அறக்கட்டளை மூலம், சென்னை, காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் 6 கல்லூரிகளும், 6 உயர்நிலைப்பள்ளிகளையும் நிறுவி கல்விப்பணியை இன்றுவரை சிறப்பாக செய்து வருவதை நான் மனதார பாராட்டுகிறேன்.

ஒரு நாடு சிறந்து விளங்க கல்வியும், சுகாதாரமும் அவசியமாகும். அந்த வகையில் கல்விக்கு பச்சையப்பன் அறக்கட்டளை ஆற்றும் பணியினை போற்றி, மேலும் அவர்கள் பணிதொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் பச்சையப்பன் அறக்கட்டளை, திருக்கோயில் அறப்பணிகளையும் சிறப்பாக செய்து வருவதை அறிந்து எனது மகிழ்ச்சியினை தெரிவித்து, மேலும் வளர வாழ்த்துகிறேன்.

மார்ச் 1968இல் அறக்கட்டளை நிறுவப்பட்டதற்கான 125ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் கல்லூரியின் பழைய மாணவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மே 1994ஆம் ஆண்டு இக்கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 175ஆவது ஆண்டு விழாவினை சிறப்பாக கொண்டாட வாழ்த்துகிறேன்.

மக்களின் மனதில் நீங்கா இடம் பெறும் வகையில் ஆட்சி செய்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

30 மாவட்டங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாக்கள் நடத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட மக்களுக்கு

நன்மை பயக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் வருங்காலமாக விளங்கும் பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கி வந்த 2 இணை சீருடையை 4 இணையாக உயர்த்தியும், புத்தகங்கள், கணித உபகரணங்கள், மிதிவண்டிகள் உட்பட பல்வேறு விலையில்லாப் பொருட்களையும், அறிவியல் அறிவு மேம்படுத்திக் கொள்ள அவர்களுக்கு விலையில்லா மடிக்கணினியும் வழங்கினார்கள்.

தாலிக்குத் தங்கம், திருமண நிதியுதவி, 2ஆவது பசுமைப் புரட்சிக்கு சிறப்பு வேளாண் தொகுப்புத் திட்டம், அதிக அளவில் பால் கொள்முதல் செய்து வெண்மைப் புரட்சி, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் விலையில்லா கறவை மாடுகள், 4 ஆடுகள் வழங்கும் திட்டம், பெண்களின் வேலைப் பளுவினைக் குறைக்க விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களால் தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார புரட்சி ஏற்படுத்தியதோடு, பிற மாநிலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுத்தினார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளில் பள்ளிக்கல்வி துறைக்கு நிதி ஒதுக்கீடு சுமார் 1 இலட்சத்து 37 ஆயிரத்து 261 கோடி ரூபாய் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 1,599 பள்ளிகள் கடந்த 7 ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

மாணவர் சேர்க்கை தொடக்கக் கல்வி நிலையில் 99.85 சதவீதம், நடுநிலை கல்வியில் 99.20 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு அரசின் சார்பில் 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவினுடைய 6 ஆண்டுகால ஆட்சியிலே, 4 பொறியியல் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள், 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் என மொத்தம் 65 கல்லூரிகள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும் 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள், 1 பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றை நிறுவியுள்ளது.

இன்று திருமணம் காணும் மணமக்கள் அனைவரும் தங்களது இல்லற வாழ்வில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, சீரும், சிறப்பாக வாழ்ந்து, மற்றவர்களுக்கு உதாரணமாக பெருவாழ்வு வாழ மனதார வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
22.01.2018 அன்று சென்னை, சி. கந்தசாமி நாயுடு கல்லூரி வளாகத்தில்
பச்சையப்பன் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள
அம்மா அரங்கத்தை திறந்து வைத்து, 21 ஜோடிகளுக்கு
இலவச திருமணங்களை நடத்தி வைத்து ஆற்றிய உரை.

விளையாட்டு என்பது பொழுதுபோக்கு மட்டுமல்ல உடல் நலத்தையும், ஆரோக்கியத்தையும் தக்க வைத்துக் கொள்ளும் யுக்தி!

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பாலகிருஷ்ண ரெட்டி அவர்களே! மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ்நாடு கூடைப்பந்தாட்ட கழக தலைவர் திரு. V.V.R. ராஜ் சத்யன் அவர்களே!

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ்குமார் அவர்களே!

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திருமதி ரீட்டா ஹரிஷ் தாக்கர் அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தமிழ்நாடு கூடைப் பந்தாட்டக் கழகச் செயலாளர் திரு. ஆதவ் அர்ஜுன் அவர்களே!

தேசிய கூடைப் பந்தாட்ட கழக சம்மேளனத் தலைவர் திரு. K. கோவிந்தராஜ் அவர்களே! தேசிய கூடைப் பந்தாட்ட கழக சம்மேளனத்தின் செயலர் திரு. சந்திரமுகி சர்மா அவர்களே! கூடைப் பந்தாட்ட விளையாட்டின் பயிற்சியாளர்களே! விளையாட்டு வீரர், வீராங்கனைகளே, பொதுமக்களே, ஊடக மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது பணிவான மாலை வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மகாகவி பாரதியார் அவர்கள் தனது பாப்பா பாடலில்,

"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா– ஒரு
குழந்தையை வையாதே பாப்பா"

என்று பாடியிருப்பார். தேசிய கவி பாரதியார் அவர்கள் இந்தப் பாடலை குழந்தைகளுக்காக மட்டுமே பாடவில்லை, அனைத்துத் தர மக்களுக்கும் சொல்லும் ஒரு நீதியாக இதை மனதில் கொள்ள வேண்டும். விளையாட்டு என்பது உடல் நலத்திற்கு மட்டுமல்ல, சமுதாய ஒருமைப்பாட்டுக்குமான ஒரு நிகழ்வும் தான். குழந்தைகளின் மனதில் தன் கருத்துகளை எளிதில் பதிய வைத்துவிட்டால், அக்குழந்தைகள் எதிர் காலத்தில் இந்த சமுதாயத்தில் நல்லிணக்கத்தோடு நடந்து கொள்ளும் என்பதால் தான் தேசிய கவி பாரதியார் அவர்கள் பாப்பாவை மையப்படுத்தி இந்தப் பாடலைப் பாடினார்கள்.

விளையாட்டு என்பது பொழுதுபோக்கிற்கு மட்டுமல்ல, உடல் நலத்தையும், ஆரோக்கியத்தையும் தக்க வைத்துக் கொள்ளும் ஒரு யுக்தியாகவே நாம் கருத வேண்டும். விளையாட்டு என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமல்லாமல், உடல் நலம், மன நலம் பேணுவதாகவும், வாழ்க்கைக்கு பயிற்சி அளிக்கும் களமாகவும் விளங்குகிறது. சாதி, மதம், இனம், மொழி என எந்த பேதமும்

இல்லாமல் மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாய் திகழ்கிறது. அத்தகைய விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு பல விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து வருகிறது. இதன் ஒரு அங்கமாக, விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், உலகத் தரத்திலான விளையாட்டு ஆடுகளங்களை அமைத்தல், இளம் வீரர்களை அடையாளம் கண்டு தொடர் பயிற்சி அளித்தல், சாதனைகள் படைக்கும் வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் உயரிய ஊக்கத் தொகை மற்றும் உதவித் தொகை வழங்கி கவுரவித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

1992ஆம் ஆண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை உருவாக்கி, சென்னையில் 260 நாட்களில் உலகத் தரம் வாய்ந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், இந்த நேரு உள் விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம், வேளச்சேரி நீச்சல் குள வளாகம் போன்ற நவீன விளையாட்டு அரங்கங்கள், அதுமட்டுமல்லாமல் இந்தியாவிலேயே முதன் முதலாக விளையாட்டுக்கென 125 ஏக்கர் நிலப்பரப்பில் காஞ்சிபுரம் மாவட்டம்

மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் மற்றும் மாவட்டங்களில் நவீன விளையாட்டு வசதிகள் போன்ற சிறந்த விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தமிழ்நாட்டினை விளையாட்டுத் துறையில் முன்னோடி மாநிலமாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

1995ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், 2013ஆம் ஆண்டு உலக சதுரங்க போட்டி போன்ற சர்வதேச போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திய பெருமையும், பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் தமிழ்நாட்டு வீரர்களை ஊக்குவித்து பாராட்டும் வகையில், உயரிய ஊக்கத் தொகை வழங்க ஆணையிட்ட பெருமையும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களையே சாரும்.

கடந்த ஆண்டில் மட்டும் அரியலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில் உள்ளிட்ட 10 இடங்களில் 21 கோடியே 96 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு திறந்து வைத்துள்ளது.

இது தவிர, திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடியில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது தவிர, அரியலூர், தூத்துக்குடி மற்றும் தேனியில் 3 கோடியே 38 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு விடுதிகளுக்கான புதிய கட்டிடங்கள், தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக மின்னொளியுடன் அமைக்கப்பட்ட செயற்கை இழை ஹாக்கி மைதானம், திருவள்ளூரில் 1 கோடியே 36 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக

அமைக்கப்பட்ட நீச்சல்குளம், சென்னை நேரு உள்விளையாட்டரங்க வளாகத்தில் 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்ட சறுக்கு வளையம், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் 56 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட சிறு விளையாட்டரங்கம், 17 மாவட்டங்களில் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேவையான நவீன உபகரணங்களுடன் புதுப்பிக்கப்பட்ட உடற்பயிற்சி கூடங்கள் என கடந்த ஓராண்டில் மட்டும் அம்மாவின் அரசால் 44 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதக்கங்கள் பெறும் தமிழ் நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளின் சாதனைகளை பாராட்டும் வண்ணமும், அவர்கள் மேலும் பல சாதனைகள் புரிய ஊக்குவிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் உயரிய ஊக்கத் தொகையும், பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஓராண்டில் மட்டும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 86 விளையாட்டு வீரர்களுக்கு 3 கோடியே 62 இலட்சம் ரூபாயும், சர்வதேச அளவில் பதக்கங்கள் வென்ற 42 விளையாட்டு வீரர்களுக்கு 3 கோடியே 30 இலட்சம் ரூபாயும் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது. அவ்வாறே, 71 பயிற்சியாளர்களுக்கு 1 கோடியே 95 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் விளையாட்டு ஆர்வத்தை பரவலாக்கி இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்பதை அதிகரிக்கச் செய்யும் வகையில் உலகத் தரத்திலான போட்டிகளை மாநிலத்தில் நடத்திட தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு நல்கி ஊக்கம் அளித்து வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, தேசிய அளவிலான போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு நிதியுதவி அளித்து வருகிறது. அந்த வகையில், தமிழ்நாடு அரசு, தேசிய அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவியினை **3** இலட்சம் ரூபாயிலிருந்து **10** இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது.

கூடைப்பந்து விளையாட்டில் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது. **1980**ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. அமர்நாத் அவர்கள் தலைமையிலான இந்திய கூடைப்பந்து அணி பங்கேற்றது.

இந்திய அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கூடைப்பந்து வீரர்கள் இடம் பெற்று வருகிறார்கள். தற்போதைய இந்திய அணியில் இடம் பெற்றுள்ள திரு. ஜீவானந்தம், திரு. காசிராஜன் மற்றும் திரு.காளிதாஸ் ஆகியோர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டு வரும் முதன்மை நிலை விளையாட்டு விடுதியில் பயின்ற மாணவர்கள் என்பதை பெருமையுடன் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு கூடைப்பந்து அணிக்கு நன்கு பயிற்சியளித்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், கூடைப்பந்து விளையாட்டில் சிறந்து விளங்கும் செர்பிய நாட்டைச் சேர்ந்த திரு. மிலன் ஒப்போசிச் என்ற ஒரு சிறந்த பயிற்சியாளரை வரவழைத்து பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

தமிழ்நாடு அணியிலும், இந்திய அணியிலும் பல வருடங்களாக விளையாடி பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் அனிதா, அமெரிக்காவின் தேசிய கூடைப்பந்து சம்மேளனத்தின் முதல்கட்டத் தேர்வில் கலந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த புஷ்பா என்ற கூடைப்பந்து வீராங்கனை

போன்றோர் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கிறார்கள். அது மட்டுமல்லாது, அமெரிக்காவின் தேசிய கூடைப்பந்து சம்மேளனத்தின் போட்டிகளில் தன் பங்களிப்பை அளித்து வரும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த திரு. சத்னம் சிங் பமாரா என்ற வீரர் இங்கே தற்போது நடக்கும் போட்டியில் கலந்து கொண்டுள்ளார் என்பதை அறிகின்றேன். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

2017ஆம் ஆண்டு தேசிய அளவில் நடைபெற்ற 14, 17 மற்றும் 19 வயதினருக்கான கூடைப்பந்து போட்டிகளில் தமிழ்நாட்டு பெண்கள் அணியினர் முதலிடம் பெற்றுள்ளனர். 2017ஆம் ஆண்டு நடைபெற்ற சீனியர் தேசிய கூடைப்பந்து போட்டிகளில் தமிழ்நாட்டு ஆடவர் அணியினர் இரண்டாமிடம் பெற்றுள்ளனர். இவ்வாறாக, தேசிய அளவில் தமிழ்நாட்டு கூடைப்பந்து வீரர்கள் தொடர் வெற்றிகளை பெற்று வருகின்றனர். தற்போது, 68வது தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டிகள் 17ஆம் தேதி முதல் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. நாடு முழுவதிலும் இருந்து 31 ஆண்கள் அணியும், 26 பெண்கள் அணியும் கலந்து கொண்டுள்ளனர்.

போட்டிகளில் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்று சாம்பியன்ஷிப் பட்டம் வெல்லும் அணியினருக்கும், போட்டிகளில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்திய இதர அணியினருக்கும் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு அனைவருக்கும் பரிச்சயமான கூடைப்பந்து ஆட்டத்தில் மிகப் பெரிய வெற்றியாளராகத் திகழ்ந்த அமெரிக்காவின் மைக்கேல் ஜோர்டான் என்பவர், தனது அனுபவத்தைப் பற்றிக் கூறுகையில், தான் 300 போட்டிகளில் தோற்று இருப்பதாகவும், 26 முறை போட்டியின் மிக முக்கியமான தருணங்களில் தவற விட்டிருப்பதாகவும், அப்படிப்பட்ட பல தோல்விகள் தான் தனது அனைத்து வெற்றிகளுக்கும் ஆதாரம் ஆனதாகக் குறிப்பிட்டுள்ளார்.

‘முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்’

‘முயற்சி திருவினையாக்கும்’

‘முயன்றால் முடியாதது எதுவுமில்லை’

‘தோல்விகள் என்பவை வெற்றியின் படிக்கட்டுகள்’

போன்ற நமது தமிழ் சான்றோர்களின் தத்துவங்களையே வேதமாகக் கொண்டு, மனமும், உடலும் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்வதும், இடையறாது பயிற்சி பெறுவதும் தான் வெற்றியின் திறவுகோல் என்பதை இளைஞர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசு, விளையாட்டுத் துறைக்காக பல கோடி ரூபாய்களை ஒதுக்குகிறது என்றால், அதற்கு நன்றிக் கடனாக விளையாட்டு வீரர்களாகிய நீங்கள் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் புகழை உலக அரங்கிற்கு சிறப்பாகக் கொண்டு செல்லும் அளவிற்கு விளையாட வேண்டும்.

இதை ஒவ்வொரு விளையாட்டு வீரரும் உறுதிமொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த இனிய நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் போட்டிகளைச் சிறப்பாக நடத்திய இந்திய கூடைப்பந்து சம்மேளனம் மற்றும் தமிழ்நாடு கூடைப்பந்து சங்க தலைவர் திரு. ராஜ் சத்யன், செயலாளர் திரு. ஆதவ் அர்ஜுன் மற்றும் நிர்வாகிகளுக்கு எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*

24.01.2018 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற 68ஆவது தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி நிறைவு விழாவில் ஆற்றிய உரை.

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் மனிதவளம் மிக்க ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர். சி.விஜயபாஸ்கர் அவர்களே! மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களே! உடல் உறுப்பு தான ஆணையத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் பாலாஜி அவர்களே!

டாக்டர் ரவீந்திரநாத் அவர்களே! பேராசிரியர் முகம்மது ரீலா அவர்களே! டாக்டர் ரமேஷ் கிருஷ்ணன் அவர்களே!

பல்வேறு வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கும் பேராசிரியர்களே! மருத்துவர்களே! இந்த இனிய விழாவில் கலந்துகொள்ள வந்திருக்கும் அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு, 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். உடல் நோய் இல்லாதவர்கள் மன வளம் மிக்கவர்களாக இருப்பார்கள். மன வளம் மிக்கவர்களால் தான் ஒரு நாட்டின் மனித வளம் பெருகும். இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே மனித வளம் மிக்க ஒரு முன்னோடி மாநிலமாகவும், முன்மாதிரி மாநிலமாகவும் திகழ்ந்து வருகிறது. அதற்கு அடிப்படைக் காரணம் சுகாதாரம் தான்.

எனவே, அரசுத் துறைகளிலேயே, சுகாதாரத் துறை என்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. தாய்சேய் மற்றும் குடும்ப நல சேவைத் திட்டங்களை செயல்படுத்துவது மற்றும் உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதிலும் இந்தியாவிலேயே முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது. நம் மாநிலத்தில் அனைவருக்கும் சமமான, எளிதில்

கிடைக்கக்கூடிய மற்றும் தரமான சுகாதார சேவையை மக்கள் நல்வாழ்வுத் துறை மக்களுக்கு வழங்கி வருகிறது.

ஐக்கிய நாடுகளின் மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை ஏற்கெனவே தமிழ்நாடு அடைந்த நிலையில், மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே தேசிய இலக்குகளையும் அடைந்துள்ளது. 2030–க்குள் அடைய வேண்டிய நிலையான வளர்ச்சி இலக்குகளை முன்னதாகவே அடைய முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

இதன் காரணமாகவே வளர்ந்த நாடுகள் அடைந்துள்ள சுகாதார குறியீடுகளை, 2023ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்ற இலக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட "தொலைநோக்கு திட்டம் 2023"இல் விவரிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையம் உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் உயரிய மருத்துவ சேவை பெற வசதியுள்ள இடமாக தமிழ்நாடு கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளின் மூலம் இலவசமாக உடல் உறுப்பு மாற்று சிகிச்சை செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தனியார் மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த சிகிச்சைக்காக 35 இலட்சம் ரூபாய் வரை தமிழ்நாடு அரசு பயனாளிகளுக்கு வழங்கி வருகிறது. இந்தியாவிலேயே உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக அதிகமான தொகை வழங்கும் மாநிலம் தமிழ்நாடு மட்டும் தான்.

உடல்உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின் தேவைப்படும் விலை அதிகமான எதிர்ப்புச் சக்தியை ஒடுக்கும் மருந்துகள் தமிழ்நாட்டில் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது.

இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவதில், நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்கான தேசிய விருதினை தொடர்ந்து மூன்றாவது முறையாக தமிழ்நாடு பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் சென்னையில் நடந்த விழாவில் இந்தியாவிலேயே முதன் முறையாக 1,000 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளதை பாராட்டி மாண்புமிகு இந்திய துணை குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு அரசிற்கு விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் இதுவரை 6,097 உடல் உறுப்புகள் 1,082 கொடையாளர்களிடமிருந்து தானமாக பெறப்பட்டுள்ளது. மூளைச்சாவு அடைந்த ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்ட இதயம், இதய வால்வு, இரத்தக் குழாய், நுரையீரல், கல்லீரல், கணையம், சிறுகுடல், தோல், சிறுநீரகங்கள், கண்கள் உள்ளிட்ட உறுப்புகள் மூலம் குறைந்தது 9 பேர்களுக்கு வாழ்வளிக்க முடியும். உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையத்திற்காக தனியாக இணையதளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உடல் உறுப்பு தானம் செய்ய விருப்பம் உள்ள நபர்கள் ஆன்லைன் மூலமாக மிக எளிதாக பதிவு செய்து கொள்ளும் செயலி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் 2016ஆம் ஆண்டு சீரமைக்கப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கில் மேற்கொள்ளப்பட்ட கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் அனைத்தும் 100 சதவீத வெற்றியுடன் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுவரை 24 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் அரசு ஸ்டான்லி மருத்துவமனையின் கல்லீரல் சிறப்பு மையத்தில் செய்யப்பட்டுள்ளன.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை இம்மருத்துவமனையில் தொடங்குவதற்கு குளோபல் மருத்துவமனையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் முகமது ரேலா அவர்களைக் கொண்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனை மருத்துவர்களுடன் இணைந்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் அனைத்தும் 100 சதவீத வெற்றியுடன் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

20 ஆண்டுகளுக்கு முன்பாக அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பேபன் சுட்கே என்ற 5 நாள் பெண் குழந்தைக்கு இலண்டனில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை முகமது ரேலா அவர்களால் செய்யப்பட்டது. தற்போது மேடையின் முன்பு அனைவரின் முன் எந்த அளவிற்கு உடல் தகுதியோடு இருக்கிறார் என்பதை நம் கண்முன் பார்த்தோம். அவர் தற்போது சட்டம் பயின்று வருகிறார்.

அவசர கால ஊர்தியின் மூலம் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக கொடையாளரிடமிருந்து தேவைப்படுவோருக்கு நல்ல நிலையில் உறுப்பை விரைந்து வழங்கிட பசுமை வழித்தடம் (Green Corridor) போக்குவரத்துத் துறையின் மூலமாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியில் காவல் துறையின் பங்கு மகத்தானது.

உடல்உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில், மருத்துவத் துறையை சார்ந்த அறுவை சிகிச்சை நிபுணர் குழுவினர், ஆலோசகர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மோகன் பவுண்டேஷன், நியாஸ் பவுண்டேஷன், டாங்கர் பவுண்டேஷன் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு மகத்தானது. தொடர்ச்சியான செயல்பாடுகள் மூலம் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்மாதிரியான மாநிலமாக தொடர்ந்து விளங்கும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை அருகில் கிராமத்தில் பிறந்து விடாமுயற்சியால் ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பட்டப்படிப்பு மேற்கொண்டு உலக அளவில் இன்றைக்கு சிறந்த மருத்துவ நிபுணராக விளங்கிக் கொண்டிருக்கின்ற டாக்டர் ரீலா அவர்களை இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவருடைய சேவை இன்றைக்கு நாட்டிற்கு நலம் அளித்துக் கொண்டிருக்கின்றது. மகத்தான டாக்டர் ரீலா அவர்கள் தமிழகத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்றார்கள். அவரை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உடல்உறுப்புதானத்தைஒருமக்கள்இயக்கமாகவேமாற்றுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த இனிய விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் மற்றும் இந்த விழாவினை ஏற்பாடு செய்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
27.01.2018 அன்று சென்னையில் நடைபெற்ற
“Master Class in Liver Diseases 2018”
கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.

ஒரு நாட்டின், தொழில் முன்னேற்றத்திற்கும் பொதுமக்கள் நலத்திற்கும் மின்சாரம்தான் உயிர்நாடி!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, உடன்குடி மிக உய்ய அனல் மின் நிலையம் நிலை–I அடிக்கல் நாட்டு விழா மற்றும் களப்பணி உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குகின்ற விழா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி தலைமையுரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, இந்நிகழ்ச்சிக்கு வரவேற்புரையாற்றிய எரிசக்தித் துறையின் முதன்மை செயலாளர் திரு.விக்ரம் கபூர் அவர்களே, மற்றும் வாழ்த்துரை வழங்கிய பெல் நிறுவனத் தலைவர் திரு அதுல் சோப்தி அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நன்றியுரை ஆற்ற இருக்கின்ற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.சாய்குமார் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற

உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, இங்கே பணி ஆணை பெற வந்திருக்கும் பயனாளிகளே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மின்சாரத்துறை உயரதிகாரிகளே, அரசு அலுவலர்களே, வருகை தந்துள்ள கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிர்வாகிகளே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு தொழில் துறையில் முதன்மையான இடத்தில் உள்ளது. இதற்குக் காரணம், 2011ஆம் ஆண்டு பதவியேற்றதில் இருந்து தொழில் துறையில் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்து வந்த பெருமுயற்சியே ஆகும்.

மாநிலத்தில் தொழில் துறை வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது மின்சாரம் ஆகும். தடையற்ற மின்சாரம் இருந்தால் தான் தொழில்களை சிரமமின்றி நடத்த முடியும். தொழில்கள் சிரமமின்றி நடத்த முடியும் என்ற நிலை இருந்தால் தான், தொழிற்சாலைகள் பெருகும், வேலைவாய்ப்பு அதிகரிக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஆர்வம் காட்டுவார்கள். அதன் மூலம் தனிநபர் வருமானம் பெருகும், நாடும் வளம் பெறும். அந்த வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பதவியேற்ற போது இருந்த மின்சார பற்றாக்குறை நிலைமையை முழுவதுமாக அகற்றி இருண்டு கிடந்த தமிழ்நாட்டை மிளிரச் செய்து, மின்மிகை மாநிலமாகவும் மாற்றிக் காட்டுவேன் என்று சபதம் ஏற்று, அந்த சபதத்தை நிறைவேற்றும் விதத்தில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள். அதன் காரணமாக இன்று தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகத் திகழ்கிறது என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதனால், தமிழ்நாட்டில் 2010ஆம் ஆண்டு மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களையும் சேர்த்து 16 ஆயிரத்து 873 மெகாவாட்டாக இருந்த மாநிலத்தின் மின் நிறுவு திறன், தற்போது 29 ஆயிரத்து 492 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இதில் 2011ஆம் ஆண்டிலிருந்து மட்டும் 10 ஆயிரத்து 673 மெகாவாட் மின்சாரம், மாநில மற்றும் மத்திய தொகுப்பு மின் திட்டங்கள், மின் கொள்முதல் மற்றும் சூரிய மின்சக்தி மூலம் தமிழ்நாடு மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு மின் தேவையில் தன்னிறைவு அடைந்தது மட்டுமல்லாமல் மின்மிகை மாநிலமாகவும் திகழ்கிறது.

எதிர்வரும் காலங்களில் மாநிலத்தின் எரிசக்தி தேவை வேகமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை எதிர்கொள்ளும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி பல்வேறு மின் திட்டங்களை விரைந்து செயலாக்கத்திற்கு கொண்டுவர தொடர்ந்து ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் 46 ஆயிரத்து 821 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 ஆயிரத்து 200 மெகாவாட் அளவிற்கு மின் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மேலும் கூடுதலாக, 53 ஆயிரத்து 890 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 ஆயிரத்து 300 மெகாவாட் அளவிற்கான புதிய மின் திட்டங்கள் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில், தற்பொழுது, தலா 660 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகளை உடைய உடன்குடி அனல் மின் திட்டம் – நிலை–I–ற்கான பணி ஆணை பாரத மிகுமின் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020–2021ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், செயலாக்கத்திற்கு வரவிருக்கும் பல்வேறு மின் திட்டங்களை கருத்தில் கொண்டு தற்போது உள்ள மின் தொடர் கட்டமைப்பு, தொடர்ந்து விரிவாக்கப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக, 2016–2017ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் மாநிலத்தில் உயர் அழுத்த மின் பாதை அமைப்பதில் இந்தியாவிலேயே முதல் இடத்தையும், துணை மின் நிலையங்களின் மின்திறனை அதிகப்படுத்துவதில் இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாநிலம் முழுவதும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யும் வகையில் மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகளின் பயனாக, மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்ற 2011ஆம் ஆண்டு முதல் ஏறக்குறைய 59.97 இலட்சம் மின் இணைப்புகள் பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளன. 22 ஆயிரத்து 136 கி.மீ. உயரழுத்த மின் பாதைகள் 68 ஆயிரத்து 728 கி.மீ. தாழ்வழுத்த மின் பாதைகள் மற்றும் 87 ஆயிரத்து 187 மின்மாற்றிகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த உன்னத நிலையை அடைந்ததன் விளைவாக, தமிழ்நாடு பல்வேறு மின் நுகர்வோர் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உதாரணத்திற்கு, அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் 100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்குதல், அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும் 200 யூனிட்டுகள் இலவச மின்சாரம் வழங்குதல், அனைத்து மின் விசை நெசவாளர்களுக்கும் கட்டண குறைப்பு மற்றும் 750 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்குதல் போன்ற திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

இவை தவிர, மின் இணைப்பை விரைந்து வழங்க ஒருநாள் மின் இணைப்பு திட்டம் மற்றும் ஆறு மாத காலத்திற்குள் இலவச விவசாய

மின் இணைப்பு வழங்குவதற்கான தட்கல் முறையில் விரைவுத் திட்டம், தொழில் துறை முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு ஏழு நாட்களுக்குள் மின்சாரம் வழங்கும் திட்டம், வணிகம் செய்யும் சூழலை எளிதாக்குவதற்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் தொழிற்சாலை மற்றும் தொழில் முனைவோருக்கு தனி மின்பாதை இலவசமாக அமைத்துத் தரும் திட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளன.

அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றி மக்களுக்கும், விவசாயிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் உடனுக்குடன் பயன்கள் சென்றடைய மனித சக்தி அவசியமாகும். அதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 2011ஆம் ஆண்டு முதல் பல்வேறு பிரிவுகளில் சுமார் 7 ஆயிரத்து 619 காலி பணியிடங்களை நிரப்பியுள்ளது. அதன் தொடர்ச்சியாக, இன்று 894 கள உதவியாளர் பதவிக்கு பணி நியமன ஆணை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு காலிப் பணியிடங்களை அவ்வப்போது நிரப்பி, மின் தேவையினை மக்களுக்கு உடனுக்குடன் வழங்கிட மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த துரித நடவடிக்கையின் காரணமாகத் தான், 2011ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தைத் தாக்கிய 'தானே' புயலின் போதும், 2016ஆம் ஆண்டு சென்னையைத் தாக்கிய 'வர்தா' புயலின் போதும், சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாக்கிய 'ஒகி' புயலின்போதும், ஏற்பட்ட இயற்கை பேரிடர்களினால் சாய்ந்த மின் கம்பங்களை போர்க்கால அடிப்படையில் சரி செய்து, மக்களுக்கு உடனடி மின் சேவை வழங்க முடிந்தது என்பதை பெருமையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

இயற்கை பேரிடர்களினால் பாதிக்கப்படும் நேரங்களில், மாவட்டம் விட்டு மாவட்டம் சென்று, இரவு பகல் பாராது உழைத்து மக்களுக்கு விரைவில் மின் சேவை வழங்க மிகவும் உறுதுணையாக இருந்த பொறியாளர்கள் முதல் அனைத்து மின் துறை ஊழியர்களுக்கும், அவர்களை ஒருங்கிணைத்து முனைப்பாக களப் பணியாற்றிய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி அவர்களுக்கும், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர் அவர்களுக்கும், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. சாய்குமார் அவர்களுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றிகளையும் இந்த நேரத்தில் மீண்டும் ஒருமுறை கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

தற்போது பணி ஆணை பெற வந்திருக்கும் நீங்கள் அனைவரும், அவர்கள் ஆற்றிய சேவையை அறிந்து வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அதே வழியில் மக்களுக்கு நன்மை செய்யும் விதமாக கடமையில் கண்ணாகப் பணியாற்றி, அரசுக்கும் நற்பெயர் பெற்றுத்

தருவீர்கள் என்று மாண்புமிகு அம்மாவின் அரசு உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறது.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு வரை தமிழ்நாடு மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்தது. ஒரு நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கும், பொது மக்கள் நலத்திற்கும் மின்சாரம் உயிர்நாடியாக இருப்பதை உணர்ந்து, கடுமையான முயற்சியாலும், தொலைநோக்கு திட்டங்களாலும், தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக உயர்த்தினார்.

இனி எந்தக் காலத்திலும் தமிழ்நாட்டில் இருளும் இன்னலும் சூழ்ந்துவிடக் கூடாது என்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். அதனால் தான் தமிழ்நாடு இன்றைக்கும் மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் கடமை உணர்வோடு நாங்கள் நல்லோரும், வல்லோரும் போற்றும் நல்லாட்சி வழங்கி வருகிறோம்.

இந்தத் துறையில் 80,000 பேர் பல்வேறு மட்டங்களில் பணிபுரிந்து வருகின்றார்கள். இவர்களுடைய சேவை மகத்தானது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு முன்னாலே தமிழ்நாடு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல புயல் வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, வேகமாக, துரிதமாக பணியாற்றி மக்களுக்கு சேவை செய்யக்கூடிய ஒரு அமைப்பு மின்சாரத் துறை என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, 80,000 பேர் சிறப்பான முறையிலே பணியாற்றிய காரணத்தினால் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவு மின்உற்பத்தி செய்கின்ற மாநிலம் என்ற பெருமையை பெற்றிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

புதிதாக பணி ஆணை பெற வந்திருக்கும் நீங்களும் கடமை உணர்வோடு மக்கள் பணியாற்றி, அரசுக்கு நற்பெயரை ஈட்டித் தர வேண்டும் என்று உங்களைஅன்புடன் கேட்டுக்கொண்டு, இந்த இனிய விழாவிற்கு வந்திருக்கும் அனைவருக்கும், விழாவினை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
29.01.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில்
எரிசக்தித் துறை சார்பில் நடைபெற்ற உடன்குடி அனல் மின் திட்டம்
நிலை–I அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை.

அம்மா இருசக்கர வாகனத்திட்டத்தின் கீழ் வருடத்திற்கு 1 இலட்சம் பேருக்கு இருசக்கர வாகனம் வழங்கப்படும்!

நம்முடைய சேலம் மாநகராட்சி ஒரு வளர்ந்து வருகின்ற மாநகராட்சி. இன்றைக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்முடைய சேலம் மாவட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து இன்றைக்கு பல்வேறு அடிப்படை வசதிகளை அம்மாவின் அரசு பூர்த்தி செய்து வருகிறது. அந்தவகையிலே இன்றைக்கு சேலம் மாநகரத்திற்குட்பட்ட 352 சாலைகள் 94.39 கோடி ரூபாயில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கான பூமிபூஜை இன்றைக்கு நடைபெற்றுள்ளது. ஆகவே சேலம் மாநகரத்தில் இருக்கின்ற உட்புறச்சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் தான் மாநகரத்தில் இருக்கின்ற மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதற்காக சாலைகள் தோண்டப்பட்டன. மேலும், மக்களுக்கு குடிநீர் வழங்க குழாய்கள் பதிப்பதற்காக சாலைகள் தோண்டப்பட்டது.

அதேபோல் மாநகர மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக மின்சார கேபிள் அமைப்பதற்கு சாலைகள் தோண்டப்பட்டன. ஆகவே, இதையெல்லாம் சரிசெய்து சாலைகளை சீரமைப்பதற்காகத்தான் இவ்விழா எடுக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 142 கோடி ரூபாய் சேலம் மாநகரத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக 352 சாலைகள் 94.39 கோடி ரூபாயில் பணிகள் எடுத்துகொள்ளப்பட்டு பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. எஞ்சிய சாலைகள் எல்லாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல பாதாளசாக்கடைத் திட்டம், குடிநீர் குழாய் பதிக்கும் திட்டம், மின்சார இணைப்பு கேபிள்கள் பதிக்கும் திட்டங்கள் எல்லாம் நிறைவடைந்த உடன் அந்த சாலைகளும் சீரமைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதே போல், மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலத்திலே, சேலம் மாநகரத்தை மத்திய அரசுடன் பேசி வளர்ந்து வருகின்ற மாநகரம், இந்த மாநகரத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் தேர்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைத்ததன் பேரில் இன்றைக்கு அது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள், சாலைகளை சீரமைத்தல், அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைத்தல், பழைய பேருந்து நிலையம், வ.உ.சி மார்க்கெட், போஸ் மைதானம், நேரு கலையரங்கம் ஆகியவற்றை புனரமைத்தல், திருமணி முத்தாறு அபிவிருத்தி பணிகள் உள்ளிட்ட 10 பணிகள் ரூபாய் 1,908 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த திட்டங்களை எல்லாம் நடைமுறைபடுத்துகின்றபொழுது மாநகரத்தில் வசிக்கும் மக்களுக்கு நான் குறிப்பிட்டுள்ள அடிப்படை தேவைகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்படுகின்ற நிலை உருவாகும் என்பதை தெரிவித்து கொள்கிறேன். அதே போல் 30.09.2017 அன்று ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில், மாநகராட்சி ஆணையாளர் புதிய அலுவலகக் கட்டடம் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. 17.09.2017 அன்று திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூபாய் 4 கோடியே 66 இலட்சம் மதிப்பீட்டில் கம்பாக்டர் வாகனங்கள் மற்றும் குப்பை தொட்டிகள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது.

சேலம் மாநகர மக்கள் சுகாதாரமாக வாழவேண்டும் என்பதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 07.03.2017 அன்று தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடியே 30 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள், பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. அதே போல், 07.03.2017 அன்று அம்ரூத் திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 93 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பீட்டில் 4 பசுமைவெளி பூங்காக்கள், பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. 07.03.2017 அன்று ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் உணவு கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் உயிரி எரிவாயு மையம் திறந்து வைக்கப்பட்டது.

07.03.2017 அன்று தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளின் பாதுகாவலர்களுக்கான சிறப்பு தங்கும் இடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வீடற்றோருக்கான 2 இரவு நேர தங்கும் விடுதிகள், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 15 கோடியே 53 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில் 27.086 கி.மீ நீளத்திற்கு சாலை சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. ஆகவே, இவ்வளவு பணிகளும் ஓராண்டிற்குள் எடுத்து கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்து கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற மாநகரம். இன்றைக்கு அதிகமான போக்குவரத்து நெரிசல் மிக்க மாநகராட்சியாக இருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்து நெரிசல்களை முற்றிலும் குறைப்பதற்காக மாண்புமிகு அம்மாவிடத்தில் எடுத்துகூறிய உடன் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே பல்வேறு பாலங்களை நம்முடைய சேலம் மாநகரத்திற்கு அளித்திருக்கின்றார்கள். தற்பொழுது செவ்வாய்பேட்டையில் இரயில் போக்குவரத்து இருக்கின்ற காரணத்தினால் அடிக்கடி இரயில்வே கதவுகள் மூடப்பட்டு அங்கேயே வாகனங்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்பதை சுட்டிக்காட்டிய உடன் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உடனடியாக இதற்கு உத்தரவு வழங்கி அதற்கான பணிகள் துவங்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றது.

அதேபோல, சேலம் மாநகரத்திலே பல்வேறு போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்கள், சாலை சந்திப்புகளில் போக்குவரத்து

நெரிசல்களை முற்றிலும் குறைப்பதற்காக சாலை மேம்பாலங்கள் வேண்டும் என்று மாண்புமிகு அம்மாவிடம் கோரிக்கை வைத்தவுடனே அவை அனைத்தையும் நிறைவேற்றித் தந்தார்கள். எந்த ஒரு மாநகரத்திற்கும் இல்லாத அளவிற்கு அதிக பாலங்கள் கொடுத்தது சேலம் மாநகரத்திற்குதான்.

மேலும், திருவாகவுண்டனூர் மேம்பாலப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மிக குறைந்த காலஅளவிலேயே கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது. இதன் விளைவாக, திருவாகவுண்டனூர் சந்திப்பில் போக்குவரத்து நெரிசலே கிடையாது என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல், ஏ.வி.ஆர் சாலை சந்திப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயர்மட்ட பாலப்பணிகள் இன்னும் 3 மாதங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்படும். அதற்கு அடுத்தாற்போல் இரும்பாலை, சேகோசர்வு சந்திப்பில் உயர்மட்டப்பாலம் அமைப்பதற்காக அடிக்கல்நாட்டப்பட்டுபணிகள்துவங்கப்பட்டுள்ளது. ஆக, தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருப்பதற்கு இந்த 3 பாலங்கள் அம்மாவின் ஆட்சிகாலத்தில் கொடுக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு ஒரு பாலம் திறக்கப்பட்டு குறுகிய காலத்தில் எஞ்சிய பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்படும். அதேபோல், 5 ரோடு சந்திப்பில் காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளிக்கு செல்கின்றவர்கள், வேலைக்கு செல்கின்றவர்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதை மாண்புமிகு அம்மாவிடம் எடுத்துச் சொன்னவுடன் ரூபாய் 350 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பாலம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு பாலம் மிக விரைவில் திறக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மிகப்பெரிய பாலமாக இருக்கின்ற காரணத்தினால் சற்று காலதாமதம் ஆகின்றது இருந்தாலும் குறித்த காலத்திலே பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

அதேபோல், அடிக்கடி இரயில் போக்குவரத்து இருக்கின்ற காரணத்தினாலும், மாநகராட்சியினுடைய மத்திய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது, அதனை குறைப்பதற்காக மணல்மேடு பகுதியில் ஒரு இரயில்வே பாலம், முல்லுவாடி பகுதியில் 2 இரயில்வே பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சேலம் மாநகரத்திற்குள் தேசிய நெடுஞ்சாலைகளில் இருந்து வருகின்ற வாகனங்கள் எல்லாம் வெளியிலேயே புறவழி சாலை வழியாக செல்வதற்கு மத்திய தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள் இடத்தில் கோரிக்கை வைத்தேன், அதை அவர்கள் பரிசீலிப்பதாக சொல்லி இருக்கின்றார்கள். ராசிபுரம், ஆட்டையாம்பட்டி பிரிவு சாலைக்கு அருகில் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து ஆரம்பித்து ஓமலூர் அருகில் இணைகின்றவிதமாக சாலையை தேர்வு செய்து இருக்கின்றார்கள். அந்தப்பணி ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றது. ஆகவே அந்த சாலையை தேர்வு செய்கின்றபொழுது மாநகரத்திலே போக்குவரத்து நெரிசல் இல்லாத நிலை ஏற்படும். கனரக வாகனங்கள் அனைத்தும் புறவழிச் சாலை வழியாக சென்றுவிடும். இதன் மூலம் விபத்துகள் குறையும். நம்முடைய சேலம் மாநகரத்திற்கு வருகின்றவர்களும், செல்லுகின்றவர்களுக்கு எவ்வித போக்குவரத்து நெரிசலும் இல்லாமல் செல்லுகின்ற நிலையை அம்மாவினுடைய அரசு செய்து இருக்கின்றது என்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்ல, சேலம் மாவட்டத்திற்கு ஏர்போர்ட் என்பது போல பஸ்போர்ட் அதாவது நவீன பேருந்து நிலையம் மாநகராட்சிக்கு அருகிலேயே திறக்கப்படவுள்ளது. அதாவது, அரபிக்கல்லூரி அருகில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் அனைத்து நவீன வசதிகளையும் உள்ளடக்கிய மிகப் பிரம்மாண்டமான பஸ் போர்ட் அமைக்க மத்திய தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தவுடன் அவர்கள் அதை

பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளார் என்பதை தெரிவித்து கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நம்முடைய தமிழ்நாடு முழுவதும் சாலைகளை விரிவுபடுத்தவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தேன், அத்தனை சாலைகளையும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பெரும்பாலான சாலைகளை ஒவ்வொரு கட்டமாக எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்கள். அதன்விளைவாக சேலத்தில் இருந்து திருப்பத்தூர் வரையிலான சாலையை 4 வழிச்சாலையாக மாற்றுவதற்கு மத்திய அரசிடம் இருந்து அனுமதி கிடைத்திருக்கிறது. அதேபோல் திருச்செங்கோட்டில் இருந்து சங்ககிரி, தாரமங்கலம் மற்றும் ஓமலூர் வரை நான்கு வழி அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. ஆத்தூரில் இருந்து பெரம்பலூர் வரை செல்வதற்கு சாலை விரிவுபடுத்துவதற்கு முதற்கட்டமாக அனுமதி கிடைத்திருக்கிறது. இதற்கெல்லாம் விரைவாக ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு துவங்கப்பட கூடிய நிலையில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசை பொருத்தவரைக்கும் சாலைகள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலமாக தொழில் பெருகும், மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்கின்ற அடிப்படையில் இவ்வளவு சாலைகளும் விரிவுபடுகிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், நாமக்கல்லில் இருந்து திருச்சி வரையில் 4 வழிச்சாலை அமைப்பதற்கும் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது என்பதையும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன் சேலம் மாநகரம் எப்படி இருந்தது ? 2011க்கு பிறகு சேலம் மாநகரம் எவ்வளவு மாற்றங்கள் அடைந்துள்ளது என்பதை கண்டுகொண்டு இருக்கின்றீர்கள். இவ்வளவு பாலம் அம்மாவின்

ஆட்சியில் தான் கிடைத்திருக்கிறது. சாலைகள் சீர்செய்யப்படுகிறது, 60 வார்டுகளிலும் தடையில்லாமல் குடிநீர் வழங்கும் சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்தில் சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவமனை கொடுத்திருக்கிறோம். அவற்றில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனைகள் சாதனைகளை படைத்துக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் வந்தபோது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு யோசனைகளை தெரிவித்தார்கள். அதையெல்லாம் செய்து இன்றைக்கு சாதனை படைத்து கொண்டு இருக்கின்றோம். மதுரையில் தொழிலாளி ஒருவருக்கு அரசு மருத்துவமனையில் இதய மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நலமுடன் இருக்கின்றார். அதேபோல் சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவமனையில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் விரைவில் துவங்கப்பட்டு, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய உத்தரவிட்டு இருக்கின்றேன். அப்பணிகள் விரைவில்

துவங்கப்படுகின்றது என்பதனை தெரிவித்து கொள்கிறேன். இரண்டு வருடத்திற்கு முன்பு திண்டுக்கல் மாவட்டத்தை சார்ந்த இரு கைகள் இழந்த ஒருவருக்கு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் இறந்த ஒருவரின் உடலில் இருந்து இரு கைகளும் எடுத்து அறுவை சிகிச்சை மூலம் அவருக்கு பொருத்தப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். தமிழக மருத்துவத்துறை இன்று வளர்ந்து இருக்கிறது. மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் ஏழை, எளிய மக்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்வதில் தொடந்து 3 ஆண்டுகள் மத்திய அரசின் விருதினை தமிழகம் பெற்றிருக்கிறது.

விவசாயிகளுக்கு, நெசவாளர்களுக்கு மற்றும் தொழிலாளர்களுக்கு என்று பல்வேறு திட்டங்களை அம்மாவின் அரசு கொடுத்துக் கொண்டு இருக்கிறது. நகரத்தில் வசிப்பவர்கள் எவரேனும் வீடு இல்லை எனில் அவர்களுக்கு அரசு மானிய விலையில் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தான் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி கொடுத்திருக்கிறோம். எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பள்ளிக் கல்வியில் மட்டும் விலையில்லா மிதிவண்டிகள், வருடத்திற்கு 5 இலட்சம் பேருக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கி வருகின்றோம். ஒரு மாநிலம் கல்வியில் சிறந்து விளங்கினால் அம்மாநிலம் பொருளாதாரத்தில் முன்னுக்கு வரும். சாதாரண குடும்பத்தில் பிறந்த மாணவர்களின் அறிவுத்திறனை பெருக்க மடிக்கணினி அவசியம், அதனால் அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு ரூ.14 ஆயிரம் மதிப்புள்ள மடிக்கணினியை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஏழை மாணவர்கள் தனியார் கல்லூரிகளில் அதிக கட்டணம் கொடுத்து படிக்கும் நிலையில் அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் பல்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை

கொடுத்திருக்கிறார்கள். ஏழை, எளிய மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் படிக்கவேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் கல்விக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன். இன்றைக்கு அம்மா அவர்களின் ஆட்சி அம்மா அவர்களின் மறைவிற்கு பிறகு அம்மாவினுடைய ஆட்சி நிறுவப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்று இரண்டாம் ஆண்டு அடியெடுத்து வைத்து சிறப்பாக வெற்றி நடைபோட்டு வருகிறது. மக்கள் போற்றும் ஆட்சி செய்து வருகிறது. மக்கள் தேவையை பூர்த்தி செய்யும் ஆட்சி இன்று நடைபெற்று வருகிறது. அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்தில் அறிவிக்கப்பட்ட அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் வருடத்திற்கு 1 இலட்சம் பேருக்கு இரு சக்கர வாகனம் வழங்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, அம்மாவின் அரசு வழங்கும் என்பதை இந்த மகிழ்ச்சியான நேரத்தில் தெரிவித்து கொள்கிறேன். இந்த அம்மாவின் அரசு ஏழை, எளிய மக்களின் அரசு, மக்களோடு கூட்டணி வைத்து மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி,

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
18.02.2018 அன்று சேலம், பள்ளப்பட்டி விழாவில் ஆற்றிய உரை.

இந்தியாவிலேயே மருத்துவமனை அதிகமாக இருப்பதும், மருத்துவ சேவை சிறப்பாக இருப்பதும் தமிழகத்தில் தான்!

சேலம் மாநகரத்தில், புதிதாக காவேரி மருத்துவமனை துவக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா அவர்களே, இந்த மருத்துவமனை நிகழ்வுக்கு காரணமாக இருக்கின்ற காவேரி மருத்துவ குழுமத்தினுடைய பொறுப்பாளர் மரியாதைக்குரிய டாக்டர் எஸ்.சந்திரகுமார் அவர்களே, மரியாதைக்குரிய டாக்டர் மணிவண்ணன் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு

கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே, திரு.பி.ஆர். சுந்தரம் அவர்களே, திரு.காமராஜ் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சக்திவேல் அவர்களே, திரு.வெங்கடாசலம் அவர்களே, திரு.வெற்றிவேல் அவர்களே, திரு.ராஜா அவர்களே, திரு.சின்னத்தம்பி அவர்களே, சகோதரி சித்ரா அவர்களே, சகோதரி மனோன்மணி அவர்களே, திரு.மருதமுத்து அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.செல்வராஜ் அவர்களே, மற்றும் இந்நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாநில கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.இளங்கோவன் அவர்களே, வருகை தந்துள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, காவேரி மருத்துவமனையில் பணிபுரிகின்ற மருத்துவர்களே, செவிலியர்களே, ஊழியர்களே, வருகை தந்திருக்கின்ற சான்றோர் பெருமக்களே, நண்பர்களே, அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, எனக்கு முன்னாலே பேசிய காவேரி மருத்துவமனையினுடைய நிருவாகிகள், இந்த மருத்துவமனையில் சிறப்பான மக்கள் சேவை செய்யப்படும் என்ற ஒரு செய்தியினை தெரிவித்தார்கள்.

இன்றைக்கு இந்தியாவிலேயே மருத்துவமனை அதிகமாக இருப்பதும், மருத்துவ சேவை சிறப்பாக இருப்பதும் தமிழகத்தில்தான். மற்ற மாநிலங்களுக்கிடைய ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது சிறப்பான மருத்துவர்களை, மருத்துவ நிபுணர்களை, நம்முடைய மாநிலத்திலிருந்து வெளிநாட்டிற்கு சென்று சிறந்த அறுவை சிகிச்சையில் பிரசித்தி பெற்ற மருத்துவர்களை தமிழகம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட பெருமை நம்முடைய தமிழகத்தை சார்ந்திருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே, தமிழகம் மருத்துவ சிகிச்சையை பொதுமக்களுக்கு அளிப்பதிலே முன்னோடி மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இன்றைக்குக்கூட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களை எல்லாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். சேலம் மோகன்குமார் அரசு மருத்துவமனையில் மகளிருக்காக அருமையான கட்டடங்களை கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். 500 படுக்கைகள் கொண்ட நவீன மகப்பேறு மருத்துவமனையை கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல, சேலம் மாவட்டத்திற்கு அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்களை தந்திருக்கின்றார்கள். கிராமத்திலே வாழ்கின்ற மக்கள்கூட நோய்கள் இல்லாமல் வாழவேண்டும் என்பதற்காக ஆங்காங்கே மருத்துவ முகாம்கள் நடைபெற்று, அம்மருத்துவ முகாம்களிலே, தனது உடலில் என்ன நோய் இருக்கின்றது என்பதுகூட தெரியாமல் அன்றாட பணி செய்து கொண்டிருக்கின்ற ஏழை, எளிய மக்களை ஈடுபடச்செய்து, அவர்களை பரிசோதனை செய்து, அவர்களுக்கு என்ன நோய் இருக்கின்றது என்று கண்டறிந்து அந்த நோயை தீர்ப்பதற்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக அங்கே இருக்கின்ற மருத்துவர்கள் சிபாரிசு செய்யப்பட்டு, உரிய மருத்துவ சிகிச்சை செய்து, அவர்களை குணமடைய செய்யக்கூடிய ஒரு சூழலை தமிழகத்தில்தான் நாம் பார்க்க முடிகிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அம்மா குழந்தைநல பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்ஜீவி திட்டம், அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், தாய்ப்பால் வங்கி போன்ற ஏராளமான அரிய திட்டங்களையெல்லாம் தமிழகத்திற்கு வழங்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு உடல் மாற்று அறுவை சிகிச்சை செய்யக்கூடிய பணியில் மூன்று ஆண்டுகளாக, இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதை பெருமையோடு

சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஸ்டான்லி மருத்துவமனையில், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த, இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு, இறந்த ஒருவரின் உடலிலிருந்து இரண்டு கைகள் எடுத்து பொருத்தப்பட்டு 10 நாட்களாக ஆரோக்கியமாக இருக்கின்றார். அந்த அளவிற்கு நாம் சிறந்த மருத்துவர்களைப் பெற்றுள்ள காரணத்தினால், நம்மால் வெற்றி காணமுடிகின்றது. அப்படிப்பட்ட மருத்துவர்களை ஸ்டான்லி மருத்துவமனை பெற்று சாதனை படைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு தனியார் மருத்துவமனைகள் எல்லாம் காப்பீட்டு திட்டத்திலே சேர்க்கப்பட்டிருப்பதன் காரணமாக, சாதாரண ஏழை, எளியவர்கள்கூட தனியார் மருத்துவமனையை அணுகி உடல் சிகிச்சை, அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். அப்படிப்பட்ட ஒரு நல்லவாய்ப்பை அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது.

காவேரி மருத்துவமனை ஒரு சிறந்த மருத்துவமனை. ஏனென்றால் பல கிளைகள் இருக்கின்றன. அனுபவமுள்ள மருத்துவர்கள் இதில் பணியாற்றக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே இந்த மருத்துவமனை மேலும், மேலும் வளர வேண்டும். காவேரி மருத்துவ குழுமத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் பேசுகின்றபொழுது, தற்பொழுது 150 படுக்கைகள் இருக்கின்றது என்றும், மேலும் 250, 500 படுக்கைகள் என்று படிப்படியாக உயர்த்தப்படும் என்றும் சொன்னார்கள். அப்படி உயர்த்தப்படுகின்றபொழுது, சேலம் மாவட்டம் மட்டுமன்றி, அருகிலுள்ள நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டத்தில் இருக்கின்ற மக்களெல்லாம் இங்கு வந்து சிகிச்சை பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கான நல்ல வாய்ப்பினை, சேலம் மாவட்டத்திற்கு உருவாக்கித் தந்த காவேரி மருத்துவமனை குழுமத்திற்கு இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்து, இந்த மருத்துவமனை மேலும், மேலும் வளர்ந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
18.02.2018 அன்று சேலம், காவேரி மருத்துவமனை
தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

நாம் எதையெல்லாம் கேட்டோமோ அதை அத்தனையும் நிறைவேற்றித் தந்த ஒரே தலைவி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 18.02.2018 அன்று ரூ.21.42 கோடி மதிப்பில் அமைக்கப்பட்ட எடப்பாடி நகர் புறவழிச்சாலை (பகுதி –I)ஐ திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள் முன்னிலையிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரோஹிணி ரா. பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை :

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் எடப்பாடி நகரத்தில் உள்ள சாலைகள் குறுகளாக இருக்கின்றன அந்த குறுகளான சாலைகளை அகலபடுத்த வேண்டும் என்றால் அதிக வீடுகளை இடிக்க வேண்டிய சூழல் இருக்கின்றது. ஆகவே, ஏழை, எளிய மக்கள் நிறைந்த நகரமாக இருக்கின்ற நிலையில் அந்த வீடுகள் அகற்றப்பட்டால் அவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். ஆகவே, எடப்பாடி நகருக்கு ஒரு புறவழிச்சாலை வேண்டும் என்று கேட்டேன். உடனடியாக அம்மா அவர்கள் அதனை அனுமதித்து ஆணையிட்டு எடப்பாடிக்கு புறவழிச்சாலை அமைக்கப்படும் என்ற அறிவிப்பை தந்தார்கள். புறவழி சாலை 8.80 கிலோ மீட்டர் நீலம் இன்றைக்கு 3 கட்டமாக பிரிக்கப்பட்டு முதற்கட்டப்பணி 4.100 கிலோ மீட்டர் நீலம் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த புறவழிச்சாலைக்காக 26.3 1/2 ஏக்டர் நிலம் எடுக்கப்பட்டு, பகுதி – Iக்காக ரூ.21.42 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட இப்பணியின் முதற்கட்ட பணி நிறைவு பெற்று புறவழி சாலையை திறந்து வைக்கின்றோம். இச்சாலை வீரப்பம்பாளையத்தில் இருந்து ஆரம்பித்து ஆவனியூரில் நிறைவு பெறுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி மண்ணிலே மறைந்து இருந்தாலும் அவர்கள் அறிவித்து அதை நடைமுறைப்படுத்தி கொண்டு இருக்கின்ற அரசாக அம்மா அவர்களின் அரசு திகழ்ந்து கொண்டு இருக்கின்றது. அவர்களின் அறிவிப்பு, ஆணை நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு எடப்பாடி நகர மக்கள், சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் நகருக்குல் செல்லாமலும், கனரக வாகனங்கள் செல்ல வசதியாகவும் புறவழி சாலை

அமைக்கப்பட்டு இருக்கின்றது. அதுமட்டுமல்ல புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிகாலத்திலேதான் எடப்பாடி நகரத்திற்கு பல்வேறு பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன.

எடப்பாடிக்கு நெடுஞ்சாலைத்துறை கோட்ட அலுவலகம் ஒன்று கேட்டோம் நெடுஞ்சாலைத்துறைக்கு உடனடியாக கோட்ட அலுவலகத்தை அறிவித்து ஆணையிட்டு நடைமுறைபடுத்தப்பட்டு அதற்கு தேவையான கட்டடத்தையும் ஒதுக்கி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்தில் தெரிவித்துகொள்ள விரும்புகின்றேன். அதே போல, மின்சாரத்துறைக்கு கோட்ட அலுவலகம் ஒன்று கேட்டோம் மேட்டூர் இருந்து பிரித்து எடப்பாடியை தனிநகரமாக கொண்டு புதிய கோட்ட அலுவலகத்தையும் அம்மா அவர்கள் நமக்கு கட்டிதந்தார்கள். ஆகவே, நாம் எதைஎல்லாம் எடப்பாடி மக்களுக்கு கேட்டோமோ அவை அத்தனையும் நிறைவேற்றி தந்த ஒரே தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவு கூற விரும்புகின்றேன்.

அதேபோல் கூட்டுகுடிநீர் திட்டம் நீண்ட காலமாக எடப்பாடி நகரத்தில் வசிக்கின்ற மக்களுக்கு தேவையான குடிநீர் இல்லாமல் இருந்த சூழ்நிலையை மாற்றி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்திலே எடப்பாடி நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையினை வைத்தவுடன் இதயதெய்வம் புரட்சித்தலைவி

அம்மா அவர்கள் ஆணையிட்டு அவர்களுடைய ஆணையின் படி ஒப்பந்தங்கள் போடப்பட்டு பணிகள் தொடங்குவதற்கு, அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அம்மா அவர்களின் கரங்களால் திறக்கப்பட்டது. இன்றைய தினம் எடப்பாடி நகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒருநாள் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே கொடுக்கப்பட்டது என்பதை தெரிவித்து கொள்கிறேன். அதே போல் புறநகர் பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் வேண்டும் என்று கேட்டார்கள். ஏற்கெனவே நெடுங்குளம், இராசிபுரம் திட்டம் எங்கள் பகுதியில் இருந்தாலும் மக்களின் தேவைகள் அதிகரித்த காரணத்தால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவிடத்திலே இந்த பகுதி மக்களுக்கெல்லாம் எடப்பாடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் இருக்கின்ற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் தரவேண்டும் அதற்கு நீங்கள் ஆணைபிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம் அதையும் நிறைவேற்றி தந்தார்கள். அம்மா இருக்கின்ற காலத்திலேயே அந்த திட்டத்தையும் அம்மா அவர்கள் திருக்கரங்களால் அதுவும் திறக்கப்பட்டது.

எடப்பாடி சட்டமன்ற தொகுதியின் மீது தனி அக்கறை கொண்டு இருந்தார்கள் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நாம் எதை எல்லாம் எடப்பாடி தொகுதிக்கு கேட்டோமோ அவை அத்தனையும் கொடுத்தார்கள். எடப்பாடிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்த கேட்டோம் அதையும் கொடுத்தார்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கேட்டோம். கட்டடம் கட்டி திறக்கப்பட்டு இன்றைக்கு அருமையாக இருக்கின்றது. இவ்வாறு ஏராளமான திட்டங்கள் எடப்பாடி நகருக்கு கொடுத்தார்கள். அம்மா அவர்களின் நினைவாக வானவாசி பகுதியில் பாலிடெக்னிக் கல்லூரியும் கட்ட ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அதேபோல், எட்டிகுட்டைமேட்டிலே அம்மா மறைவிற்கு முன்பே கோரிக்கை வைத்தோம் அம்மா

மறைவிற்கு பின்பு எட்டிகுட்டை மேட்டில் ஒரு பி.எட் கல்லூரியும் துவக்கப்பட்டிருக்கிறது. எட்டிகுட்டைமேட்டில் தொழில் வளம் பெருக்கவேண்டும் என்பதற்காக சிட்கோ மூலமாக தொழிற்பேட்டை ஆரம்பிப்பதற்கும் பணிகள் துவங்கப்பட்டு இருக்கின்றன.

மேச்சேரி, நங்கவல்லி கூட்டுகுடிநீர் திட்டம் கேட்டோம் அதையும் ரூ.158 கோடியில் அந்த திட்டம் அறிவிக்கப்பட்டு அத்திட்டம் நான்கு மாதங்களில் துவங்க இருக்கிறது. இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை எடப்பாடி பகுதி மக்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு செய்து கொடுத்துள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வி.பன்னீர்செல்வம், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.சுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.செ.செம்மலை, திரு.ஜி.வெங்கடாசலம், திரு.ஏ.பி.சக்திவேல், திருமதி பி.மனோன்மணி, திரு.எஸ்.ராஜா, திரு.எஸ்.வெற்றிவேல், திரு.ஆர்.எம்.சின்னதம்பி, திரு.அ.மருதமுத்து, திருமதி கு.சித்ரா, மாநில தலைமை கூட்டுறவு வங்கி தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
18.02.2018 அன்று ரூ.21.42 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட
எடப்பாடி நகர் புறவழிச்சாலை (பகுதி–I)ஐ திறந்து வைத்து ஆற்றிய உரை.

காவேரி நதிநீர் பிரச்சினை ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளோடு பின்னிப்பிணைந்து இருக்கிறது!

மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு.பன்னீர்செல்வம் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தமிழ்நாடு அரசின் அழைப்பினை ஏற்று, அனைத்துக்

கட்சி கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.கஸ்டாலின் அவர்களே! அனைத்து கட்சிகளின் தலைவர்களே, பிரதிநிதிகளே! விவசாயப் பெருங்குடி மக்களே!

உங்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தினை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக எனது அழைப்பினை ஏற்று இக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ள தங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். காவேரி நதிநீர் போன்ற முக்கியமான பிரச்சினை. ஆனாலும், பல்வேறு கருத்து வேறுபாடுகள் நம்மிடையே இருந்தாலும், அனைத்து கட்சியினரும் தமிழ்நாட்டு மக்களுக்காக ஓரணியில் திரண்டு, ஒருமித்த கருத்துடன் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு பாடுபடவேண்டும் என்ற எனது விருப்பத்தை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி நதிநீர்ப் பிரச்சினை, காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சினையாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது.

காவேரி வழக்கு வரலாறு நம் அனைவருக்கும் தெரியும். இத்தருணத்தில் விவசாயப் பெருகுடி மக்களின் நன்மையைக் கருதி காவேரி நீரின் உரிமையை நிலைநாட்ட தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சுருக்கமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

✶ **1983 -** தமிழ்நாடு காவேரி நீர் பாசன விவசாயிகள் விளை பொருள்கள் நல உரிமை பாதுகாப்பு சங்கம் நடுவர் மன்றம் அமைக்க உச்சநீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

- 06.07.1986 - மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடுவர் மன்றம் அமைக்க கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார்.

- 18.11.1986 - தமிழ்நாடு காவேரி நீர் பாசன விவசாயிகள் விளை பொருள்கள் நல உரிமை பாதுகாப்பு சங்கம் தொடுத்த வழக்கில் தமிழ்நாடு அரசு தன்னை இணைத்துக்கொண்டது.

- 04.05.1990 - உச்சநீதிமன்றம் நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிட்டது.

- 04.06.1990 - காவேரி நடுவர் மன்றம் மத்திய அரசால் அமைத்தது.

- ஜூலை 1990 - தமிழ்நாடு அரசும் பாண்டிச்சேரி அரசும் இடைக்கால ஆணை வழங்க கோரி நடுவர் மன்றத்தில் மனு தாக்கல் செய்தன.

- 25.06.1991 - நடுவர்மன்றம் இடைக்கால ஆணையை பிறப்பித்தது. இதில், கருநாடகா, தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. அடி நீர் மாதாந்திர / வாராந்திர அடிப்படையில் அளிக்க ஆணையிட்டது.

- 25.07.1991 - கருநாடக அரசு நடுவர் மன்ற இடைக்கால ஆணையை செயல் இழக்கும் விதமாக ஒரு அவசர சட்டத்தை பிறப்பித்தது.

- 27.07.1991 - குடியரசுத்தலைவர் கருநாடகத்தின் அவசர சட்டத்தை குறித்து உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோரினார்.

- 22.11.1991 - உச்சநீதிமன்றம் கருநாடக அரசின் அவசர சட்டம் செல்லாது எனவும், காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் எனவும் கருத்துரு வழங்கியது.

- **10.12.1991 -** நடுவர் மன்ற இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

- **1992 -** நடுவர் மன்ற இடைக்கால ஆணையை செயல்படுத்துவதற்கான ஒரு அமைப்பினை அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக்கோரி தமிழ்நாடு அரசு ஒரு அசல் வழக்கு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

- **ஜூலை 1993 -** நடுவர் மன்ற இடைக்கால ஆணையை மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததால் இதனை வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

- மத்திய நீர்வளத்துறை அமைச்சரின் உத்திரவாதத்தினை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த உண்ணா விரதத்தை முடித்துக்கொண்டார்.

- **11.08.1998 -** மத்திய அரசு இடைக்கால ஆணையை செயல்படுத்துவதற்கு காவேரி நீர் ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்பு குழு அமைத்து ஆணையிட்டது.

- **05.02.2007 -** நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை பிறப்பித்தது.

- **19.02.2007, 15.04.2007 -** நடுவர் மன்ற இறுதி ஆணை குறித்து அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் நடுவர் மன்ற ஆணை குறித்து உச்சநீதிமன்றத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டது.

- இந்த சிவில் மனுவில், தமிழ்நாட்டின் பாசன பரப்பை **29** இலட்சம் ஏக்கரிலிருந்து **24.71** இலட்சமாக குறைக்கப்பட்டதை மீண்டும் அனுமதிக்கவும், தமிழ்நாட்டின் நீர் தேவையை **72** டி.எம்.சி. அடி கூடுதலாக அளிக்கவும் கோரிக்கை வைக்க முடிவு செய்யப்பட்டது.

* ஏப்ரல், மே 2007 - நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மீது கருநாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு அரசுகள் உச்சநீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் தாக்கல் செய்தன.

* ஏப்ரல், மே 2007 - நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைக்கு செயல்வடிவம் கொடுக்க, அதனை மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும்.

* 17.10.2011, 21.03.2012 - மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மே 2011 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட மத்திய அரசுக்கு கடிதங்கள் எழுதப்பட்டன.

* 17.04.2012 - இந்த கடிதங்களின் மேல் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால், ஒரு இடைக்கால மனுவை அம்மாவின் அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

* 04.02.2013 - உச்சநீதிமன்றம், நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை 20.02.2013க்குள் மத்திய அரசிதழில் வெயிட ஆணையிட்டது.

* 19.02.2013 - மத்திய அரசு, நடுவர்மன்றத்தின் இறுதி ஆணையை அரசிதழில் வெளியிட்டது. அம்மா அரசு தொடர் முயற்சி எடுத்ததனால், 05.02.2007 அன்று பிறப்பிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 19.02.2013 அன்று செயலாக்கத்திற்கு வந்தது.

* 22.02.2013, 11.03.2013, 17.05.2013 - நடுவர் மன்றத்தில் இறுதி ஆணையின் பரிந்துரையின்படி, காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்க, பாரதப் பிரதமருக்கு கடிதங்கள் எழுதப்பட்டன. இவ்வமைப்புகளை அமைக்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது.

* **18.03.2013 -** இதற்கிடையே, காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடும்படி உச்சநீதிமன்றத்தில் ஓர் இடைக்கால மனுவை அம்மாவின் அரசு தாக்கல் செய்தது.
* **11.11.2013 -** காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்காததால், மீண்டும் ஒரு இடைக்கால மனுவை உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்தது.
* **13.06.2014, 25.04.2015 -** பாரத பிரதமர் அவர்களுக்கு இது சம்பந்தமாக கடிதங்கள் எழுதப்பட்டன.
* **06.06.2014, 07.08.2015, 14.06.2016, 27.02.2017 -** பாரத பிரதமர் அவர்களுக்கு கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டன.
* **05.12.2014, 27.03.2015 -** தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு பாரத பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டன.
* **20.09.2016 -** தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் இவ்வமைப்புகளை உடன் அமைக்க ஆணை வேண்டியதன் பேரில் **20.09.2016** அன்று காவேரி மேலாண்மை வாரியத்தை நடுவர்மன்ற இறுதி ஆணையில் பரிந்துரைத்தபடி நான்கு வாரங்களுக்குள் அமைக்க வேண்டும் என மத்திய அரசிற்கு ஆணையிட்டது.
* **30.09.2016 -** உச்சநீதிமன்றம் இதை மீண்டும் உறுதி செய்து 4 நாட்களுக்குள் இவ்வமைப்புகள் அமைக்கப்பட வேண்டுமென ஆணையிட்டது.
* **03.10.2016 -** மத்திய அரசு காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைகளை

மாற்றியமைக்கும்படி ஒரு மனுவை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

✶ இம்மனு 04.10.2016 அன்று விசாரணைக்கு வந்தபோது, உச்சநீதிமன்றம் காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பதை ஒத்திவைத்து ஆணையிட்டது.

✶ 19.12.2016, 27.02.2017 - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்க வலியுறுத்தப்பட்டது.

✶ 09.12.2016 - மாநிலங்கள் தாக்கல் செய்த சிவில் வழக்குகள் உச்சநீதிமன்றத்தின் விசாரணைக்கு உகந்தவை என உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.

✶ 11.07.2017 முதல் 20.09.2017 வரை - சிவில் வழக்குகள் மீது உச்சநீதிமன்றத்தில் இறுதி வாதங்கள் நடைபெற்றன. இந்த இறுதி வாதத்தில் கருநாடக அரசு 9 நாட்கள் வாதிட்டது. கேரள அரசு 2 நாட்கள் வாதிட்டது. தமிழக அரசு 13 நாட்கள் வாதிட்டது, புதுச்சேரி அரசு 1 நாள் வாதிட்டது, மத்திய அரசு 1 நாள் வாதிட்டது.

✶ தமிழ்நாடு அரசு, உச்சநீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் மீது வாதிட்டபோது, நடுவர்மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்த, காவேரி நீர் மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க வேண்டுமென வலியுறுத்தியது.

✶ 16.02.2018 - சிவில் வழக்குகள் மீது உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. இத்தீர்ப்பில், 6 வார காலத்திற்குள் இவ்வமைப்புகளை அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு ஆணையிட்டுள்ளது.

வருகை தந்துள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், விவசாய சங்கங்கள் மற்றும் பிரதிநிதிகள்

தற்போது வழங்கப்பட்டுள்ள உச்சநீதிமன்றத் தீர்ப்பின் சாதக பாதகங்கள் குறித்து தங்களின் மேலான ஆக்கப்பூர்வமான கருத்துகளைச் சுருக்கமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் கூறும் ஆக்கப்பூர்வமான கருத்துகளைச் சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதிநீர் பிரச்சினை குறித்து 22.02.2018 அன்று
தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற
அனைத்துக் கட்சிக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் உரை.*

மகாவீரரின் போதனைகள் அன்பையும், மனித நேயத்தையும், அகிம்சையையும் போதிக்கும் உன்னத கோட்பாடுகள்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு பன்வாரிலால் புரோஹித் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள வந்திருக்கும் முக்கிய விருந்தினர்களே! JITO அமைப்பின் நிருவாகிகளே! உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

JITO அமைப்பின் சார்பில் நடத்தப்படும் JITO CONNECT 2018 நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

> “அறிவுடையோர் அன்புடையோராய் இருப்பர்
> உலகம் நலம்பெற உழைப்பவர்கள் ஞானிகள்
> என்றும் அழியாதது அறம் ஒன்றுதான்”

இத்தகைய உயரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்தவர்தான் பகவான் மகாவீரர்.

சமண சமயத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் அரச குடும்பத்தில் பிறந்த 'வர்த்தமானர்' என்ற இயற்பெயரைக் கொண்ட 'மகாவீரர்'. இவருடைய கருத்துக்களை 'ஜைனம்' எனவும், கருத்தினை ஏற்றுக் கொண்டவர்கள் 'ஜெயனர்' என்றும் அழைக்கப்பெற்றனர். இச்சொல்லே நாளடைவில் 'ஜைனர்' என்றானது. இவர் மாமனிதர், ஞானபுத்திரர், அதி வீரர் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

'மகாவீரர்' மூன்று ரத்தினங்கள் என்று அழைக்கப்படும் 'நன்னம்பிக்கை, நல்லறிவு, நற்செயல்' என்ற போதனையை போதித்தவர். இவருடைய போதனைகளும், தத்துவங்களும் இன்றும் உலகம் முழுவதும் அனைத்து தரப்பு மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

'மகாவீரர்' கி.மு **599**ஆம் வருடம் இந்தியாவின் பீகார் மாநிலம் வைசாலி எனும் இடத்திற்கு அருகில் உள்ள 'குந்தி கிராமா' என்ற ஊரில் சித்தார்த்தர் – திரிசலை ஆகியோருக்கு மகனாக பிறந்தவர்.

இவர் யசோதா எனும் பெண்ணை மணந்து இல்லறம் நடத்திக் கொண்டிருந்தபோது யாகம், சாதிக் கொடுமை போன்றவற்றைக் கண்டு மனம் வெறுத்து துறவறம் பூண்டார்.

மனித வாழ்க்கையின் அர்த்தம் தேடி சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் தியானம் மற்றும் ஆன்மிகத் தேடலில் ஈடுபட்ட மகாவீரர் அவர்கள் 'சாலா' என்னும் மரத்தடியில் ஞானம் பெற்றார்.

இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களில் கடைசி தீர்த்தங்கரர் என சமணர்களால் போற்றப்படும் மகாவீரரின் போதனைகள் அன்பையும், மனிதநேயத்தையும், அகிம்சையையும் போதிக்கும் உன்னத கோட்பாடுகளாக விளங்குகிறது.

மேலும் எந்த உயிரினத்திற்கும் தீங்கு இழைக்காமல் இருத்தல், உண்மையை மட்டும் பேசுதல், திருடாமை, துறவு வாழ்க்கையை மேற்கொள்ளுதல், பணம் பொருள் சொத்துக்கள் மீது ஆசைச் கொள்ளாமல் இருத்தல் என ஐந்து பண்புகளை ஜைன மதத்தின் உறுதி மொழிகளாக விளங்குகின்றன. குறிப்பாக அகிம்சையை தன்னுடைய கொள்கையாக போதித்த மாபெரும் சீர்திருத்தவாதியாக மகாவீரர் போற்றப்படுகின்றார்.

வட இந்தியாவில் இருந்த ஜைன மதம் தமிழ்நாட்டிற்கு கி.மு. 3ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரியரின் அரச குருவாக இருந்த பத்திரபாகு முனிவர் என்பவர் காலத்திலேயே வந்தது. இவர் தன்னுடைய சீடரான விசாக முனிவரை அனுப்பி சோழ, பாண்டிய நாடுகளில் ஜைனம் பரவ வழிவகை செய்தார்.

மனிதர்கள் அனைவரையும் சமமாக நோக்கும் பண்பை சமணர்கள் வளர்த்தனர். உயர்வு தாழ்வு இல்லை என்பது அவர்களின் கருத்து. துன்பப்படுபவர்களுக்கு உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி ஆகிய நான்கு தானங்களை செய்வதையே பெரிய அறமாக சமணர்கள் கருதினர். மேலும், அவர்கள் தங்கள் கொள்கை பிரச்சாரத்தை அந்தந்த பகுதி தாய் மொழிகளிலேயே செய்தனர்.

மாணாக்கன், மாணாக்கி என்ற சொற்களும் சமணக் கல்வெட்டுகளில் இருந்து பெறப்பட்டவையே. சமண ஆண் துறவிகள் மட்டும் இல்லாமல், பெண் துறவிகளும் கல்வி போதித்து வந்தனர். பெண்கல்வி வளர்ச்சிக்குச் சமணம் ஊக்கம் அளித்துள்ளது.

தேனினும் இனியது நம் தமிழ் மொழி. அம்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டோர் பலர். அவர்களுள் சமணர்கள் தனித்துவம் மிக்கவர்கள். ஆம் தமிழின் இனிமையைத் தனியாய் உணர்ந்தவர்கள் சமணர்கள். 'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழி நாலடியாரையும், திருக்குறளையும் குறிக்கும்.

இதில் திருக்குறளுக்கு இணையாக பேசப்படும் நாலடியார் சமணர்களால் இயற்றப்பட்ட நூலாகும். தற்காலத்தில் கூட தமிழ்நாட்டில் வாழும் ஜைனர்கள் பள்ளிகள், கல்லூரிகள் என எண்ணற்ற கல்வி நிறுவனங்களை அமைத்து தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்கள். இதைத் தவிர, மருந்தகங்கள் மூலம் மருத்துவம், ஏழை, எளியவர்களுக்கு உணவு வழங்குதல் போன்ற சமுதாய பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருவது பாராட்டத்தக்கது.

தமிழ்நாட்டிலுள்ள 17 ஜெயின் ஆலயங்களை இந்துசமய அறநிலையத்துறை நன்கு பராமரித்து வருகின்றது. ஜெயின் சமூகத்தில் பெரும்பாலானோர் இந்தியா மட்டுமல்லாமல், உலகளவில் பல்வேறு தொழில் நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். தமிழ்நாட்டில் பெரிய அளவில் தொழில் தொடங்க வேண்டும் என இம்மாநாட்டிற்கு வந்து இருக்கின்ற உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

I request all of you who have assembled here to make substantial investments in Tamil Nadu. This State has many advantages namely,

- ❖ Peaceful State. Law and order maintained effectively.
- ❖ Single Window Portal for clearing Projects.
- ❖ Business Facilitation Act to provide time bound clearances and renewals, as well as grievances redressal mechanism for projects.
- ❖ One of the top three recipients of Foreign Direct Investment.
- ❖ Uninterrupted Power supply and infrastructure facilities.

- Transparent decision making Government

- Skilled Human Resources.

- Puratchi Thalaivi Amma had organised the first ever Global Investors Meet in September, 2015, at Chennai, in which more than 8000 industrialists had participated and investments worth 2.42 Lakhs Crore rupees were made. Investments worth 62,738 crore rupees have been materialised.

- This Government has proposed to organise the Second Global Investors Meet on January 23rd and 24th 2019.

I request all of you to participate in it.

I congratulate the organisers for having organised this wonderful conference, which would benefit Tamil Nadu and India.

நன்றி!

வணக்கம்.

ஏழை, எளிய மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களது மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன் அவர்களே! அரசு உயர் அதிகாரிகளே! கிரெடாய் அமைப்பின் நிர்வாகிகளே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரெடாய் அமைப்பின் சார்பில் நடத்தப்படும் FAIRPRO 2018 வீட்டுவசதி கண்காட்சியை தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி

அடைகிறேன். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நகரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால் இந்திய அளவில் மொத்த மக்கள் தொகையில் சுமார் 31 விழுக்காடு மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 7.2 கோடி பேரில் 48.45 விழுக்காடு மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் தொகை விகிதாச்சாரத்தில் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்திலும், ஒட்டுமொத்தமாக மூன்றாவது இடத்திலும் உள்ளது.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 6 சதவீத பேரும், நகர்ப்புற மக்கள் தொகையில் 9.6 சதவீத பேரும் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானதாக விளங்கும் உறைவிடத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் எண்ணற்ற பயன்களை பெறும் வகையில் தேவையான அனைத்து திட்டங்களையும் வடிவமைத்து ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டுவசதி வளர்ச்சியினை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் வழிகாட்டுதல்படி செயல்படும் அம்மாவின் அரசும் ஏற்படுத்தி வருகின்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு பல பன்னாட்டு நிறுவனங்கள் நமது மாநிலத்தில் தங்களது நிறுவனங்களை நிறுவியுள்ளனர் என்பது நாம் எல்லோரும் பெருமைபடத்தக்கதாகும். சென்னை மாநகர், தமிழ்நாட்டின் தலைநகரம் மட்டுமின்றி, ஒரு பன்னாட்டு நகர் [Global

City] என்ற பெருமையை பன்நெடுங்காலமாக பெற்றுள்ளது. உலக வங்கி மற்றும் பல பன்னாட்டு வங்கிகள் தங்களது அலுவலகங்களை சென்னையில் அமைத்துள்ளது, அதற்கு சான்றாகும்.

உலகத்தரம் வாய்ந்த மருத்துவ வசதி கொண்ட நகரமாகவும் சென்னை விளங்குகிறது. அதனை ஊக்கப்படுத்த தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளுக்கு 0.25 ஊக்க தளப்பரப்பளவு சலுகை அளித்துள்ளது. சென்னை மட்டுமின்றி, அனைத்து நகரங்களின் வளர்ச்சியை கருத்தில் கொண்டும், அதன் வளர்ச்சியை தொடர்ந்து நிலைநாட்டும் பொருட்டும், மாண்புமிகு அம்மாவின் அரசு பல உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகிறேன். வீட்டு வசதியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வழியாக குறைந்த வருவாய் பிரிவினர் மற்றும் நலிந்த வருவாய் பிரிவினர் பயனடையும் வகையில், வீட்டுவசதி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புத்துறை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மூலமாக தத்தமது பகுதிகளுக்கு முழுமையான திட்டம் தயாரிக்கப்பட்டு, குறிப்பிட்ட பகுதிகளில் அனுமதிக்கக்கூடிய நில உபயோக பயன்பாடு வகைபடுத்தப்பட்டு, சீரான நகர வளர்ச்சிக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. உரிய வளர்ச்சி விதிமுறைகள் அறிவிக்கப்பட்டு, நில உபயோகப்பகுதிக்கு தகுந்தவாறு கட்டுமான பணிகள் அனுமதிக்கப்படுகின்றன.

சிறப்பு கட்டடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 15 மீட்டர் கட்டட உயரத்தை தளர்த்தி 17 மீட்டராக மாற்றப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. கட்டடம் கட்டுவதற்கு

திட்ட அனுமதி விண்ணப்பங்கள் கணினிவழியாக பெறப்பட்டு, விரைவாக திட்ட அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டும் என்பதை ஏற்கெனவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். நானும் தெரிவிக்கின்றேன். நீங்கள் வைத்த கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இம்முறையை மேலும் செம்மைபடுத்த இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் (Indian Institute of Technology – Madras) ஆலோசனையுடன் மென்பொருள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், முதற்கட்டமாக, தொழிற்சாலைகளுக்கான திட்ட அனுமதி விண்ணப்பங்கள் ஒற்றை சாளர முறையில் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, விரைந்து திட்ட அனுமதி வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. அனைவருக்கும் வீடு என்ற நிலையை அடைய, தனியாரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். தனியார் துறையின் பங்களிப்பை, ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் பல தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது.

தனியார் துறையினரின் பங்களிப்பை அதிகரிக்க, ஊக்கத் தளப்பரப்பளவு அனுமதிக்கப்படுகின்றது. மேலும், குறைந்த வருவாய் பிரிவினருக்கு வீட்டு வசதியினை உருவாக்கும் நோக்குடன் – தேவைப்படும் முதலீட்டை ஏற்படுத்த, உறைவிட நிதி (Shelter Fund) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான ஏழை, எளியோர், அவர்களுடைய வாங்கும் திறனுக்கு ஏற்றவாறு வீடு கட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனைகளை வாங்கியுள்ளனர். அவர்களுடைய நலனை பாதுகாக்கும் வகையில் அம்மனைப் பிரிவுகளை வரன்முறைபடுத்திக்

கொள்ளும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மாவின் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனால், அம்மனைகளில் வீடு கட்ட அனுமதியும், வங்கிகளில் கடன் வசதி பெறவும் வழிவகை ஏற்பட்டுள்ளது. அரசு ஊழியர்கள் சொந்தமாக எளிதில் வீடு வாங்கி குடியிருக்க வழிவகை செய்யும் நல்லெண்ணத்துடன் மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபாய் என்றிருந்ததை 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணை பிறப்பித்தார்கள்.

நகர்ப்பகுதிகளின் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், சாலை இணைப்புகளை முறையாக மேம்படுத்தவும், வெளிவட்ட சாலை, பின்னல்வலை சாலைகள் போன்ற திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வெளியூரிலிருந்து வரும் பேருந்துகளால் உருவாகும் நெரிசலை குறைக்க சென்னை மாநகரின் தெற்கு பகுதியில் கிளாம்பாக்கத்தில் அதிநவீன வசதிகளுடன் பேருந்து முனையம் அமைக்கும்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதே நோக்கத்துடன் சென்னையின் வடக்கு பகுதியில் மாதவரத்திலும் பேருந்து முனையத்திற்கான கட்டுமானப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுபோன்ற மேலும் பல திட்டங்களை நிறைவேற்றி, வீட்டு வசதி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு அம்மாவின் நல்ஆசியோடு செயல்படும் இவ்வரசு தொடர்ந்து தனியார் துறையினரின் பங்களிப்பை ஊக்குவிக்க ஆவன செய்யும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வீட்டுவசதி கண்காட்சி வீடு வாங்குவோர் அனைவரும் பயன்படும் வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த

கண்காட்சியில் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் பங்கு பெறுவதால், பொதுமக்கள் தங்களுக்கு ஏற்ற வீடுகளை வாங்கவும், வீடு சம்பந்தப்பட்ட விவரங்களை அந்த நிறுவனங்களிடமிருந்து ஒரே இடத்தில் பெற முடியும். மேலும் வீட்டுவசதிக் கடன் வழங்கும் நிதிநிறுவனங்களும் இந்த கண்காட்சி அரங்கிலே இருப்பது கூடுதல் வசதியாகும் பாராட்டுக்குரியதாகும்.

இந்த கண்காட்சியினை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள பொதுமக்களைக் கேட்டுக் கொண்டு, இந்த நிகழ்வினை சிறப்பான முறையில் நடத்திய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

கிரெடாய் அமைப்பின் சார்பில் 23.02.2018 அன்று சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நடைபெற்ற FAIRPRO 2018 வீட்டுவசதி கண்காட்சியை தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள் ஆற்றிய உரை.*

உழைக்கும் மகளிர் சுதந்திரமாகவும், விரைவாக பணியிடங்களுக்கு சென்று வரவும், அம்மா இருசக்கர வாகனத் திட்டம்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தை துவங்கி வைப்பதற்கு அழைத்தபோது வருகிறேன் என்று மகிழ்ச்சியோடு சம்மதித்த மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு நன்றியுடன் கூடிய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த இனிய விழாவிற்கு வருகை தந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே, மாண்புமிகு துணை

முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத்தலைவர் அவர்களே, மற்றும் வருகை தந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அலுவலர்களே, தாய்மார்களே, பெரியோர்களே, பயனாளிகளே, பத்திரிகையாளர்களே, தொலைக்காட்சி நண்பர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டங்களால் மக்களைக் கவர்ந்தும், சட்டங்களால் மக்களைக் காத்தும் நின்ற வீர சக்தி; சினிமாத் துறையையும்; அரசியல் துறையையும் அரை நூற்றாண்டு காலம் ஆக்கிரமித்து தன்னைச் சுற்றியே சுழல வைத்த காந்த சக்தி; வாழ்ந்த ஒவ்வொரு நாளும் வரலாறாய் பதிவு பெற்ற ஆன்ம சக்தி! தமிழ்நாடு மாதவம் செய்து பெற்ற மங்கையர்க்கரசி! தமிழ்நாடு கோயில்கட்டி கும்பிடும் குல தெய்வம்! தமிழர் வீடுகளில் தவறாமல் ஒலிக்கும் வேதமந்திரம்! மகத்தில் பிறந்து – ஒரு யுகத்தையே வென்று,

“என் இல்லமும், உள்ளமும் தமிழ்நாடுதான்
என் மக்களோடுதான் எப்போதும் நானிருப்பேன்”

என்று, எப்போதும் நிகழ்காலமாய் வாழும் தெய்வசக்தி! தமிழர் மணம் பரப்ப – தன்னையே அரைத்து சந்தனமாய் தேய்ந்த, தியாகத் தீபம் நடந்து சென்ற வாழ்க்கை சுவடுகள் சிலவற்றை கனத்த இதயத்தோடும், பனித்த கண்களோடும் நீங்கள் பிறந்த இந்த நன்னாளில் நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

‘அம்மா என்றால் அன்பு’ என்ற பாடல்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சினிமாவுக்காக பாடிய முதல் பாடல். பிற்காலத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ‘அம்மா’வாகவே மாறினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

சட்டமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்கிறார்கள் என்றால்.. அந்தப் பட்ஜெட்டின் பக்கத்திற்கு பக்கம் ஏழைகள், தொழிலாளர்கள், மீனவர்கள், விவசாயிகள், பெண்கள் ஆகிய அடித்தட்டு மக்களின் புன்னகை முகங்கள்தான் தெரியும்.

'ஏழை எளியோர், ஆதரவற்றோர், முதியோர், விதவைகள், நலிவுற்ற பிரிவினர் ஆகிய சமுதாயத்தின் அடிதளத்து மக்களுக்கு கைகொடுத்து, அவர்களை உயர்த்த வேண்டும் என்பதில் நான் அளவற்ற அக்கறை கொண்டுள்ளேன்' என்று மணிக்கொரு திட்டம், நிமிடத்திற்கு ஒரு செயலாக்கம் என்று, விரைந்து செயலாற்றி.. தமிழ்நாட்டு மக்களை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் சென்றவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

நீர்வளம் பெருகினால், நிலவளம் பெருகும் நிலவளம் பெருகினால், உலகம் செழிக்கும் – என்ற புதிய மந்திரத்தை சொன்னவர் அம்மா அவர்கள். பொருளைச் சேமிப்பதைக் காட்டிலும், நீரை சேமிப்பதுதான் மிகவும் முக்கியம் என்று, 'மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை' தொலைநோக்கு பார்வையோடு செயல்படுத்தி, உலகையே தமிழ்நாட்டை உற்று நோக்க வைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாணவ மாணவியருக்கு 14 வகையான கல்வி உபபொருட்கள், விலையில்லா மடிக்கணினி, விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம், கட்டணமில்லா பேருந்து வசதி என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பல்வேறு கல்வித் திட்டங்களால் 'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்ற உன்னத நிலையை தமிழ்நாடு அடைந்தது.

ஊரகப் பகுதிகளிலும் 65 கல்லூரிகளை அமைத்து ஏழை, எளிய மாணவர்களின் உயர்க்கல்விக் கனவை நனவாக்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இதன் விளைவாக தமிழ்நாடு நாட்டிலேயே உயர் கல்வி சேர்க்கையில் 46.9 சதவீதம்

என்ற அளவுடன் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இது தேசிய சராசரியான 25.2 சதவீதத்தை விட இரண்டு மடங்கு கூடுதலாகும்.

ஏழை படித்த பெண்களுக்கு – திருமண நிதி உதவியுடன் 8 கிராம் தங்கம் வழங்கும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டம், விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், விலையில்லா கறவைப்பசு வழங்கும் திட்டம், விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம், விலையில்லா மின்விசிறி, கிரைண்டர், மிக்ஸி வழங்கும் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், அம்மா மருந்தகம், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம், தாய்ப்பால் வங்கி, தொட்டில் குழந்தை திட்டம், திருக்கோயில் அன்னதானத் திட்டம், உலமாக்கள் ஓய்வூதியத் திட்டம், என எண்ணற்ற நலத்திட்டங்களை ஏழைகளுக்காக வாரி வழங்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

“நீ கடவுளைப் பார்த்தது கிடையாது– அவன் கருப்பா ? சிவப்பா? தெரியாது. இறைவன் ஒருவன் இருக்கின்றான்– இந்த ஏழைகள் சிரிப்பில் தெரிகின்றான்” என்ற பாடலுக்கு மிகப் பொருத்தமானவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் 16.02.2018 அன்று டெல்லியில், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பள்ளி மாணவ – மாணவியரின் தேர்வுகள் தொடர்பான விவாதத்தின் போது – தமிழ் மொழி சமஸ்கிருதத்தை விட பழமையானது, அதனை நான் கற்றுக்கொள்ளாதது எனக்கு வருத்தமளிக்கிறது எனவும், தமிழ் மொழி பல சிறப்புகளை கொண்டது என தமிழ் மொழியை பாராட்டிப் பேசிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

I thank Hon'ble Prime Minister from my heart, on behalf of people of Tamil Nadu, for having praised the Tamil language as an ancient and beautiful language, in the recent, inter-action with students.

தமிழ்நாட்டை பசுமை மாநிலமாக மாற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்தார்கள். வனப்பகுதியில் மட்டுமின்றி, வனத்திற்கு வெளியே இருக்கும் காலியிடங்களிலும், அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகளை நட்டு – வளர்க்க மாபெரும் மரம் நடும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கினார்கள்.

மரம் நடும் திட்டத்திற்கு அரசே முன்னுதாரணமாக திகழவேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் 2012ஆம் ஆண்டு தன்னுடைய 64ஆவது பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் நாள் தொடங்கி டிசம்பர் மாதத்திற்குள் 64 இலட்சம் மரக்கன்றுகளை நட உத்திரவிட்டு அதை செம்மையாக செயல்படுத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளில் மாபெரும் மரம் நடு விழா நடத்தி அந்த ஆண்டு முழுவதும் இலட்சக்கணக்கான மரங்கள் நடப்பட்டன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 70 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் இந்த ஆண்டு முழுவதும், 70 இலட்சம் மரக்கன்றுகளை நடுவது என்ற இலக்கோடு இன்று கலைவாணர் அரங்க வளாகத்தில் முதலில் மரக்கன்றினை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நட்டு தொடங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடும், அருளோடும் 16.02.2017 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற நான் அன்றைய தினமே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில், ஐந்து திட்டங்களுக்கான கோப்புகளில்தான் முதலில் கையெழுத்திட்டேன்.

நான் முதன்முதலில் கையெழுத்திட்ட அந்த ஐந்து திட்டங்களில் முதல் திட்டமான "அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்" தமிழ்நாட்டின் தலைமகளாகவும், தமிழ்த்தாயின் தவப்புதல்வியாகவும் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்த இந்த நன்நாளில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தங்கள் திருக்கரங்களால் தொடங்கி வைப்பதன் மூலம், இத்திட்டத்திற்கு மேலும் பெருமை சேர்க்கின்றனர்.

இத்திட்டத்தினால் உழைக்கும் மகளிர் சுதந்திரமாகவும், விரைவாகவும் தங்கள் பணியிடங்களுக்கு சென்று வரவும், தங்கள் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் செல்லவும், யாரையும் சார்ந்து இருக்காமல் தங்களது அனைத்துப் பணிகளையும் குறித்த நேரத்தில் செய்ய இயலும்.

'மங்கையராய் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல் வரிகளுக்கேற்ப, மாதவம் செய்து பிறந்த மகளிரின் முன்னேற்றத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்ததைப்போலவே, இந்தியாவை மாபெரும் வல்லரசாக்கும் திட்டங்களை வகுத்து விரைந்து செயலாற்றிக்கொண்டிருக்கிற மாண்புமிகு பாரத பிரதமர்" அவர்களும் மகளிரின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டு, பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்தி வருவதை இந்தியாவே பாராட்டுகிறது.

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டதால் "அம்மா இரு சக்கர வாகனத் திட்ட விழாவும்", வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது. அதற்காக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பாக மீண்டும் நன்றியை தெரிவித்துகொள்வதோடு, இந்த பொன்னான வேளையில், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம் ஒரு சிறு கோரிக்கையை தமிழ்நாட்டு மக்கள் சார்பாக வைக்க விரும்புகிறேன்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாடே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் "காவேரி மேலாண்மை வாரியம்" (Cauvery Management Board) மற்றும் "காவேரி நீர் முறைப்படுத்தும் குழு" (Cauvery Water Regulation Committee) ஆகியவற்றை உடனடியாக அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பாக அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

Sir,

I thank you very much for gracing the occasion of Amma's 70th Birthday and inaugurations the "Amma Two wheeler Scheme" for working women and also the 'Massive Tree Planting Scheme' which are close to Amma's heart.

On this momentous occasion on behalf of the people of Tamil Nadu, I would like to request the Hon'ble Prime Minister to take speedy action to form the 'Cauvery management Board' and the 'Cauvery Water Regulation Committee' as per the directions of the Hon'ble Supreme Court.

நன்றி!

வணக்கம்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா *அவர்களின் 70ஆவது பிறந்தநாளையொட்டி 24.02.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் மரக்கன்றுகள் நடும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் ஆற்றிய உரை.*

சட்டம் ஒழுங்கை காப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு காவல்துறையினருக்கு முழு சுதந்திரம் அளித்து வரும் அரசு!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர்

பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! உள்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே! காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே! அரசு துறைச் செயலாளர்களே! காவல்துறை உயர்அதிகாரிகளே! துறைத் தலைவர்களே! மாவட்ட ஆட்சித்தலைவர்களே! காவல்துறை ஆணையாளர்களே! காவல்துறை கண்காணிப்பாளர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நடைபெறுகின்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு உங்களிடம் உரையாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கும் இந்த அரசு, பல்வேறு முக்கிய கொள்கை முடிவுகளை எடுத்தும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அறிவித்தும், அவற்றிற்கு அடிக்கல் நாட்டியும், பல புதிய திட்டங்களை நிறைவேற்றியதன் மூலம், மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கின்றது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு மக்கள் சேவையில் தனது பணியைச் செம்மைப்படுத்துவதற்கும், அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் மேலும் சிறப்பாகக் கொண்டு சேர்ப்பதற்கும், உங்கள் ஆலோசனைகளைப் பெற்று செயல்படுத்துவதற்கும் இம்மாநாடு வழிவகை செய்யும். அதுமட்டுமன்றி, மக்களின் வாழ்வு வளம் பெறவும், அவர்களின் நலனைப் பேணிக்காக்கவும், நாம் அனைவரும் முனைப்பாகச் செயல்பட இம்மாநாடு ஒரு தூண்டுகோலாக இருக்கின்றது.

சட்டம் ஒழுங்கை திறமையாகப் பராமரித்தல், பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை வெளிப்படையாகவும், திறமையாகவும்,

விரைவாகவும் அளித்தல், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துதல், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், புதிய உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக உருவாக்குதல், “அமைதி, வளம், வளர்ச்சி” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தாரக மந்திரத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்லுதல் ஆகியவை இம்மாநாட்டின் முக்கிய நோக்கங்களாகும்.

“மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட மக்கள் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு என்ன என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பின்பற்றி நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றேன்..... ”

இது மாண்புமிகு அம்மா அவர்களின் அமுத மொழி. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் காவல் துறை அதிகாரிகளாகிய நீங்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதை மனதில் கொண்டு, உங்களுக்கு கிடைத்த இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, மக்கள் நலனுக்காக திட்டங்களைச் செயல்படுத்தி, அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லும் பாலமாகவும், மக்கள் சேவகர்களாகவும் செயல்படவேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர்களும், காவல் துறை அதிகாரிகளும், சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதன் மூலம் தான், மாநிலத்தில் அமைதியை ஏற்படுத்திட இயலும். மேலும், மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை அதிகாரிகளும்தான் பொறுப்பு. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாங்கள் வளர்ச்சிப் பணிகளுக்கும், மக்கள் நலத் திட்டங்களுக்கும்தான் பொறுப்பு என்று நினைத்துச் செயல்பட்டாலும், காவல்துறை கண்காணிப்பாளர்கள், சட்டம் ஒழுங்கு நிலவரம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்காமல் தன்னுடைய

பொறுப்பு மட்டுமே என எண்ணிச் செயல்பட்டாலும், பாதிக்கப்படுவது மாவட்டத்தின் சட்ட ஒழுங்கே! இரு துருவங்கள் போல் இல்லாமல், நீங்கள் இருவரும் இரு கண்களைப் போல் ஒருங்கிணைந்து செயல்பட்டால், சட்டம் ஒழுங்கை மேலும் சிறப்பாகப் பேணிக்காக்க இயலும்.

சட்டம் ஒழுங்கை சரிவர பராமரிக்க, கிராம மற்றும் நகரப் பகுதிகளில் உள்ள காவல்துறை மற்றும் வருவாய் அலுவலர்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுவதை முன்கூட்டியே ஒற்று அறிந்து, தங்களுடைய உயரதிகாரிகளுக்கு உடனுக்குடன் அத்தகவல்களை தெரிவிப்பதை தங்களுடைய முக்கியப் பணியாக கருத வேண்டும். “முளையிலேயே கிள்ளி எறிவது” என்ற பழமொழிக்கு ஏற்ப, சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் முன் அதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பயங்கரவாதமும், மதவாதமும், இடதுசாரி தீவிரவாதமும் சமுதாயத்தின் மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். இச்சவால்களை திறம்பட எதிர்கொள்ள, நமது புலனாய்வு அமைப்புகளை பலப்படுத்தி, பயங்கரவாத அமைப்புகள் உருவாகாமல் தடுத்து, ஆரம்ப நிலையிலேயே களை எடுக்க வேண்டும். அழிவு சக்திகளை கட்டுப்படுத்தி, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் நீங்கள் அனைவரும் செயல்படவேண்டும். அவ்வாறு நீங்கள் செயல்பட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், நமது மாநிலம் தொடர்ந்து அமைதிப் பூங்காவாக விளங்கும் வகையில் பணியாற்ற வேண்டும்.

தேசிய பாதுகாப்புக்கும், உள்நாட்டு பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயல்படும் நபர்கள் மற்றும் அமைப்புகள் மீது, தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்க வேண்டும்.

சாதி மோதல்கள் ஏற்படக்கூடிய பதட்டமான பகுதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும், தங்களுடைய கண்காணிப்பு வளையத்திற்குள் எப்போதும் வைத்திருக்க வேண்டும். உங்களுடைய வாராந்திர சட்ட ஒழுங்கு கூட்டத்தில் இதனை முக்கிய விவாதப் பொருளாகக் கொண்டு, விவாதிக்க வேண்டும். நல்லிணக்க கூட்டங்களை அவ்வப்போது நடத்த வேண்டும். சாதி எனும் கொடிய தீயினை தூண்டிவிட்டு, குளிர்காய நினைக்கும் சமூக விரோத கும்பல்களைக் கண்டறிந்து, வேற்றுமைகளைக் களைந்து, சமூக ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும்.

வழிப்பறிக் கொள்ளை, நகைப் பறிப்பு ஆகிய குற்றச் செயல்களை வளரவிடாமல் தடுப்பதற்கு காவல்துறையினர் ரோந்துப் பணிகளை அதிகப்படுத்த வேண்டும். மக்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் கண்காணிப்புப் பணிகளை அதாவது visible policing-ஐ, காவல்துறையினர் மேற்கொள்ள வேண்டும். குற்ற நடவடிக்கைகளை தடுப்பதற்கும், நடைபெறும் குற்றங்களில் குற்றவாளிகளைப் பிடிக்க விரைந்து செயல்படுவதற்கும் உதவும் வகையில், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும், ஆங்காங்கே கண்காணிப்பு காமராக்களை நிறுவியும் பணியாற்றி குற்றங்களை கண்டுபிடிக்க வேண்டும்.

முன்விரோதம் மற்றும் தொழில் தகராறு காரணமாக மர்ம நபர்களால் நடத்தப்படும் படுகொலை சம்பவங்களை ஒடுக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இளைஞர்களிடையே தற்போது புதிதாக தலையெடுத்துள்ள கத்தி போன்ற ஆயுதங்களைப் பொது இடங்களில் பயன்படுத்தி பொதுமக்களை அச்சுறுத்தும் கலாச்சாரத்தினை முற்றிலுமாக ஒழிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நகரங்களில், முக்கிய சாலைகள் மற்றும் சாலை சந்திப்புகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சீர் செய்வதற்கு ஆங்காங்கே போக்குவரத்துக் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அப்பணியில் சிரத்தையுடன் ஈடுபடுவதை உறுதி செய்ய காவல் துறை உயர் அலுவலர்கள் அவ்வப்போது மேற்பார்வை செய்தல் அவசியம். மேலும், போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தனியார் பங்களிப்புடன் ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்களை நிறுவ வேண்டும்.

சாலை விபத்துகள் தனி மனித வாழ்வில் பெரும் துயரத்தையும், பேரிழப்பையும் ஏற்படுத்துகின்றன. அவற்றைத் தடுக்க, அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களை இனம் கண்டறிந்து, அவ்விடங்களில் சாலைகளை சீரமைத்தோ, தடுப்பு வேலிகள் அமைத்தோ, வாகனத்தின் வேகத்தைக் குறைக்கத் தேவையான எச்சரிக்கை பலகைகளை அமைத்தோ, மேலும் ஒரு விபத்து கூட அவ்விடத்தில் ஏற்படாமல் தடுக்க, முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நெடுஞ்சாலைகளில் ரோந்து பணிகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும். காவல்துறையின் ரோந்துப் பணிகளுக்காக அதிக அளவில் வாகனங்கள் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கந்துவட்டி சம்பந்தமாக பெறப்படும் புகார்கள் மீது, தற்பொழுது அமலில் உள்ள "தமிழ்நாடு அதீத வட்டி வசூலித்தல் தடை சட்டம், 2003"ன்படி உரிய நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

ஒரு நம்பர் லாட்டரி, இணைய தளம் வாயிலாக நடைபெறும் சூதாட்டங்கள், குட்கா விற்பனை, போதைப்பொருட்கள் விற்பனை போன்றவை பொதுமக்களை, குறிப்பாக எதிர்கால சந்ததியினரைப் பெரிதும் பாதிக்கும் என்பதை உணர்ந்து இவற்றைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகளை தொடர வேண்டும். மேலும்,

இம்மாதிரியான குற்றங்கள் ஏதும் உங்கள் எல்லைக்குட்பட்ட பகுதியில் நடப்பதாகத் தெரியவந்தால், சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களிலுள்ள காவலர்களை பொறுப்பாக்கி, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொருளாதார குற்றங்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள், சாதிய ஆணவக் கொலைகள் போன்ற குற்றங்களைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக வரும் புகார்கள் மீது, காலம் தாழ்த்தாமல் வழக்குகள் பதிவு செய்து, உரிய தொடர் நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு தகுந்த தண்டனை பெற்றுத்தர வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலனில் மாண்புமிகு அம்மாவின் அரசு எப்போதும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. அவர்களின் மீதான வன்கொடுமை புகார்களைப் பதிவு செய்து, அச்சட்டத்தின்படி பாரபட்சமின்றி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தியாவின் உள் மற்றும் வெளிநாட்டு பாதுகாப்பில் கடலோர பாதுகாப்பு முக்கிய பங்கெடுக்கின்றது என்றால் அது மிகையாகாது. கடலோரப் பாதுகாப்பு படை, கடலோர காவல் படை மற்றும் கடலோர கிராம வருவாய் நிருவாகத்தின் கூட்டு முயற்சி, நம் நாட்டின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியம் என்பதை மனதில் நிறுத்தி, கடலோர மாவட்டங்களில் பணிபுரியும் அலுவலர்கள் இந்நேர்வில் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

வெடிபொருட்களின் சட்ட விரோத பயன்பாடு சமூகத்தில் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், இம்மாதிரியான பொருட்களின் பயன்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை முழுவதுமாக கட்டுப்படுத்திட வேண்டும். வெடிபொருள் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் வெடிபொருள் தயாரிக்கும் இடங்களில்

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு நடவடிக்கைகளின் மூலம் இதனை உறுதி செய்ய வேண்டும்.

கள்ளச்சாராய உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டினை தடுப்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக உள்ளது. எனவே, இவற்றினை முற்றிலுமாக களைய தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

திருக்கோயில்களில் நடைபெற்ற தீ விபத்து போன்ற நிகழ்வுகளினால் பொதுமக்களின் மனதில் எவ்வித ஐயப்பாடும் ஏற்படாவண்ணம் திருக்கோயில்களின் பாதுகாப்பில் மாவட்ட நிருவாகமும், காவல்துறையும், தீயணைப்புத் துறையும், பொதுப் பணித்துறையும், இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து பணியாற்றிட வேண்டும். சமீபத்தில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஏற்பட்ட தீ விபத்தினைப் போல், வேறு எங்கும் நிகழக்கூடாது என்பதை நினைவில் கொண்டு, சம்பந்தப்பட்ட அனைத்து துறையுடனும் நீங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

இயற்கை இடர்பாடுகள் தவிர்க்கமுடியாமல் ஏற்படும்போது, அதன் தாக்கத்தினைக் குறைக்க தகுந்த முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகளை எப்போதும் தொய்வின்றி மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து, தமிழ்நாட்டு மக்களை “கண்ணை இமை காப்பது போல்” காத்து வருகிறது. மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்பு படை உருவாக்கப்பட்டு, பேரிடர் நேரங்களில் துரிதமாகச் செயல்பட்டு பொதுமக்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சிறிது சிறிதாக சேமித்த பணத்தை, பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்றும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் சில அவ்வப்போது முளைக்கின்றன. இதனைத் தடுக்கும் வகையில், பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். காவல்துறை குறும்படங்களை தயாரித்து அதனை

மக்களிடம் எடுத்துச்செல்ல மாவட்ட நிருவாகமும், காவல்துறை அலுவலர்களும் விழிப்புடன் செயல்பட்டு, சிறிது சந்தேகம் எழுந்தால் கூட, இத்தகு நபர்கள் அல்லது நிறுவனங்கள் மீது துரிதமாக, சட்டப்பூர்வ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

குற்றம் செய்து தண்டனை பெற்றவர்கள், மீண்டும் குற்றம் செய்யாத அளவிற்கு சீர்திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே உருவாக்கப்பட்ட இடம்தான் சிறைச்சாலை. ஆனால், சிறைச் சாலையினுள் மீண்டும் குற்றம் செய்ய தூண்டும் நடவடிக்கைகள் இருந்தால், சமூகத்தில் குற்ற நிகழ்வுகள் அதிகரிக்கும் அபாயம் ஏற்படும். எனவே, சிறைச்சாலைகளில் கண்காணிப்பை மேலும் செம்மைப்படுத்தி, இம்மாதிரி செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சிறைத்துறை அலுவலர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

“தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்பதும் தான் இந்த அரசினுடைய குறிக்கோள்” என்ற மாண்புமிகு அம்மாவின் குறிக்கோளின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல்துறை அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டு, சட்டம் ஒழுங்கு மற்றும் வளர்ச்சிப் பணிகள் மீது தங்களின் ஆக்கப்பூர்வமான விவாதங்களை எடுத்துரைத்து மாநிலத்தின் வளர்ச்சி பணிகளை மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
05.03.2018 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும்
காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய துவக்க உரை.

நீங்கள் எப்போதும் மக்கள் நலனைச் சிந்திப்பவர்களாகவும், மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுபவர்களாகவும் இருக்க வேண்டும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! அரசுத் துறை செயலாளர்களே! துறைத் தலைவர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர்களே மற்றும் அரசு அதிகாரிகளே!

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது குறித்து நேற்று நாம் ஆக்கபூர்வமான விவாதத்தை நடத்தினோம். இன்று, நாம் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் சமூக நலத் திட்டங்கள் குறித்து கலந்து ஆலோசிக்க உள்ளோம்.

மாண்புமிகு அம்மா அவர்களாலும், அவரைத் தொடர்ந்து, மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கு இம்மாநாடு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதற்கு முழு ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட நிருவாகத்திற்கு இந்த நேரத்தில் என்னுடைய மனதார நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல, தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் “பொன் விழா ஆண்டாக” இந்த ஆண்டினை கொண்டாட தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மாவட்டம் தோறும் விளையாட்டுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண்டும். இப்போட்டிகளின் முத்தாய்ப்பாக சென்னையில் ஒரு மாபெரும் விழா நடத்தப்பட உள்ளது.

“என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அனைத்து திட்டங்களையும், மாண்புமிகு அம்மாவின் அரசு சமுதாயத்தில் மிகவும் நலிந்த நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், முதியோர், பெண்கள்,

குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு கொண்டு சேர்ப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு முனைப்புடன் கண்காணித்திட வேண்டும்.

‘‘சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்’’ எனும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, உழவுத் தொழிலின் வளர்ச்சி, ஒரு நாட்டின் பசி, பிணியை போக்குவது மட்டுமல்லாது, பிற தொழில் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகின்றது. சென்ற ஆண்டு நமது மாநிலத்தில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் இடுபொருள் மானியம் வழங்க உத்தரவிடப்பட்டது. மேலும், பயிர்க் காப்பீட்டு திட்டத்தை நீங்கள் செம்மையாக செயல்படுத்திய காரணத்தினால், இதுவரை 3,046 கோடி ரூபாய் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு அரசு காப்பீட்டு நிறுவனங்களிலிருந்து பெற்றுத் தந்து, சாதனை படைத்துள்ளது. இத்தொகை வேளாண் பெருங்குடி மக்களுக்கு படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயப் பெருமக்களின் வருவாயை பெருக்கும் வண்ணம் நமது அரசு, ஒருங்கிணைந்த கூட்டுப் பண்ணைய திட்டம், நீடித்த மானாவாரி வேளாண்மைக்கான இயக்கம், விநியோக தொடர் மேலாண்மை, நீரா பான உற்பத்தி அனுமதி போன்ற முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டங்களைப்பற்றி விவசாய பெருமக்கள் முழுமையாக தெரிந்து கொண்டு பயன்பெற, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழிகாட்டியாக செயல்பட வேண்டும்.

சிறந்த நீர் மேலாண்மை மூலம் குறைந்த நீர் வளத்தில் நிறைந்த வருவாய் பெற நுண்ணீர் பாசன திட்டத்தை பரவலாக செயல்படுத்திட வேண்டும்.

வேளாண் பெருமக்கள் கூடுதலாக வருமானம் பெற ஏதுவாக பயிர்த் தொழில் மட்டுமன்றி, அதனைச் சார்ந்த விலையில்லா கறவை

மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம், கோழிகள் வளர்ப்பு மற்றும் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களை முழு முனைப்புடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்படுத்த வேண்டும்.

வேளாண் பயிர் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நல்ல விலை கிடைத்திட, உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்களை பெருமளவில் உங்கள் மாவட்டத்தில் உருவாக்கிட வேண்டும். அதற்காக வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

“வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயர குடி உயரும்”

எனும் ஔவைப் பிராட்டியின் வாய்மொழிக்கேற்ப, தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசால் விவசாயிகளின் பங்களிப்புடன் குடிமராமத்து பணிகள் துவக்கி வைக்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகள் இன்றியும், தூர் வாரியும் நீர்நிலைகளின் முழு கொள்ளளவினை பராமரிக்க வேண்டும்.

மேலும், விவசாயிகளின் நலனுக்காக, கட்டணமில்லா வண்டல் மண் வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசால் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த திட்டத்தினை மேலும் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும்.

அந்தந்த ஆயக்கட்டுப் பகுதிகளில் உள்ள விவசாயிகளைக் கொண்டு பாசன விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்கு, பொதுப்பணி மற்றும் வேளாண்மைத் துறையினரை

ஒருங்கிணைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 70ஆவது பிறந்த நாளையொட்டி, 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் துவக்கியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் தகுந்த இடங்களைத் தேர்வு செய்து தொடர் பராமரிப்பின் மூலம், பசுமைப் போர்வையை அதிகப்படுத்த வேண்டும்.

கல்வித் தரத்தைக் கொண்டு தான் ஒரு நாட்டின் முன்னேற்றம் அளவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு அம்மாவின் அரசு, பள்ளிக்கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, அரிய பல திட்டங்களை அறிமுகப்படுத்தி, உட்கட்டமைப்பு வசதிகளை பெரிய அளவில் ஏற்படுத்திக் கொடுத்து, பள்ளிக்கல்வித் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. புதிய பாடத் திட்டம் அறிமுகம், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், அறிவுத் திறன் வகுப்பறைகள் ஆகியவை இவற்றுக்குச் சான்றாகும். இத்திட்டங்களினால் உங்களது மாவட்டங்களில் மாணவர் சேர்க்கை விகிதம் அதிகரிக்க வேண்டும். இடைநிற்றல் அறவே தடுக்கப்பட வேண்டும். தேர்ச்சி விகிதம் அதிகரிக்க வேண்டும். மாணாக்கர்களின் தன்னம்பிக்கை பன்மடங்கு பெருக வேண்டும். இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணாக்கர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்க, பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து, மனவள ஆலோசனைகள் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பள்ளிகளில் இயங்கி வரும் சத்துணவு மையங்கள், குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையங்கள் சரியான முறையில் இயங்குகின்றனவா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இந்த மையங்கள் தேவையான குடிநீர், மின்சாரம் போன்ற

உட்கட்டமைப்பு வசதிகளுடன், குறைபாடுகளின்றி இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டும்போது, தேவையான குடிநீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் ஒருங்கிணைத்து ஏற்படுத்த வேண்டும். அதனை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுப்பணித் துறையினர் மூலமாக நிறைவேற்ற தக்க நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களான படித்த ஏழை பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களின் பணிகளையும், மகளிர் சுய உதவி குழுக்களின் செயல்பாடுகளையும், தொடர்ந்து கண்காணித்து, இடர்பாடுகள் ஏதும் இருப்பின், அவற்றினை உடனடியாக களைய வேண்டும். இத்திட்டங்களுக்கு, வெளிப்படையான தன்மையோடு தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு பயன்கள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை வசதிகள், கழிப்பறை வசதிகள் மற்றும் தெரு விளக்கு வசதிகள் உள்ளனவா என ஆய்வு செய்து, அவ்வசதிகள் இல்லாத இடங்களில் அவற்றை உடனே அமைக்கவும், முறையாக பராமரிக்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணாக்கர்களுக்கான விடுதிகளில் அடிப்படை வசதிகள் உள்ளனவா என ஆய்வு செய்து, அவ்விடுதிகளை சரிவர பராமரிக்க வேண்டும்.

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தற்போது நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்கள் முறையாக மக்களை சென்றடைய, "மின்னணு அட்டை" திட்டத்தினை இந்த அரசு, வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்ய, நியாய விலைக் கடைகள் மற்றும் உணவுப்பொருள் கிடங்கிகளில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் இயங்கி வரும் "அம்மா உணவகங்கள்" ஏழை, எளிய மக்களின் அட்சய பாத்திரமாக விளங்குகிறது. இவை தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

சுகாதாரக் குறியீடுகளில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய மாவட்டங்களில் தாய்–சேய் இறப்புகள் ஏதும் இல்லை என்ற நிலையை எய்திட தனி கவனம் செலுத்த வேண்டும்.

தொற்று நோய்களிலிருந்து பொது மக்களைக் காப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரத் துறைகளை ஒருங்கிணைத்து, ஆரம்ப நிலையிலேயே தொற்று நோய்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கட்டுப்படுத்திட வேண்டும்.

பொதுமக்களிடையே சரியான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி, தனிநபர் மற்றும் பொது கழிப்பிடங்களை, இடத்திற்கேற்றவாறு கட்டி, தமிழ்நாடு "திறந்த வெளி கழிப்பிடமற்ற மாநிலம்" என்ற சிறப்பினை எய்திட வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை மூலம் குப்பைகளை தரம் பிரித்து, மறு சுழற்சி மற்றும் உரம் தயாரித்தல் போன்ற முயற்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

நீங்கள் எப்போதும் மக்கள் நலனைச் சிந்திப்பவர்களாகவும், மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டுபவர்களாகவும், சட்டம் ஒழுங்கு, இயற்கை இடர்பாடு, உள்ளூர் பிரச்சனை ஏற்படும் நேர்வுகளில், களத்திற்கு நேரடியாகச் சென்று மக்களின் துயர் துடைக்கும் சேவகர்களாகவும் இருக்க வேண்டும் என்பதும், மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு சற்றும் குறைவில்லாமல் உங்களது பணி அமைய வேண்டும் என்பதும் எனது விருப்பம். அதை நீங்கள் அனைவரும் நிறைவேற்றுவீர்கள் என நான் நம்புகிறேன்.

சென்ற ஆண்டு போதிய பருவமழை இல்லாதபோதும், வறட்சியை திறம்பட சமாளித்து, மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்து, அரசுக்கு நற்பெயர் ஈட்டித் தந்தீர்கள். அதே போன்று, இந்த ஆண்டு கோடைக் காலத்திலும் “குடிநீர் பிரச்சனை இல்லை” என்ற நிலையினை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

பொதுமக்கள் அலைச்சல் இல்லாமல் பல்வேறு துறைகளின் சேவைகளை அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே வழங்கும் வகையில், பொது சேவை மையங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்து வருகின்றது. இம்மையங்கள் செம்மையாக செயல்பட்டு வருகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து, குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

சாலைகள், பாலங்கள், அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு தேவைப்படும் நிலங்களுக்கான நில எடுப்புப் பணிகள் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு தகுதியான அலுவலர்களை நியமித்து, அப்பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் பட்டா மாறுதல் உத்தரவுகள் வழங்கும் நேர்வுகளில், கிராமம் முதல் மாவட்ட அளவிலான அனைத்து நில ஆவணங்களிலும் தக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாவட்ட வருவாய் அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். இதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காலமுறையில் தணிக்கை செய்திட வேண்டும்.

பல்வேறு துறைகளின் மூலமாக வழங்கப்படும் சான்றிதழ்களை, உரிய கள ஆய்வு மூலம் விசாரணை மேற்கொண்டு கள ஆய்வு செய்து, தகுதி வாய்ந்த நபர்களுக்கு மட்டுமே விரைவாக வழங்க வேண்டும். இவ்வினத்தில் தவறுகள் ஏதேனும் நடந்தால், உரிய அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயக்கம் காட்டக் கூடாது.

அரசு ஊழியர்களின் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மிக முக்கியமாக, 7ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தி, மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்கி உள்ளது. மேலும், அரசு ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு, பல்வேறு மாவட்டங்களில் வீட்டு வசதி வாரிய பழைய குடியிருப்புகளை இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளை தமிழ்நாடு அரசு கட்டி வருகிறது. .

கோப்புகள் என்பது வெறும் காகிதங்கள் அல்ல. அவற்றின் பின்னணியில் தனி மனித வாழ்க்கையோ, பிரச்சனைகளோ அல்லது சமுதாயத் திட்டங்களோ உள்ளன. அதனால், நீங்கள் கோப்புகள் தேங்கா வண்ணம் விரைவாகவும், உடனடியாகவும் அவற்றிற்கு தீர்வு காண வேண்டும்.

பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கென வாரந்தோறும் “அம்மா திட்டம்”, “மக்கள் குறை தீர்க்கும் நாள்”, மாதந்தோறும்

“மனுநீதி நாள்”, “மீனவர் மற்றும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள்” போன்றவைகளை நடத்தி வருகிறீர்கள். அப்போது பெறப்படும் அனைத்து மனுக்களின் மீதும் தனி கவனம் செலுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதன் மூலம், அரசின் மீது பொது மக்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

மக்கள் பிரச்சினைகளை சார்நிலை அலுவலர்கள் மூலம் அறிந்து, அதனை துரிதமாக தீர்க்க வேண்டும். உங்களுடைய அளவில் தீர்க்க முடியாத பிரச்சினைகளை, அரசின் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு இந்த மாநாடு ஒரு சிறந்த இடமாகும்.

தங்கள் மாவட்டங்களிலுள்ள முக்கிய அம்சங்கள் குறித்து ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***06.03.2018** அன்று நடைபெற்ற*
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 குறிக்கோள்களை முழுமையாக எய்திடும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, அரசுத்

துறை செயலாளர்களே, துறைத் தலைவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே,

நேற்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும், தங்கள் மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பது பற்றிய நல்ல விவாதங்களை முன் வைத்தீர்கள்.

இன்று, இந்த அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை நல்ல முறையில் செயல்படுத்தி, மக்களிடம் கொண்டு செல்வது குறித்து பல்வேறு நல்ல கருத்துக்களை பகிர்ந்து கொண்டீர்கள்.

இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதிலும், மனிதவள மேம்பாட்டிலும், பொருளாதார வளர்ச்சியிலும் முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதற்கு உங்கள் அனைவரின் செம்மையான செயல்பாடுதான் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இம்மாநாட்டில் உங்களுக்குள் நல்ல பல கருத்து பரிமாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. பிற மாவட்டங்களின் செயல்பாடுகளுடன் உங்கள் மாவட்டத்தின் செயல்பாட்டினை ஒப்பிட்டு பார்த்திருப்பீர்கள் என நினைக்கிறேன். இது உங்களுக்கு ஒரு நல்ல சுய பரிசோதனை ஆகும். இதன் மூலம், பல்வேறு மக்கள் நலப்பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் இருந்த உங்களது பார்வையினை மேம்படுத்தியிருக்கும் என நான் நம்புகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு பொது மருத்துவரைப் போன்று அனைத்து விதமான மக்களின் தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் நல்ல தீர்வை வழங்குவது மிக அவசியமாகும்.

அவ்வப்போது பொதுமக்களிடமிருந்து வரும் புகார் மற்றும் மனுக்களின் மீது தங்கள் தனிகவனத்தை செலுத்தி, அவற்றை இனம்

பிரிக்க வேண்டும். அவ்வாறு இனம் பிரிக்கப்பட்ட புகார்கள் மற்றும் மனுக்களின் மீது ஒரு முழுமையான தீர்வினை எட்டுவதற்கு, மாவட்ட அளவில் அனைத்து துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும். இதன் மூலம் பொதுமக்களின் மனுக்கள் மற்றும் புகார்கள் மீது ஒட்டுமொத்த தீர்வுகளை காண முடியும்.

பல்வேறு துறைகளுக்கான வாராந்திர, மாத சீராய்வுகள் மிக அவசியம் என்றாலும், கள ஆய்வு செய்து அந்த திட்டத்தின் உண்மை நிலையினை அறிவதற்கு நல்ல வாய்ப்பாகும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தவறாமல் கள ஆய்வு செய்ய வேண்டும்.

மேலும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வழங்குதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல் போன்ற இனங்களிலும், சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியிருக்கும் மக்களுக்கு தேவையான ஓய்வூதியம் வழங்குதல், திருமண நிதியுதவித் திட்டம் வழங்குதல் போன்ற அரசு நலத்திட்டப் பணிகளை சிந்தாமல் சிதறாமல் மக்களுக்கு கொண்டு செல்லுவதில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இல் உள்ள குறிக்கோள்களை முழுமையாக எய்திடும் வகையில், துரிதமாக நாம் அனைவரும் பணியாற்றிட வேண்டும்.

> “முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
> படுபயனும் பார்த்துச் செயல்.”

என்ற வான் புகழ் பெற்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, ஒவ்வொரு மக்கள் நலத் திட்டத்தினையும் மற்றும் வளர்ச்சித் திட்டத்தினையும், செய்து முடிக்கும் வகையும், அதனால் கிடைக்கும் பெரும் பயனையும் ஆராய்ந்து, இடையூறுகளை எதிர்கொண்டு நல்ல முறையில் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி, உங்கள் திறனை

அதிகரித்துக் கொண்டு, அரசிற்கும் நற்பெயரினை பெற்றுத் தர வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

"எதையும் முழுமையான ஈடுபாட்டோடு செய்தால்
வெற்றி நிச்சயம். அதை, ஒரு சமூக அர்ப்பணிப்பு
உணர்வோடு செய்தால் அது தான் தேச சேவை"

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கூற்றுப்படி உங்கள் பணி மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்.

06.03.2018 அன்று நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
ஆற்றிய நிறைவுரை.

நமது மாநிலம் அமைதிப் பூங்காவாக திகழ, பயங்கரவாதம், தீவிரவாத செயல்களைக் கட்டுப்படுத்தும், காவல்துறைக்கு பாராட்டுகள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே, மரியாதைக்குரிய உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே, காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே, காவல் துறை உயர் அதிகாரிகளே, காவல் ஆணையர்களே, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டின் முதல் நாளன்று சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதித்தோம். இரண்டாம் நாளன்று, வளர்ச்சிப் பணிகள் மற்றும் அரசின் திட்டங்கள் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்தோம். காவல் துறையின் செயல்பாடுகளை மேலும் செம்மையாக்க நாம் விவாதிக்க உள்ளோம்.

> "மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார்
> கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்
> செவ்வி அருமையும் பாரார்; அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயினார்"

என்கிறார் குமரகுருபரர் எனும் புலவர்.

அதாவது, ஒரு காரியத்தை செய்ய வேண்டும் என்று துணிந்து இறங்கியவர்கள், உடல் வலி, பசி, தூக்கம், அடுத்தவர் சொல்லும் அவமதிப்பான சொற்கள் ஆகியவற்றை பொருட்படுத்தாது, தன் காரியத்தை செய்வதிலே கவனமாக இருப்பார்கள், என்பதே!

இந்த பாடல் காவல்துறையினரின் பணிக்கு சாலப் பொருத்தமானதாகும். காவல்துறையினர் தங்களது பணியினை ஆற்றும்பொழுது ஏற்படும் எதிர்மறையான விமர்சனங்களை பொருட்படுத்தாமலும், தங்களது குடும்பத்தினருடன் கூட நேரம் செலவிட முடியாமலும், நேரம் காலம் பார்க்காமல் மக்கள் பணி ஆற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டும் பணிபுரிகின்றனர்.

இராணுவ வீரர்கள் எல்லை பாதுகாப்பில் எதிரிகளுக்கு எதிராக போராடுகின்றனர். காவல் துறையினர் உள்நாட்டில் உலவும் சமூக விரோதிகளை எதிர்த்து போரிட்டு வருகின்றனர்.

காவல்துறையினரை பற்றி குறிப்பிடும்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள்,

“சட்ட திட்டத்தை மதிப்பவர்களுக்கு
உற்ற நண்பனாகவும், சட்டத்தையும்
மற்றவர்களின் உரிமைகளையும் மீறுபவர்களுக்கு
அச்சத்தைக் கொடுக்கக் கூடிய எதிரியாகவும்
காவலர் விளங்க வேண்டும். அதாவது காவலர்
என்பவர் நாணயத்தின் இருபக்கம் போன்றவர்.
சட்டப்படி நடப்பவருக்கு நண்பர் எனும் பக்கம்
தெரிய வேண்டும். சட்டத்தை மீறுபவர்களுக்கு
எதிரி என்ற பக்கம் தான் தெரியவேண்டும்.”

என்று கூறியிருக்கின்றார்.

மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக் காலத்திலும் சரி, அம்மாவின் வழிகாட்டுதலின்படி செயல்படும் அம்மாவின் அரசிலும் சரி, காவல் துறையினர் எந்தவிதமான நிருவாக குறுக்கீடுகளும் இல்லாமல், முழு சுதந்திரத்துடன் செயல்படுகின்றனர். இதனால் தான், காவல் துறையினர் எல்லாவிதமான சவால்களையும் சமாளித்து திறம்பட பணியாற்ற முடிகின்றது.

நமது மாநிலம் தொடர்ந்து அமைதிப் பூங்காவாக திகழ்வதற்கும், பயங்கரவாத மற்றும் தீவிரவாத இயக்கங்களின் செயல்பாடுகள் இல்லாமல், கட்டுப்படுத்தியதற்காகவும், காவல்துறைக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

களவு போன சொத்துக்களை மீட்பதில், 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய நான்கு ஆண்டுகளாக நாட்டிலேயே நமது

மாநிலம் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருவதற்காகவும், இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் மெட்ரோ நகரமாக சென்னையும், முதல் பெரிய நகரமாக கோயம்புத்தூரும் திகழ்ந்து வருவதற்காகவும், உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களாக கோயம்புத்தூர், R.S.புரம் மற்றும் சென்னை அண்ணா நகர் காவல் நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காகவும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய காவல் துறையினருக்கான பணித்திறன் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு அதிக பதக்கங்களுடன் முதலிடம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த நமது காவல்துறையினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையினர் சாதனைகள் பல புரிந்தாலும், பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் ஏற்பட்டு வரும் பல்வேறு மாற்றங்களினாலும், நகரமயமாதல், மக்கள் பெருக்கம், போக்குவரத்து நெரிசல், சமூக மாற்றங்கள், சமூக ஊடகங்களின் தாக்கம் போன்றவற்றால் காவல் துறையினர் பல்வேறு விதமான புதுப்புது சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மதவாதம், பயங்கரவாதம் மற்றும் இடதுசாரி தீவிரவாத அமைப்புகள் தமிழ்நாட்டில் இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

சாலைப் பாதுகாப்பு என்பது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொதுமக்களின் அன்றாட பயணங்களுக்கும் மிகவும் முக்கியமானதாகும். நெடுஞ்சாலைகளில் ரோந்துப் பணிகளை

மேற்கொள்வதற்காக அதிக அளவில் அளிக்கப்பட்டுள்ள வாகனங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் விபத்து தடுப்பு மையங்களில் உள்ள வசதிகளை உரிய முறையில் பயன்படுத்தி, சாலை விபத்துக்களை முழுவதுமாக தவிர்க்க வேண்டும்.

கள்ளச்சாராயம் அறவே ஒழிக்கப்படும் பகுதிகளில் சட்டவிரோத செயல்கள் குறையும் என்பதனை உணர்ந்து, அனைத்து மாவட்ட காவல் அதிகாரிகளும், தங்கள் பகுதியில் கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழித்து விட வேண்டும்.

மக்களை பாதுகாக்கின்ற காவல் நிலையங்களில் இறப்பு ஏற்படுவது என்பது, மக்களிடையே காவல்துறை மீதான நம்பகத்தன்மையை குறைத்துவிடும். எனவே, காவல் நிலையங்களில் ஏற்படும் மரணங்களை காவல் துறையினர் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

பெருகி வரும் தகவல் தொடர்பு சாதனங்களினால், குற்றங்களின் தன்மை மாறி, புது வகையான குற்றங்கள் தலைதூக்கி வருகின்றன. குறிப்பாக, கணினி வழிக் குற்றங்கள், சமூக ஊடகங்கள் வழி குற்றங்கள் போன்ற மிக நுட்பமான குற்றங்களைச் சொல்லலாம். அவற்றை தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் காவல் துறையினர் தங்களை தயார்படுத்திக்கொள்ள, நவீன தொழில்நுட்ப முறையை பயன்படுத்தி, பதில் வினைபுரிய வேண்டும்.

மாவட்டங்களில் தனிப்படைகள் அமைத்து சமூக விரோதிகளைக் கண்டறிந்து அவர்களை கைது செய்தும், வழக்குகளை திறம்பட நடத்தி தண்டனை பெற்றுத் தந்தும், தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் காவலில் வைத்தும், சிறையிலிருந்து வெளி வருபவர்களை தொடர்ந்து கண்காணித்தும், சமூக விரோத நடவடிக்கைகள் ஏதும் இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். சமூக விரோதிகள் எவராயினும், பாரபட்சமின்றி சட்டப்படியான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட மாநிலங்கள் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து வந்து தமிழ்நாட்டில் குற்றச் செயல்கள் புரிந்துவிட்டு உடனடியாக தங்கள் மாநிலத்திற்கு தப்பி ஓடும் பல நிகழ்வுகள் பதிவாகி வருகின்றன. இச்செயல்களுக்கு உடந்தையாக இருந்து, பரஸ்பர புரிதலுடன் குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடும் தமிழ்நாட்டில் உள்ள சமூக விரோத சக்திகளையும் ஒன்றாகக் கண்டறிந்து அவர்களை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நவீன சவால்களை எதிர்கொள்ளும் வகையில் காவல் ஆளிநர்களுக்கு தேவையான பயிற்சிகளை அளிப்பதிலும், காவல் துறையை நவீனமயமாக்குவதிலும், நாட்டிற்கே முன்னுதாரணமாக இருக்க வேண்டும். இதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க காவல் துறை உயர் அதிகாரிகள் தகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்கெனவே காவல்துறையை நவீனமயமாக்கும் ஒரு பகுதியாக அனைத்து காவல் நிலையங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அதன்படி மாநிலத்தில் பெரும்பாலான காவல் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவை இல்லாத இடங்களில் பொருத்துவதற்கு, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது தவிர, குறுஞ்செய்தி மூலமாக குற்றவாளிகளுக்கு அழைப்பாணை அனுப்பும் முறையும் மாண்புமிகு அம்மாவின் அரசு அமல்படுத்தியுள்ளது. இது போன்ற மேலும் வசதிகள் தேவைப்படின் அவற்றையும் செய்து கொடுக்க இந்த அரசு தயாராக உள்ளது.

மாவட்டங்களில் சட்டம், ஒழுங்கு பிரச்சினையை தூண்டுவோர் குறித்த தகவல்களைச் சேகரித்து, உடனுக்குடன் உயர் அதிகாரிகளுக்கு அவற்றை அனுப்பி, அதன் மீது தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பொதுமக்களிடையே, காவல்துறையினருக்கு நன்மதிப்பை பெற்றுத் தர, காவல் நிலையங்களுக்கு வரும் புகார்தாரர்களை மனிதாபிமானத்துடன் நடத்தி, அவர்களின் புகார்கள் மீது உடனடியாக வழக்கு பதிவு செய்து, குற்றவாளிகள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும், புகார்கள் மீது வழக்கு பதிவு செய்வதில் சுணக்கம் காட்டுவதோ, காவல் நிலைய எல்லையைக் காரணம் காட்டி புகார்தாரர்களை அலைக்கழிப்பதோ கூடாது. அத்துடன், காயமடைந்து வருபவர்களுக்கு உடனடியாக மருத்துவ வசதி ஏற்பாடு செய்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் காவல்துறை மீதான பொதுமக்களின் மதிப்பு உயரும். சென்னை வெள்ளத்திலும், கன்னியாகுமரி ‘ஒகி’ புயலிலும், காவல் துறையினர் தங்களுடைய கடமைக்கு அப்பாற்பட்டும் மக்கள் பணியில் ஈடுபட்டது, அனைவராலும் வெகுவாக பாராட்டப்பட்டதை இத்தருணத்தில் நினைவு கூற விரும்புகிறேன்.

மக்களை பாதிக்கும் பொது விநியோக அரிசி கடத்தல், மணல் கடத்தல், லாட்டரி சீட்டு விற்பனை, போதை மருந்து கடத்துதல், பொருளாதார குற்றங்கள், சூதாட்டம், திருட்டு விசிடி, வீடியோ கேம்ஸ் போன்ற சமுதாய குற்றங்களின் மீது தனி கவனம் செலுத்தி, அக்குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கெனவே குற்றம் செய்து சிறையில் இருக்கும் சில குற்றவாளிகள், வெளி நபர்களுடன் தொடர்பு கொண்டு புதிய குற்றங்கள் நடக்க காரணமாக இருந்தால், அவர்களை முற்றிலுமாக தடுக்க சிறைத் துறையினருடன் இணைந்து காவல்துறையினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சமீப காலங்களில் சிலை திருட்டு தொடர்பாக பல்வேறு செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவற்றின் மீது தனிக் கவனம் செலுத்தி, குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்து,

களவு போன சிலைகளை மீட்டு, அவர்களுக்கு கடுமையான தண்டனைகள் பெற்றுத்தர காவல் துறையினர் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும்.

மேலும், சட்டம் ஒழுங்கு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடத்தும் கூட்டங்களில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைத்து, எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும், காவலர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, புதிய குடியிருப்புகள், காவல் நிலையங்கள், காவல் துறை கட்டடங்கள் கட்ட தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ‘உங்கள் சொந்த இல்லம்’ திட்டம், ‘மலிவு விலை காவல் அங்காடிகள்’ திட்டம், இலவச முழு உடல் பரிசோதனை திட்டம், வாகன வசதிகள், காவல் ஆளிநர்களின் நலத் திட்டங்களை செயல்படுத்துதல், காவல் துறை நவீனமயமாக்கல் என அனைத்திலும் எப்பொழுதும்போல், நாட்டிற்கு முன் உதாரணமாகவே தமிழ்நாடு காவல் துறை இருந்து வருகின்றது. காவல் துறையினருக்கு தேவையானவற்றை செய்து கொடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு தயாராக உள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்து வகையிலும் உங்கள் செயல்பாடுகள் சிறப்பாக இருந்து வந்த போதிலும், ஒரு சில சமயங்களில் ஆங்காங்கு நடைபெறும் சில சம்பவங்கள், சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் தொய்வு ஏற்படுவது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி, ஒரு சிலர் குறை கூற ஏதுவாக அமைந்து விடுகின்றது. அது போன்ற சம்பவங்களும் நடவாமல் தடுத்து, உங்கள் பணிகளை மேலும் சிறக்க செய்வது பற்றி உங்களுடன் கலந்து ஆலோசித்து, உங்கள் கருத்துக்களைப் பெற்று

தகுந்த முடிவுகளை மேற்கொள்ளும் நோக்கில் நாம் இங்கு தற்போது கூடியுள்ளோம்.

காவல் துறையினர் குறித்த அரசின் கருத்துக்களையும், எதிர்பார்ப்புகளையும் உங்கள் முன் எடுத்துரைத்துள்ளேன். காவல்துறை மக்களுக்கு ஆற்றி வரும் நற்பணிகளை மேலும் மேம்படுத்தும் வகையிலும், மாவட்டங்களில் பல்வேறு பிரச்சினைகளில் நீங்கள் எதிர்கொண்டு தீர்வு கண்ட அனுபவங்களையும் எடுத்துரைக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

வணக்கம்.

காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
07.03.2018 அன்று ஆற்றிய உரை.

இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கை சிறப்பாக நிருவகிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று !

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே,
மரியாதைக்குரிய உள்துறை கூடுதல்
தலைமைச் செயலாளர் அவர்களே,
மரியாதைக்குரிய காவல் துறை தலைமை
இயக்குநர் அவர்களே மற்றும் வருகை தந்திருக்கின்ற
காவல் துறை உயர் அதிகாரிகளே,
மாவட்ட ஆட்சித் தலைவர்களே,
மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கம்.

“ஏழைகள் ஏழைகளாகவே இருந்துவிடக் கூடாது.
அவர்களது நிலை உயரவேண்டும்! அதற்காகவே
அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்”

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அன்னாரது எண்ணத்தை நிறைவேற்றும் திசையில் பயணித்து வருகிறது இந்த அரசு.

கடந்த மூன்று நாட்களாக நம்மிடையே நடைபெற்ற கருத்து பரிமாற்றம், தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து கொண்டு செல்லும் விதமாக அமைந்தது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது. இங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு கருத்தும், ஆலோசனைகளும் மாநில வளர்ச்சியில் உங்களுக்கு உள்ள அக்கறையை அறிந்துகொள்ள எனக்கு கிடைத்த வாய்ப்பாகவே நான் உணர்கிறேன்.

முதல் நாளில், மாவட்ட நிருவாகம் மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பான விவாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன. இரண்டாவது நாளில், பொது மக்களின் நலன் மற்றும் அவர்களின் தேவைகளை சரியான முறையில் பூர்த்தி செய்வது தொடர்பான விவாதங்கள் நடைபெற்றன. இன்று, காவல் துறை செயல்பாடுகள் குறித்தும்

சில இனங்களில், அரசின் உத்தரவை வேண்டியும் காவல் துறை அதிகாரிகள் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். இம்மாநாட்டின் மூலம், இந்த அரசின் கொள்கைகளையும், அரசின் நலத் திட்டங்களையும் முன்னைவிட சிறப்பாக மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தையும் நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

காவல்துறைக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் காரணமாக, தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்கிறது. இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கை சிறப்பாக நிருவகிக்கும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என கூறுவதில் நான் பெருமை அடைகிறேன். இதில் உங்கள் அனைவரின் பங்கும் உள்ளது. அதற்காக உங்களை நான் மனதார பாராட்டுகிறேன்.

இங்கு பரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் ஏழை, எளிய மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழிவகை செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன். மக்களைச் சென்றடைய வேண்டிய திட்டங்கள், சரிவர அவர்களை சென்று அடைவதை உறுதி செய்வது, களப் பணியாளர்கள் என்ற அளவில் களப் பணியாளர்களாகிய உங்களது தலையாய கடமையாகும். ஏனென்றால், ஜனநாயகத்தில் மக்கள்தான் எல்லாமுமே. அவர்களுக்கு சேவை செய்ய உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை, அர்ப்பணிப்பு உணர்வுடன் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரசின் பல்வேறு நலத்திட்டங்களை திறம்பட செயலாற்றியமைக்காக விருதுபெற உள்ள பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டில் நீங்கள் முன் வைத்த கோரிக்கைகளை பொறுத்தவரையில், தேவையானவற்றை செய்து கொடுக்க இந்த அரசு தயாராக உள்ளது.

அந்த வகையில், இம்மாநாட்டில் நீங்கள் வைத்த கோரிக்கைகளை பரிசீலித்த பின்னர், கீழ்க்காணும் அறிவிப்புகளை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அரியலூர் மாவட்டம்

- ஜெயங்கொண்டம் அரசு தலைமை மருத்துவமனையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

பெரம்பலூர் மாவட்டம்

- சின்னமுட்லூர் பகுதியில் தடுப்பணைக்குப் பதிலாக நீர்த்தேக்கம் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- வேப்பூர் ஒன்றியத்தில் உள்ள பகுதிகளுக்கு வெள்ளாற்றிலிருந்து ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம்

- தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், கபிஸ்தலத்தையும் அரியலூர் மாவட்டம் மேலராமநல்லூர் பகுதியையும் இணைக்கும் வண்ணம் கொள்ளிடம் ஆற்றில் 56 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்

நாகப்பட்டினம் மாவட்டம்

- கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் கூடுதல் நீரேற்று நிலையம் அமைப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

- நாகப்பட்டினம் ஆயுதப்படை வளாகத்தில் ஊர்க்காவல் படை பிரிவிற்கு 40 இலட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

- வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

கடலூர் மாவட்டம்

- ஆதனூர் – குமாரமங்கலம் இடையே கதவணை கட்டும் பணிக்கான நில எடுப்புப் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

- கடலூர், கம்பியம்பேட்டை – செம்மண்டலம் சாலையில் இரயில்வே கடவு எண் 157–இல் இரயில்வே மேம்பாலப் பணியை மேற்கொள்ள ஏதுவாக, ஜவான்ஸ்பவன் சாலை 2 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்டு, போக்குவரத்து மாற்றுப் பாதையாக பயன்படுத்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம்

- கீழக்கரை, வாலிநோக்கம், நயினார்கோயில் மற்றும் பேரையூர் ஆகிய இடங்களில் 4 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் புதிய காவல் நிலைய கட்டடங்கள் கட்டப்படும்.

- முதுகுளத்தூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளருக்கு குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் ரூ.61 இலட்சம் செலவில் கட்டித்தரப்படும்.

தருமபுரி மாவட்டம்

- பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் வழங்கப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

- KRP அணையின் பழுதான ஷட்டர்கள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

வேலூர் மாவட்டம்

- காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளில் உள்ள தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க ஒரு கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும்.

விருதுநகர் மாவட்டம்

- விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவிற்கு ரூ.1.10 கோடி செலவில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு தரம் உயர்த்தப்படும்.

- சிவகாசி காவலர் மருந்தகக் கட்டடம் ரூ.77 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம்

- புதுக்கோட்டையில் நூறு காவலர்கள் தங்குவதற்கான துயிற்கூடம் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

திருவாரூர் மாவட்டம்

- நன்னிலம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, கோட்டூர், திருவாரூர் மற்றும் கொரடாச்சேரி ஆகிய பகுதிகளுக்கு கும்பகோணம் அருகில் உள்ள கருகூர் மற்றும் கடம்பகுடி கொள்ளிடம் ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

- திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் மா.நெ.எண் 202, திருவாரூர் – மன்னார்குடி– முத்துப்பேட்டை சாலை கி.மீ. 13/0 – கி.மீ.17/0 –இல் முடியும் சுமார் 5.6 கி.மீ. நீளத்திற்கு ரூ.53 கோடி மதிப்பில் புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- திருவாரூர் மாவட்டத்தில் புதிய கிராம சுகாதார செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்படும்.

- மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.20 இலட்சம் செலவில் குருதி சேமிப்பு வங்கி அமைக்கப்படும்.

- திருவாரூர் மாவட்ட ஊர்க்காவல் படைக்கு ரூ.38 இலட்சம் செலவில் அலுவலகக் கட்டடம் கட்டித்தரப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம்

- காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டம்

- திருவள்ளூர் மாவட்ட ஆயுதப் படை, கவரப்பேட்டை காவல் நிலைய காவலர் குடியிருப்பு மற்றும் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

திண்டுக்கல் மாவட்டம்

- கொடைக்கானல் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளருக்கு குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் ஒரு கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

- ஒட்டன்சத்திரத்தில் 25 குடியிருப்புகள், கன்னிவாடியில் 3 குடியிருப்புகள் என மொத்தம் 28 காவலர்களுக்கான குடியிருப்புகள் 5 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித்தரப்படும்.

மதுரை மாவட்டம்

- வைகை ஆற்றின் குறுக்கே மாடக்குளத்தில் படுகை அணை ரூ.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

- மதுரை மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே மண்ணடி மங்களத்தையும் இரும்படியையும் இணைக்கும் வகையில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி ரூ.18 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

- தேசிய சிறார் நலத் திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு மன நல ஆலோசனைகள் வழங்கப்படும்.

தேனி மாவட்டம்

- ஆண்டிப்பட்டி மற்றும் மயிலாடும்பாறை ஒன்றியங்களில் விடுபட்டுப் போன பகுதிகளுக்கு வைகை அணைக்கு கீழ் பகுதியிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

- தேனி மாவட்டம், விவசாயத் தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டம் செல்வதற்கு கம்பம் மெட்டு 78 கி.மீ. சுற்றிச் செல்வதற்குப் பதிலாக, சாக்களத்து மெட்டு பகுதியில் 19 கி.மீ. நீளத்திற்கு சாலை வசதி ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- தேனி மாவட்டம், மேகமலை மற்றும் ஹைவேவிஸ் பகுதியில் இரண்டாம் கட்டமாக 13 கி.மீ. நீளத்திற்குச் சாலை வசதி ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தை நலப்பிரிவு விரிவாக்கம் செய்யப்படும்.

- 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் தேனி காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டித்தரப்படும்.

சேலம் மாவட்டம்

- அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அவசர விபத்து சிகிச்சைப் பிரிவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

- ஓமலூரில் காவல்துறையினருக்கு ஒரு கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடம் கட்டப்படும்.

- தேவூர் காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

- ஆத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலகத்திற்கு ரூ.45 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படும்.

- சேலம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு ரூ.65 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

கரூர் மாவட்டம்

- கரூர் மாவட்டத்தில் இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் நான்கு துணை காவல் கண்காணிப்பாளர்களுக்காக 6 குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.

நாமக்கல் மாவட்டம்

- குமாரபாளையம் நெடுஞ்சாலை பாதுகாப்புப் பணிக்கு புதியதாக ஒரு காவல் அலகு அமைத்துத்தரப்படும்.

சிவகங்கை மாவட்டம்

- 12 சிறு குடிநீர் திட்டங்களின் நீர் ஆதாரங்களை பெருக்கும் பொருட்டு புதிய ஆழ்துளை கிணறுகள் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

- சிவகங்கை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு ரூ.70 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

நீலகிரி மாவட்டம்

- 1969ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் நில (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரிக்கு மாற்றுதல்) சட்டத்தின் கீழ் கூடலூர் ஜன்மத்திற்கு உட்பட்ட நிலங்களை தீர்வு செய்வதற்கான எஞ்சிய பணிகளை விரைவில் முடிப்பதற்கு, மூன்று நபர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில், நீலகிரி மாவட்டத்தில் ஏற்கெனவே பணிபுரிந்துள்ள மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரும், வன அதிகாரி ஒருவரும், வருவாய்த் துறை அதிகாரி ஒருவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். உள்ளூரில் வசிப்பவர்கள், குறிப்பாக பழங்குடியினர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்தில் கொண்டு இப்பணிகளை விரைவுபடுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

- மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.7 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவிற்கு கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம்

- கோயம்புத்தூர் மாவட்டத்தின் முக்கியச் சாலையான திருச்சி பிரதான சாலையில் சிங்காநல்லூர், இராமநாதபுரம், சுங்கம் ஆகிய மூன்று முக்கிய சந்திப்புகளில் மேம்பாலம் அமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் 2018–2019இல் மேற்கொள்ளப்படும்.

- 2018–2019ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், திருச்சி சாலை, L&T சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணி, தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் மேற்கொள்ளப்படும்.

- 2018–2019இல் கோயம்புத்தூர் மாவட்டம், ஊட்டி செல்லும் துடியலூர் சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் மேற்கொள்ளப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலைக்கு எளிதாகச் செல்லும் வகையில் லாலி ரோடு அருகே ஒரு பாலம் அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- 2018–2019ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், சாய்பாபா கோயில் சந்திப்பு, துடியலூர் சந்திப்பு மற்றும் நரசிம்மநாயக்கன்பாளையம் சந்திப்பு ஆகிய இடங்களில் மேம்பாலம் அமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் மேற்கொள்ளப்படும்.

ஈரோடு மாவட்டம்

- ஈரோடு மாவட்டம், அந்தியூரில் ஒரு புதிய போக்குவரத்து காவல் நிலையம் ஏற்படுத்தப்படும்.

திருப்பூர் மாவட்டம்

- திருப்பூர் மாவட்டம், பல்லடம் புறவழிச் சாலை 8.3 கிலோ மீட்டர் நீளம் அமைக்கும் பணியில், முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை நெடுஞ்சாலைத் துறையால் தயாரிக்கப்படும்.

- உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 200 படுக்கைகள் கொண்ட பொதுப் பிரிவு ஏற்படுத்தப்படும். மேலும், 1.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக C.T. ஸ்கேன் வசதி செய்து கொடுக்கப்படும்.

- பல்லடம் உட்கோட்டத்தில் உள்ள மங்கலம் காவல் நிலைய காவல் ஆளிநர்களுக்கு 80 குடியிருப்புகள் 11 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித்தரப்படும்.

திருநெல்வேலி மாவட்டம்

- சங்கரன்கோவிலில் போக்குவரத்து காவல் நிலையத்திற்கு 96 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டித் தரப்படும்.

- தென்காசி போக்குவரத்து காவல் நிலையத்திற்கு 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டித் தரப்படும்.

- சங்கரன்கோவில் நகர காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டித்தரப்படும்.

- திருநெல்வேலி மாவட்டம் மானூரில் 52 குடியிருப்புகளும், ஊத்தமலையில் 34 குடியிருப்புகளும் என மொத்தம் 86 காவலர் குடியிருப்புகள் 15 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித்தரப்படும்.

தூத்துக்குடி மாவட்டம்

- தூத்துக்குடி மாவட்டம், NH–7 மற்றும் NH–45யும் இணைக்கும் கயத்தாறு – கடம்பூர், பசுவந்தனை – எப்போதும்வென்றான் ஆகிய சாலைகளை ரூ.31 கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி 2018–2019 மற்றும் 2019–2020இல் CRIDP திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

- தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு மருத்துவ உபகரணங்கள் ரூ.8.95 கோடி செலவில் வழங்கப்படும். இப்பிரிவிற்கு 6 மருத்துவர்கள், 25 செவிலியர்கள் உள்ளிட்ட 31 கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

- தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக ரூ.16 கோடி மதிப்பீட்டில் நவீன லீனியர் ஆக்ஸிலேட்டர் (Linear Accelerator) கருவி அமைக்கப்படும்.

- நாலாட்டின்புத்தூர் காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டித்தரப்படும்.

- தூத்துக்குடி மத்திய காவல் நிலையத்திற்கு ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம்

- கன்னியாகுமரி மாவட்ட கடலோரங்களில் ஏற்படும் கடலரிப்பு தடுப்புப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கோள்ளப்படும்.

- மேலும் அவசரகால பணியாக வல்லவிளை துறையில் கடல் அரிப்பைத் தடுக்க ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

- திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மணப்பாறை அரசு மருத்துவமனைகளுக்கு தேவைப்படும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

- திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிசு அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும். இனாம்குளத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் 8 காவலர்களுக்கு ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

- இனாம்குளத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் 8 காவலர்களுக்கு ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

- ஜீயபுரம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு ரூ.61 இலட்சம் செலவில் குடியிருப்பு மற்றும் முகாம் அலுவலகம் கட்டித்தரப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம்

- திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம் இரும்பேடு கிராமத்தில், கமண்டல நாக நதியின் குறுக்கே புதுப்பாடியில் உயர்மட்டப் பாலம் கட்டப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம் புதுப்பாடி – இலுப்பை – வடஇலுப்பை – பெரும்பாக்கம் – விஷார் – காஞ்சிபுரம் மாநில நெடுஞ்சாலை சாலை 116V கிலோ மீட்டர் 24/8இல் 31 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் உயர் மட்டப் பாலம் அமைக்கப்படும். முதற்கட்டமாக இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிறுநீரக சிகிச்சைப் பிரிவிற்கான டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்படும்.

- செய்யாறு, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.50 இலட்சம் செலவில், அவசர விபத்து சிகிச்சை பிரிவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

விழுப்புரம் மாவட்டம்

- விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலுக்கு செல்லக் கூடிய 26 கி.மீ. நீளமுள்ள 4 நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி 18 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2018–2019 மற்றும் 2019–2020இல் CRIDP திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

- விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்று நோய் சிகிச்சைக்குத் தேவையான வசதியை ஏற்படுத்த

சுமார் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் கோபால்ட் உயர்ரக கதிரியக்க சிகிச்சை கருவியும் அதன் உபகரணங்களும் வழங்கப்படும்.

- விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு மேம்படுத்தப்படும்.

- உளுந்தூர்பேட்டை பகுதியில் நிகழும் சாலை விபத்துகளைத் தடுக்க ரூ.83 இலட்சம் செலவில் புதிய போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கப்படும்.

- கோட்டக்குப்பம் காவல் துணை கண்காணிப்பாளருக்கு ரூ.79 இலட்சம் செலவில் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டித்தரப்படும்.

சென்னை மாவட்டம்

- சென்னை பெருநகர காவல் துறையில் பணியாற்றும் காவலர்களின் குழந்தைகளுக்காக புதுப்பேட்டை மற்றும் புனித தோமையார் மலை ஆகிய இடங்களில் விளையாட்டு பள்ளிகளுடன் கூடிய குழந்தைகள் காப்பகம் தலா ரூ.75 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

- டி–7 அண்ணாசதுக்கம் காவல் நிலையத்திற்கு, அண்ணா நினைவிடம், எம்.ஜி.ஆர். நினைவிடம் மற்றும் அம்மா நினைவிடத்திற்கு அருகில் ரூ.75 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.

- சென்னை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தலைமையகத்தில் ரூ.6 கோடி மதிப்பில் ஒரு நவீன கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்படும்.

- தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA) மூலமாக ஒரு கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பில் சூரிய மின்சக்தி திட்டம் அமைக்கப்படும்.

- ‘அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது’ என்ற ஔவையாரின் வாக்கின்படி, அரிய மனித உயிர்களை விபத்திலிருந்து காக்கும் உன்னதமான சேவையில் அதிக ஈடுபாட்டோடு செயல்படும் முதல் மூன்று மாவட்டங்கள் மற்றும் ஒரு மாநகரத்திற்கு ஆண்டுதோறும் “தமிழ்நாடு முதலமைச்சரின் விபத்து குறைப்பிற்கான சிறந்த மாவட்டம் மற்றும் சிறந்த நகரத்திற்கான விருது” வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- காவல் நிலையங்களில் மேம்பட்ட சேவையை மக்களுக்கு வழங்குவதை ஊக்கப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் சிறப்பாக செயல்படும் மூன்று காவல் நிலையங்களைத் தேர்ந்தெடுத்து “தமிழ்நாடு முதலமைச்சரின் சிறந்த காவல் நிலையத்திற்கான கோப்பை” வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகள் உங்களுக்கு மன நிறைவையும், தமிழ்நாட்டு மக்களுக்கு நற்பயன்களையும் அளிக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். இதுவரையில் நீங்கள் செய்த சிறப்பான பணிகளை பாராட்டும் அதே வேளையில், வரும் ஆண்டில் உங்கள் பணி மேலும் சிறக்கவேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். “இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தை உருவாக்கவேண்டும்! அந்த இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் நாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம்”, என்று கூறிய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் இலட்சியத்தை நிறைவேற்ற தொடர்ந்து நாம் அனைவரும் பாடுபடுவோம்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
07.03.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை.

வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு என தனியாக ஒரு தினம் கொண்டாடப்படும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, வாரியத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே, பூம்புகார் மேலாண்மை இயக்குநர் அவர்களே, வருகை தந்திருக்கும் கைவினைஞர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, பொதுமக்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வருகை தந்துள்ள அனைத்து மகளிருக்கும் எனது “மகளிர் தின நல்வாழ்த்துகள்”. கல்லிலே கலை வண்ணம் காண்பதும், தான் காணும் பொருட்கள் அனைத்திலும் பல கலை வண்ணங்களை உருவாக்கும் எண்ணங்களைக் கொண்டவர்களும் தான் கைவினைஞர்கள்.

அழகிய கைத்திறப் பொருட்களின் மேல் பொது மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தி பெருமளவு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளை இந்நன்னாளில் வழங்கவும், கைவினைஞர்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையும், உத்வேகத்தையும் அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் கைவினைஞர்களுக்கென வருடந்தோறும் தனியாக ஒரு தினம் கொண்டாடப்படும் என சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நடைபெறும் இந்த விழாவில் கலந்து கொண்டு கைவினைஞர்களுக்கு பல்வேறு விருதுகளை வழங்குவதிலும்,

பல்வேறு சிறப்புத் திட்டங்களை துவக்கி வைப்பதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்துதல், உரிய பயிற்சிகள் அளித்தல், கைவினைஞர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், கைவினைப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப் பளுவை குறைத்தல், கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளைக் களைதல், வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல், கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல், கைவினைஞர்களையும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையும் ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல், கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல் போன்ற உயரிய நோக்கங்களுக்காக தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு பொதுத் துறை நிறுவனம் தொடங்கப்பட்டது. பூம்புகார் என பிரபலமாக அறியப்படும் இந்நிறுவனம், 15 விற்பனை நிலையங்களையும், 7 உற்பத்தி நிலையங்களையும் கொண்டுள்ளது. மிக அழகான கைவினைப் பொருட்களை தயாரிக்கும் அரிய திறமை வாய்ந்த தமிழ்நாட்டு கைவினைஞர்களின் தயாரிப்புகளை உலக சந்தைக்கு எடுத்து செல்வதின் மூலம் இக்கைவினைஞர்களின் வருவாயை உயர்த்தி வளமடையச் செய்யும் நோக்கத்தில் அவர்களின் உற்பத்தித் திறனை விரிவாக்க, கடந்த ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் தகவல் தொழில் நுட்ப உதவியுடன் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும், துறையின் அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்கியதன் விளைவாக பூம்புகார் நிறுவனம் வணிக ரீதியாக ஆண்டுதோறும் லாபம் ஈட்ட துவங்கி பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், திருப்பதி தங்கத்தேர், ஈச்சநாரி விநாயகர் கோவில் தங்கத்தேர், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் தங்கத்தேர், மருதமலை தங்கத்தேர், இவைகள் அனைத்தும் தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் செய்யப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பூம்புகார் நிறுவனத்தின் அனைத்து நிருவாக அம்சங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட கணினிமயமாக்கியதின் காரணத்தினால் சராசரி 30 நாட்களில் எடுக்கப்பட்டு வந்த கோப்பு முடிவுகள் தற்போது 3 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்டுச் சொன்னால் இது ஒரு காகிதமற்ற கோப்பு நடவடிக்கை நிறுவனம் ஆகும். மேலும் டேலி கணக்கியல், ஒருங்கிணைக்கப்பட்ட சிசிடிவி கண்காணிப்பு, இ–பில்லிங், பயோ மெட்ரிக் வருகை பதிவேடு, பார்கோடிங், மின்னணு வர்த்தகம், முப்பரிமாண வடிவமைப்பு (3D Designing & Printing), ஆன்லைன் ஆய்வு, கைவினைஞர்களுக்கான மின்னணு தகவல் களஞ்சியம், இத்தகைய தகவல் தொழில்நுட்பங்களை செயல்படுத்தியதின் விளைவாக இந்நிறுவனத்தின் 2013–2014ஆம் ஆண்டில் ரூபாய் 31.07 கோடியாக இருந்த வணிகம், 2016–2017ஆம் ஆண்டில் ரூபாய் 40.35 கோடியாக உயர்ந்துள்ளது மற்றும் ரூபாய் 0.78 கோடியாக இருந்த லாபம், ரூபாய் 1.20 கோடியாக உயர்ந்தது மட்டுமின்றி, இந்நிறுவனத்தில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்தியதற்காக 2016–2017ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் "தேசிய வெள்ளி விருதும்", தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி 'தகவல் பரிமாற்றம் செய்தல்' என்ற செயல்பாட்டிற்காக 'ஸ்கோச் ஸ்மார்ட் கவர்னன்ஸ் Platinum' விருதும் பூம்புகார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த நிறுவனம் நவீன தகவல் தொழில் நுட்பத்தினை தனது செயல்பாடுகள் அனைத்திலும் பயன்படுத்தி, கைத்திறன் துறையில் ஒரு மின்னணு புரட்சியை செய்து வருகிறது என்பது நமக்கு நன்கு புலனாகிறது.

கடந்த 13 ஆண்டுகளாக தொடர்ந்து இந்நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. இந்நிலை வரும் ஆண்டுகளிலும் தொடரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூம்புகார் நிறுவனம் தனது பொருட்களை நேரடியாக ஆன்லைன் மூலம் விற்பனை செய்வதற்கு சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை இணையதளம் மூலம் தேர்வு செய்து வாங்கிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பொருட்கள் கைபேசி செயலியுடனும் இணைந்த வேன் / மோட்டார் சைக்கிள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகிறது.

மின் வணிக ஜாம்பவான்களான ஸ்னாப் டீல், பிளிப்கார்ட், கிராப்ட் வில்லா, ஷாப் க்ளுஸ் மற்றும் இன்டியா மார்ட் போன்ற நிறுவனங்கள் மூலம் பூம்புகார் தயாரிப்புகளை மக்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதற்காக வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதன் விளைவாக இந்நிறுவனத்தின் விற்பனை உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் அதிகரித்துள்ளது.

சுமார் 10 சமூக வலைதளங்கள் மூலம் பூம்புகார், சந்தை வாய்ப்பை பெற, உலகளவில் பிரசித்திப்பெற்ற இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.

❖ சென்னை விமான நிலைய உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முனையத்தின் உள் தோற்றத்தை சிறந்த கைவினைப் பொருட்கள் மூலம் அலங்காரப்படுத்தி மெருகேற்றும் பணியினை பூம்புகார் செய்துள்ளது. இதே போன்று மதுரை, கோயம்பத்தூர், திருப்பதி, பாண்டிச்சேரி விமான நிலையம் மற்றும் சென்னையிலுள்ள டிசிஎஸ் ராமானுஜம் மென்பொருள் பூங்கா, தலைமைச்செயலகம், ரிப்பன் மாளிகை மேலும் சென்னை எண்ணூர் காமராஜ் துறைமுகத்தின் தோற்றத்தை அழகுப்படுத்தும் பணியினையும் இந்நிறுவனம் செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து திருச்சி, தூத்துக்குடி விமான நிலையங்கள் போன்ற பலதரப்பட்ட நிறுவன கட்டடங்களும் கைவினைப் பொருட்களைக் கொண்டு மெருகேற்றப்பட உள்ளது.

❖ சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களான பஞ்சலோக சிலைகள், பித்தளை விளக்குகள், மரச்சிற்பங்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

❖ பூம்புகார் நிறுவனம் தொடர் வணிகமாக ஆஸ்திரேலிய நிறுவனமான Green Trends உடன் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கைவினைஞர்கள் மற்றும் அவர்களது திறமைகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரித்து, அவர்களுக்கென ஒரு தனி வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வலைதளம் 12.05.2017 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கென ஒரு கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இந்த வலைதளத்தில் தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வலைப்பக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கைவினைப் பொருட்களை பெருநகரங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் ஆண்டுதோறும் விற்பனை செய்ய வழிவகை செய்யும் வகையில் நகர்ப்புற கண்காட்சித் திடல் என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் கன்னியாகுமரியில் நகர்ப்புறக் கண்காட்சித் திடல் ஒன்று அமைக்கப்பட்டு 08.03.2017 அன்று நான் திறந்து வைத்துள்ளேன் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதே போன்று, மாமல்லபுரத்தில் 5 கோடி ரூபாய்

செலவில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற கண்காட்சித் திடலை நான் தொடங்கி வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி என்ற ஒரு திட்டம் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணிச் சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றில் உதவிடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதாகும். இதற்காக இந்நிறுவனத்திற்கு ரூபாய் 20 கோடியே 38 இலட்சம் மத்திய, மாநில அரசின் சார்பில் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக நாச்சியார்கோவில், சுவாமிமலை, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி மற்றும் வாகைகுளம் ஆகிய இடங்களில் கைவினைஞர்களுக்கான பொது வசதி மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு நான் தொடங்கி வைத்துள்ளேன். மேலும், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இந்த மையம் வரும் ஆண்டுகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதி நவீன தொழில்நுட்ப வசதியுடன், தமிழ்நாடு அரசின் நிதியுதவி 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் சர்வேதச விமான நிலையங்கள், அருங்காட்சியங்கள் போன்ற பல வெளிநாட்டவர் மற்றும் வாடிக்கையாளர்கள் வருகைத் தரும் முக்கிய இடங்களில் பூம்புகார் மெய் நிகர் தோற்றம் விற்பனை நிலையங்கள் (Poompuhar Virtual Realiity Show Room) நிறுவப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைவினைஞர்களை கௌரவிக்கும் வகையில்,

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது,

2. பூம்புகார் மாநில விருது,

3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது,

4. குழு உற்பத்தி விருது ,

5. பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது,

6. ஏற்றுமதி விருது,

7. அடுத்த தலைமுறை கைத்திறன் விருது

போன்ற 7 வகையான விருதுகளை 247 சிறந்த கைவினைஞர்களுக்கு வழங்குவதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரம் "உலக கற்சிற்ப நகரமாக" உலக கைத்திறன் குழுமத்தால்

அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும், இங்குள்ள கற்சிற்ப கலைகளுக்கு “புவிசார் குறியீடு” சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதுவரையில் தமிழகத்திலுள்ள

- ❖ சுவாமிமலை பஞ்சலோக சிலை,
- ❖ வடசேரி கோயில் நகை,
- ❖ தஞ்சாவூர் ஓவியம் ,
- ❖ தஞ்சாவூர் கலைத்தட்டு,
- ❖ தஞ்சாவூர் பொம்மை,
- ❖ நாச்சியார் கோவில் பித்தளை விளக்கு,
- ❖ பத்தமடை பாய் மற்றும்
- ❖ தோடா சித்திரத்தையல்

ஆகிய 8 கைத்திறத் தொழில்களுக்கு ஏற்கெனவே புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரூ.5 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மாமல்லபுரம் நகர்ப்புறத் திடல், ரூ.0.35 கோடிசெலவில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைப் பொருட்களுடன் கூடிய சிற்றுண்டி உணவகம் (craft cafe) ரூ.1.68 கோடி செலவில் சென்னையில் அமைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், ரூ.3.60 கோடி செலவில் நாச்சியார்கோவில், சுவாமிமலை, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி மற்றும் வாகைகுளம் ஆகிய 6 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கைவினைஞர்களுக்கான பொது வசதி மையங்களை நான் துவக்கி வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படவுள்ள உதகமண்டலம் நகர்ப்புறத் திடல், சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் ரூ.0.50 கோடி செலவில் அமைக்கப்பட உள்ள இரண்டாம் தளம் ஆகியவற்றிற்கு துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பத்தமடை மற்றும் குனியூரில் நலிந்த கைத்திறத் தொழில்களான கோரைப்பாய் மற்றும் சுடுகளிமண் தொழில்களுக்கு ரூ.0.94 கோடி செலவில் இரண்டு பொது வசதி மையங்களுக்கு துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்துறையானது மேன்மேலும் வளர்ச்சி பெற்று கைத்திறன் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்வில் முன்னேற்றம் கண்டு, தமிழ்நாட்டின் கலாச்சாரப் புகழை உலக அளவிற்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த விழாவினை சிறப்புற நடத்திய அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

---

*கைவினைஞர்கள் தினத்தையொட்டி 08.03.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.*

குடிமராமத்து திட்டத்தின் மூலமாக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,535 ஏரிகள் பணி நிறைவு!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி அம்மா அவர்கள் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலிலே வெற்றி பெற்ற பிறகு உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனம் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பின்படி உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனம் வழங்கும் விழாவிற்கு தலைமை தாங்கி கொண்டிருக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், இந்நிகழ்ச்சியில் சிறப்பான முறையில் உரையாற்றி அமர்ந்திருக்கின்ற முன்னாள் அமைச்சர் மேட்டூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்

திரு.செ.செம்மலை அவர்களுக்கும், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வி.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களான திரு.ஜி.வெங்கடாசலம் அவர்கள், திரு. ஏ.பி.சக்திவேல் அவர்கள், திருமதி பி. மனோன்மணி அவர்கள், திரு. எஸ்.ராஜா அவர்கள், திரு.எஸ். வெற்றிவேல் அவர்கள், திரு. ஆர்.எம்.சின்னதம்பி அவர்கள், திரு.அ. மருதமுத்து அவர்கள், திருமதி கு.சித்ரா அவர்களுக்கும், திரு.ஆர். இளங்கோவன் மற்றும் திரு.ஆர். சின்னசாமி அவர்களுக்கும், மானிய விலையில் அம்மா இரு சக்கர வாகனம் வாங்க வருகை தந்துள்ள பயனாளிகளுக்கும், துறை ரீதியான திட்டங்களை பெற வந்துள்ள பயனாளிகளுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், மகளிர் திட்ட இயக்குநர் திரு. ஈஸ்வரன் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிகழ்ச்சி இங்கு சீரோடும் சிறப்போடும் நடைபெற இந்த சோனா கல்லூரி தாளாளர் திரு.வள்ளியப்பா மற்றும் அவரது குடும்பத்தினர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியினை தொடங்கி வைக்க வருகை புரிந்துள்ள வனத்துறை அதிகாரிகள்அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்குவதற்கு அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். ஆனால், அம்மாவின் மறைவிற்குப்பிறகு அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்ற ஐயம் சிலருக்கு ஏற்பட்டது. அந்த ஐயத்தை போக்கும் விதமாக அம்மாவினுடைய அரசானது உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத்தை சிறப்பான முறையில் வழங்கி வருகிறது என்பதை இத்தருணத்தில் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னென்ன திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என நினைத்தார்களோ அத்தனை திட்டங்களையும் இப்பொழுது

உள்ள அம்மாவின் அரசானது சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா மற்றும் அம்மாவின் 70ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் விழாவிற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை அழைத்தோம். நம் அழைப்பினை ஏற்று நான் நேரிடையாக தமிழகம் வந்து இரு திட்டங்களையும் துவங்கி வைக்கிறேன் என்ற வாக்குறுதிப்படி அவரே நேரில் வந்து உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத்தை அளித்தார்கள். அம்மாவின் 70ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை சென்னை கலைவாணர் அரங்கில் மரக்கன்றினை நட்டு வைத்து துவக்கி வைத்தார். இந்த இரண்டு திட்டங்களும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவு திட்டங்கள் ஆகும். அதைப் பாரத பிரதமர் அவர்கள் துவங்கி வைத்தார்கள் என்பதை இந்நேரத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தில் 3,30,000 பேர் தமிழகத்தில் அம்மா இருசக்கர வாகனம் தங்களுக்கு வழங்குமாறு பதிவு செய்துள்ளார்கள். ஆண்டுக்கு 1 இலட்சம் பேருக்கு உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என அம்மாவின் அரசு அறிவித்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சென்னையிலே துவக்கி வைத்தார்கள். இன்றைய தினம் சேலம் மாவட்டத்தில் முதன் முறையாக 1,004 பயனாளிகளுக்கு உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டுள்ளது. அருமை சகோதரர் திரு. செம்மலை அவர்கள் குறிப்பிட்டது போல ரூ.20,000 மானிய விலையானது இப்பொழுது ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இன்றைக்கு உழைக்கும் மகளிரின் வேலைச்சுமையினை குறைக்கும் வகையிலும், பயணத்தின் போது மகளிருக்கு ஏற்படும் இன்னல்களை தவிர்க்கும் வகையிலும் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் அம்மா இருசக்கர வாகன திட்டத்தை உருவாக்கினார். இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலும் இந்த திட்டம் கிடையாது. குறித்த நேரத்தில் மகளிர்கள் வீடு திரும்புவதற்காக இந்த திட்டத்தை செயல்படுத்தி உள்ளோம். பதிவுசெய்த 3 இலட்சத்து 30 ஆயிரம் பயனாளிகளுக்கு முதற்கட்டமாக தகுதி வாய்ந்த நபர்களுக்கு வழங்கப்பட்டு பின்னர் மற்ற பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 1,200 பயனாளிகளுக்கும், சமூக நலத்துறையின் மூலம் 535 பயனாளிகளுக்கும், வருவாய் துறையின் மூலம் 227 பயனாளிகளுக்கும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் 100 பயனாளிகளுக்கும் என மொத்தம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 3,066 பயனாளிகளுக்கு

நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அம்மா அவர்கள் விட்டு சென்ற பணியினை தொய்வு இல்லாமல் சிறப்பாக செயல்படுத்தி வருகிறோம். சகோதரர் செம்மலை அவர்கள் குறிப்பிட்டது போல வேளாண்மைத்துறையில் 140 ஆண்டு கால வறட்சியை தமிழ்நாடு சந்தித்தது. அப்படிபட்ட நேரத்தில் கடுமையான வறட்சி நிலவியபோது கூட குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்கினோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.2,246 கோடி மானியமாக வழங்கப்பட்டது. அதேபோல விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டு திட்டத்தின் மூலம் ரூ.3,100 கோடி பெற்று தந்துள்ளோம். இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் பயிர் காப்பீட்டு திட்டத்திற்காக இவ்வளவு பெரிய தொகை கொடுத்தது கிடையாது.

மேட்டூர் அணையானது ஜீவ நதியான காவேரி நதியிலிருந்து பெறப்படும் நீரைக்கொண்டு பெறப்படுகிறது. மேட்டூர் அணையானது 84 ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் இருந்து வந்தது. ஆனால் அம்மாவின் அரசானது இப்பொழுது குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் வண்டல் மண் எடுக்கப்பட்டு தூர்வாரப்பட்டு வருகிறது. விவசாயிகள் இந்த வண்டல் மண்ணை எடுத்து தங்களது விளைநிலங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். தற்பொழுது தங்களுக்கு தேவையான அளவு வண்டல் மண்ணை மேட்டூர் அணையிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். இதன்மூலம் மேட்டூர் அணையானது ஆழப்படுத்தப்பட்டு 10 முதல் 15 டி.எம்.சி. நீரை சேமிக்கலாம். பருவ காலங்களில் அதிக வெள்ள நீர் வரும் பொழுது அதை தேக்கி வைத்து பயன்படுத்த முடியும். இதனால் மழை நீரானது வீணாகாமல் தடுத்து விவசாயத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்த முடியும். குடிநீர் ஆதாரமாக விளங்கும் மேட்டூர் அணையானது 16 மாவட்டங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விளைச்சல் அதிகமாக உள்ளது. இதற்கு காரணம் வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்து பயன்படுத்துவதினால்தான்

என்பதினை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு தானிய உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது.

அதேபோல் சேலம் மாவட்டத்தில் விவசாய கடன் தள்ளுபடி திட்டம் 2016இன் மூலம் 81,223 விவசாயிகளுக்கு ரூ.408.72 கோடி பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணமாக 1,41,272 விவசாயிகளுக்கு ரூ.65.7 கோடி அம்மாவின் அரசால் விவசாயிகள் நலனுக்காக வழங்கப்பட்டுள்ளது. மின்சாரத் துறையின் மூலமாக அணைத்து வீடுகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் கைத்தறி நெசவாளர்களுக்கு 10,173 நபர்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 76,829 விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. சமூக நலத்துறையின் மூலம் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தப்பட்டதன் மூலம் 4,301 பயனாளிகளுக்கு ரூ.16.08 கோடி நிதி உதவி மற்றும் 34,408 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

சமூக நலத்துறையின் மூலம் கர்ப்பிணிப் பெண்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாயாக இருந்து கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு திட்டத்தினை செயல்படுத்தினார்கள். இந்தியாவிலேயே இத்திட்டம் தமிழகத்தில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 3,600 கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு நடத்தப்பட்டு சரித்திர சாதனை படைக்கப்பட்டது. குடும்ப அட்டைகளுக்கு பதிலாக ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டத்தின் மூலம் 9,40,515 குடும்ப அட்டைதாரர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித்துறையின் மூலம் 28,300 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளும்,

25,640 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாணவ, மாணவியர்களுக்கென கணித உபகரணப் பெட்டிகள், பாட நூல்கள், பாட குறிப்பேடுகள், வண்ணசீருடைகள் போன்ற எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

உயர்கல்வி துறையின் மூலம் அரசு பல்தொழில்நுட்ப கல்லூரி ஆசிரியர் கல்வியியல் கல்லூரி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இலவச பேருந்து பயண அட்டை 1,12,801 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேட்டூர் பாதாள சாக்கடை திட்டம் தற்பொழுது நிறைவடையும் தருவாயில் உள்ளது. மேச்சேரி நங்கவல்லி காவேரி கூட்டு குடிநீர் திட்டம் இன்னும் 4 மாத காலங்களில் பயன்பாட்டிற்கு வரும். இத்திட்டத்திற்கென ரூ.158.64 கோடி மாண்புமிகு அம்மா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிலையான பாதுகாப்பான காவேரி குடிநீர் மேச்சேரி நங்கவள்ளி கிராமத்தில் உள்ள அத்தனை குடும்பங்களுக்கும் கிடைக்க அம்மாவின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஆத்தூர் நரசிங்கபுரம் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இவ்வாறாக அம்மாவின் அரசால் மக்கள் நலத்திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் 24,023 நபர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் ரூ.48.27 கோடி வழங்கப்பட்டுள்ளது. அம்மா நல பரிசு பெட்டகம் 19,943 ஏழை, எளிய குழந்தைகள் சுகாதாரமாக வாழ ரூ.2.75 கோடி மதிப்பிட்டில் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறையின் மூலம் 64,966 விவசாயிகளுக்கு ரூ.355.01 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைகடன் 3,30,150 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டி மானிய தள்ளுபடியுடன் மூலம் 8,777 விவசாயிகளுக்கு ரூ.5.05 கோடி அம்மாவின் அரசால்

விவசாயிகளின் நலனுக்காக வழங்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பசுமை வீடுகள் திட்டத்தின் மூலம் 1,900 வீடுகள் ரூ.34.19 கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டுள்ளது. மேலும் தனிநபர் இல்லக்கழிப்பறை 97,799 நபர்களுக்கு ரூ.34.19 கோடி மதிப்பீட்டில் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஊரக சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 121 சாலைப்பணிகள் ரூ.41.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நபார்டு திட்டம், தாய் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் திட்டம் போன்ற ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதில் ரூ.374.84 கோடி சுய உதவி குழுக்களுக்கான வங்கி கடன் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 4,806 நபர்களுக்கு விலையில்லா ஆடுகள் ரூ.62.52 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் 43,059 விவசாயிகளுக்கு ரூ.47.36 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. சமூக பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் 43,771 முதியவர்களுக்கு ரூ.48.14 கோடி, 3,381 ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3.71 கோடி, 9,386 கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.10.32 கோடியும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் விலையில்லா மிதிவண்டிகள் 7,054 மாணவர்களுக்கு ரூ.2.8 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற 367 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.26.22 இலட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் அறிவிக்கப்பட்ட அனைத்து பாலத்திட்டங்களும் தற்பொழுது செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் திருவாக்கவுண்டனூர் பாலம் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. விரைவில் சேலம் ஏவிஆர் சாலை சந்திப்பில்

அமைக்கப்பட்டு வரும் உயர்மட்ட பாலப்பணிகள் விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும். மேலும், 5 ரோடு மற்றும் இரும்பாலை, சேகோசர்வ் சந்திப்பில் உயர்மட்ட பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம், போக்குவரத்து நெரிசல் முற்றிலும் குறைக்கப்படும். எங்கெல்லாம் பாலம் வேண்டுமோ அங்கெல்லாம் பாலப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அனைத்துப்பணிகளும் முடிவுறும் பொழுது சேலம் மாவட்டம் போக்குவரத்து நெரிசல் இல்லாத மாவட்டமாக அம்மாவின் அரசால் உருவாக்கப்படும்.

இராசிபுரத்திலிருந்து நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் பிரிந்து வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, காக்காபாளையம், இடங்கணசாலை, கே.ஆர்.தோப்பு, முத்துநாயக்கன்பட்டி வழியாக ஓமலூர் செல்வதற்கு புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. அதே போல் தமிழகத்திலேயே முதல்முறையாக சேலம், மதுரை, கோவை ஆகிய 3 மாநகராட்சிகளில் ஏர்போர்ட் என்பதை போல அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய பஸ்போர்ட் நமது சேலம் மாவட்டத்தில் அரபிக்கல்லூரி அருகில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் துவங்கப்படும். இந்தியாவிலேயே இரண்டாவதாக சேலம் முதல் சென்னை வரை 8 வழி பசுமைச்சாலை ரூ.10 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் சேலம், திருவண்ணாமலை, செங்கம் வழியாக நேரிடையாக 3 1/4 மணி நேரத்தில் விரைவாக செல்லும் வகையில் அமைக்கப்படவுள்ளது. அதே போல் திருச்செங்கோடு, சங்ககிரி வழியாக ஓமலூர் வரை மற்றும் நாமக்கல்லிலிருந்து திருச்சி வரை 4 வழிச்சாலை அமைக்கப்படவுள்ளது. மேலும் பவானி, மேட்டூர், தொப்பூர் வரை 4 வழிச்சாலைஅமைக்கப்படவுள்ளது. இவ்வாறாக இச்சாலைகளெல்லாம் விரிவுப்படுத்தப்படும்பொழுது சேலம் மாவட்டம் போக்குவரத்து நெரிசல் இல்லாத மாவட்டமாக அம்மாவின் அரசால் உருவாக்கப்படும்.

குடிமராமத்து திட்டத்தின் மூலமாக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,535 ஏரிகள் பணி நிறைவடைந்து ஆழப்படுத்தப்பட்டு உள்ளது. விவசாயிகள் மீண்டும் கோரிக்கை வைத்ததின் பேரில் மேலும் சுமார் 2,000 ஏரிகள் குடிமராமத்து திட்டத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மேலும் 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏரிகளிலிருந்து அள்ளப்படும் வண்டல் மண்ணானது விவசாயிகளின் விளைநிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படும். ஏரிகளை ஆழப்படுத்தும் பொழுது நீர் அதிகமாக சேமிக்கப்படுகிறது. மேலும் ஆங்காங்கே தடுப்பணை கட்டுவதற்காக 3 ஆண்டு திட்டத்திற்கு ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீர் கடலில் கலந்து வீணாகாமல் தடுப்பணை கட்டி சேமிப்பதின் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இந்த ஆண்டு இதற்காக 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்மாவின் அரசின் மூலம் சேலம் மாவட்டத்தில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேலும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் சேலம் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் அம்மா அரசால் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அறிவித்த அத்தனை திட்டங்களும் அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு தற்பொழுது ஓராண்டு நிறைவடைந்து வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டு அடியெடுத்து வைக்கிறது. மேலும், பல்வேறு புதிய திட்டங்கள் அடிக்கல் நாட்டப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளன. பாரத ரத்னா புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா 32 மாவட்டங்களிலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றும் வகையில் அங்கே புதிய திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் அனைத்து கோப்புகளுக்கும் விரைவில் தீர்வு காணப்பட்டு வருகின்றன. தொழில் வளம் பெருகுவதற்காக தொழில் முதலீட்டாளர் மாநாட்டை ஜனவரி 2019இல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் படித்த எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். மாண்புமிகு அம்மா அவர்கள் தொழில் முதலீட்டாளர் மாநாட்டை சென்னையில் நடத்தி 62 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பல்வேறு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. அதேபோல் விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள் ஆகிய அத்தனை பேரின் நலன்களும் பேணிக் காக்கும் அரசாகவும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் அரசாகவும் இருக்கும். அம்மாவின் அரசு மக்களுடைய அரசு, எந்த சூழ்நிலையிலும் மக்களுடைய பிரச்சினைகளை முழுமையாக தீர்க்கக்கூடிய அரசாக அம்மாவின் அரசு திகழும்.

நன்றி! வணக்கம்!

சேலம் மாவட்டம் சோனா பொறியியல் கல்லூரியில்
12.03.2018 அன்று நடைபெற்ற உழைக்கும் மகளிருக்கு
அம்மா இருசக்கர வாகனம் வழங்கிய விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.*

மக்கள் தேவைகளை நோக்கமாகக்கொண்டு திட்டம் வகுத்து செயல்படும் அரசு!

ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாக விளங்கி, ஏழரை கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கின்ற, இன்றும் என்றும் என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வம் வாழும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மகத்தில் பிறந்து, மக்கள் வெள்ளத்தோடு வாழ்ந்து, இந்த ஜகத்தையே வென்று, ‘என் இல்லமும், உள்ளமும் தமிழ்நாடு, என் மக்களோடு எப்போதும் நானிருப்பேன்’ என்று வங்கக் கடலோரம் சந்தனப்பேழையில், எப்போதும் நிகழ்காலமாய் வாழும் தெய்வசக்தி; திட்டங்களால் மக்களைக் கவர்ந்தும் சட்டங்களால் மக்களைக் காத்தும், வாழ்ந்த ஒவ்வொரு நாளும் வரலாறாய் பதிவு பெற்று மானுடத்தில் தோன்றி மக்களைப் பேணி தெய்வமாய் மாறி வானளவுப் புகழ்பெற்ற சந்தியா பெற்றெடுத்த சரித்திர நாயகி, சாதனைத்தாய்,

எங்கள் அம்மா அவர்களின் ஆசியோடும், அருளோடும் மாண்புமிகு அம்மா வழியில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடம் நிறைவு பெற்றதை கொண்டாடும் விதமாக, இந்த இனிய விழா இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தச் சிறப்புமிக்க விழாவில் முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே தலைமை உரையாற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே!

வாழ்த்துரை வழங்குவதற்கு இருந்தாலும் காலம் கருதி எங்களுக்கு வழிவிட்டு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே!

வருகை தந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைக் கழகத்தினுடைய நிருவாகிகள், துணை ஒருங்கிணைப்பாளர் முன்னாள் அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்களே, முன்னாள் அமைச்சர் கழக அமைப்புச் செயலாளர் திரு.பொன்னையன் அவர்களே மற்றும் வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிற தலைமைக் கழகத்தினுடைய நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர் முனைவர் மரியாதைக்குரிய கிரிஜா வைத்தியநாதன் அவர்களே! மற்றும் நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. இரா.வெங்கடேசன் அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு பல்வேறு அரங்குகளை சிறப்பான முறையிலே அமைத்த அனைத்து அரசு செயலாளர்களே, அரசு உயர் அலுவலர்களே! பணியாளர்களே! கழகத்தினுடைய முன்னோர்களே, கழக உடன்பிறப்புகளே, பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

‘சொல்லுதல் யார்க்கும் எளிய – அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்’
என்பார் வள்ளுவர்.

மாண்புமிகு அம்மா அவர்கள் யாராலும் செயல்படுத்த முடியாத பல திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்காக செயல்படுத்தி காட்டியவர்கள். சொன்னதையும் செய்தார்கள்; சொல்லாததையும் செய்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சரித்திர சாதனையாக 6ஆவது முறையாக தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்று, அயராது உழைத்து எண்ணற்ற திட்டங்களை மக்களுக்கு வழங்கினார்கள். அதனால்தான், 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆளுங்கட்சியே தொடர்ந்து ஆட்சியைப் பிடிக்கும் சாதனையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்திக் காட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நான்காம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, முதலாம் ஆண்டை நிறைவு செய்தபோது, பொதுமக்களும், பத்திரிகைகளும், ஊடகங்களும் ‘நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை’ என்று பாராட்டினர். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கிடைத்த அந்தப் பாராட்டுதல்களை தக்கவைத்துக்கொள்ளும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற மக்கள் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு வருடத்தில் 17 ஆயிரத்து 619 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 ஆயிரத்து 339 பணிகளை தொடங்கி வைத்தும், 14 ஆயிரத்து 476 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 408 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்துள்ளோம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிக்கேற்ப எங்களின் பல சாதனைகளுக்கு, இந்த சாதனை ஒரு எடுத்துக்காட்டாகும்.

‘அம்மா வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி’ என்கிற வகையில் இந்த ஓராண்டில் நாங்கள் செய்த சாதனைகள் பலப்பல. அவை எண்ணில் அடங்காது அவற்றையெல்லாம் சொல்ல நேரமும் போதாது. எனவே, அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏனென்று சொன்னால், இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்களும் புதிதாக முளைத்திருக்கின்ற கட்சிகளும், அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் மாண்புமிகு அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, இந்த ஆட்சியில் என்ன திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்? அந்தத் திட்டத்தினால் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கின்றது என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு புள்ளி விவரத்தோடு

நாங்கள் தெரிவிக்கின்றோம். ஓர் ஆண்டில் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எந்தளவிற்கு சாதனை படைத்திருக்கின்றது, திட்டங்களை மக்களுக்கு கொண்டுபோய் சேர்த்திருக்கின்றது என்பதை புள்ளி விவரத்தோடு இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் அம்மா என்கிற பாசறையில் அரசியல் பயின்று, நிருவாகம் கற்றவன். உணர்வுப்பூர்வமாக, உண்மையாக உழைப்பதற்குப் பழகியவன் என்பதால்தான் கடந்த ஆண்டு பிப்ரவரி 16ஆம் நாளிலிருந்து இன்றைய தேதி வரை 5 ஆயிரத்து 746 கோப்புகளில் உத்தரவிட்டுள்ளேன்.

நான் உத்தரவிட்ட கோப்புகள் ஒன்றும் வெறும் காகிதங்கள் அல்ல. கோப்புகள் ஒவ்வொன்றும் பலருடைய வாழ்க்கையில் விளக்கேற்றும்; பல திட்டங்களுக்கு உயிர் கொடுக்கும் அரசு ஆணைகள்.

இதைக்கொண்டே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எப்படி செயல்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான், மக்கள் பணியாற்ற என்னை இணைத்துக்கொண்ட இயக்கம், அ.இ.அ.தி.மு.க. என்னும் பேரியக்கமாகும். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தலைமையையும், அவர்களுக்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையையும் ஏற்று கடுமையாக உழைத்து படிப்படியாக உயர்ந்து, இன்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்ற நிலையை அடைந்துள்ளேன். விசுவாசமும், உழைப்புக்கு முன்னுரிமையும் வெகுமதியும் அளிக்கக்கூடிய ஒரே இயக்கம் அ.இ.அ.தி.மு.க.தான் என்பதற்கு இந்த இயக்கத்தில் உள்ள நான் உள்பட அனைவரும் உதாரணமாக இருக்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசி எங்களுக்கு இருப்பதால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆன்மா எங்கள் ஆட்சிக்கு உற்ற துணையாக இருந்து எங்களை வழிநடத்துவதால், மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவை 30 மாவட்டங்களில் கொண்டாடும் அரிய வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் உட்பட அமைச்சர் பெருமக்கள் அனைவரும் நேரில் சென்று, இலட்சோப இலட்ச மக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்திருக்கின்றோம். ஏங்கி நிற்கும் மக்களை தாங்கி நிற்கும் அம்மா அவர்களின் வழியில் நடக்கும் எங்கள் ஆட்சியில், ஏழைகளுக்கும் விவசாய குடிமக்களுக்கும் பல்வேறு நலன் பயக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழ்நாட்டின் முதுகெலும்பாக திகழ்வது விவசாயம். அந்த விவசாயம் வளமையாக இருந்தால்தான் தமிழ்நாடு வலிமையாக இருக்கும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் இந்த அரசும் அதையே பின்பற்றி விவசாயத்திற்காக பலகோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது.

கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் மதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த ஓர் ஆண்டில் மட்டும் ...

கடுமையான வறட்சி. கிட்டத்தட்ட 142 ஆண்டுகாலம் இல்லாத வறட்சி. அந்த வறட்சியால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிதியாக,

❖ வறட்சி நிவாரணமாக 2,247 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. எதையுமே செய்யவில்லை என்று கேட்கின்றார்கள், எதிர்க்கட்சிக்காரர்களும், பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும். வறட்சிக்காக நிவாரணம் வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு விவசாயிகள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

❖ பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 9 இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 3,020 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ தென்னையிலிருந்து 'நீரா பானம்' உற்பத்தி செய்ய அனுமதி வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையையும் நிறைவேற்றிய அரசு அம்மாவினுடைய அரசு.

❖ 802 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில், மானாவாரி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த 'நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்' என்ற சிறப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- 100 கோடி ரூபாயில் 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள 2 ஆயிரம் உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு தலா 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- 1,158 பண்ணைக் குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 3,846 தடுப்பணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- இதைத்தவிர, 98 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா விவசாயிகளின் நலனுக்காக “குறுவை மற்றும் சம்பா தொகுப்புத் திட்டம்” செயல்படுத்தப்பட்டது.

- மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்த பாதையில் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு நாங்கள் முன்னுரிமை வழங்குகிறோம்.

- ஏழை குடும்பங்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறும் வகையில் 1 இலட்சத்து 86 ஆயிரத்து 756 சுய உதவி குழுக்களுக்கு 5 ஆயிரத்து 759 கோடியே 86 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு அவர்கள் சுயமாக தொழில் தொடங்குவதற்கு அம்மாவினுடைய அரசு உதவி செய்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், 49 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8,417 பயனாளிகளுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 198 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 97 ஆயிரத்து 473 பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 89 ஆயிரத்து 892 வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

போதுமான வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த பல கிராமத்துப் பெண்களுக்கு இந்தத் திட்டங்கள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்து, அவர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றியிருக்கின்றது.

தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் தவிக்க வைத்தான் என்று உயிரைப் பணயம் வைத்து கடலில் பிழைப்பு நடத்தும் மீனவர்களின் நலனில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. மீன்பிடி தொழிலுக்கு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதன்படி,

❖ தமிழ்நாட்டைச் சேர்ந்த 442 மீனவர்கள் இலங்கை சிறையிலிருந்தும், 40 மீனவர்கள் ஈரான் சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

❖ ஒகி புயலில் சிக்கி மரணமடைந்த 42 மீனவர் குடும்பங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், காணாமல் போன 177 மீனவ குடும்பங்களுக்கு 35.40 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ 68 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் தலைஞாயிறில் புதிய மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளது.

- மேலும், சிங்கப்பூரில் ஆவின் டெட்ரா பால் விற்பனை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நடுத்தர வகுப்பினர் பயன் பெறும் வகையில்

- அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்த விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு கட்டட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் உருவாக்கப்பட்டுள்ளது.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி" என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நல்ல பிள்ளைகளை உருவாக்க நல்ல கல்வியால்தான் முடியும். கல்வியில் சிறந்த நாட்டை உருவாக்க முடியும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் தொலைநோக்குத் திட்டங்களால், ஓராண்டில் தொடக்கக்கல்வி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில்

சேர்க்கை விகிதம் உயர்ந்துள்ளதை கல்வித் துறையின் புரட்சி என்றே கூறலாம். இந்த சேர்க்கை விகிதம்தான் எதிர்காலத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு கல்வியறிவு பெற்ற மாநிலம் என்ற இலக்கைத் தொடுவதற்கு தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டில்

- ❖ கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ 2 ஆயிரத்து 612 ஆசிரியர்கள் மற்றும் 4 ஆயிரத்து 362 ஆசிரியர் அல்லாதோர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- ❖ மாணவர்களின் மன அழுத்தங்களைப் போக்க, 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது.
- ❖ 11ஆம் வகுப்புக்கு நடப்பாண்டு முதல் அரசு பொதுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ போட்டித் தேர்வுகளில் தமிழ்நாடு மாணவர்கள் வெற்றி பெறும் வகையில் 412 பயிற்சி மையங்கள் துவக்கப்பட்டுள்ளன.
- ❖ 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் மாணவர்களின் கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படுகிறது.
- ❖ மாணாக்கர்களுக்கு 5 இலட்சத்து 11 ஆயிரத்து 74 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

உயர்கல்வித்துறையில் ஓராண்டில்

- ❖ 11 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 1 அரசு பல்வகை தொழில் நுட்பக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளன.

- ❖ விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் புதிய அரசு சட்டக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- ❖ இந்தியாவிலேயே இன்றைக்கு உயர் கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கிறது. உயர்கல்வி படிப்பதற்கான சூழ்நிலையை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்துள்ள காரணத்தினால் தமிழ்நாடு 46.90 சதவிகித மொத்த சேர்க்கை விகிதத்தை எட்டி, இன்றைக்கு உயர்கல்வி பயில்வதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

- ❖ அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு 10 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசின் இந்த ஓராண்டு ஆட்சியில் ஏற்பட்டுள்ள கல்வி புரட்சியால்.. ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்ற மகாகவி பாரதியின் பாடலுக்கு நாங்கள் உயிர் கொடுத்துள்ளோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்கள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு பல்வேறு சுகாதாரத் திட்டங்களை கொண்டு வந்தார்கள். குறிப்பாக, கிராம மக்களின் சுகாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியையே பின்பற்றி நாங்களும் இந்த ஓராண்டில் மட்டும் 4,468 மருத்துவர்கள் உட்பட 6,438 பணியாளர்களை பணியமர்த்தி மருத்துவச்சேவை தங்கு தடையின்றி கொடுக்க வழிவகை செய்துள்ளோம்.

கடந்த ஆண்டு புதுக்கோட்டையில் மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை மூலம் 1,056 இறந்த கொடையாளிகளிடமிருந்து 5,933 முக்கிய உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டன. இதன்மூலம்

ஆயிரக்கணக்கானவர்களுக்கு மறுபிறவி கிடைத்தது. அவர்கள் இப்போது மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு, இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளையும் பொருத்தி சாதனை படைத்தது தமிழ்நாடு அரசு, நம்முடைய தமிழ்நாடு அரசு மருத்துவர்கள். இந்தியாவிலேயே எந்த அரசு மருத்துவமனையிலும் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை. நம்முடைய அரசு மருத்துவமனையில் இருக்கின்ற அரசு மருத்துவர்கள் இந்த சாதனையை படைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இருதய மாற்று அறுவை சிகிச்சை; சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை; இன்றைக்கு மருத்துவத் துறை தமிழகத்திலே முதலிடம் வகிக்கிறது என்ற பெருமையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- 930 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்’ 6 இலட்சத்து 51 ஆயிரம் நபர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 5 இலட்சத்து 64 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு 513 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

“அழகு மகன் மழலை மொழி
தென்பொதிகை செந்தமிழோ
இளநகைதான் சிறுகதையோ
இதயமதை எழுதியதோ
முத்துமுகம் முழுநிலவோ
முப்பது நாள் வரும் நிலவோ”

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப பிறக்கும் குழந்தைகளை தாய்மார்கள் கொஞ்சி மகிழ்ந்திடும் வகையில் நல்ல ஆரோக்கியமான வாரிசு பிறந்திட, மாண்புமிகு அம்மாவின் அரசு, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் இரத்த சோகையை போக்கவும், பிறக்கும் குழந்தைகளின் எடையை உயர்த்தவும், இரும்புச்சத்து டானிக் மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய ‘அம்மா தாய்சேய் நல ஊட்டச் சத்து பெட்டகம்’ வழங்கப்பட உள்ளது.

மருத்துவத்துறை எப்போதும் விழிப்புடனும், தியாக உணர்வுடனும் செயல்படுவதால்தான் தமிழ்நாட்டை அச்சுறுத்திய ‘டெங்கு’ போன்ற நோய்களை விரைந்து ஒழிக்க முடிந்தது.

இன்றைக்கு அரசு மருத்துவமனைகள் எல்லாம் தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக சேவை ஆற்றி வருகின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் அரசு மருத்துவமனைகளை உலகத்தரத்திற்கு உயர்த்தி சிறந்த மருத்துவர்களை நியமனம் செய்து, 24 மணி நேரமும் செயல்பட வைத்து மக்களை பல்வேறு நோய்களில் இருந்து காப்பாற்றுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும் சுகாதாரத் துறையில் அதிக அக்கறை எடுத்துச் செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாகத்தான் சுகாதார குறியீடுகளில், இந்தியாவிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. இது நிதி ஆயோக் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண்களின் நலனிலும், பாதுகாப்பிலும் எப்போதும் கவனமாக இருந்தார்கள். எங்களிடமும் அதைத்தான் அம்மா அவர்கள் வலியுறுத்தினார்கள். இது அம்மா அவர்களின் ஆட்சி என்பதால்.. தமிழ்நாட்டு பெண்கள் அனைவரையும் நாங்கள் ‘அம்மா’ அவர்களின் திருஉருவங்களாகவே பார்க்கின்றோம்.

இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான முதன்மை பெருநகரமாக சென்னையும், முதன்மை மாநகரமாக கோவையும் திகழ்வதாக தேசிய குற்ற ஆவண காப்பகத்தால் பட்டியலிடப்பட்டுள்ளது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உழைக்கும் மகளிருக்கு “அம்மா இருசக்கர வாகனம்” வழங்குவதற்கு அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மாவின் மறைவிற்குப்பிறகு அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்ற ஐயம் சிலருக்கு ஏற்பட்டது. அந்த ஐயத்தைப் போக்கும் விதமாக அம்மாவினுடைய அரசானது உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்தநாளன்று துவக்கி வைத்து, அத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் 70ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்ததோடு “அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தையும்” மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள் என்று இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஓராண்டில் நாங்கள் செய்த சாதனைத் திட்டங்களில் குடிமராமத்துத் திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியது மிகவும் முக்கியமானதாகும்.

குடிமராமத்து திட்டத்தின் மூலமாக முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆயிரத்து 519 பணிகள் முடிவடைந்துள்ளன. விவசாயிகள் மீண்டும் கோரிக்கை

வைத்ததின் பேரில், மேலும் 2 ஆயிரத்து 65 குடிமராமத்து பணிகள் 30 மாவட்டங்களில் சுமார் 331 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்த ஏரிகளிலிருந்து அள்ளப்படும் வண்டல் மண்ணானது விவசாயிகளின் விளைநிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தப்படுகிறது. ஏரிகளை ஆழப்படுத்தும் பொழுது நீர் அதிகமாக சேமிக்கப்படுகிறது.

குடிமராமத்து திட்டத்தைப் பயன்படுத்திய பல பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். குடிமராமத்துத் திட்டம் ஆக்கபூர்வமான தொலைநோக்குத்திட்டம் என்று விவசாய குடிமக்கள் இந்த அரசை மனம் திறந்து பாராட்டி வருகிறார்கள். அதுமட்டுமல்ல, 83 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக மேட்டூர் அணை தூர்வாரப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூர் அணை தூர்வாரப்பட்டதின் மூலமாக, பருவமழைக் காலங்களில் பெய்கின்ற மழைநீர் சுமார் 15 டி.எம்.சி. தண்ணீர் தேக்கக்கூடிய அளவிற்கு மேட்டூர் அணை தூர்வாரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டை குடிசைகள் இல்லாத மாநிலமாக மாற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கும் விதமாக அம்மா வழியில் செயல்படும் இந்த அரசு வீடு இல்லாத ஏழைக் குடும்பங்கள் அனைத்துக்கும் வீடுகள் கட்டித் தரும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டில்

❖ தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் 593 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14 திட்டப் பகுதிகளில் 9 ஆயிரத்து 847 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

- ❖ முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் வீடுகள் 840 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.

- ❖ அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 6ஆயிரத்து 635 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் 1 இலட்சத்து 62 ஆயிரத்து 571 குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பை சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கி முத்தெடுப்பீரே!

என்று மகாகவி பாரதியார் தொழிலாளர்களின் பெருமையை பாடுவார். பாரதி கண்ட புதுமைப் பெண் அம்மா அவர்களின் வழிவந்த அம்மாவின் அரசு.

- ➢ போக்குவரத்து தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு நிலுவையாக இருந்த 2 ஆயிரத்து 147 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

- ➢ மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டினை அரசு பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் அமல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

“ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்,
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்”

என்ற மகாகவியின் பாடலுக்கு ஏற்ப தமிழ்நாட்டில் தொழிற் புரட்சி ஏற்படுத்த அம்மாவின் அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

❖ பெரிய அளவில் தொழில்களை ஈர்த்து, தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் பொருட்டு ஒற்றைச் சாளர முறையினை வலுப்படுத்துவதற்கு, "தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம்–2018" இயற்றப்பட்டுள்ளது. மேலும் "இணையதள வழி ஒற்றைச் சாளர தகவு" துவக்கப்பட்டுள்ளது.

❖ 1,295 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளுவர் மாவட்டம், பொன்னேரி வட்டம் புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில் உள்ள 360 ஏக்கர் நிலப்பரப்பில் பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்கா அமைக்கப்பட உள்ளது.

❖ சிப்காட் நிறுவனம் மூலம் 245 ஏக்கர் பரப்பளவில் "வானூர்திப் பூங்கா" துவக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டு, 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடியாகவும், 25 ஆயிரம் நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு உருவாக்கித்தர அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆயிரத்து 813 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 3,143 கி.மீ நீளச் சாலைகள் மேம்பாடு செய்தல் மற்றும் 120 சிறு பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ 2 ஆயிரத்து 772 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 5,061 கி.மீ. நீள சாலைகள், 99 பாலங்கள் மற்றும் 638 சாலை பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

❖ பாரத்மாலா திட்டத்தின் கீழ், சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் ஒருங்கிணைந்த நவீன பேருந்து முனையம் ஏற்படுத்தப்பட உள்ளது.

❖ சென்னை மெட்ரோ இரயில் திட்டம் நிலை 1 முடிவடையும் நிலையில் உள்ளது. நிலை 2இன் கீழ் 107.55 கி.மீ நீளத்திலான 3 வழித்தடங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

❖ கோயம்புத்தூர் மாநகரத்திலும் மெட்ரோ இரயில் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

❖ 1,781.50 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு முழுவதும் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

❖ பொது விநியோகத் திட்டத்தை செம்மைப்படுத்த 330 கோடி ரூபாயில் ஒரு கோடியே 88 இலட்சம் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ 15 ஆயிரத்து 621 சீருடைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ இந்தியாவிலேயே, சிறந்த காவல் நிலையமாக கோவை ஆர்.எஸ். புரம் காவல் நிலையமும், சிறந்த ஐந்தாவது காவல் நிலையமாக சென்னை, அண்ணா நகர் காவல் நிலையமும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

❖ மாண்புமிகு அம்மா அரசின் இடைவிடாத முயற்சியால் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு, டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் பெறப்பட்டது.

❖ 10 இலட்சம் விலையில்லா செட்டாப் பாக்ஸ்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

❖ 1,230 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கிராமந்தோறும் இணையவழி சேவை வழங்க பாரத் நெட் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ மின்னாளுமை திட்டத்தினை நிருவகித்திட மின்னாளுமை கொள்கை – 2017 உருவாக்கப்பட்டு உள்ளது.

❖ வணிகவரி வசூல் மற்றும் சரக்குகள், சேவைகள் வரி வசூலில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

❖ ஆவணப்பதிவு நடைமுறையினை முற்றிலும் கணினி மயமாக்க ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்மூலம் பொது மக்கள் அலைச்சல் இன்றி பத்திரப்பதிவை சுலபமாக செய்து கொள்ளலாம்.

❖ கோவை மாவட்டம் அன்னூரில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளது.

❖ திருச்செந்தூரில் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாருக்கு மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளது.

❖ இப்படி எத்தனையோ திட்டங்களை எந்தவித பெரிய விளம்பரமோ, ஆடம்பரமோ இல்லாமல் மக்கள் சேவையே மகேசன் சேவை எனக்கருதி மாண்புமிகு அம்மாவின் அரசு செய்து வருவதை மக்கள் உணர்கின்றனர். தேர்தலை நோக்கமாக கொண்டு செயல்படும் அரசு அல்ல இது. மக்கள் தேவைகளை நோக்கமாகக் கொண்டு திட்டம் வகுக்கும் அரசு அம்மாவின் அரசு.

அந்த வகையில் தான், மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பங்கீட்டில். தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட சட்டப்பூர்வ நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் மத்திய அரசு ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டுமென இந்த அரசு வலியுறுத்தி

வருகிறது. மத்திய அரசும் உச்சநீதிமன்றத் தீர்ப்பை முழுமையாக செயல்படுத்தும் என நம்புகிறோம்.

அடுத்தபடியாக, முல்லைப் பெரியார் அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்ற தமிழ்நாடு மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்த திடமான, உறுதியான, ஆக்கப்பூர்வமான சட்ட நடவடிக்கைகள் மற்றும் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளினால் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் முதற்கட்டமாக 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்தப்பட்டது. இது 37 ஆண்டுகளுக்குப் பின் தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக, தமிழ்நாடு விவசாய பெருங்குடி மக்களுக்கு கிடைத்த வரலாற்று சிறப்புமிக்க வெற்றியாகும்.

முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவான (Full Reservoir Level) 152 அடிக்கு உயர்த்துவதற்கு தொடர் நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.

‘என்னைப் பொறுத்த வரையில், எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது என் விருப்பம் அல்ல. மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்பதுதான், என்னுடைய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமென்றால் அதற்கு ஆட்சி அதிகாரம் முக்கியம். அதற்காகத்தான், இந்த முதலமைச்சர் பதவியை நான் வகித்துக் கொண்டிருக்கிறேன்’ என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பேசியதுதான் எனக்கு இப்போது நினைவுக்கு வருகின்றது.

‘வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார் ?’ என்று புரட்சித்தலைவர் பாடியிருப்பார்.மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்களும், ஏழை, எளிய, மக்களுக்காக பல உன்னத திட்டங்களைச் செயல்படுத்தியதால் இன்னும் பல நூறாண்டு காலங்கள் மக்கள் மனதில் நிற்பார்கள். அவர்களுடைய திட்டங்கள் அவர்களை மக்களுக்கு நினைவுப்படுத்திக் கொண்டே இருக்கும். மாண்புமிகு அம்மாவின் நினைவாக,

❖ அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அம்மா நினைவு மண்டபம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் என்றென்றைக்கும் நிலைத்து நிற்க அவர்கள் வாழ்ந்த வேதா நிலையம் அரசு நினைவிடமாக மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக, மக்களால் நான், மக்களுக்காகவே நான், என்று தன் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டு மக்களுக்காகவே, உழைத்து மறைந்த மாண்புமிகு புரட்சித்தலைவி தங்கத்தாரகை அம்மாவின் திருவுருவப் படம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் திறந்து வைக்கப்பட்டது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அந்த பேரவைக்கே அம்மாவால் புகழ் கிடைத்து இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாவின் வழியில் வந்த நாங்கள், இந்த ஓராண்டில் செயல்படுத்திய திட்டங்களை மக்கள் போற்றுவார்கள் என்று நம்புகின்றோம்.

மாண்புமிகு அம்மா அறிவித்த அத்தனை திட்டங்களையும் கடந்த ஓராண்டில் அம்மாவின் பிள்ளைகளாகிய நாங்கள் செயல்படுத்தி மக்களின் துணையோடு வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டில் இன்றைக்கு அடியெடுத்து வைத்துள்ளோம்.

15.03.2018 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு ஒரு சிறந்த

தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய நிதிநிலை அறிக்கையையும் தொடர்ந்து செயல்படுத்த இருக்கின்ற திட்டங்களையும் சட்டசபையில் அறிவித்து, புதிய வரிகளை மக்கள் தலைமீது சுமத்தாத சிறந்த பட்ஜெட்டாக இது அமைந்தது. எனவே மக்கள் இதனைப் பாராட்டுகிறார்கள். இதை சகித்துக்கொள்ள முடியாத எதிர்கட்சிகள், மக்களின் நலனை சிந்திக்காமல், திட்டங்களின் தன்மையை ஆராயாமல், அரசியலை மட்டுமே மனதில் கொண்டு பட்ஜெட் சரியில்லை என்று விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் செய்வது அவர்கள் வேலை.. மக்கள் பணியாற்றுவது அம்மா அவர்களின் அரசின் கடமை. நாங்கள் எங்கள் கடமையிலிருந்து ஒரு போதும் தவறுவதில்லை.

மக்கள் எங்கள் பொற்கால ஆட்சியின் வெற்றிப் போக்கை உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எது ஒப்பனை இல்லாத உண்மை முகம். எது அரிதாரம் பூசி நடிக்கிற போலி முகம் என்பது மக்களுக்குத் தெரியும். இந்த ஆட்சியைக் குறை சொல்வதன் மூலம் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள். எங்களை வைத்து விளம்பரம் தேடிக் கொள்ள நினைப்பவர்களை அதே விளம்பரம் அழித்துவிடும். ஆதாயம் தேடி அரசியலுக்கு வர நினைப்பவர்கள். முள்செடிகளைப் போன்று முளைத்த பிறகு கருகி காணாமல் போவார்கள். ஒரு சிறிய அரசியல் சூறாவளிக்குக்கூட தாக்குப் பிடிக்க முடியாத பல கட்சிகள் விரைவில் காணாமல் போகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இந்த பேரியக்கத்தை வழிநடத்தி வழிவழியாக எங்களிடம் வலிமையான தொண்டர்கள் உருவாகிக் கொண்டே இருப்பார்கள். இன்னும் நூறாண்டு காலம் ஆனாலும் யாராலும் அசைக்கமுடியாத சக்தியாக அ.இ.அ.தி.மு.க. விளங்கும்.

ஏதோ ஒரு மாயையில் திசைமாறிப்போன மாண்புமிகு அம்மா அவர்களின் குழந்தைகள் தங்கள் தாய்வீட்டை நோக்கி நிச்சயம்

வருவார்கள். வந்து மாண்புமிகு அம்மா அவர்கள் கண்ட கனவை நனவாக்குவார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிப்படி பொற்கால ஆட்சியாக திகழ்வதே அந்த ஆட்சியின் தொடர்ச்சிதான் அம்மாவின் ஆட்சி என்பதால் இதுவும் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறும் என்று நான் உறுதியாக கூறுகின்றேன். அந்த பொற்காலத்தையே தொடர்வதற்கும் இந்த இனிய வேளையில் நாம் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்.

“தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஓர் வழி நின்று நேர் வழி சென்றால் நாளை நமதே! என்றும் நாளை நமதே!” என்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, கழக கண்மணிகள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை கூறுகின்ற போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

காடு ஒன்றில் விலங்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. ஆனால், ஒரு நரிக்கு மட்டும் மற்ற விலங்குகள் ஒற்றுமையாக வாழ்வது பிடிக்கவில்லை. விலங்குகள் அனைத்தையும் காட்டை விட்டு தந்திரமாக விரட்டிவிட்டு தான் மட்டும் சுதந்திரமாக வாழ நினைத்தது. நரியின் கெட்ட எண்ணத்திற்கு ஒரு ஓநாயும் ஆதரவு தெரிவித்தது.

ஒருநாள் நரியும், ஓநாயும் காட்டின் வழியே சென்று கொண்டிருந்தபோது எதிரில் ஒரு கரடி வந்தது. அது நரியைப் பார்த்து “நரியே! நகரத்திற்கு சென்று வந்தாயே என்ன புதிய செய்தி கொண்டு வந்தாய்?” என்று கேட்டது.

கரடிக்கு ஓட்டை வாய். எதைச் சொன்னாலும் ஊரெல்லாம் தாம்பூலம் வைக்கும் குணம் உண்டு. எனவே தனது திட்டத்திற்கு கரடியை பயன்படுத்திக் கொள்ள நரி நினைத்தது.

“கரடியாரே, நாங்கள் இந்த காட்டை விட்டு ஓடப் போகிறோம். ஏனென்றால், காட்டுக்குள் சுனாமியும், சூறாவளியும் வரப்போகிறது. காடு அழியப் போகிறது. எனவே நானும், ஓநாயும் காட்டை விட்டு ஒடிக் கொண்டிருக்கிறோம்” என்றது.

உடனடியாக கரடி இந்த செய்தியை அனைத்து விலங்குகளிடம் தெரிவித்தது. இதனால் அனைத்து விலங்குகளும் பீதியுடன் காட்டை விட்டு வெளியேறத் தொடங்கின. இதனை மலையின் உச்சியிலிருந்து நரியும் ஓநாயும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தன.

இதனிடையே ஓநாய் ஒரு சதித் திட்டம் தீட்டியது. நரியை ஒழித்து விட்டு, தானே ராஜாவாக வாழ நினைத்தது. அப்பொழுது அவ்வழியே வேடன் ஒருவன் வந்தான். வேடனைக் கண்டவுடன் ஓநாய் அருகில் இருந்த புதரில் மறைந்தது. வேடன் வலையை விரித்து அங்கிருந்த நரியை பிடித்துக் கொண்டான். நரியிட்ட கூச்சலைக் கண்டுக் கொள்ளாமல் ஓநாய் அந்த இடத்தை விட்டு தப்பித்தது.

அனைத்து விலங்குகளும் கூட்டமாக ஒற்றுமையுடன் வாழ்ந்திருந்தால் ஆபத்தான நேரத்தில் கண்டிப்பாக யாராவது உதவியிருப்பார்கள் எனக் கூடி வாழ்தலின் பெருமையை நரி அப்போது உணர்ந்தது. எனவே, நாம் நயவஞ்சகர்களின் சூழ்ச்சிகளுக்கு பலியாகாமல் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து பாடுபட்டால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே இன்னும் நூறாண்டுகள் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் ‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்னும் கோட்பாட்டின்படி தமிழ்நாட்டை சீரிய பாதையில் முன் எடுத்துச் செல்வோம் என்பதை இங்கே உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

இந்த ஓராண்டு காலத்திலே எவ்வளவோ சோதனைகளை நாம் சந்தித்தோம். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் கூறுகின்ற பொழுது, எந்த ஒரு ஆட்சிக்கும் ஏற்படாத சோதனைகளை இந்த ஓராண்டிலே நாம் சந்தித்தோம். அந்த சோதனைகளை

எல்லாம் வெற்றி படிக்கட்டுகளாக மாற்றி ஓராண்டு நிறைவு பெற்று இரண்டாவது ஆண்டிலே அடியெடுத்து வைத்திருக்கின்றோம். இந்த சாதனைக்கு துணையாய் நின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கு துணையாய் நின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் அதற்கு மேலாக என்றென்றும் உங்களோடு இருந்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியை இன்னும் மாண்புமிகு அம்மா எண்ணியதைப்போல பல நூறாண்டு காலம் தமிழகத்திலே நிலைத்து நிற்க வேண்டும் என்று சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் என்னோடு பக்கபலமாக இருந்த அத்தனை சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், அதோடு, நம்முடைய தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்காக நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அத்தனைக்கும் மேலாக, கட்சி பலமாக இருந்தால்தான், ஆட்சி சிறப்பாக நடக்கும். அதற்கு வளமாக இருப்பதற்கு உறுதுணையாக விளங்கிய ஆற்றல்மிக்க தலைமைக்கழக நிருவாகிகளுக்கும், கழகத்தினுடைய முன்னோடி நிருவாகிகளுக்கும், கழக நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், அதே நேரத்தில் ஒட்டுமொத்தமாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சி என்றென்றைக்கும் தமிழகத்திலே நிலைத்து நிற்க வேண்டும் என்று எண்ணுகின்ற பொதுமக்களுக்கும், இந்த நேரத்தில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்த ஆட்சி சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த அனைத்து துறை செயலாளர்களுக்கும், அனைத்து அரசு உயர் அதிகாரிகளுக்கும், அனைத்து அரசு அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகின்றேன்.

எவ்வளவு சட்டங்களைப் போட்டாலும், திட்டங்களைப் போட்டாலும், நடைமுறைப்படுத்துவது அரசு அதிகாரிகள்தான். அந்த அரசு அதிகாரிகளும் மிகச் சிறப்பான முறையிலே அரசு போட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி காட்டினார்கள். இந்த அத்தனை திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால், அது மக்கள் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு, மக்களை சென்றடையக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்த ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு,

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
23.03.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில்
நடைபெற்ற தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை
விழாவில் ஆற்றிய உரை.

ஏழை, எளிய மக்களுக்கு எட்டாத கனியாக இருந்த விமான சேவையை குறைந்த செலவில் கிடைக்கச் செய்வதே உடான் திட்டத்தின் குறிக்கோள்!

சேலம்–சென்னை புதிய விமான சேவை துவக்கவிழா நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய தமிழ்நாடு அரசினுடைய தலைமைச் செயலாளர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே, திட்ட விளக்கவுரை ஆற்றிய மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அரசு செயலாளர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு.ராஜீவ் நயன் சௌபே அவர்களே, மற்றும் இந்த இனிய நிகழ்ச்சியிலே வாழ்த்துச் செய்தி சொல்லி, விமான போக்குவரத்து துவங்குவதற்கு அச்சாணியாக விளங்கிய மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு.சுரேஷ் பிரபு அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பான கருத்துக்களை எடுத்து வைத்த மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துறை இணை அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அண்ணன் பொன் ராதாகிருஷ்ணன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை அமைச்சர் திரு.தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் மருத்துவர் திருமதி வெ. சரோஜா அவர்களே, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு கே.சி.கருப்பணன் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற இந்த தொகுதியினுடைய பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.பன்னீர்செல்வம் அவர்களே, இந்த தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்களே, திரு. காமராஜ் அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இல.கணேசன் அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் அமைச்சர் திரு. செம்மலை அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெங்கடாசலம் அவர்களே, திரு ஏ.பி. சக்திவேல் அவர்களே, பி.மனோன்மணி அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.ஆர்.எம்.சின்னத்தம்பி அவர்களே, திரு.அ.மருதமுத்து அவர்களே, திருமதி கு.சித்ரா அவர்களே, திரு.கே.பி.பி.பாஸ்கர் அவர்களே, திரு.சி.சந்திரசேகரன் அவர்களே, திருமதி பொன்.சரஸ்வதி அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பாரதீய ஜனதா கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய டாக்டர் திருமதி தமிழிசை சௌந்திரராஜன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று

சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பாரதீய ஜனதா கட்சியின் முன்னோடி நிருவாகி மரியாதைக்குரிய திருமதி வானதி சீனிவாசன் அவர்களே, மற்றும் மாநில கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர். இளங்கோவன் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.ஆர்.சின்னுசாமி அவர்களே, மற்றும் ட்ரூஜெட் விமான நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.பிரேம்குமார் பாண்டே அவர்களே, ட்ரூஜெட் விமான நிறுவன தலைமை நிருவாக அதிகாரி திரு.விஷாக் மான்சிங் அவர்களே, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரோஹிணி ரா.பாஜிபாகரே அவர்களே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற கழகத்தினுடைய முன்னோடி நிருவாகிகளே, பாரதீய ஜனதா கட்சியினுடைய முன்னோடி நிருவாகிகளே, வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அதிகாரிகளே, விமான போக்குவரத்துத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களே, வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிலதிபர்களே, ஊடக நண்பர்களே, பத்திரிகை நண்பர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த உடான் விமான சேவை திட்டத்தின் கீழ் இன்றையதினம் சென்னையிலிருந்து சேலம் வரையிலும், சேலத்திலிருந்து சென்னை வரையிலும் முதன்முதலாக இந்த விமானசேவை துவங்கப்பட்டிருக்கின்றது.

“பறவையை கண்டான் விமானம் படைத்தான்” என்று பாடினார் நமது கவியரசர் கண்ணதாசன் அவர்கள். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாக செல்வதற்காக ரைட் சகோதரர்களால் கண்டு பிடிக்கப்பட்டதுதான் விமானம். ஆரம்பத்தில் விமான சேவை மிகவும் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்தது. விமான சேவை என்பது ஏழை, எளிய மக்களுக்கு எட்டாத கனியாக இருந்தது. இதனை அவர்களுக்கு எட்டச் செய்யும் வகையில் குறைந்த செலவில், குறைவான

நேரத்தில் சிறு நகரங்களை பெருநகரங்களுடன் இணைக்கும் வகையில் 21.10.2016இல் மண்டலங்களுக்கு இடையேயான விமான போக்குவரத்து உடான் திட்டம் பாரதப் பிரதமர் அவர்களால், மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

நாட்டில் உள்ள விமான ஓடுதளங்கள் மற்றும் விமான நிலையங்களை மேம்படுத்துதல், பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைவான பயன்பாட்டில் உள்ள விமான நிலையங்களிடையே இணைப்பிணை ஏற்படுத்துதல், மண்டலங்களுக்கு இடையே விமான போக்குவரத்தை ஏற்படுத்தி பெருநகரங்களை சிறு நகரங்களுடன் இணைத்தல், குறைந்த விலையில் விமான பயணம் செய்யும் நிலை உருவாக்குதல் ஆகியவையே இந்த ‘உடான்’திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

நாட்டிலுள்ள சிறு நகரங்களில் விமான சேவை துவங்குவதற்காக பயன்பாட்டில் இல்லாத மற்றும் குறைவான பயன்பாட்டில் உள்ள 13 விமான நிலையங்களை மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் தேர்வு செய்தது. இதன் முதல் கட்டமாக, தமிழ்நாட்டிலுள்ள சேலம் மற்றும் நெய்வேலி ஆகிய இடங்களை தேர்வு செய்து, விமானங்களை இயக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த திட்டத்தின் பயனை அறிந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் வகையில், மத்திய விமான போக்குவரத்து அமைச்சகத்துடன் 08.06.2017 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. அப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செயல்படுத்தும் விதமாக

- உடான் திட்டத்தின் கீழ் இயக்கப்படும் விமானங்களுக்கு பெறப்படும் விமான எரிபொருள் (Aviation Turbine Fuel) மீதான மதிப்பு கூட்டு வரி ஒரு சதவீதமாக குறைத்து தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

- ✶ இத்திட்டத்தின் கீழ் செயல்படும் விமான நிலையங்களுக்கு பாதுகாப்பு மற்றும் தீயணைப்பு பணிகளை மாநில அரசு கட்டணம் ஏதுமின்றி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.
- ✶ இத்திட்டத்தின் கீழ், விமான இயக்கம் செலவிற்கு 20 சதவிகித கடன் ஈட்டு இடைவெளி நிதியினை (Viability Gap Funding) தமிழ்நாடு அரசு வழங்க உள்ளது.

இந்த சலுகைகளைப் பயன்படுத்தி விமான நிறுவனங்கள் குறைந்த பயணக் கட்டணத்தில் விமான சேவை வழங்கும். இதனால் சாதாரண மக்களும், விமான சேவையை பயன்படுத்தும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதன் முதலில் 'உடான்' திட்டத்தின் மூலம் இன்று துவக்கப்பட்டுள்ள விமான சேவையை துவக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் சேலம் மாவட்டத்தில் இந்தத் திட்டம் முதன் முதலில் துவக்கப்படுவதை எண்ணி உள்ளபடியே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் நம்முடைய, அருகிலுள்ள சேலம் மாவட்டம் உட்பட ஈரோடு, நாமக்கல், கரூர், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைச் சார்ந்த வணிகர்கள், படித்த இளைஞர்கள், நடுத்தர வகுப்பினர் மற்றும் பலர் மிகுந்த பயன் அடைவார்கள்.

மேலும், சேலத்தில் பெரியரக விமான சேவை துவக்குவதற்கு ஏதுவாக விமான நிலைய விரிவாக்க பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. விரிவாக்கத்திற்குப் பிறகு சேலம் விமானநிலையத்திலிருந்து பெரிய ரக விமானமும் இயக்கப்படும்.

இதே போன்று, தமிழ்நாட்டிலுள்ள பிற விமான நிலையங்களை உலகத் தரத்திலான விமான நிலையங்களாக தரம் உயர்த்த மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

சென்னை விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 229.17 ஏக்கர் நிலத்தில், 129.80 ஏக்கர் நிலம் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 99.37 ஏக்கர் நிலத்திற்கு, நில எடுப்பு செய்வதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, நில மதிப்பு நிர்ணய பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இத்திட்டத்திற்காக 35.97 ஏக்கர் ராணுவ நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் செய்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு தேவையான 615.92 ஏக்கர் நிலத்தில், 466.43 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு இடைக்கால நில மதிப்பு தொகையாக 166 கோடியே 69 இலட்சத்து 39 ஆயிரத்து 754 ரூபாய் வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 627.89 ஏக்கர் நிலத்தில், 461.90 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு நில மதிப்பினை மறு பரிசீலனை செய்ய குழு ஒன்று அமைக்கப்பட்டு நில மதிப்பினை மறு நிர்ணயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 134.32 ஏக்கர் ராணுவ நிலங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் செய்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 605.93 ஏக்கர் நிலத்தில், 366.24 ஏக்கர் நிலம் இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 238.76 ஏக்கர் நிலத்திற்கு நில மதிப்பீடு செய்யப்பட்டு, நில மதிப்பீட்டு தொகையாக 9 கோடி ரூபாய் 2018–2019 நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சி விமான நிலைய விரிவாக்கத்திற்கு 345.62 ஏக்கர் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களை நில எடுப்பு செய்ய அரசால் நிருவாக அனுமதி 04.05.2017 அன்று வழங்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. மேலும், 164.88 ஏக்கர் ராணுவ நிலங்களை திருச்சி விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக இந்திய விமான நிலையங்கள் ஆணையத்திற்கு நில மாற்றம் செய்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அடுத்த கட்டமாக 'உடான்' திட்டத்தின் மூலம் வேலூர் மற்றும் தஞ்சாவூரிலிருந்து விமான சேவை துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகாய வழி போன்றே தரைவழியிலும் விரைவாக செல்லுவதற்கு ஏதுவாக தமிழ்நாட்டில் சாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னைக்கும் சேலத்திற்கும் பசுமை விரைவு வழித்தடம் அமைக்க முடிவு செய்யப்பட்டு, மத்திய அரசின் பரிசிலனையில் உள்ளது.

இந்த திட்டத்தினை செயல்படுத்தியதன் மூலம் சென்னை – சேலம் மாநகரங்களுக்கு இடையான பயண தூரம் 60 கி.மீ. குறைவதுடன் பயண நேரம் 6 மணி நேரத்திலிருந்து 3 மணி நேரமாக குறையும்.

இந்த திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முதல் பசுமை விரைவு வழித்தடம் திட்டம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்த காலத்தில் சேலத்திலிருந்து விமான சேவை துவங்க நடவடிக்கை எடுத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர்

அவர்களுக்கும், மரியாதைக்குரிய விமானப் போக்குவரத்துத் துறை செயலாளர் அவர்கள், அவர்தான் நமக்கு உண்மையிலேயே அவர் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, சேலத்திற்கு முதன்முதலாக விமான சேவையை தொடங்க வேண்டுமென்று எடுத்துக் கொண்ட வகையிலும் அவர் நம்முடைய மரியாதைக்குரிய விமானப்போக்குவரத்துத் துறை செயலாளர் அவர்கள் அவருக்கும் இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றையதினம் மத்திய அரசாங்கத்தின் மூலமாக இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு ஏராளமான திட்டங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் பல இன்றைக்கு மத்திய அரசோடு தமிழ்நாடு அரசு இணைந்து செயல்படுவது பிடிக்கவில்லை. ஏனென்று சொன்னால், மத்தியிலே அரசாங்கம் இருக்கின்றது, மாநிலத்திலே அரசாங்கம் இருக்கின்றது. ஆகவே, மாநில அரசு, மத்திய அரசோடு இணைந்து பணியாற்றினால்தான், மாநில மக்களுக்குத் தேவையான திட்டங்கள், நன்மைகள் கிடைக்கும். ஆகவேதான், மத்திய அரசோடு இணைந்து, மாண்புமிகு பாரதப் பிரதமர், நாம் எடுத்துவைத்த கோரிக்கைகளில் பல கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றார். வீடுகள் கட்டுகின்ற திட்டத்தில், தமிழ்நாட்டிற்கு எத்தனை வீடுகள் வேண்டுமானாலும் நாங்கள் தருகின்றோம், எத்தனை இலட்சம் வீடுகள் வேண்டுமானாலும் ஏழை மக்களுக்குத் தருகின்றோம் என்ற வாக்குறுதியை தந்திருக்கின்றார். இதனால், வீடு இல்லாத ஏழை, எளிய மக்கள் பயன்பெறுகின்றார்கள். ஆகவே, நாம் மத்திய அரசோடு இன்றைக்கு ஒரு இணக்கமான உறவு வைத்திருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் திட்டத்தின் மூலமாக ஏழை மக்களுக்கு தேவையான வீடுகள் கிடைக்கின்றன. அதேபோல், தொழில்வளம் பெருக வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மிக முக்கியம். அந்த உட்கட்டமைப்பு வசதிகள் மிக

முக்கியமாக செயல்படுத்தினால்தான், தொழில் வளம் பெருகும். ஆகவே, உட்கட்டமைப்பு வசதிகளை இன்றைக்கு அதிக அளவிலே தமிழகத்திலே உருவாக்குவதற்கு மத்திய அரசு துணை நிற்கின்றது. இன்றைக்கு மத்திய அரசு, பல்வேறு சாலைகளை விரிவுபடுத்தக்கூடிய சூழலையெல்லாம் பார்க்கின்றோம். ஆகவே, அந்தத் திட்டத்தின் வாயிலாகத்தான், நமக்கு முதன்முதலாக சேலத்திலிருந்து சென்னை வரை பசுமை சாலைகள் (Green Corridor) இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அது மட்டுமல்ல, சேலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அதை குறைக்கவேண்டும் என்று மத்திய, தரைவழி, கப்பல் போக்குவரத்து அமைச்சரிடத்திலே சொன்னவுடன், புறவழிச்சாலை அமைத்துக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதியைத் தந்து அதை சென்னையிலே அறிவித்துவிட்டுச் சென்றிருக்கின்றார். இன்றைக்கு நாமக்கல்–சேலம் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலையில் ஆட்டையாம்பட்டி பிரிவிலிருந்து பிரிந்து வெண்ணந்தூர், ஆட்டையாம்பட்டி, காக்காபாளையம், இளம்பிள்ளை கே.ஆர்.தோப்பூர், முத்துநாயக்கன்பட்டி வழியாக ஓமலூர் வரை அந்த புறவழிச்சாலை வந்து இணைகிறது, சுமார் 42 கிலோமீட்டர் அந்த சாலை அமையவிருக்கின்றது. அப்படி அமைகின்றபொழுது, போக்குவரத்து நெரிசல் இல்லாத ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்க முடியும். ஆகவே, இன்றைக்கு உட்கட்டமைப்பு வசதிகள் அதிகமாக நாம் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, புதிய, புதிய தொழில்கள் தமிழகத்திலே வருவதற்கு இன்றைக்கு பல்வேறு தொழிலதிபர்கள் நம்மோடு தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் ஏற்றுமதியை ஊக்குவிக்கின்ற விதத்திலே, இன்றைக்கு கப்பல் போக்குவரத்து மிக முக்கியம். ஆகவே,

தூத்துக்குடியிலே கப்பல் போக்குவரத்தை விரிவுபடுத்துகின்ற தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதேபோல், இன்றைக்கு கன்னியாகுமரியிலே மரியாதைக்குரிய அண்ணன் மத்திய இணை அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். ஆகவே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான கோடி திட்டத்திலே, அங்கே ஒரு துறைமுகம் அமைப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டிருக்கின்றார், பாரதப் பிரதமரும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே, அங்கே ஒரு துறைமுகம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை அனைவரிடமிருந்தும் வரப்பெற்றது. ஆகவே, அங்கேயும் மத்திய அரசு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாநில அரசு அனைத்து ஒத்துழைப்பும் நல்கும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். தொழில் வளம் பெருகினால்தான், இன்றைக்கு வேலைவாய்ப்பை பெருக்க முடியும். புதிய, புதிய தொழில்கள் வருவதன் மூலமாக, படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரமுடியும். அதன் மூலம் பொருளாதார மேம்பாடு அடைய முடியும். ஆகவே, இவை அனைத்தும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும், அதேபோல ஏற்றுமதியை ஊக்கப்படுத்த வேண்டும். ஆகவே, இரண்டும் செய்தால்தான் தொழில் வளர்ச்சி காண முடியும். அந்த வகையிலே, இன்றைக்கு தமிழ்நாடு அரசால் அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதற்கு மேலாக, ஒசூர், கோயம்புத்தூர், சேலம் போன்ற பகுதியிலே இன்றைக்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர், இங்கே பாதுகாப்புத் துறைக்குத் தேவையான உதிரிபாகங்கள் அமைக்கக்கூடிய தொழிற்சாலை அமைக்கப்படும்

என்ற நற்செய்தியையும் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி புதிய தொழிற்சாலை வருகின்றபொழுது, இங்கே படித்த, வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். இதனால், மக்களுக்குத் தேவையான நன்மைகள் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இன்றைக்கு புதிதாக சென்னையிலிருந்து சேலத்திற்கும், சேலத்திலிருந்து சென்னைக்கும் உடான் விமான சேவை போக்குவரத்து சேவையை துவக்கிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மத்திய விமான போக்குவரத்துத் துறை செயலாளர் அவர்களுக்கும் நம்முடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச்சிறப்பான இந்த விழாவிற்கு வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்து, வருகை தந்துள்ள பத்திரிகையாளர் மற்றும் ஊடக நண்பர்களுக்கும், மேடையிலே வீற்றிருக்கின்ற அத்தனை முக்கியத் தலைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி ! வணக்கம் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
25.03.2018 அன்று சேலம் விமான நிலையத்தில்,
உடான் விமான சேவை திட்டத்தின் கீழ்,
சேலம்–சென்னை இடையே Trujet விமான நிறுவனத்தின்
முதல் விமான சேவையை துவக்கி வைத்து ஆற்றிய உரை.

எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும், மக்களுக்கு பயன்படும் திட்டமாகத்தான் அம்மாவினுடைய அரசு செயல்படுத்தும் !

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தமிழ்நாடு அரசின் சார்பாக, பவானி ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு இந்தப் பகுதி மக்களுக்கு வழங்குகின்ற கூட்டுக் குடிநீர் திட்டம் புதிதாக கட்ட இருக்கின்ற ஆற்றுப்பாலத்திற்கு அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நல்ல பல அறிவுரைகளையும், கருத்துக்களையும் வழங்கி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே,

சுருக்கமாகச் சொன்னாலும், சிறப்பான கருத்துக்களை இங்கே எடுத்துவைத்து அமர்ந்திருக்கின்ற சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, மாண்புமிகு மின்சாரம், ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே,

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் உடுமலைப்பேட்டை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே,

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.துரைக்கண்ணு அவர்களே, மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் டாக்டர்.வி. சரோஜா அவர்களே,

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களே மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிருவாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகையாளர்களே,

ஊடக நண்பர்களே, அனைவருக்கும் மனமார்ந்த வணக்கத்தினை இந்த நேரத்திலே சமர்ப்பிக்கின்றேன்.

எண்ணற்ற திட்டங்களை நாங்கள் கொடுத்திருக்கின்றோம், ஆனால், இந்த ஆட்சியில் எதுவுமே நடக்கவில்லை என்ற பொய் குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்களாலும், தொடர்ச்சியாக அம்மாவினுடைய அரசும் பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அம்மா அவர்கள் 2011இல் சட்டமன்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதியான, உழைக்கின்ற மகளிருக்கு, குறிப்பிட்ட காலத்திற்குள் வேலைக்குச் சென்று வீடு திரும்புவதற்காக, அம்மா இருசக்கர வாகனம், உச்சவரம்பு மானியமாக ரூபாய் 25 ஆயிரம் அரசே வழங்கி, 1 இலட்சம் வாகனம் என நிருணயிக்கப்பட்டு, இதுவரை 3 இலட்சத்து 36 ஆயிரம் நபர்கள் பதிவு செய்யப்பட்டு அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அம்மா அவர்கள் பிறந்தநாள் அன்று, பாரதப் பிரதமர் அவர்கள் சென்னைக்கு வந்து அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள் என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, அம்மா பிறந்தநாளைக் குறிக்கின்றவகையில், ஒவ்வொரு வருடமும் மரக்கன்றுகள் நடப்படும். இந்த ஆண்டு 70ஆவது ஆண்டு பிறந்தநாள் அன்று 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் விழா, பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் மரக்கன்று நடப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது என்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகம் முழுவதும் அருமையான சாலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. Airport மாதிரி அனைத்து வசதிகளுடன் கூடிய Busport கோயம்புத்தூர், சேலம், மதுரை போன்ற பெரிய

நகரங்களில் அமைக்க மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மெட்ரோ இரயில் திட்டம் வேண்டுமென்று இங்கு அனைவராலும் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு அதற்குத் தேவையான திட்டங்களைத் தீட்டி அந்தத் திட்டமும் கோவை மாநகர மக்களுக்கு வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல உக்கடம் பாலத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்தப் பாலம், ஆற்றுப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு, ஒப்பணக்கார வீதி வரை மேம்பாலம் அமைத்தல். உக்கடம் ஆற்றுப்பாலம் மேம்பாலம், கோவை மாநகரில், திண்டுக்கல்–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் கருப்புக்கடை பகுதியில் ஆரம்பித்து உக்கடம் மார்க்கெட் பகுதியில் முடிவடைகிறது. தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இந்த மேம்பாலமானது 3 பகுதிகளை உள்ளடக்கியது. ஆற்றுப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு வரையிலான 1.36 கிலோமீட்டர் நீளமுள்ள முதல் பகுதி 4–வழி ஓடுதளமாகவும், உக்கடம் சந்திப்பு முதல் ஒப்பணக்கார வீதி 345 மீட்டர் நீளமுள்ள இரண்டாம் பகுதி 2–வழி ஓடுதளமாகவும், டவுன்ஹால் முதல் உக்கடம் சந்திப்பு 284 மீட்டர் நீளமுள்ள மூன்றாம் பகுதி 2–வழி ஓடுதளமாகவும் அமைக்கப்படும். ஆகமொத்தம், 1.970 கிலோமீட்டராக இந்தப் பாலத்தினுடைய நீளம் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, நிலஎடுப்பு, பாலம் அமைக்கும் பணி உட்பட ரூபாய் 215 கோடி 51 இலட்சம் இந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இம்மேம்பாலமானது கோவை மாநகரத்தினுடைய மத்திய பகுதியான உக்கடத்தில் அமைந்துள்ளது. இதனால் தற்போது உக்கடம் பகுதியில் நிலவிவரும் போக்குவரத்து

நெரிசல் வெகுவாகக் குறையும். அதோடு, ஒரு மணிநேரம் காத்திருந்து செல்லக்கூடிய சூழ்நிலையிருக்கின்றது. கேரளா, பொள்ளாச்சி மற்றும் பழனியிலிருந்து கோவை மாநகரத்திற்கு வரும் வாகனங்கள் எளிதாக செல்லும்வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் கோவை மற்றும் அருகாமையிலுள்ள சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள். இன்றைக்குகூட ஒரு சில பத்திரிகைகளில் இந்த பாலம் சரியில்லை என்ற ஒரு செய்தி வந்துள்ளது. அது முற்றிலும் தவறு. மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு, உகந்தவாறு இந்தப் பாலம் மாற்றி வடிவமைக்கபடும் என்ற செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தாலும், மக்களுக்கு பயன்படும் திட்டமாகத்தான் அம்மாவினுடைய அரசு செயல்படுத்தும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
26.03.2018 *அன்று கோயம்புத்தூர்,*
தொண்டாமுத்தூரில் நடைபெற்ற விழாவில்
ஆற்றிய உரை.

ரூ.5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சி அருங்காட்சியகம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பூச்சி அருங்காட்சியக திறப்புவிழா நிகழ்ச்சியிலே, தலைமையேற்று தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு வேளாண்மைத் துறை

அமைச்சர் மரியாதைக்குரிய திரு.இரா.துரைக்கண்ணு அவர்களே, காலத்தினுடைய அருமை கருதி எங்களுக்கு பேசுவதற்கு வழிவிட்டு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு.வேலுமணி அவர்களே,

மாண்புமிகு சட்டப்பேரவை;த துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களே, நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய வேளாண்மைத் துறை அரசு முதன்மை செயலாளர் அவர்களே, நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் அருமை நண்பர் மகேந்திரன் அவர்களே,

மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அம்மன் கே. அர்ச்சுனன் அவர்களே, திரு.பி.ஆர்.ஜி.அருண்குமார் அவர்களே, திரு.ஓ.கே. சின்னராஜ் அவர்களே, திரு.வி.சி. ஆறுகுட்டி அவர்களே, திரு.கனகராஜ் அவர்களே, திரு.எட்டிமடை சண்முகம் அவர்களே, திருமதி கஸ்தூரி வாசு அவர்களே, திரு. முருகுமாறன் அவர்களே, முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, நிகழ்ச்சியிலே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி.கருப்பணன் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் பெருமக்களே, மேடையிலே வீற்றிருக்கின்ற அரசு உயர் அலுவலர்களே, வருகை தந்திருக்கின்ற மாணவச் செல்வங்களே, பெரியோர்களே, தாய்மார்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, இறுதியாக நன்றியுரை ஆற்றவுள்ள பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தர் டாக்டர் கு.இராமசாமி அவர்களே, வேளாண் பெருமக்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,

உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தினை தெரிவித்து,

இந்த பூச்சி அருங்காட்சியகத்தை நான் Video Conferencing மூலமாக திறக்கலாம் என்று நினைத்தேன், இதன் சிறப்பு அம்சத்தை, நீங்கள் வேளாண் பல்கலைக்கழகத்திற்கு நேரடியாக வந்து, இந்த அருங்காட்சியகத்தை பார்க்க வேண்டும் என்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை முதன்மை செயலாளர் அவர்களும், உங்களுடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு.வேலுமணி அவர்களும், மரியாதைக்குரிய திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வேண்டுகோள் விடுத்தார்கள், நீங்கள் நேரடியாக வந்து பாருங்கள், அதனுடைய சிறப்பு அம்சங்கள் எந்த அளவிற்கு இருக்கும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள் என்று கோரிக்கை வைத்தார்கள்.

நானும் ஒரு விவசாயி என்ற காரணத்தினாலே, விவசாயத்தில் பூச்சிகள் எப்படியெல்லாம் தாக்குகின்றது, அந்தப் பூச்சிகளின் வகைப்பாடுகள் எல்லாம் எவ்வாறு இருக்கின்றன, என தத்ரூபமாக நீங்கள் நேரடியாக வந்து பார்த்தால் தெரிந்து கொள்ளலாம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இங்கே வந்து பார்க்கின்ற போது தான், உண்மையிலேயே, இன்றைக்கு தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியாவிலேயே எவ்வளவு பூச்சி வகைகள் இருக்கின்ற என்பதை எல்லாம் தெளிவாக இந்த அருங்காட்சியகத்தில் பார்த்தோம். சுமார் 75,000 பூச்சி வகைகள் இருப்பதாக இந்த அருங்காட்சியகத்திலே குறிப்பிட்டிருந்தார்கள். நான் ஒவ்வொன்றாக பார்த்துக் கொண்டே வந்தேன். இந்த 75,000 பூச்சி வகைகளில் உலகளவில் பார்க்கும் போது 6 சதவிகிதம் இருந்ததாக குறிப்பிட்டிருந்தார்கள். இந்த 75,000 பூச்சி வகைகளை இங்கு பார்த்து தான் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த அருங்காட்சியகத்தின் மூலமாகத் தான், எந்த பூச்சியால் மக்களுக்கு நன்மை கிடைக்கிறது, எந்த பூச்சியால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், எந்த பூச்சியினால் தீமை கிடைக்கிறது என்பதை இந்த அருங்காட்சியகத்திற்கு உள்ளே வருகின்ற போதே நாம் பார்த்து தெரிந்து கொள்ளலாம். அந்த அளவிற்கு தத்ரூபமாக, இந்த அருங்காட்சியகத்தை அமைத்த அமைச்சர் அவர்களுக்கும், முதன்மை செயலாளர் அவர்களுக்கும், துணை வேந்தர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய பேராசிரியர்கள், முன்னாள் பேராசிரியர்கள், இந்த வேளாண் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்கள் அத்தனை பேருக்கும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பேசுவது எளிது, ஆனால் அதை செய்து காட்டுவது கடினம், ஆனால் கடினமான அந்த வேலையை தத்ரூபமாக அத்தனை பூச்சி வகைப்பாடுகளையும் ஒருங்கிணைத்து, அதை பார்ப்பதற்கு

அழகாக இருக்கின்ற வகையிலே அதை நேர்த்தியாக, இந்த அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது உண்மையிலே பாராட்டுக்குரியது.

இங்கே நம்முடைய முதன்மை செயலாளர் அவர்கள் குறிப்பிட்டார்கள், உலகளவில் 20 இடங்களில் மட்டுமே இத்தகைய அருங்காட்சியம் இருப்பதாக சொன்னார்கள். ஆனால் இந்த அளவிற்கு இருக்கிறதா என்றால் இல்லை. இந்தியா மட்டுமல்ல, உலகளவிலேயே தத்ரூபமாக அந்த பூச்சி வகைப்பாடுகளை, என்னென்ன விதத்திலே தீமை செய்கிறது, எப்படி அது உருவாகி, பெரிதாகி, அதன்மூலமாக எப்படி தீமை செய்கிறது, என்பதை எல்லாம் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதேபோல, அந்த பூச்சி வகைகளால் எப்படி எல்லாம் நன்மை கிடைக்கிறது என்பதையும் தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பூச்சி கடித்தால் நம்முடைய உடலில் என்ன நோய் ஏற்படும் என்பதையும் இந்த அருங்காட்சியகத்திலே தெளிவாக காட்டியிருக்கிறார்கள். இதை எல்லாம் நம்முடைய மாணவச் செல்வங்கள், இங்கே படிக்கின்ற மாணவர்கள் மட்டுமல்ல, வெளியிலே படிக்கின்ற மாணவர்களும் இதைப் பார்க்கின்ற போது, அவர்களது கல்வி அறிவு பெருகும். விஞ்ஞான வளர்ச்சி இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. இந்த விஞ்ஞான உலகத்திலே புதுப்புது வகையான பூச்சிகள், அந்த பூச்சிகளினால் ஏற்படும் தீமைகள் மற்றும் நன்மைகளை அறிந்து, இந்த அருங்காட்சியகத்தின் மூலமாக பயன்பெற முடியும்.

இன்றைக்கு விவசாயிகள் எவ்வளவு தான் பாடுபட்டு பயிரை வளர்த்தாலும், ஒருசில பூச்சிகளால் தீமை உண்டாகி அந்த பயிர் நாசமாகிறது. தண்டு பூச்சி, நான் விவசாயம் செய்து கொண்டு இருக்கிறேன், நன்றாக தெரியும். பயிர் வளரும்போது இடையிலே தண்டிலே புழு ஏறி அதை துண்டித்துவிடும். முற்றிய நிலையில் பயிர் பாதிப்படைந்து விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும். அதேபோல,

பருத்திகளில் பார்த்தீர்களானால், விழுதுகள் வழியாக, தண்டு வழியாக அந்த பூச்சி போய் அந்த தண்டில் இருக்கின்ற ஊண் எல்லாம் உறிஞ்சி, அதனால் தண்டு உடைந்து விழுந்து விடும். அதையெல்லாம் இங்கே தத்ரூபமாக வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்து விவசாயிகள், வேளாண் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தெரிந்து கொண்டு, எந்த மருந்துகளை அடித்தால் அந்த பூச்சிகளை கட்டுப்படுத்த முடியும் என்பதை எல்லாம் இங்கே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இந்த அருங்காட்சியகம் மக்களுக்கு பயனுள்ள அருங்காட்சியகம். இதனால், இன்றைக்கு வேளாண் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற மாணவர்கள் இந்த அருங்காட்சியகத்தின் மூலமாக தங்கள் அறிவை பெருக்கிக் கொள்ள, வளர்த்துக் கொள்ள ஏதுவாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சி அருங்காட்சியகம் 5 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பூச்சிக்கென்றே அமைக்கப்பட்ட தனித்துவமான அருங்காட்சியகம் நம்முடைய கோவை பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்தது.

ஆசிய கண்டத்திலே, மேற்கு சீனாவிலே ஒரு மிகப்பெரிய பூச்சி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அருங்காட்சியகம் **6,691** சதுர பரப்பில் கட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பெரும்பான்மையான மாநிலங்களில் பூச்சிக்கென அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இங்கே ஆய்வுக் கூடங்களை பொறுத்தவரையில் 12 கோடி ரூபாய் நிதியில் Insectoscope கருவி நிறுவப்பட்டுள்ளது. 6 கோடி ரூபாய் செலவில் நுண்ணுயிர் சிறப்பு ஆய்வு கூடம் அமைக்கப்பட்டுள்ளது. அதோடு,

அரசு கூட இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

இந்த அருங்காட்சியகத்தை அனைவரும் பார்ப்பது அவசியம். அதிலே, விவசாயிகள் அதிகமாக கலந்து கொண்டு பார்த்தால், உண்மையிலேயே விவசாய பெருமக்கள் அவர்கள் பயிரிடுகின்ற போது அவர்களது பயிர்களை தாக்குகின்ற பூச்சிகளை தெரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு அந்த பயிரை வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த அருங்காட்சியகத்தை துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் வேளாண்மைப் பல்கலைக்கழகம் என்பது ஒரு சிறந்த பல்கலைக்கழகம். நம்முடைய கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக இருக்கிறது. புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து, விவசாய பெருமக்களுடைய, வேளாண் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு மையமாக இந்த வேளாண் பல்கலைக்கழகம் அமைந்து இருக்கின்றது. அதை மேன்மேலும் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக, இங்கே படிக்கின்ற வேளாண்மை பல்கலைக்கழக மாணவர்கள் சிறப்படைய வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
26.03.2018 *அன்று கோயம்புத்தூர்,*
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
பூச்சி அருங்காட்சியகத்தை திறந்து வைத்து விழாப் பேருரை.

விசைத்தறி, கைத்தறி சிறக்க வேண்டும் என்பதற்காக கட்டணமில்லா மின்சாரம் கொடுத்த ஒரே அரசு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, கொங்கணாபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பள்ளிபாளையம்–எஸ்.பி.பி. காலனி புதிய இரயில்வே மேம்பாலம் திறப்பு விழா, வெப்படை புதிய காவல் நிலையம் துவக்க விழா, காவேரி ஆர்.எஸ்இல் கீழ்ப்பாலம் அடிக்கல் நாட்டு விழா மற்றும் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள மேம்பாலப் பணிகள் திறப்பு விழா நிகழ்ச்சியில் தலைமையேற்று தலைமையுரை ஆற்றிய இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு.பி.தங்கமணி அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்

மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்புரையாற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சரோஜா அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே,

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. விஜயபாஸ்கர் அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே,

சிறப்புரை ஆற்றிய ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செல்வக்குமார் சின்னையன் அவர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று காலத்தினுடைய நேரம் கருதி எங்களுக்கு பேசுவதற்கு வழிவிட்டு அமர்ந்திருக்கின்ற நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர். சுந்தரம் அவர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாமக்கல் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.கே.பி.டி.பாஸ்கர் அவர்களே, சேந்தமங்கலம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சந்திரசேகரன் அவர்களே, திருச்செங்கோடு சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி பொன் சரஸ்வதி அவர்களே,

மரியாதைக்குரிய சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு.கே.வி.ராமலிங்கம் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய கே.எஸ்.தென்னரசு அவர்களே மற்றும் நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தென்னக இரயில்வே கோட்ட மேலாளர் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, மேடையிலே வீற்றிருக்கின்ற முன்னோடி நிருவாகிகளே, அரசு அலுவலர்களே, வருகை தந்துள்ள கழகத்தினுடைய அனைத்துமட்ட நிருவாகிகளே,

பெரியோர்களே, தாய்மார்களே, முன்னாள் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிருவாகிகளே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நெடுஞ்சாலைத் திட்டங்களினுடைய தலைமைப் பொறியாளர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

இன்றையதினம் நாமக்கல் மாவட்டம் முழுவதையும் ஒரு வளர்ச்சியடைந்த மாவட்டமாக பார்க்கின்றோம். எனக்கு முன்னாலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களும், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சரோஜா அவர்களும், இந்த மாவட்டத்தில் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று அழகாக எடுத்துச் சொன்னார்கள்.

இதற்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிருந்த காலத்தில் இந்த மாவட்டம் எப்படி இருந்தது, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் பதவியேற்ற பிறகு, இந்த மாவட்டத்தில் எவ்வளவு வளர்ச்சியை பார்க்கமுடிகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஆட்சி எப்படி நடைபெறுகிறது என்பதை தராசு போல் நீங்கள் நிறுத்திப் பார்த்தால்தான், எந்த ஆட்சியில் மக்களுக்கு நன்மை கிடைக்கின்றது என்பதை நீங்கள் ஊர்ஜிதம் செய்யமுடியும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

இருந்த காலத்தில் இந்த மாவட்டம் ஒரு வளர்ச்சியடைந்த மாவட்டம், தொழில் நிறைந்த மாவட்டமாக இருந்த காரணத்தினால், மேலும் வளர்ச்சி காண வேண்டுமென்பதற்காக, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு சிந்தித்துதான், இங்கே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுகின்றவிதமாக இன்றைக்கு பல்வேறு மேம்பாலங்களை இந்த மாவட்டத்திற்கு அளித்து, அந்தப் பாலப்பணிகள் சிறப்பாக நிறைவு பெற்று, திறப்பு விழா நடத்தி, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இங்கே திருச்செங்கோட்டை மையமாக வைத்துக்கொண்டால், திருச்செங்கோட்டிலிருந்து எல்லாப் பகுதிகளுக்குமே, நான்கு வழிச்சாலை கிடைத்த ஒரே மாவட்டம் தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டம் தான், வேறு எந்த மாவட்டத்திற்கும் கிடைக்கவில்லை. இன்றைக்கு திருச்செங்கோட்டிலிருந்து ஈரோடு வரைக்கும் நான்கு வழிச்சாலை அமைத்திருக்கின்றோம். திருச்செங்கோட்டிலிருந்து பரமத்தி வரைக்கும் ஏற்கெனவே பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மாநில நிதியிலிருந்து முழுவதும் செலவு செய்யப்பட்டு, திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல் வரை நான்கு வழிச்சாலையை மக்களின் பயன்பாட்டிற்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல, திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் மல்லிக்கரை வரை சாலைகள் விரிவுபடுத்தும் பணி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆக, திருச்செங்கோட்டை மையமாக வைத்துப் பார்க்கின்றபொழுது, இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் சாலைகள் விரிவாக்கப் பணிகள் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன. மேலும், இப்பொழுது திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி, சங்ககிரியிலிருந்து கொங்கணாபுரம், தாரமங்கலம், ஓமலூர் வரைக்கும் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி விரைவிலே தொடங்கப்படும். திருச்செங்கோட்டிலிருந்து செல்லுகின்ற சாலைகள் அனைத்துமே விரிவுபடுத்தப்பட்டுவிட்டது. தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில், எங்குமில்லாத ஒரு சிறப்பு இந்த நாமக்கல் மாவட்டத்திற்கு கிடைத்திருக்கின்றது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, திருச்செங்கோட்டிலே புறவழிச்சாலை பணி துவங்குவதற்கு நிலஎடுப்புப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நாமக்கல் புறவழிச்சாலை, இராசிபுரத்தில் புறவழிச்சாலை – ஒரு பணி நிறைவு பெற்றது. இரண்டாவது கட்டப் பணி நடைப்பெற்று கொண்டிருக்கின்றது. இப்பணிகளெல்லாம் விரைவிலே நிறைவேற்றப்படும். ஆக, உட்கட்டமைப்பு வசதிகள் மூலமாக போக்குவரத்து அதிகமுள்ள இந்த மாவட்டத்தில் தங்குதடையில்லாமல் போக்குவரத்து செல்வதற்கு தேவையான சாலைவசதிகளை அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் மேட்டூர் கிழக்குக்கரை, மேற்குக்கரை என இரண்டு கால்வாய்கள் இருக்கின்றன. அந்த இரண்டு கால்வாய்களின் வழியாக நம்முடைய விவசாய குடிமக்களுக்குத் தேவையான நீர் வழங்கப்பட்டு, வேளாண் பெருமக்கள் பயன்பெறுகின்றவிதத்திலே, அந்த இரண்டு கால்வாய்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேட்டூரிலிருந்து திறந்துவிடப்படுகின்ற நீர் சேதாரம் இல்லாமல், கடைக்கோட்டுப் பகுதியாக இருக்கின்ற பள்ளிபாளையம் கடைசிமுனை வரைக்கும் செல்வதற்காக அந்தக் கால்வாயில் கான்கிரீட் சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். நான்கு

நாட்களுக்கு முன்பு ரூபாய் 48 கோடி sanction செய்யப்பட்டு இன்னும் ஒரு 15 நாளில் டெண்டர் விடுவதற்கு இருக்கிறோம். நம்முடைய மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயை நவீன முறையில் கான்கிரீட் கால்வாயாக மாற்றி அமைக்கின்றபொழுது, திறந்துவிடப்படுகின்ற நீர் சேதாரம் இல்லாமல் கடைக்கோடியிலிருக்கின்ற விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்ள இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பகுதி, விசைத்தறி, கைத்தறி தொழில்கள் நிறைந்த பகுதி. இரண்டு தொழில்களும் சிறக்க வேண்டுமென்பதற்காக கட்டணமில்லா மின்சாரம் கொடுத்த ஒரே அரசு, அம்மாவினுடைய அரசு என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பகுதிகளிலெல்லாம் மின்சாரம் இருந்தால்தான் தொழிலே செய்யமுடியும்.

வேளாண்மைக்கு நீர், உடலுக்கு உயிர் எப்படியோ, அதுபோல தொழிலுக்கு உயிராய் இருப்பது மின்சாரம். வேளாண்மைக்கு உயிராய் இருப்பது நீர். தொழிலுக்கு தேவையான மின்சாரம் தேவை. மின்சாரம் முடங்கினால் இந்த மாவட்டமே நசிந்து போய்விடும். தொழிலில்லாத மாவட்டமாய் மாறிவிடும். ஏனென்றால், விசைத்தறி நிறைந்த பகுதி, ஸ்பின்னிங் மில் நிறைந்த பகுதி. கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எப்பொழுது கரெண்ட் வரும், எப்பொழுது போகும் என்றே தெரியாது. அப்படி கடுமையான மின்வெட்டு இருந்த காலம். 2011இல் மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் சுற்றுப்பயணம் செல்கின்றபொழுது சொன்னார்கள், நான் முதலமைச்சராகி மூன்றே ஆண்டுகளில் தமிழகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்று சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதேபோல மூன்றே ஆண்டுகளில் தன்னுடைய திறமையால், அறிவாற்றலால் வாரந்தோறும் மின்சாரத்

துறை அதிகாரிகளை அழைத்துப்பேசி நடவடிக்கை எடுத்து, தமிழகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கித் தந்த பெருமை அம்மாவைச் சாரும். இன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சராக இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் மாண்புமிகு அமைச்சர் தங்கமணி இருந்து கொண்டிருக்கின்றார். ஆகவே, இந்தத் துறையில் இன்னும் கூடுதலான மின்சாரத்தை உற்பத்தி செய்து, இனி எந்தக் காலத்திலும் தமிழகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாகத்தான் உடன்குடி மின்திட்டத்திற்குக்கூட அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. புதிய, புதிய மின்திட்டம் உருவாக்குவதன் மூலமாக, தமிழக மக்களுக்கு தேவையான மின்சார வசதி செய்து கொடுப்பதன் மூலமாக, தொழில் வளம் பெருகும், தொழில்வளம் பெருகுகின்றபொழுது, மக்களிடத்திலே பொருளாதார மேம்பாடு அடையும். எனவே, இப்படி ஒரு தொலைநோக்கு சிந்தனையோடு அம்மாவால் போடப்பட்ட திட்டத்தை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு திருச்செங்கோட்டிலிருந்து சேலம் செல்லும்பொழுது அரியானூர் ஜங்ஷனில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு பலபேர் உயிரிழக்க நேரிடுவதை கருத்தில் கொண்டு அங்கே ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று கருதி, இன்னும் 2 மாதத்தில் அங்கே ஒரு மேம்பாலம் அமைக்கின்ற பணியும் துவக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். திருச்செங்கோட்டிலிருந்து அதிகமான போக்குவரத்து செல்கின்ற பகுதி, திருச்செங்கோடு, ஆட்டையாம்பட்டி, அரியானூரில் சேர்ந்து சேலம் செல்கிறது. அங்கே தேசிய நெடுஞ்சாலை இணைகின்றபொழுது, அதிகமான விபத்து ஏற்படுகிறது. அந்த விபத்துக்களை தவிர்ப்பதற்காக அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டப்படும். மாண்புமிகு உங்களுடைய அமைச்சர் அவர்கள் சங்ககிரியிலிருந்து குமாரபாளையம் வருகின்ற தேசிய

நெடுஞ்சாலையில், அத்தனூர் பிரிவு ரோடு, அங்கே ஒரு உயர்மட்ட பாலம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள், அங்கேயும் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டிக் கொடுப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு முன்னாலே சென்னையிலிருந்து வருகின்றபொழுது தேசிய நெடுஞ்சாலையில் கொங்கு கல்யாண மண்டபம் பக்கத்தில், குமாரபாளையம் நகரத்திற்கு செல்கின்ற பிரிவு பாதையில், ஒரு உயர்மட்டப் பாலம் கேட்டிருக்கின்றார்கள். அங்கேயும் உயர்மட்ட பாலம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அத்தனூரில் ஒரு இரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று கேட்டார்கள். இரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று சொன்னால், ஒரு நாளைக்கு அங்கு ரயில் போவதை கணக்கிட்டு, இரயில் போகும்பொழுது கதவுகள் மூடப்படும்நேரத்தில்இரண்டுபக்கங்களிலும்நிற்கின்றவாகனங்களை கணக்கிட்டு, 1 இலட்சம் இரயில்வே அலகுகள் இருந்தால்தான், மத்திய அரசு அதற்கு அனுமதி கொடுக்கும். ஆகவே, அந்த கணக்கீட்டை மத்திய அரசாங்கம் செய்யும், மத்திய அரசாங்கத்தின் மூலமாக கணக்கீடு செய்து 1 இலட்சம் இரயில்வே அலகுகள் வந்தால், அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதி பெற்று கட்டித்தரப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். ஆகவே, அம்மாவினுடைய அரசுதான் இவ்வளவு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது. விவசாய பெருங்குடி மக்களுக்கு தேவையான நீரைப் பெருவதற்கு அம்மாவினுடைய அரசு சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப்போல் தட்டிக் கழிப்பது கிடையாது. இன்றைக்கு பெருந்துறையில் மண்டல மாநாடு ஒன்றை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்தினார்கள். அப்பொழுது, அங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக செயல்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார், இந்த ஆட்சியை நாங்கள்

நினைத்தால் சொடக்கு போடுகிற நேரத்தில் வீட்டிற்கு அனுப்புவோம் என்று சொன்னார். ஆகவே, அவருடைய எண்ணமெல்லாம், இந்த ஆட்சியை கலைப்பதில்தான் இருக்கிறதேயொழிய, நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணம் துளிகூட கிடையாது. என்றைக்கு நாங்கள் பதிவியேற்றோமோ, அன்றிலிருந்து இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். பதவி ஏற்கும்பொழுது என்ன சொன்னார்? பட்ஜெட் போடும் வரை இந்த ஆட்சி தாக்குபிடிக்காது என்று சொன்னார், பட்ஜெட் போட்டு முடித்துவிட்டோம், அதற்குப் பிறகு, மானியக் கோரிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தது, அந்த மானியக் கோரிக்கை முடியும் வரை இந்த ஆட்சி தாக்கு பிடிக்குமா என்று சொன்னார். அதையும் நாங்கள் நடத்திக் காட்டினோம். அதற்குப் பிறகு, மூன்று மாதம் இந்த ஆட்சி தாக்குபிடிக்காது என்று சொன்னார், அதையும் தாண்டி இன்றைக்கு மக்கள் துணையோடு வெற்றிகரமாக ஓராண்டை நிறைவு செய்திருக்கிறோம், இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இன்றைக்கு சொடக்கு போட்டு எல்லாம் இந்த ஆட்சியை கவிழ்த்து விடமுடியாது. ஏனென்றால், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இருபெரும் தலைவர்கள் தெய்வசக்தி படைத்த இயக்கத்திற்கு துணையாக நின்று இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த தெய்வசக்தி எங்களுடன் இருக்கும்வரை, அவர்கள் ஆசி எங்களுடன் இருக்கின்றவரை, உங்களைப்போல் எத்தனை எதிர்க்கட்சிகள் எதிர்த்தாலும் அதை தவிடுபொடியாக்குவோம் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அந்த சோதனைகளையெல்லாம் மக்கள் துணைகொண்டு நாங்கள் வெற்றிபெறுவோம். ஏனென்றால், மக்களுக்கு தேவையான திட்டங்களை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது, எதிலும் சோடை போகவில்லை.

இன்றைக்கு இந்தியாவிலேயே உணவுதானிய உற்பத்தி அதிக விளைச்சல் பெற்று, கிருஷி கர்மான் விருதை 2015–2016–க்கு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் டெல்லி சென்று, பாரதப் பிரதமரிடத்தில், கடந்த வாரத்தில் பரிசு பெற்று வந்திருக்கிறார். எனவே, வேளாண்மைத் துறையானாலும் சரி, எந்தத் துறையானாலும் சரி, அத்தனை துறையும் இன்றைக்கு வளர்ச்சிப் பாதையிலே சென்று கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, உங்களுடைய அரசு, ஏழை, எளிய மக்களுடைய அரசு, ஏழை மக்களுக்கு என்ன இல்லை என்பதை கண்டறிந்த அரசு. ஏனென்றால், நாங்களெல்லாம் சாதாரண மக்களோடு பழகி இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றோம். சாதாரண அடித்தட்டிலே இருக்கின்ற மக்களுக்கு என்ன துன்பம் இருக்கும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். அதை எப்படி களைவது, எப்படி நிவர்த்தி செய்வது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களைப்போல் செல்வாக்கில் இருந்து கொண்டு வெற்றி பெற்று அமைச்சராகவில்லை. எங்களைப் பொறுத்தவரைக்கும், கடினமாக உழைப்பால், விசுவாசத்தால் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றோம். விசுவாசமும், உழைப்பும் எங்கிருந்தாலும் வெற்றி கிடைக்கும். ஆகவே, அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், மக்களுக்கு உழைக்கக்கூடிய அரசாக இருக்கும். மக்களுக்குத் தேவையான திட்டங்களை மக்களுக்கு சென்றடையக்கூடிய அளவிற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த மேம்பால திறப்புவிழா நிகழ்ச்சி, காவல்நிலைய திறப்பு விழா நிகழ்ச்சி, கீழ்ப்பாலம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்த பகுதிக்கு வருகின்ற பொழுது, இந்த தொகுதியில் இருக்கின்ற அனைத்து மக்களும் பள்ளிக்கூடத்திலே வந்து குவிந்துவிட்டார்கள் என்று கருதுகின்ற அளவுக்கு மக்கள் வெள்ளம் கடல்போல

காட்சியளிக்கின்றார்கள். அப்படிப்பட்ட இந்த செல்வாக்கு மிக்க தொகுதி இன்னும் பல திட்டங்கள் அம்மாவினுடைய அரசிலிருந்து கிடைக்கப் பெற்று, மேலும், மேலும் இந்தப் பகுதி மக்கள் அம்மாவினுடைய அரசிற்கு துணை நிற்பார்கள் என்று சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
26.03.2018 அன்று நாமக்கல் மாவட்டம்,
பள்ளிபாளையத்தில் நடைபெற்ற
அரசு விழாவில் ஆற்றிய உரை.

ரூ.30 கோடி மதிப்பீட்டில் பல்வேறு துறைகளுக்கு நலத்திட்டங்கள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இரண்டு இடங்களிலே, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா, பக்கநாடு பகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க விழா நிகழ்ச்சி மற்றும் குன்னூர் பகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சி,

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பாக உரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே,

வரவேற்புரை நிகழ்த்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, திரு.மருதமுத்து அவர்களே, திரு.சின்னதம்பி அவர்களே,

சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க தலைவர் திரு.சின்னசாமி அவர்ளே, முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு.மணி அவர்களே, முன்னாள் மாவட்ட ஊராட்சிமன்ற உறுப்பினர் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சுகாதாரத் துறையை சேர்ந்த உயர் அதிகாரிகளே, மருத்துவர்களே, வருகை தந்திருக்கின்ற அரசுத் துறையைச் சேர்ந்த அலுவலர்களே, வருகை தந்திருக்கின்ற கழகத்தினுடைய முன்னோடி நிருவாகிகளே,

பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்து,

நீண்ட காலமாக பக்கநாடு மக்கள் இங்கே சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று வைத்த கோரிக்கையை நிறைவேற்றுகின்றவிதமாக இன்றையதினம் மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் உங்களுடைய பகுதியிலேயே ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது. கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு அந்தப் பகுதியிலேயே சிகிச்சை செய்யக்கூடிய ஒரு அருமையான மருத்துவமனையை நாங்கள் தந்திருக்கின்றோம். இந்த மருத்துவமனைக்கு இதே பகுதியில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மக்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டால், பக்கநாடு பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். அந்த வசதியை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சுகாதாரத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், கிராமப்புற ஏழை, எளிய மக்கள் பயனடையும்விதமாக 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையம் இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்று குறிப்பிடுகின்றபொழுது, சித்தூரில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அம்மா அவர்கள் தரம் உயர்த்தி தந்தார்கள், அதற்காக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கி கட்டடமும் கட்டித் தந்தார்கள். அதேபோல, கெங்கவல்லியில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அதற்கு ரூபாய் 1 கோடி கொடுத்து அங்கேயும் கட்டட வசதி செய்து கொடுத்தார்கள். அதேபோல, கொங்கணாபுரத்தில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு,

மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி, அதற்கு ரூபாய் 1 கோடி கொடுத்து அங்கேயும் கட்டட வசதி செய்து கொடுத்தார்கள். மூன்று ஒன்றியங்களிலுமே, ஏழை, எளிய மக்கள் சிகிச்சை பெற வேண்டுமென்பதற்காக அம்மா அவர்கள் அரசு அந்த மருத்துவமனைகளை தரம் உயர்த்தியிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், கடந்த 7 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் மட்டும் 11 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளது. நம்முடைய தொகுதி என்று எடுத்துக்கொண்டால், கோனேரிபட்டி, குன்னூர், சமுத்திரம், பக்கநாடு என 4 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் இன்றைக்கு துவங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு ஆரம்ப சுகாதார நிலையம் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு புதிய கட்டடம், மருத்துவர் குடியிருப்பு கட்டடம், செவிலியர் குடியிருப்புக் கட்டடம் உள்ளிட்ட கட்டட வசதியும் அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது. எடப்பாடி தாலுகா அரசு மருத்துவமனை ரூபாய் 3.5 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு, விபத்து மற்றும் அறுவை சிகிச்சை கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றது. ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் தனியார் நிறுவன பங்களிப்புடன் எடப்பாடி அரசு மருத்துவமனையில் நவீன டிஜிட்டல் எக்ஸ்ரே மற்றும் நவீன ஸ்கேன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது, ஒரே நிமிடத்தில் எக்ஸ்ரே எடுத்துக் கொடுத்துவிடுவார்கள். மேட்டூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, வாழப்பாடி அரசு மருத்துவமனையில் 12.3 கோடி மதிப்பீட்டில் டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவு, பச்சிளங்குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவு மற்றும் 30 படுக்கை கொண்ட கூடுதல் கட்டடம், இன்றைக்கு தொடங்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவக்

கல்லூரியில் 40 கோடி ரூபாயில் உலகத்தரம் வாய்ந்த நவீன வுசதியுடன் கூடிய RCH Centre of Excellence, சிறப்பு மகப்பேறு சிகிச்சை பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. 29 கோடி ரூபாயில் செவிலியர் குடியிருப்பு, பயிற்சி மாணவர் குடியிருப்பு மற்றும் மருத்துவமனை உணவு விடுதிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் தொடங்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில், ஒரு வருடத்தில் இரண்டு நடமாடும் பள்ளி மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, 42 நடமாடும் மருத்துவக்குழு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் இரண்டு முறை பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்களில் முகாம் நடத்தப்படுகிறது. இதுவரை 262 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இருதய அறுவை சிகிச்சை, 29 குழந்தைகளுக்கு தலா 4 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள செவித்திறன் அறுவை சிகிச்சையும், 70 குழந்தைகளுக்கு அன்னப்பிளவு மற்றும் உதடுப்பிளவு அறுவை சிகிச்சையும் முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதெல்லாம் அம்மாவினுடைய அரசு செய்த சாதனைகள். மக்கள் அனைவரும் நீண்டகாலம் நலமோடு வாழவேண்டும் என்ற சீரிய சிந்தனையோடு வாழ்ந்த அம்மாவினுடைய அரசால், அம்மா ஆரோக்கியத் திட்டம் தொடங்கப்பட்டு 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வருடம் ஒருமுறை அதாவது முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளும் வசதியை அனைத்து மாவட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டது. சேலம் மாவட்டத்தில் 2 இலட்சத்து 53 ஆயிரம் பயனாளிகள் பயனடைந்திருக்கிறார்கள். நம் உடலில் உள்ள நோயை தெளிவாகக் கண்டறிந்து, அதற்குத் தேவையான சிகிச்சையை அம்மாவினுடைய அரசு அளித்து வருகிறது. தொலைதூர கிராமத்தில் வசிக்கும் முதியோர்கள், கர்ப்பிணி தாய்மார்களுக்கு அவரவர்

வசிக்கின்ற இடத்திலேயே மக்களை நாடிச் சென்று மருத்துவ சேவை வழங்கும் ஒரு வருடத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவமனை வீதம், சேலம் மாவட்டத்தில் 21 நடமாடும் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றது. இனிமேல், மருத்துவமனையை நாடி நீங்கள் போக வேண்டியதில்லை, உங்களுடைய பகுதிக்கே நடமாடும் மருத்துவமனை வந்து, உங்களை பரிசோதனை செய்து, உங்கள் உடலிலே என்ன நோய் என்பதைக் கண்டறிந்து அதற்குத் தக்கவாறு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசாக, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, சேலம் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும், மூன்று சிறப்பு மருத்துவமுகாம் வீதம் 60 மருத்துவமுகாம் தொலைதூர கிராமங்களில் நடத்தப்பட்டு, 59,247 பயனாளிகள் கடந்த ஆண்டு பரிசோதிக்கப்பட்டனர். அதில் 327 பயனாளிகள் உயர் சிகிச்சைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மக்கள் நலனில் அக்கறை கொண்டு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், இன்று இந்தியாவிலேயே சிறப்பான மருத்துவ சேவை செய்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடுதான், வேறு எங்கேயும் இதுபோன்ற மருத்துவ சேவை கிடையாது. ஆகவே, இந்தியாவிலே பல அரசு மருத்துவமனைகள் இருக்கின்றது, தலைமை மருத்துவமனைகள் இருக்கின்றது, எந்த மருத்துவமனையிலும், இரண்டு கைகள் இல்லாத ஒருவர் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட நாராயணசாமி என்பவர் ஐந்து வருடத்திற்கு முன்பு இரண்டு கைகளையும் இழந்துவிட்டார். அந்த இரண்டு கையிழந்த அவருக்கு ஸ்டான்லி மருத்துவமனையில், நம்முடைய அரசு மருத்துவரின் கடும் முயற்சியால், மருத்துவ குழுக்கள் அனைவரும் சேர்ந்து, இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளை எடுத்து அவருக்கு பொருத்தப்பட்டு இரண்டு மாதமாகிறது.

இந்தியாவிலே எந்த அரசு மருத்துவமனையிலும் இந்த சாதனை நிகழ்த்தவில்லை, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு தான் இந்த சாதனையை நிகழ்த்தி மருத்துவத் துறையிலே ஒரு மைல்கல்லை ஏற்படுத்தியிருக்கிறது, சாதாரண விஷயமல்ல. இரண்டு கையில்லாத ஒருவருக்கு, இறந்தவர் உடலிலிருந்து பொருத்தப்பட்டு இன்றைக்கு அவர் இரண்டு மாதமாக நலமாக இருக்கிறார், இன்னும் இரண்டு மாதத்தில் discharge ஆகி போய்விடுவார். எப்படியென்றால், மருத்துவத்துறை எந்த அளவிற்கு தமிழகத்திலே வளர்ந்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல, மதுரையில் இருதயம் பாதிக்கப்பட்ட ஒருவரை இருதயத்தை எடுத்துவிட்டு, மாற்று இருதயத்தை பொருத்தி அவர் நலமுடன் இருக்கிறார், அரசு மருத்துவமனையில். தனியார் மருத்துவமனையில் எல்லாம் இதனை செய்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு நம்முடைய மருத்துவர்கள் சிறந்த முறையிலே மருத்துவ சேவையை செய்து, இப்படி பல்வேறு சிறப்புமிக்க அறுவை சிகிச்சையை செய்து, இன்றைக்கு இந்தியாவிலேயே உடல் உறுப்பு அறுவை சிகிச்சை செய்வதில் தொடர்ந்து மூன்றாண்டுகள் முதலிடத்திலே வகிக்கிறது. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்பது ஒரு இறந்த ஒருவரிடத்தில் இருந்து எடுத்து, யாராவது நோய்வாய்ப்பட்டால் அவருடைய அந்த உறுப்பை மாற்றியமைக்கக்கூடிய அந்த முறையை, இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதன்மையாக மூன்றாண்டுகள் தொடர்ந்து வகிக்கிறது. ஆகவே, மருத்துவசேவை அந்த அளவிற்கு தமிழகத்திலே வளர்ந்திருக்கிறது. நம்முடைய அரசு மருத்துவர்கள் சிறப்பான முறையிலே செயல்பட்டு, இந்த அரசுக்கும், பொதுமக்களுக்கும் சேவை செய்வதற்கு நான் அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களுக்கு ஏராளமான திட்டங்கள் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கிடைக்கிறது. இன்றைக்கு எடப்பாடி தொகுதியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைக்கு பக்கநாட்டில் மட்டும் நிறைய திட்டத்தை நிறைவேற்றி தந்திருக்கின்றோம். ஜலகண்டபுரம், பக்கநாடு வரை தரமான சாலை வசதி செய்து கொடுத்திருக்கின்றோம். பக்கநாட்டிலிருந்து சித்தூர் வழியாக எடப்பாடி வரை தரமான சாலை வசதி, ஆனைபள்ளம் முதல் கல்லூரல்காடு, வேலகாளி முனியம்மன் கோவில், அம்மன்கோவில் காடு வழியாக பூலாம்பட்டி வன்னியர் நகர் வரை மேம்படுத்தப்பட்ட சாலைகள், மேட்டுத்தெரு முதல் அருவாய்பட்டி வரை மேம்படுத்தப்பட்ட சாலைகள், கொண்டப்பன்மேட்டில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் பாலம், பக்கநாடு–கரியகாளியம்மன் கோவில் அருகில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் பாலம், அதேபோல, குடும்ப நலத்துறையிலே ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்திருக்கிறோம். நீண்டநாள் கோரிக்கை வைத்தீர்கள், கால்நடை மருத்துவமனை கேட்டீர்கள், அதையும் அம்மாவினுடைய அரசு கொடுத்து அதற்குக் கட்டடமும் கட்டிக் கொடுத்துள்ளது. நீங்கள் கேட்ட கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டது. அதுபோல், பேருந்து நிலையம் கேட்டீர்கள். ஜலகண்டபுரத்திலிருந்து ஈரோடு வரை பேருந்து இயக்கப்படுகின்றது. பூலாம்பட்டியிலிருந்து சேலத்திற்கு பேருந்து கேட்டீர்கள். அதையும் அம்மாவினுடைய ஆட்சியில் செய்து கொடுத்திருக்கின்றோம். இந்தப் பகுதி மக்கள் தேர்தல் நேரத்தில் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த தருணத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பக்கநாடு, ஆடையூர், இருப்பாளி, சித்தூர் ஆகிய பகுதி மக்களுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதில் நான் முனைப்போடு செயல்படுவேன் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்து, இன்றைக்கு கடுமையான வெயில் இருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், இங்கே வந்து அமர்ந்து இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்ற அத்தனை தாய்மார்களுக்கும், விவசாயப்

பெருங்குடி மக்களுக்கும் மனமார, உளமார பாராட்டுக்களை தெரிவித்து, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, இன்றைக்கு பல்வேறு துறையின் வாயிலாக, பல்வேறு நலத்திட்டங்களை வழங்க இருக்கின்றோம். சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, மீன்வளத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, மாற்றுத் திறனாளிகள் துறை, சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகிய துறைகளின் வாயிலாக கிட்டத்தட்ட 30 கோடியே 28 இலட்சம் ரூபாய் பெறுமான திட்டங்களைத் துவக்கி வைத்து, அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத் திட்டங்கள் வழங்குகின்ற விழாவாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டி, நம்முடைய எடப்பாடி ஒன்றியத்தில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். ஏற்கெனவே, கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக, கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்பதை சுட்டிக்காட்டி, இந்தப் பகுதிக்கு தேவையான அத்தனை அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க அம்மாவினுடைய அரசு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
27.03.2018 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாரம், பக்கநாட்டில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை.

விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கி நன்மைகளை செய்யும் அரசு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சுருக்கமாக பேசினாலும், விளக்கமாக பேசி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே,

வரவேற்புரை நிகழ்த்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

எடப்பாடி சட்டமன்ற தொகுதியிலே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, கெங்கவள்ளி சட்டப்பேரவை உறுப்பினர் வழக்கறிஞர் திரு.மருதமுத்து அவர்களே, ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சின்னத்தம்பி அவர்களே, ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே, வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் திரு. மணி அவர்களே,

ஒன்றிய கழகத்தினுடைய செயலாளர் முன்னாள் மாவட்ட ஊராட்சிமன்ற உறுப்பினர் திரு.ராஜேந்திரன் அவர்களே,

இந்த பகுதியை சேர்ந்த முன்னாள் கவுன்சிலர் – கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.மாணிக்கம் அவர்களே மற்றும்

இந்த விழா மேடையிலே வீற்றிருக்கின்ற அரசு அதிகாரிகளே, மருத்துவத் துறையை சேர்ந்த அதிகாரிகள் வருவாய்த் துறையை சேர்ந்த அலுவலர்களே, சுகாதாரத் துறையை சேர்ந்த அலுவலர்களே, மருத்துவர்களே, வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, விவசாய பெருங்குடி மக்களே, கழகத்தினுடைய பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிருவாகிகளே, கழக உடன்பிறப்புகளே அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

இந்த சமுத்திரம் பகுதி பக்கத்தில் புதுப்பாளையம், கோணசமுத்திரம், கோவணம்பட்டி, அருகாமையிலே இருக்கிற வெள்ளாடபுரம் இவை அனைத்துமே எனக்கு நன்கு தெரிந்த பகுதி. பல ஆண்டு காலமாக உங்களுடைய மகத்தான ஆதரவின் பேரிலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆசியிலே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றினேன். அதேபோல இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011லிருந்து 2016 வரைக்கும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக பதவி வழங்கினார். அதன்மூலமாக, நெடுஞ்சாலைத் துறைக்கு சம்பந்தப்பட்ட எல்லா சாலைகளையுமே சிறப்பான சாலைகளாக நம்முடைய பகுதியிலே உருவாக்கித் தந்திருக்கின்றோம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியிலே அம்மாவினுடைய அரசு செயல்பட்டு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை துவக்கி, ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல்மண்ணை விவசாயிகளே அள்ளி அவர்களுடைய நிலத்திற்கு உரமாக பயன்படுத்தக்கூடிய திட்டத்தை அறிவித்து, அதன் மூலமாக, முதற்கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 1,519 ஏரிகள் தூர்வாரப்பட்டு, இன்றைக்கு நிலத்தடி நீர் உயர்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு சமுத்திரம் பகுதி பக்கத்தில் புதுப்பாளையம், கோணசமுத்திரம், கோவணம்பட்டி, மற்றும் கச்சுப்புள்ளி இந்த சுற்றுவட்டாரக் பகுதிகளையெல்லாம் பார்க்கின்றபொழுது, வறட்சியால் நிறைந்த பகுதி. நிலத்தடி நீர் நாளுக்கு நாள் வற்றிக் கொண்டிருக்கின்றன, 1,000 அடிபோட்டால் கூட boreஇல் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலையில் இருக்கின்ற பகுதிக்கெல்லாம் நிலத்தடி நீரை உயர்த்தவேண்டும், அதற்காக குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக பருவமழை காரணமாக பெய்கின்ற மழைநீர் குளத்திலே, ஏரியிலே தேக்கப்படுவதால், நிலத்தடி நீர் உயருவதால் மக்களுக்கு தேவையான குடிநீர் கிடைக்கின்றது, நிலத்தடி நீர் உயர்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி விவசாய

பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது, குடிப்பதற்கான நீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. இரண்டாம் திட்டப் பணிக்காக அம்மாவினுடைய அரசு இந்த ஆண்டு 331 கோடி ரூபாய் ஏரிகளை ஆழப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்கு ஆங்காங்கே இருக்கின்ற ஓடைகள், நதிகள் குறுக்கே தடுப்பணைகள் கட்டி, அதன் மூ லமாக பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் அங்கேயே தேக்கவைக்கப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் மற்றும் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக மூன்றாண்டு திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, முதல் கட்டமாக அந்தப் பணியை துவங்க இருக்கின்றோம். நீர் மேலாண்மை மிக முக்கியம், ஏனென்றால் மழை குறைவாக பெய்கின்றது, பெய்கின்ற மழைநீரை சரியான முறையில் தேக்கி வைத்து நிலத்தடி நீரை உயர்த்துவது அரசின் கடமை. அதற்காக அம்மாவினுடைய அரசு முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று குறிப்பிட்டீர்கள். ஆகவே, உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக இன்றைக்கு உங்களுடைய பகுதியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை இன்றைக்கு திறந்து வைத்திருக்கின்றோம். இதனால், சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற சுமார் 20,000 பொதுமக்கள் பயன்பெறுவார்கள். உழைக்கின்ற மக்கள் வெகுதூரம் சென்று சிகிச்சை செய்யமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றதையெல்லாம் கருத்தில் கொண்டு உங்கள் பகுதியிலேயே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்குகின்றபொழுது, அருகாமையில் இருக்கின்ற சமுத்திரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து பரிசோதனை செய்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் அதிக அளவில் ஆரம்ப சுகாதார

நிலையங்கள் துவங்கப்பட்டிருக்கின்றது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு முறையான சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை கிராமப்புறத்திலே துவக்கி அதன் மூலமாக ஏழை மக்களுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அங்கே இருக்கின்ற மக்கள், இந்த சொசைட்டிக்கு பின்னாலே நிலம் இருக்கிறது, அங்கேயே ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறீர்கள், அதுவும் நிறைவேற்றித் தரப்படும். இங்கே ஒரு ஏக்கர் நிலம் எடுத்து, கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருமையான சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்து, உங்களுடைய தேவைகளை அம்மாவினுடைய அரசு பூர்த்தி செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை அம்மாவினுடைய அரசு அறிவித்து வருகின்றது. நம்முடைய

தொகுதியை பொறுத்தவரைக்கும், விவசாயம், விசைத்தறி, கைத்தறி இந்த மூன்றுதான் பிரதான தொழிலாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்தபொழுதே, விசைத்தறிக்கும், கைத்தறிக்கும் மானிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்தியாவிலேயே எந்தவொரு மாநிலத்திலும் மானிய விலையில் விலையில்லா மின்சாரம் கொடுக்கின்ற மாநிலம் கிடையாது. தமிழகத்தில்தான் விசைத்தறி மற்றும் தொழிலாளர்களுக்கும், உரிமையாளர்களுக்கும் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக தந்து கொண்டிருக்கின்றோம். வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இதுபோன்ற திட்டத்தை அமல்படுத்தவில்லை. ஏழை, எளிய மக்களுடைய நிலையை புரிந்துகொண்டு, அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து, அந்த தேவையை பூர்த்தி செய்து, அவர்களை வாழவைக்கும் அரசு அம்மாவினுடைய அரசு.

அம்மாவினுடைய அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி, மக்களுக்கு தேவையான நலன்களை செய்துகொண்டிருக்கின்றது. இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் பெண்களுக்கான திருமண உதவித் திட்டம், இன்றைக்கு ரூபாய் 25 ஆயிரம், ரூபாய் 50 ஆயிரம், 1 பவுன் தங்கம் அம்மாவினுடைய அரசு தந்து கொண்டிருக்கின்றது. கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ரூபாய் 6 ஆயிரம் கொடுக்கப்பட்டதை, அம்மா அவர்கள் ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தி, பின்னர் அதை ரூபாய் 18 ஆயிரமாக உயர்த்தி, அதில் ரூபாய் 4 ஆயிரத்திற்கு 16 வகையான பொருட்களை உள்ளடக்கி அம்மா தாய், சேய் நலப் பெட்டகம் என்று ஏழை தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளுக்காக இரண்டு உறை, 12வது வாரம், 16வது வாரத்தில் கொடுக்கின்றோம். குழந்தைகள் பிறக்கும்பொழுது எல்லாவிதத்திலும் சரியாக இருக்கின்றது, ஆனால் எடையில் மட்டும் குறைபாடு இருக்கின்றது, அந்த குறைபாட்டையும் தீர்க்க வேண்டுமென்பதற்காக 12வது, 16வது வாரத்தில் சத்தான பொருட்கள் கொடுப்பதற்காக, 16 வகையான பொருட்களை உள்ளடக்கி அம்மா தாய், சேய் நலப் பெட்டகம் என்று பெயரிட்டு ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து வழங்கவிருக்கின்றோம். குழந்தைகள் பிறக்கும்பொழுதே நல்ல எடையுடன் பிறந்தால்தான் நோய்நொடியில்லாமல் இருக்க முடியும். ஏழைத் தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் 16 வகையான பொருட்களை உள்ளடக்கியஇந்தபரிசுபெட்டகத்தைபெறுகின்றது,இந்தியாவிலேயே இந்த திட்டம் எங்கேயும் கிடையாது, அம்மாவினுடைய அரசு தான் வழங்குகின்றது.

அம்மாவினுடைய ஆட்சியில் தான் நிறைய திட்டங்களை கொடுத்திருக்கின்றோம். விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கி விவசாய பெருங்குடி மக்களுக்கு பல்வேறு நன்மைகளை செய்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி நான் இந்த சமுத்திரத்திற்கு முதலமைச்சராக வந்து, ஆரம்ப சுகாதார

நிலையத்தை திறப்பதற்குண்டான ஒரு பாக்கியத்தை நீங்கள் எனக்கு தந்திருக்கின்றீர்கள்.

நான் 1989இல் சேவல் சின்னத்தில் போட்டியிட்டபோது நல் ஆதரவை கொடுத்து சட்டமன்ற உறுப்பினராக எனக்கு ஒரு முகவரியை தந்தீர்கள். அதற்குப் பிறகு 1991இல் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன். நாடாளுமன்ற உறுப்பினர் ஆனேன். அதற்குப் பிறகு 2011இல் உங்களுடைய மகத்தான ஆதரவினால் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தலைமையில் இருந்த அமைச்சரவையிலே நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தேன். நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக 2011இல் நான் அமைச்சராக வந்தேன். நான் சிறப்பான முறையிலே பணியாற்றியதன் காரணமாக 2014இல் கூடுதலாக பொதுப்பணித்துறை கொடுத்து, அம்மா அமைச்சரவையிலே என்னை இடம்பெறச் செய்தார். மாண்புமிகு அம்மாவின் மறைவிற்குப் பிறகு, அனைத்து பொதுமக்களுடைய நல் ஆதரவு, சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய நல் ஆதரவு, கழக அனைத்து முக்கிய நிருவாகிகளுடைய பேராதரவோடு இன்றைக்கு தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்று, இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றோம். எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர், இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பெருமை அனைத்தும் உங்களையே சாரும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். ஏனென்றால், 234 தொகுதிகள் இருக்கின்றன, 234 தொகுதியில் எடப்பாடி தொகுதிக்கு முதலமைச்சர் பொறுப்பு கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது உங்களால் கிடைத்திருக்கின்றது, அந்தப் பெருமை முழுவதும் உங்களையே சாரும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் தேவையான உதவிகளை அம்மாவினுடைய அரசு

கவனமாக இருந்து செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் எம்.எல்.ஏ.வாக இருக்கும்பொழுது அடிக்கடி வரமுடியும், அமைச்சராக இருக்கும்பொழுது கிட்டத்தட்ட இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இருந்தேன். இப்பொழுது 234 தொகுதிக்கும் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி வரமுடியவில்லை, அதுதான் ஒரு குறை, வேறு எந்த குறையும் கிடையாது. முதலமைச்சருக்கு நாள்தோறும் பல்வேறு பணிகள் இருக்கின்றன. 234 தொகுதியில் இருக்கின்ற பொது மக்களுக்கு தேவையான திட்டங்களை கொடுப்பது, அங்கு இருக்கின்ற பிரச்சினையை தீர்க்கக்கூடிய ஒரு நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி வரமுடியவில்லை, இருந்தாலும் நீங்கள் கொடுக்கின்ற மனு முழுவதும் கம்ப்யூட்டரில் பதிவு செய்து, இங்கே இருக்கின்ற கழக நிருவாகிகளை அவ்வப்போது அழைத்து பேசி அதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து இன்றைக்கு உருவாக்கி தந்து கொண்டிருக்கின்றோம். ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று தேர்தல் நேரத்திலே கேட்டீர்கள். அது இப்பொழுது திறந்து வைக்கப்பட்டு விட்டது. ஆகவே, ஒவ்வொரு திட்டமாக உங்களுக்கு வழங்குவேன். என்றென்றைக்கும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்கு துணை நிற்கவேண்டும். உங்களோடு ஒருவனாக நான் எப்பொழுதும் இருப்பேன், முதலமைச்சர் என்ற நிலை கிடையாது, உங்களால் எனக்குக் கிடைத்த பெருமை இந்த முதலமைச்சர் பதவி என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, நீங்கள் எப்பொழுதும் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசிற்கு நல் ஆதரவு நல்க வேண்டும். இங்கே பெரும்பாலானோரை நேரடியாக எனக்குத் தெரியும். பல ஆண்டுகாலம் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றி, இந்தப் பகுதி முழுவதையும் நன்கு அறிந்தவன். எந்த பகுதியில் என்ன ஊர் என்று தெரியும், எல்லா சாலைகளும் தெரியும், எந்தெந்த பகுதியில் என்னென்ன பிரச்சினைகள் என்பது நன்றாகத் தெரியும். அதெல்லாம் யார் சொன்னாலும், சொல்லாவிட்டாலும்

நான் செய்து கொண்டே இருப்பேன். அத்தனையையும் நீங்கள் கொடுக்கின்ற அத்தனை மனுக்களையும் கம்ப்யூட்டரில் பதிவு செய்திருக்கிறேன். அவ்வப்போது தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, என்றென்றைக்கும் உங்களோடு நான் இருப்பேன், உங்களுடைய தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்வேன் என்பதைச் சொல்லி, மாண்புமிகு அம்மாவினுடைய கனவை நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டி, சிறப்பான வரவேற்பு நல்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்ற பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், கழக முன்னோடி நிருவாகிகளுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
27.03.2018 அன்று சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வட்டாரம், சமுத்திரத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை.

**நற்சிந்தனையும் தன்னம்பிக்கையும்
உங்கள் வாழ்வை உயர்த்தும்!
நம்பிக்கையுடன் செயல்பட்டால்
உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம்!**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய 70ஆவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, கழக புரட்சித்தலைவி அம்மா பேரவையின் சார்பாக ஏழை, எளிய குடும்பகளைச் சேர்ந்த 120 ஜோடிகளுக்கு 70 சீர்வரிசை பொருட்களுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திருமண விழா நிகழ்ச்சியில் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற கழக புரட்சித் தலைவி அம்மா பேரவைச்

செயலாளர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சகோதரர் ஆர்.பி.உதயகுமார் அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே மணமக்களை வாழ்த்தி, அற்புதமான கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற கழகத்தின் ஒருங்கிணைப்பாளர், கழக பொருளாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற கழக துணை ஒருங்கிணைப்பாளர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முன்னாள் அமைச்சர் அண்ணன் கே.பி.முனுசாமி அவர்களே,

நிகழ்ச்சியிலே வரவேற்புரையாற்றிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மதுரை புறநகர் மாவட்டக் கழக செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு.இராஜன் செல்லப்பா அவர்களே, நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பான கருத்தை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற மாநகர் மாவட்டக் கழகத்தின் செயலாளர் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் செல்லூர் கே.ராஜூ அவர்களே மற்றும் இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைக் கழகத்தினுடைய நிருவாகிகளே, வருகை தந்திருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்களே, வாரியத் தலைவர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்களே,

வருகை தந்து மணமக்களை வாழ்த்திக் கொண்டிருக்கின்ற புறநகர், மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தினுடைய மாவட்ட நிருவாகிகளே, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் அனைத்து மட்டத்திலிருக்கின்ற கழக முன்னோடி நிருவாகிகளே, சார்பு

அணியைச் சேர்ந்த அனைத்து நிருவாகிகளே, இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு அம்மா திருநாமத்தின் பேரிலே அமைந்துள்ள பேரவையினுடைய அனைத்து மாவட்ட செயலாளர்களே, வருகை தந்திருக்கின்ற கழக நிருவாகிகளே, மேடையிலே மணவிழா கண்டுள்ள மணமக்களே, மணமக்களின் பெற்றோர்களே, உற்றார் உறவினர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, கழக உடன்பிறப்புகளே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்து இந்த மங்கல திருநாளில் மலர்ந்த முகத்தோடு இங்கே வீற்றிருக்கின்ற உங்கள் அனைவரையும் காண்பதிலும், உங்கள் முன் உரையாற்றுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எந்த அரசியல் இயக்கமும் கடைபிடிக்காத அளவிற்கு குடும்பப் பாசத்துடன் கட்சியை காப்பாற்றியவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி எம்.ஜி.ஆர் அவர்கள். அவர் வழியிலே நமது மாண்புமிகு அம்மா அவர்களும் இந்த இயக்கத்தை ஒரு பாசமிகு குடும்பத் தலைவராக, இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களை பாசத்துடனும், நேசத்துடனும் தொடர்ந்து கட்டிக்காத்து வந்தார். அப்பெரும் இயக்கத்தை இன்று நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து காத்து வருகின்றோம். இன்றையதினம், இவ்விழாவில் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எங்கோ பிறந்த ஆணும், எங்கோ பிறந்த பெண்ணும் இல்லறத்தின் மூலம் வாழ்க்கையில் இணைந்து, ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்து, அதன்மூலம் நல்லறம் கண்டு வாழ்வாங்கு வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும். எனவே, சிறந்த வாழ்க்கை வாழ்வது மணமக்களாகிய உங்கள் இருவரின் கைகளில்தான் உள்ளது. ஆண் ஒருவருக்கு அளிக்கப்படும் உதவியானது அவருடன் நின்றுவிடும். ஆனால் ஒரு பெண்ணுக்கு வழங்கப்படும் உதவியானது அந்த குடும்பத்தையே காக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள்

சொல்வார்கள். அதன் அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களுக்கான பல்வேறு சிறப்புத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தினார்கள்.

திருமண நிதி உதவிதி திட்டத்தின் மூலமாக ரூபாய் 25 ஆயிரம், ரூபாய் 50 ஆயிரம் மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு ரூபாய் 72 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக மதுரை மாவட்டத்தில் இதுவரை ரூபாய் 58 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 217.616 கிலோ தங்கமும் ரூபாய் 177 கோடியே 66 இலட்சம் நிதி உதவியும், 49,754 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது, இது ஒரு சரித்திர சாதனை. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழைக் குடும்பத்தினர் மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் 9,23,783 குடும்பங்களில் விளக்கேற்றியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் நிதி உதவியை ரூபாய் 6 ஆயிரத்திலிருந்து ரூபாய் 12 ஆயிரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் முதலில் உயர்த்தினார்கள். பிறகு, மகளிரின் நலம் பேணும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் இந்த நிதி உதவியை 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்த ஆணையிட்டது. இதில் 4 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 12வது வாரம் ஒரு முறையும், 16வது வாரம் ஒரு முறையும் என இரண்டு முறை 'அம்மா தாய்சேய் நல ஊட்டச் சத்து பெட்டகம்' வழங்கப்பட உள்ளது.

நல்ல ஆரோக்கியமான குழந்தை பிறந்திட, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் இரத்த சோகையை போக்கவும், பிறக்கும் குழந்தைகளின் எடையை உயர்த்தவும், இரும்புச்சத்து டானிக் மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய 'அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம்' விரைவில் வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தினால், தமிழ்நாடு முழுவதும் 46 இலட்சத்து 61 ஆயிரம் கர்ப்பிணி தாய்மார்கள் பயன்பெறுவார்கள். அம்மா மகப்பேறு சஞ்சீவி கிட், பிறந்த குழந்தைகளுக்கு 16 பொருட்கள் அடங்கிய "அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்", கர்ப்பிணி தாய்மார்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு இலவச 108 ஆம்புலன்ஸ் வாகனம், பெண்களுக்கான உயர்கல்வி திட்டத்தின்படி அரசு சேவை இல்லங்களில் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த பெண் குழந்தைகள் தொழிற்கல்வி பயின்றிட 50,000 ரூபாய் மற்றும் பட்டப்படிப்பு/பட்டயம் படித்திட 30,000 என்ற நிதி உதவி அரசால் வழங்கப்படுகின்றது.

கிராமங்கள் மற்றும் நகரங்களில் பெண்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அம்மாவினுடைய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களின் பொருளாதார நிலையை தாங்களே உயர்த்திக் கொள்ளும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மதுரை மாவட்டத்தில் 9,055 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மகளிர் தொழில் முனைவோருக்கான பிரத்யேக தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி பதவிகளில் மகளிருக்கென 50 சதவிகித இட ஒதுக்கீடு அம்மாவினுடைய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புற பெண்களில் வாழ்வியல் முன்னேற்றத்திற்காக விலையில்லா கறவைப் பசு, வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

வீட்டில் பெண்கள் பணி சுமையைக் குறைக்கும், விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டத்தை

மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்டு, நாடே பாராட்டுகின்ற வகையில் அந்தத் திட்டத்தை வெற்றி பெறச் செய்தார்கள்.

அம்மா மகளிர் இருசக்கர வாகனத் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் 3 இலட்சத்து 36 ஆயிரம் நபர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். மதுரை மாவட்டத்தில் 2017–18ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 328 மகளிருக்கு 10 கோடியே 82 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட உள்ளது.

இன்று திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு சில கருத்துகளை நான் மீண்டும் தெரிவிக்கவிரும்புகிறேன்.

இல்லற வாழ்வை தொடங்கும் நீங்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு வாழ வேண்டும். மாறான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டாம். வாழ்க்கையில் வெற்றி பெற நற்சிந்தனையோடு இருவரும் உழைத்து மேன்மை அடைய வேண்டும். வீண் சஞ்சலத்திற்கு ஆளாகி மகிழ்ச்சியான நேரங்களில் கூட கவலை கொண்டு, வாழ்வை வீணடிக்காமல், துணிச்சலுடன் செயல்பட்டால், வாழ்வில் வெற்றி நிச்சயம்.

இதைச் சொல்லும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஞானியை கண்ட ஒரு சுண்டெலி அவரிடத்தில் எனக்கு பூனையைக் கண்டால் பயமாக இருக்கிறது. என்னை பூனையாக மாற்றிவிட்டால் உங்களுக்கு புண்ணியம் உண்டு என்றது. ஞானியும் எலியை பூனையாக மாற்றினார். மீண்டும் அப்பூனை ஞானியிடம் வந்தது என்னை எப்பொழுதும் நாய் துரத்துகிறது. என்னை நாயாக மாற்றி விட்டால் நன்றாக இருக்கும் என்றது. ஞானி அப்பூனையை நாயாக மாற்றினார். சில காலம் கழித்து அந்த நாய் ஞானியிடம் எனக்கு புலியினால் ஆபத்து வருகிறது. எனவே என்னை புலியாக

மாற்றுங்கள் என்றது. ஞானியும் அந்த நாயை புலியாக மாற்றினார். மீண்டும் அந்த புலி ஞானியிடம் வந்து, எனக்கு மனிதர்களால் ஆபத்து ஏற்படுவதால் என்னை மனிதனாக மாற்றுங்கள் என்றது. உடன் இடைமறித்த ஞானி, “சுண்டெலியே உன்னை நான் எதுவாக மாற்றினாலும் உன் பயம் உன்னை விட்டுப் போகாது. உருவம் மாறினாலும், எப்பொழுதும் உள்ளத்தால் நீ சுண்டெலிதான். எனவே, நீ சுண்டெலியாக இருக்கத்தான் லாயக்கு” என்று கூறி சென்று விட்டார்.

ஆக உள்ளத்தில் தன்னம்பிக்கையும், உயர்ந்த எண்ணமும், அதற்கான அச்சமற்ற தன்மையும் இல்லாதவர் எதையும் அடையவோ, சாதிக்கவோ முடியாது. உங்களைப் பற்றி நீங்கள் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படித்தான் ஆவீர்கள்.தாழ்வுமனப்பான்மையை விலக்கிவிட்டு துணிச்சலுடன் செயல்பட்டால் உங்களால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. நற்சிந்தனை, தன்னம்பிக்கை ஆகியவை உங்கள் வாழ்வை வானளவிற்கு உயர்த்தும். நம்பிக்கையுடன் நீங்கள் செயல்பட்டால், உங்கள் வாழ்வில் வெற்றி நிச்சயம்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மதுரை மாவட்டத்திலே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததின் மூலமாக இந்த மாவட்டத்திலே பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்தியிருக்கின்றது.

மதுரையில் முதன்முறையாக போக்குவரத்து நெரிசலை குறைக்கும்பொருட்டு, காலவாசல் சந்திப்பில் ரூபாய் 54 கோடி மதிப்பீட்டில் பறக்கும் பாலம் அமைக்கும் பணிக்கு என்னால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பரவை–கோரிப்பாளையம் இடையே வைகையாற்றின் குறுக்கே ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் விரைவில் கட்டப்படும். ரூபாய் 51 கோடி மதிப்பீட்டில், மதுரை, அழகர்கோவில் சாலையை 4 வழிச்சாலையாகவும், வைகை வடகரையில் குருவிக்காரன்

சாலையிலிருந்து அண்ணாநகர் சாலை வரை பாலம் அமைக்கும் பணி என்னால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் விரையில் துவங்கப்படவுள்ளது. திப்பம்பட்டி முதல் நகரி வரை 31 கி.மீ. நீளம் உள்வட்டச் சுற்றுச்சாலை அமைப்பது, பழங்காநத்தத்தில் 6 வழித்தட இரயில்வே மேம்பாலமும், திருமங்கம் அருகில் குண்டாறு– சௌண்டாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கும் மற்றும் மதுரையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும்பொருட்டு, கோரிப்பாளையம் மற்றும் பெரியார் பேருந்து நிலையம் முதல் யானைக்கால் வரை உயர்மட்ட பறக்கும் பாலம் அமைக்க, மேற்படி திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, உத்தங்குடி முதல் கப்பலூர் வரை 27.2 கி.மீ. நீளமுள்ள மதுரை சுற்றுச்சாலை 2 வழிச்சாலையிலிருந்து 4 வழிச்சாலையாக அகலப்படுத்தி தரம்உயர்த்தும் பணி ரூபாய் 214 கோடி மதிப்பீட்டில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

அதோடு, இங்கே, Airportஇல் இருப்பது போல, அனைத்து வசதிகளையும் கொண்ட, நவீன பேருந்து நிலையம் Busport உடனடியாக, விரைவாக துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் இடம் பற்றாக்குறை இருப்பதாக ஏற்கெனவே சுட்டிக்காட்டி, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, அதற்கு கூடுதல் கட்டடம் கட்டப்படும் என்ற அறிவிப்பைத் தந்து அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இப்பொழுது ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நீங்கள் வைத்த கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக கூடுதல் கட்டடம் கட்டித்தரப்படும்.

இந்த மதுரை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுமார் ரூபாய் 1,350 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா இந்த மதுரையிலேதான் துவக்கப்பட்டுள்ளது. இந்த இராசியான இடத்தில் எதைத் தொடங்கினாலும் அது இராசியாக நல்லபடியாக நடக்கும்.

இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1986இல் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார். அப்பொழுதே காவேரி மேலாண்மை வாரியம், காவேரி முறைப்படுத்தும் குழு அமைக்கவேண்டுமென்று கடிதத்தின் மூலமாக கேட்டிருக்கின்றார். அதன் தொடர்ச்சியாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, தமிழக மக்களின் உணர்வை, தமிழக டெல்டா பாசன விவசாயிகளின் உணர்வை வெளிக்கொண்டு வரும் விதமாக சட்டப்பூர்வமான நடவடிக்கையை எடுத்தார்கள். அதன் மூலமாக மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டது. 2007இல் நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு வந்தது. அப்பொழுது மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, மத்தியிலும் காங்கிரஸ் ஆட்சியின் கூட்டணியில் இடம்பெற்றிருந்தார்கள். அப்பொழுதே இந்த நடுவர்மன்ற தீர்ப்பை வெளியிட்டிருக்கலாம். அப்பொழுதெல்லாம் அவர்கள் மக்களைப் பற்றியும், விவசாயிகளைப் பற்றியும் சிந்திக்கவில்லை. அவர்கள் சிந்தித்ததெல்லாம் குடும்பத்தைப் பற்றி தான். எந்த இலாக்காவைப் பெற வேண்டும், மத்தியிலே என்ன அதிகாரம் பெறவேண்டும் என்று தான் நினைத்தார்களே ஒழிய தமிழக மக்களை நினைக்கவில்லை. ஆனால் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, நடுவர்மன்ற தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். ஆனால், மத்தியில் இருந்தவர்கள் செவிசாய்க்கவில்லை. அம்மா அவர்கள் சட்டப்போராட்டம் நடத்தி அதிலே வெற்றிகண்டு விவசாயிகளின் உரிமையைப் பெற்றுத்

தந்தவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆனால், இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நம்மைப் பார்த்துக் கேட்கின்றார்கள், அனைத்திந்திய அண்ணா முன்னேற்றக் கழகம் மத்தியில் அழுத்தம் கொடுக்கவில்லையென்று. நாடாளுமன்றக் கூட்டம் எப்பொழுது ஆரம்பித்ததோ அது முடிகின்ற வரை சுமார் 17 நாட்கள் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நம்முடைய தமிழக மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கின்றவிதமாக, டெல்டா பாசன விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை பெற்றுத் தருவதற்காக உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை 6 வாரகாலத்திற்குள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து குரல் கொடுத்தார்கள், 17 நாட்கள் நாடாளுமன்றம் முடங்கியது. ஒரு மாநில பிரச்சினைக்காக 17 நாட்கள் நாடாளுமன்றம் முடங்கிய வரலாற்றை நாம் படைத்திருக்கின்றோம். எந்தளவிற்கு அழுத்தம் கொடுத்திருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். உச்சநீதிமன்ற தீர்ப்பை மத்திய அரசு நடைமுறைப்படுத்தவில்லை, இருந்தாலும், நாம் சட்டப்பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்வோம். நிச்சயமாக, உறுதியாக அம்மாவினுடைய அரசு உணர்வுப்பூர்வமான நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது. உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை மத்திய அரசு நிறைவேற்றவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றோம். ஆகவேதான், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 2ஆம் தேதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறவழியிலே உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்ற அறிவிப்பை இந்த மணவிழாவில் தெரிவித்திருக்கின்றார்கள். காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை அந்த அறவழி உண்ணாவிரத போராட்டம் நடக்கும். நம்முடைய ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய, விவசாயிகளினுடைய உணர்வை வெளிப்படுத்துவோம் என்று தெரிவித்து புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னனென்ன திட்டங்கள் கொண்டு வந்தார்களோ அந்தத் திட்டங்களை எல்லாம்

அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. சிலபேர் அதை புரிந்துகொள்ளாமல் காலி இடத்தை நிரப்பப்போகிறோம் என்று புறப்பட்டுவிட்டார்கள். எங்கே காலியிடம் இருக்கின்றது. எல்லாம் முழுவதுமாக இருக்கின்றது. வேறு மாநிலத்தில் வேண்டுமானால் சென்று பார்க்கலாம். தமிழ்நாட்டில் இடம் கிடையாது.

நான் 1974இல் கழகத்தில் இணைந்தேன். என்னுடைய சிற்றூரிலே துணை கழகச் செயலாளராக என்னுடைய பணியை துவங்கினேன். படிப்படியாக உயர்ந்து இந்த நிலைக்கு வந்திருக்கின்றேன். ஒன்றரை கோடி தொண்டர்களை கொண்ட, இளைஞர்கள் அதிகம் உள்ள ஒரே இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

அண்மையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மாநாடு நடத்தினார்கள். இங்கே வந்த கூட்டம்கூட கிடையாது. இங்கே, எங்கே பார்த்தாலும் மக்கள் தலைகளை காணமுடிகிறது. கடல்போல் மக்கள் கூட்டம் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. அந்தளவிற்கு மக்கள் குழுமி இந்த மணமக்களை வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே அவர்களுடைய பிறந்தநாள் வருகின்றபொழுது, ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குங்கள், அதுதான் எனக்குப் பெருமை என்ற கோரிக்கையை எங்களிடத்தில் குறிப்பிட்டார்கள். அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அம்மா அவர்கள் இருந்த காலத்திலே, என்னென்ன நடைமுறைகளை பின்பற்றினோமோ அதையே பின்பற்றி நடந்து கொண்டிருக்கின்றோம்.

இந்த மணவிழாவிற்கு வந்திருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களும், இந்த மணமக்கள் பல்லாண்டு வாழவேண்டும், உங்களுடைய இல்வாழ்க்கையில் சிறப்பாக

வாழவேண்டுமென்பதற்காக இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்று திருமணம் செய்துள்ள மணமக்கள், கல்வி, புகழ், வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பொறுமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்ற 16 செல்வங்களையும் பெற்று, வாழ்வாங்கு வாழ, நீடுழி வாழ, எல்லா வளங்களும் பெற்று வாழவேண்டுமென்று இத்தருணத்திலே வாழ்த்தி, அனைத்து இன்ப துன்பங்களிலும் ஒருங்கிணைந்து, பெற்றோர், சுற்றத்தார் நல்லறம் காத்து நாடும், வீடும் சிறக்க பல்லாண்டு வாழ்க! வாழ்க! என உங்களோடு நானும் சேர்த்து வாழ்த்தி, இந்த விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் அதோடு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மிகச்சிறப்பாக, எழுச்சியாக அனைத்து மாவட்டங்களுக்கும் முன் மாதிரியாக இந்த திருமணத்தை நடத்தி வைத்த அருமைச் சதோதரர் உதயகுமார் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து, அவரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து அம்மா பேரவை மாவட்டச் செயலாளர்களுக்கும், அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
30.03.2018 அன்று மதுரையில், 120 ஜோடிகளுக்கு நடைபெற்ற
திருமண விழாவில் ஆற்றிய உரை.

நம்முடைய தமிழக மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து, மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்தது அம்மாவினுடைய அரசு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

அறவழி உண்ணாவிரதப் போராட்ட நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றிய முன்னாள் அமைச்சர், மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய கழகத்தினுடைய அவைத்தலைவர் அண்ணன் திரு.மதுசூதனன் அவர்களே,

எனக்கு பின்னாலே சிறப்பான கருத்துக்களை உங்களிடத்திலே ஆற்ற வருகைபுரிந்து, காலையில் 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை தொடர்ந்து என்னோடு அறவழி உண்ணாவிரதப்

போராட்டத்திலே கலந்துகொண்டு நம்முடைய உரிமைகளை பெறுவதற்காக, நம்முடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக வருகை தந்து சிறப்புரை ஆற்ற இருக்கின்ற கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர், கழக பொருளாளர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே,

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கழக அமைப்புச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் திரு.ஜெயகுமார் அவர்களே, கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி கோகுல இந்திரா அவர்களே, தோழமை கட்சியினுடைய இந்திய தேசிய தலைவர் திரு.ஜவஹர் அலி அவர்களே, மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் திரு. பாலகங்கா அவர்களே, மாவட்டக் கழகச் செயலாளர் தி.நகர் திரு.வி.சத்யா அவர்களே, மாவட்டக் கழகச் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வி.என்.ரவி அவர்களே, மாவட்டக் கழகச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வெங்கடேஷ்பாபு அவர்களே, மாவட்டக் கழகச் செயலாளர் திரு.ஆர்.எஸ்.ராஜேஷ் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர் திரு.நடராஜ் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்களே, தலைமைக் கழகத்தினுடைய பேச்சாளர்களே, செய்தித் தொடர்பாளர்களே, மாவட்டக் கழகத்தினுடைய நிருவாகிகளே, வட்ட கழகச் செயலாளர்களே, மகளிர் அணியைச் சேர்ந்த சகோதரிகளே, வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே, கழக உடன்பிறப்புக்களே, மேடையிலே வீற்றிருக்கின்ற கழகத்தினுடைய அத்தனை முக்கிய நிருவாகிகளே, அத்தனை பேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்து,

காலை 8.00 மணிக்கு இந்த உண்ணாவிரத போராட்டத்தை நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களும், அவர்களோடு இணைந்து மாவட்டச் செயலாளர், அவைத்தலைவர், அமைச்சர், தலைமைக் கழக நிர்வாகிகள் அத்தனை பேரும் காலையிலிருந்து இப்பொழுது 5.00 மணி வரை இடத்தை விட்டே நகராமல் அமர்ந்து கொண்டிருக்கின்றோம், அத்தனை ஊடக நண்பர்களும் பார்த்தீர்கள். அதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். ஒன்றை சாதிக்க வேண்டுமென்று சொன்னால், அதைச் சாதிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம்.

இன்றையதினம், மிகப்பெரிய ஒரு சோதனையில் நாம் இருக்கின்றோம். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய காலத்திலே துவங்கி, நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றவரை இந்தக் காவேரி நீர் பிரச்சினை, ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருந்தது. இந்தப் பிரச்சினையினுடைய வரலாறைப் பற்றி மேடையிலே பேசியவர்கள் அழகாகக் சொன்னார்கள், நானும் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

காவேரி நதிநீர் பிரச்சினை, காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சினையாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வோடு பின்னிப் பிணைந்திருக்கின்றது. மதராஸ் மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையை தெளிவாக்குகின்றன. ஆகவே, இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவேண்டிய காலம் 50 ஆண்டுகளுக்குப் பிறகு. 50 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கின்றபொழுது, 1974ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தை புதுப்பித்திருக்க வேண்டும். அப்பொழுது ஆட்சியில் யார் இருந்தார்கள் என்பது எனக்கு முன்னாலே இருக்கின்ற ஊடக நண்பர்களுக்கும்,

பத்திரிகையாளர்களுக்கும் தெரியும், வருகை தந்திருக்கின்ற அத்தனை பேருக்குமே தெரிந்திருக்கும், அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டை ஆண்டுகொண்டிருந்தது. அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களால் இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருந்தால், நாம் இத்தனை ஆண்டு காலம் போராட வேண்டிய அவசியமே இல்லை. விவசாயிகளுக்கு துரோகம் செய்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அந்த ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டிலே புதுப்பிக்கப்பட்டிருந்தால், இன்றைக்கு இந்த போராட்டத்திற்கு அவசியமே ஏற்பட்டிருக்காது. ஆனால் 1974இல் எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல, சர்க்காரியா கமிஷனுக்கு பயந்து இந்த ஒப்பந்தத்தை புதுப்பிக்காமல், விவசாயிகளுக்கு துரோகம் செய்த அரசு அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆண்ட முதலமைச்சர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, முதல் துரோகம் செய்தது அன்று.

அதற்குப் பிறகு 1991இல் நடுவர் மன்றம் இடைக்கால ஆணை பிறப்பித்தது. இதில் மேட்டூர் அணைக்கு ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. அடி நீர், புதுச்சேரி உட்பட 6 டி.எம்.சி உட்பட உறுதி செய்யப்பட்டு 10.12.1991இல் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. காவிரியினுடைய மொத்த நீர்வளம் 740 டி.எம்.சி. அடி நீர். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி. கருநாடாகாவிற்கு 275 டி.எம்.சி. கேரளாவிற்கு 30 டி.எம்.சி., புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. தவிர்க்க முடியாத உபரிநீர் 4 டி.எம்.சி. எனவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக 10 டி.எம்.சி அடி நீர் எனவும் கிட்டத்தட்ட 740 டி.எம்.சி.யை பிரித்து அப்பொழுது நடுவர்மன்றம் தீர்ப்பு வழங்கியது. மேற்காணும் 419 டி.எம்.சி அடி நீரில், தமிழ்நாட்டின்

எல்லைக்குட்பட்ட காவேரி ஆற்றின் வடிநிலப் பரப்பிலிருந்து கிடைக்கக்கூடியது 227 டி.எம்.சி. அடி நீர் போக, கருநாடக எல்லைக்குட்பட்ட பரப்பில் கிடைக்கும் நீரின் அளவு 192 டி.எம்.சி. நீரை பில்லிகுண்டு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்று நடுவர் மன்ற இறுதி ஆணை பிறப்பித்தது. நமக்கு பில்லிகுண்டு 192 டி.எம்.சி தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று நடுவர்மன்றம் பிறப்பித்த உத்தரவு. இந்த இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்திட மாநிலத்திற்குரிய பங்குநீரை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க காவிரி நடுவர் மன்றம் பரிந்துரை செய்தது. அப்பொழுது இந்த நடுவர்மன்றம் பரிந்துரை செய்ததை 05.02.2007இல் இடைக்கால தீர்ப்பு வந்தது, அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் நடைபெற்றது. அப்பொழுது ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழக தலைவர் 19.02.2007இல் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அன்றைய முதலமைச்சர் இன்றைய திராவிட முன்னேற்றக் கழக தலைவர் கூட்டினார். அப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அம்மா அவர்கள் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களை அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கு பெற செய்தார்கள். அப்பொழுது இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தெரிவித்த கருத்தை அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள், முதலில், மத்திய அரசிதழில் வெளியிடச் செய்யுங்கள், காவேரி மேலாண்மை வாரியத்தை அமையுங்கள், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமையுங்கள் அப்படியென்று தெளிவாக அந்தக் கூட்டத்தில் எடுத்துரைத்தார்கள். மத்தியிலே திராவிட முன்னேற்றக் கழக அங்கம் வகிக்கின்ற அரசு இருந்தது, மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது, மத்தியிலும் ஆட்சியில் இடம் பெற்றிருந்தார்கள், மாநிலத்திலும் திராவிட முன்னேற்றக் கழக

ஆட்சி இருந்தது. அப்பொழுதே நிறைவேற்றப்பட்டிருக்கலாம். ஆகவேதான், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தெள்ளத்தெளிவாகச் சொன்னார்கள், எந்த வழக்கு போடுவதாக இருந்தாலும் இதை அமைத்துவிட்டு, பிறகு வழக்கை தொடரலாம் என்று தெளிவாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அண்ணன் மூலமாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது, அதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தவில்லை. அதை பொருட்படுத்தாத காரணத்தினாலே, இன்றைக்கு இந்த நிலையை நாம் சந்தித்திருக்கின்றோம்.

அன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு, அதோடு மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது, அப்பொழுது அவர்கள் நினைத்திருந்தால் மத்திய அரசிதழிலே வெளியிட செய்திருக்கலாம், எல்லாம் செய்திருந்தால் விவசாயிகளின் பிரச்சினை தீர்ந்திருக்கும். அப்பொழுதும் விவசாயிகளுக்கு துரோகம் செய்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இரண்டு முறை தமிழகத்திற்கு வாய்ப்பு கிடைத்தபோதும், திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சியில் இருந்தது. அந்த இரண்டு முறையும் காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்கத் தவறியது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

அதற்குப்பிறகு, கருநாடக அரசு 23.04.2007இல் உச்சநீதி மன்றத்தில் நடுவர்மன்ற இறுதி ஆணையை ஏற்றுக்கொள்ள இயலாமல் ஒரு சில திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று ஒரு மனுவை போட்டார்கள். அதேபோல, கேரள அரசு 24.02.2004இல் உச்சநீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கைத் தொடர்ந்தார்கள். அதற்குப்பிறகு 05.05.2007இல் நாமும் ஒரு சிவில் வழக்கைத்

தொடர்ந்தோம். அந்த வழக்கையெல்லாம் ஒன்றாக இணைத்துதான் இப்பொழுது 16.02.2010இல் தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட திராவிட முன்னேற்றக் கழகம் தவறிவிட்டது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தியும், அன்றைய பிரதமரை நேரடியாக சென்று சந்தித்து கோரிக்கை வைத்தும், கடிதங்கள் மூலம் தெரிவித்தும், உடனடியாக நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை நீங்கள் மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மத்திய அரசாங்கம் அதைப் பொருட்படுத்தவில்லை. எனவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பினைப் பெற்று, அதனடிப்படையில், 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு உற்ற துணையாக இருந்து நடுவர்மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட எடுத்த முயற்சியின் காரணமாக, தஞ்சையிலுள்ள விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாய பெருங்குடி மக்கள் ஒரு மிகப்பெரிய, பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தை ஏற்படுத்தி அம்மா அவர்களை கௌரவப்படுத்தி, பாராட்டைத் தெரிவித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுகூற விரும்புகின்றேன்.

காவேரி நடுவர்மன்ற இறுதி ஆணை திறம்பட செயல்படுத்துவதற்காக, பரிந்துரைக்கப்பட்ட காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீரி முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசு காலம் தாழ்த்தியதால் சட்ட ரீதியான நடவடிக்கையும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டது. அதன்வாயிலாகத் தான் 16.02.2018 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் போட்ட வழக்கின் அடிப்படையிலே 16.02.2018 அன்று

உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது. அந்தத் தீர்ப்பிலே 6 வாரகாலத்திற்குள் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற ஒரு தீர்ப்பைச் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு அந்த 6 வாரத்திற்குள் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவேதான் அதைக் கண்டித்து இன்றைக்கு உண்ணாவிரதப் போராட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, உச்சநீதி மன்றத்தால் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, காவேரி நடுவர்மன்ற ஆணையினுடைய தீர்ப்பில் இரண்டு கருத்தைத்தான் மாறுதல் செய்திருக்கின்றார்கள். பெங்களூரு கொடுக்கின்ற தண்ணீர் 4.7 மெட்ரிக் தண்ணீர். இன்னொன்று 10 டி.எம்.சி. குறைத்திருக்கின்றார்கள். ஆக, 14.7 டி.எம்.சி குறைத்து, 177.25 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டுமென்று தீர்ப்பிலே தெள்ளத்தெளிவாக சொல்லியிருக்கின்றார்கள். மீதியெல்லாம் ஏற்கனவே நடுவர்மன்றம் அளித்த ஆணையின்படி இருக்கவேண்டுமென்று அந்த தீர்ப்பிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டதை மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும், அதைத்தான் நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

இன்றையதினம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், எனக்கு முன்னாலே அவைத்தலைவர் சொன்னதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், நாம் அழுத்தம் கொடுக்காத காரணத்தினாலே அவர்கள் போராட்டம் செய்கின்றார்களாம். நாங்கள் எந்தளவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளோம் என்று நாட்டு மக்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் தெரியும். தொடர்ந்து நாடாளுமன்றம் துவங்கியதிலிருந்து இன்று வரை 19 நாள் நாடாளுமன்றம் முடங்குகின்ற அளவிற்கு, இரண்டு அவைகளிலும் காவேரி நதிநீர் பிரச்சினைக்காக, நம்முடைய

தமிழக மக்களின் உரிமைக்காக, குரல் கொடுத்து, மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்த கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்தநாளான **24.02.2018** அன்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் சென்னை வந்து, மரக்கன்று நடும் விழாவில் பங்கேற்று சிறப்பித்து, இருசக்கர வாகன திட்டத்தையும் துவக்கி வைத்த போது, உடனடியாக உச்சநீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்துங்கள் என்று அவரின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். அதுமட்டுமல்லாமல், **09.03.2018** அன்று புதுடெல்லி நீர்வளத்துறை அமைச்சகத்தால் கூட்டப்பட்ட கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டு காவேரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வலியுறுத்தப்பட்டது. அதோடு, மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு.நிதின்கட்கரி அவர்கள் சென்னைக்கு வந்தபொழுது உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை உடனடியாக நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்று கோரிக்கை மனுவாக நேரடியாக அவரிடத்தில் வணங்கினோம். அதுமட்டுமல்லாமல், **15.03.2018** அன்று சட்டப்பேரவையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரி மேலாண்மை வாரியத்தை அமைக்க தனி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அன்றே அனுப்பி வைக்கப்பட்டது. ஆகவே, இதையெல்லாம் தொடர்ந்து நாங்கள் செய்து, மத்திய அரசிற்கு அரசு சார்பாகவும், அரசியல் ரீதியாகவும் அழுத்தம் கொடுத்தோம். அதோடு, **27.03.2018** அன்று தமிழ்நாடு அரசின் உயரதிகாரிகள் புதுடெல்லி சென்று, காவேரி பிரச்சினை குறித்த வழக்கில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசித்ததின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் கொடுத்த **6** வார காலம் வரை காத்திருந்து பின்னர் தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கலாம் என முடிவெடுக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை மதித்து நாங்கள் 6 வார காலம் சட்டத்தினுடைய நியதிக்குக் கட்டுப்பட்டு நாங்கள் காத்திருந்தோம். இப்பிரச்சினையில், அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து **29.03.2018** அன்று மூத்த அமைச்சர்கள், தமிழ்நாடு அரசின் மாநில தலைமை வழக்கறிஞர், தலைமைச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகளுடன் நடத்திய கூட்டத்தில், உரிய காலத்திற்குள் காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைக்காவிடில், **31.03.2018** அன்று மத்திய அரசின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றினை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென முடிவு எடுக்கப்பட்டது. அவ்வாறே நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. **02.04.2018** அன்று, நேற்றையதினம், வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர்களால் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி **09.04.2018** அன்று வழக்கு விசாரணையை எடுத்துக் கொள்ள உறுதியளித்தார். அதற்குப் பிறகு, மத்திய அரசு வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கு உச்சநீதிமன்றத்திற்கு வருகின்றபொழுது, அந்த வழக்கை உச்சநீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று தமிழக அரசின் சார்பாக நம்முடைய வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள். இருந்தாலும், மத்திய அரசு தாக்கல் செய்த வழக்கையும், நாம் தாக்கல் செய்த வழக்கையும் ஒன்றாக இணைத்து விசாரிப்பதாக உச்சநீதி மன்றத்தால் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவேரி நீர் பிரச்சினைக்காக, நம்முடைய டெல்டா பாசன விவசாயிகளுக்கு உரிய பங்கு நீரை பெற்றுத் தருவதற்காக எந்தளவிற்கு போராட்டம் நடத்தினார்களோ, எந்தளவிற்கு சட்டப் போராட்டம் நடத்தினார்களோ, அதேயளவு அம்மாவினுடைய அரசும் எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக்

கடமைப்பட்டிருக்கின்றேன். அரசைப் பொறுத்தவரைக்கும் உரிய அழுத்தத்தை மத்திய அரசிற்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இன்றையதினம் நல்ல தீர்ப்பு நமக்குக் கிடைக்கவில்லை, இருந்தாலும், நிச்சயமாக உச்சநீதிமன்ற நீதிபதி உங்களுக்கு கிடைக்க வேண்டிய நீர் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற உறுதியை இன்றைக்கு உச்சநீதிமன்றத்திலே தெரிவித்திருக்கின்றார். ஆகவே, நிச்சயம் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

எப்பொழுது பார்த்தாலும், ஸ்டாலின், கபட நாடகம் ஆடுகிறோம் என்று சொல்லிக்கொண்டே இருக்கின்றார். யார் கபட நாடகம் ஆடுகின்றார்? 1974இல் கபட நாடகம் ஆடுவதற்கு கதாநாயகனாக இருந்ததே தி.மு.க. தான், நாங்கள் அல்ல. 1974இல் உண்மையிலேயே விவசாயிகள் மீது பற்று இருந்தால், தமிழ்நாட்டு மக்கள் மீது பற்று இருந்தால், அந்த ஒப்பந்தத்தை புதுப்பித்திருக்கலாம், தவறியது அன்றைய ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம். அதற்குப் பிறகு 2007இல் நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பு வந்தது. உண்மையிலேயே டெல்டா பாசன விவசாயிகள் மீது அக்கறை கொண்டிருந்தால், தமிழ்நாட்டு மக்கள் மீது அக்கறை இருந்தால், உடனடியாக மத்திய அரசை வற்புறுத்தி, மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் அமைத்து விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கலாம், இந்த போராட்டத்திற்கே அவசியம் இல்லாமல் போயிருக்கும், இரண்டாவதும் கபட நாடகம் ஆடியது திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை குறிப்பிட விரும்புகிறேன், இரண்டு முறையும் நீங்கள்தான் கபட நாடகம் ஆடினீர்கள். அந்த காலகட்டத்திலே, மத்தியிலே, காங்கிரஸ் தலைமையிலே திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணியிலே இடம் பெற்றிருந்தது. இப்பொழுது எங்களை சொல்கின்றீர்களே ராஜினாமா செய்யுங்கள் என்று. அன்றைக்கு உங்களுடைய தயவால் மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி செய்தார்கள், அன்றைக்கே அதை நீங்கள் அதை

செய்திருந்தால், நீங்கள் நினைத்திருந்தால், காவேரி பிரச்சினையை ஒரு முடிவிற்கு கொண்டு வந்திருக்கலாம். ஆனால், உங்களுக்கு அதிகாரம் தான் முக்கியமாக தென்பட்டதேயொழிய, தமிழ்நாட்டு மக்கள் மீதும், விவசாயிகள் மீதும் அக்கறையில்லை என்பதை தெளிவாக காட்டுகின்றது. இப்போது அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகின்றீர்களே, அந்த அழுத்தத்தை நீங்கள் அப்பொழுதே, 2007இல் கொடுத்திருக்கலாம், ஏனென்றால், அன்றைக்கு கூட்டணியிலே போட்டியிட்டு, வெற்றி பெற்று, மத்திய அரசில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தீர்கள், அமைச்சர்களாகவும் இருந்தீர்கள். நீங்கள் நினைத்திருந்தால், ஒரே வரி, நீங்கள் மத்திய அரசிதழிலே நடுவர் மன்ற இறுதி ஆணையை வெளியிடவில்லையென்றால், நாங்கள் வெளியேறுகிறோம் என்று ஒருவார்த்தை சொல்லியிருந்தால் போதும், மத்திய அரசு, உடனடியாக மத்திய அரசிதழிலே நடுவர் மன்ற இறுதி ஆணை வெளியிட்டிருக்கும், காவேரி மேலாண்மை வாரியம் அமைத்திருக்கும், காவேரி நீர் முறைப்படும் குழுவை அமைத்திருக்கும், விவசாயிகளுக்கு பிரச்சினையே இருந்திருக்காது, அந்த சந்தர்ப்பத்தை நீங்கள் தவற விட்டு விட்டீர்கள். தமிழகத்திற்கும், விவசாயிகளுக்கும் துரோகம் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருபெரும் தலைவர்கள் இரவு, பகல் பாராமல் மக்களுக்கு உழைத்தார்கள். காவேரி நீர் பிரச்சினைக்காக, மெரினா கடற்கரையிலே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நினைவிடத்திற்கு அருகிலே, தொடர்ந்து 80 மணிநேரம் உண்ணாவிரதம் இருந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளுக்காக குரல் கொடுத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நடுவர் மன்ற இறுதி ஆணையை அரசிதழிலே வெளியிட வேண்டுமென்று வள்ளுவர் கோட்டத்திலே ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். விவசாயிகளுடைய

பிரச்சினைக்காக தன்னையே வருத்திக் கொண்டு வாழ்ந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தான் இருக்கின்ற வரை மக்களுக்காக உழைத்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு வாழ்ந்து மறைந்த பிறகும் அம்மாவினுடைய அரசு தொடர்ந்து அம்மாவினுடைய இலட்சியங்களை நிறைவேற்ற பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை நினைவு கூர்ந்து, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்ன கனவு கண்டார்களோ, நிச்சயமாக அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியே தீரும், தீரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். காவேரி நதிநீர் ஒரு ஜீவநதி, தமிழகத்திலேயே அதிக பாசனம் பெற பாசனப் பரப்புள்ள நதி காவேரி நதிநீர் தான். எனவே, அந்த உரிமையை பெறுவதற்காக போராடுவோம், வெற்றி பெறுவோம், இங்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் உள்ள 32 ரெவின்யூ மாவட்டங்களிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, ஒட்டுமொத்த தமிழக மக்களுடைய உணர்வை பிரதிபலிக்கும் விதமாக, ஒட்டுமொத்த விவசாயிகளினுடைய உணர்வை பிரதிபலிக்கும் விதமாக சுமார் 15 இலட்சம் பேர் இந்த உண்ணாவிரத அறவழி போராட்டத்திலே கலந்து கொண்டு நம்முடைய உணர்வை மத்தியிலே தெரிவித்திருக்கின்றோம். நீதி நிச்சயம் கிடைக்கும், நாம் வெல்லுவோம் என்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
03.04.2018 அன்று சென்னையில்
காவேரி நதிநீர் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற
உண்ணாவிரதப் போராட்டத்தில் ஆற்றிய உரை.

அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வல்லமை பெற்ற ஓர் அங்கம் காவல்துறை!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஒளிபடைத்த கண்களோடும்,
உறுதிகொண்ட நெஞ்சங்களோடும்,
வலிமை கொண்ட மனங்களோடும்,

இங்கே கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்துள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற –

சட்டமன்ற உறுப்பினர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைமைச் செயலாளர் அவர்களே, மரியாதைக்குரிய உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே, மரியாதைக்குரிய காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே, சென்னை மாநகர காவல் ஆணையர் அவர்களே, காவல் துறை அதிகாரிகளே, காவலர்களே, பணி ஓய்வு பெற்ற காவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! இவ்விழாவில் பங்கேற்றுள்ள காவலர் குடும்பத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“உறுப்பு அமைந்து ஊறுஅஞ்சா வெல்படைவேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை”

என்ற திருக்குறளில்

இதன் பொருள் –

இடையூறுகளுக்கு அஞ்சாத படைபலம்தான் அரசனுடைய செல்வங்களுள் சிறந்தது என்பதாகும்.

அக்குறளில் கூறியதற்கு ஏற்ப தமிழ்நாடு காவல் துறை தமிழ்நாட்டின் பலமாக உள்ளது.

நமது காவல் துறையினரின் அர்ப்பணிப்புமிக்க செயல்பாட்டால், இன்று தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்ந்து,

இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழத் தகுந்த இடங்களில் முதன்மையான இடம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழத்தகுந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்றால், காவலர்களாகிய உங்களின் கடமை உணர்வுதான் அதற்குக் காரணம். மகளிர் காவல் நிலையங்கள் வலிமை பெற்றுள்ளன

என்றால் அதற்கு முதற்காரணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் என்பதில் பெருமை கொள்கிறேன்.

பூதமாக வரும் பிரச்சினைகளைக் கூட நம் காவல்துறை எளிதாகக் கையாண்டு அமைதிப்படுத்துகிறது.

மக்கள் இரவு நிம்மதியாக உறங்கி காலை நிம்மதியாக எழுகிறார்கள் என்றால், இரவு முழுவதும் கண்விழித்து காவல் காக்கும் காவலர்களால்தான் அது சாத்தியமாகிறது என்பதை மக்கள் உணர வேண்டும்.

தமிழ்நாடு காவல் துறையில், காவல் துணை கண்காணிப்பாளர்கள் 29 பேர் பயிற்சி முடித்ததையொட்டி நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டதிலும், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை ஆகிய துறைகளில் தீரச் செயல், தகைசால் பணி, மெச்சத்தக்க பணி, பொது சேவைக்கான சீர்மிகு

சிறப்புப் பணி, சிறந்த நற்பணி, சிறந்த புலனாய்வு, சிறந்த பயிற்சி, விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணி, தொழில்நுட்ப மற்றும் சிறப்புப் பணி ஆகியவற்றிற்கான இந்திய குடியரசுத் தலைவர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்களை **203** நபர்களுக்கு வழங்கியதிலும் நான் பெரும் மகிழ்ச்சியடைவதோடு, பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத்தின் ஆட்சி என்பதும், சட்டத்தின் முன் எல்லோரும் சமமாக நடத்தப்படுவது என்பதும், ஒரு ஜனநாயக நாட்டின் அடித்தளமாகும்.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், வளர்ச்சியின் பயன்கள் மக்களைச் சென்றடைவதற்கும், சட்டம் ஒழுங்கு பராமரிப்பு ஒரு முக்கிய காரணி என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்நாடு காவல் துறையை நவீனமயமாக்கி அதன் செயல்திறனை அதிகப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

பொது அமைதியைப் பராமரிப்பதற்கும், மத நல்லிணக்கத்தைப் பேணி காப்பதற்கும், சட்டத்தின் ஆட்சியை முறையாக செயல்படுத்துவதற்கும், தனி மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்கும், பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், காவல்துறையினருக்கு தேவையானவற்றை வழங்கி வருவதோடு, பாரபட்சமின்றி சுதந்திரமாக அவர்கள் தங்கள் பணிகளை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு குறுக்கீடும் இல்லாதவாறு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வரும் அம்மாவின் அரசு பார்த்துக் கொள்கின்றது.

கடந்த ஏழு வருடங்களாக தமிழக காவல் துறையினர், தங்களது சிறப்பான செயல்பாட்டினால் பிரச்சினைகளை முன்கூட்டியே அறிந்து,

தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, மக்கள் பிரச்சினைகளை மனித நேயத்தோடு பாரபட்சமின்றி அணுகி, மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி பொது அமைதியை பேணிக் காத்து வருகின்றனர்.

“ஒரு தவறு செய்தால், அதை தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்” என்று புரட்சித்தலைவர் பாடியதைப் போல குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தப்பிக்கக்கூடாது என்பதில் நம் காவல்துறையினர் கண்டிப்பாக இருப்பவர்கள்.

மாநிலம் முழுவதும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி, குற்ற நிகழ்வுகளைத் தடுத்து வருவதுடன், குற்ற வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து அவர்களை நீதியின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தந்து வருகின்றனர்.

எல்லை தாண்டிய பயங்கரவாத இயக்கங்களும், இடதுசாரி தீவிரவாத அமைப்புகளும் அவ்வப்போது சட்டவிரோதச்

செயல்களில் ஈடுபட்டு, நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் தடைகளை ஏற்படுத்த முயற்சித்த போது, காவல்துறையினர் அவ்வியக்கங்களின் நடவடிக்கைகளை கூர்ந்து கண்காணித்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது மாநிலத்தில் அவ்வியக்கங்கள் எந்தவொரு சட்டவிரோதச் செயல்களிலும் ஈடுபடா வண்ணம் பார்த்து வருகின்றனர்.

நீண்ட கடற்கரையை கொண்ட நமது மாநிலத்தில், கடலோர மாவட்டங்களில், கடலோர பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, புதியதாக கடலோரக் காவல் நிலையங்கள், புறக்காவல் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, நவீன வாகனங்கள் மற்றும் சாதனங்கள் கடலோரப் படையினருக்கு வழங்கப்பட்டு, கடல் வழியே தீவிரவாதிகள் எவரும் ஊடுருவாமல் கண்காணித்து வருகின்றனர்.

பொருளாதார வளர்ச்சி காரணமாக, அதிகரித்து வரும் வாகனங்களால், சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, சாலை விபத்துக்களை குறைக்கவும், போக்குவரத்து சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்து தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

காவல்துறையினர் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு பணியாற்றி வருகின்றனர். அவர்களின் சிரமங்களை அறிந்து அவர்களது குறைகளைக் களைந்து, காவல் துறையினர் தங்கள் பணிகளை மேலும் சிறப்பாக செய்ய, நவீன வசதிகளை ஏற்படுத்துவதிலும், குடியிருப்பு, வாகனம் மற்றும் இதர வசதிகளை செய்து கொடுப்பதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் தொடர்ந்து முனைப்புடன் அரசு செயல்பட்டு வருகிறது.

காவல்துறையை மேம்படுத்துவதற்காக, கடந்த 2010–2011ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 961 கோடியே 6 இலட்சம்

ரூபாயாக இருந்த காவல் துறைக்கான நிதி ஒதுக்கீடு, ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2017–2018ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் 7 ஆயிரத்து 877 கோடியே 58 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து காவல் துறைக்கு, இவ்வரசு கொடுத்து வரும் முக்கியத்துவத்தை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இதே போன்று, நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், கடந்த 2011 முதல் 2017 வரை 722 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு நவீன ஆயுதங்கள், உபகரணங்கள், வாகனங்கள், தற்காப்பு கவசங்கள் போன்றவை அளிக்கப்பட்டு, காவல் துறையினரின் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

காவல்துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு, பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஏழு ஆண்டுகளில், 24,023 காவலர்களும், 1,034 உதவி ஆய்வாளர்களும், 99 துணை கண்காணிப்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்துடன், 9,140 நபர்கள் தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படையினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் அவர்களுள் 8 ஆயிரத்து 569 நபர்கள் காவலர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஆயிரத்து 480 காவல் உதவி ஆய்வாளர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கும், 5,538 காவலர்களை தேர்ந்தெடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான பல்வேறு பதவிகளில் மொத்தம் 58 ஆயிரத்து 593 நபர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

காவல்துறையினரின் பணிகள் மேலும் சிறக்கவும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை வழங்க ஏதுவாகவும், குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைபின்னல் முறை, ஆளில்லா வானூர்தி மூலம் கண்காணிக்கும் வசதி, பெரும் பரப்பு வலையமைப்பு, மின்னஞ்சல் சேவையகம், மென்பொருள் உருவாக்க பிரிவு, காவல்துறை தலைமை அலுவலக தொலைத் தொடர்புகள் ஒளி இழை வடம் மூலம் இணைப்பு போன்ற நவீன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

குற்றத்தடுப்பு மற்றும் குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடிக்கவும், காவல் நிலையப் பணிகளில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தவும் ஏதுவாக, அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் – உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமரா (சிசிடிவி) நிறுவ அரசு அறிவுறுத்தியதன் பேரில், மாநிலத்தில், இதுவரையில் 747 காவல் நிலையங்களில் 4,482 கண்காணிப்பு கேமராக்களும், அரசு மற்றும் தனியார் இடங்களில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 313 கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

காவலர்கள் தங்கள் குடும்பத்தினரோடும், சக அதிகாரிகளோடும் நினைத்த நேரத்தில் தொடர்பு கொள்ள வசதியாக அவர்களிடையே ஒரு “சியுஜி” (CUG) திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இதனால் காவலர்களின் மன அழுத்தம் குறைய வழி ஏற்பட்டது.

40 வயது முடிவடைந்த காவலர்கள் முதல் காவல் ஆய்வாளர்கள் வரை அரசாங்க மருத்துவமனைகளில் இலவசமாக முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள அரசு உத்தரவிட்டதுடன், காவலர் மற்றும் காவலர் குடும்பங்கள் மருத்துவ சிகிச்சை பெற்று பயன்பெறும் வகையில் பிரத்யேகமாக செயல்பட்டு வரும் 12 காவலர் மருத்துவமனைகளுடன் கூடுதலாக

26 ஆயுதப்படை தலைமையிடங்களிலும், 10 சிறப்பு காவல் படை தலைமையிடங்களிலும், புறநோயாளி சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காவலர்களின் வசதிக்காக கடந்த 7 வருடங்களில் 16 ஆயிரத்து 307 காவல் குடியிருப்புகள் மற்றும் 33 துயில் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

காவலர்களின் சொந்தவீட்டு கனவை நனவாக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கு "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தினை அறிவித்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் 459 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 673 வீடுகள் கட்டி பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கீழக்கோட்டையூரிலும், பிற மாவட்டங்களிலும் சீருடைப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே போன்று, பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற சீருடைப் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில், குறைந்த விலையில் பொருட்களை வழங்க மாநிலத்தில் 48 "பல்பொருள் அங்காடிகள்" திறக்கப்பட்டு, குறைந்த விலையில் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சீருடைப்படி, உணவுப்படி, இடர்படி, குளிர்காலப்படி, மலையிட பணிப்படி, தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் சிறப்புப் பணிப் பதக்கப்படி, காவலர் பதக்கத்திற்கான மாதாந்திர பதக்கப்படி, வீர தீரப்பணிக்கான காவல்

பதக்கத்துடனான மாதாந்திர பதக்கப்படி, தொழில்நுட்ப பிரிவிற்கான பதக்கத்திற்கு பணப் பலன் ஆகியவை கணிசமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் இதுவரை முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் கீழ், 1,404 காவலர் குடும்பங்களுக்கு 118 கோடியே 7 இலட்சம் ரூபாயும், கருணைத் தொகை திட்டத்தின் கீழ், 85 காவல் ஆளிநர்களுக்கு 72.35 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு காவலர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 59 நபர்களுக்கு 98.8 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு காவலர் மருத்துவ நல நிதி திட்டத்தின் கீழ், 287 நபர்களுக்கு 2.12 கோடி ரூபாயும், தமிழ்நாடு அரசு சிறப்பு உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், 2,415 காவலர் குழந்தைகளுக்கு 4.66 கோடி ரூபாயும், கல்விப் பரிசுத் திட்டத்தின் கீழ், 5,007 மாணவர்களுக்கு 1.58 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

கருணை அடிப்படையில் பணி வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த 2011ஆம் வருடம் முதல் இதுவரை மொத்தம் 671 நபர்களுக்கு காவல் மற்றும் பிற துறைகளில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி மாண்புமிகு அம்மாவின் அரசு, சவால்கள் நிறைந்த காவல் துறைக்கு, திட்டங்களை அள்ளிக் கொடுத்ததன் பயனாக அண்மையில் அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களைத் தேர்வு செய்ய நடைபெற்ற போட்டியில் கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரம் காவல் நிலையம் முதன்மை காவல் நிலையமாகவும், சென்னை அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாம் காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தனது அறிக்கையில், இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான மெட்ரோ நகரமாக சென்னையையும், மாநகரமாக கோயம்புத்தூரையும் அறிவித்துள்ளது.

இது மட்டுமின்றி, கடந்த பிப்ரவரி மாதம் சென்னையில் நடைபெற்ற 61ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் தமிழ்நாடு காவல்துறை 18 தங்கம், 10 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 33 பதக்கங்கள் உட்பட 7 கோப்பைகள் மற்றும் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றதிலிருந்தும், தமிழக காவல்துறை அனைத்து விதங்களிலும் எப்போதும் போல தொடர்ந்து நாட்டிலேயே முதலாவதாக இருந்து வருகிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, காவல்துறையினர் மேலும் சிறப்புடன் செயல்பட தேவையான அனைத்து வசதிகளை செய்து கொடுக்கும் என்று இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையினரின் குறைகளைக் களைவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வரும் இவ்வரசு, அண்மையில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் சிறப்புப் பணி அண்ணா பதக்கத்துக்கான பணப்பலனை காவலர் முதல் தலைமைக் காவலருக்கு 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாய் ஆகவும், உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளருக்கு 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் ஆகவும், காவல் துணை கண்காணிப்பாளருக்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் ஆகவும், காவலர் பதக்கத்துக்கான மாதாந்திர பதக்கப்படி 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் ஆகவும், வீர தீரப்பணி காவல் பதக்கத்துக்கான மாதாந்திர பதக்கப்படி 300 ரூபாயிலிருந்து 900 ரூபாய் ஆகவும் உயர்த்தி உத்தரவிட்டது.

இதே போன்று, 10 ஆண்டுகள் பணி முடித்த காவலர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் காவலர் பதக்கங்கள் ஆண்டுதோறும் 1,500 என்ற எண்ணிக்கையில் வழக்கப்பட்டு வந்தது.

அதிக எண்ணிக்கையிலான காவலர்கள் விருதுபெறும் வகையில், நிதிநிலை அறிக்கையில், 2018–2019ஆம் ஆண்டு முதல் முதலமைச்சரின் காவலர் விருதுகளின் எண்ணிக்கையை 1,500லிருந்து 3,000 ஆக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகமயமாக்கல், தொழில்நுட்ப புரட்சி மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சி போன்றவை காரணமாக காவல் துறையினர் பல்வேறு சவால்களை அவர்களது அன்றாடப் பணிகளின் போது எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனை உணர்ந்த இவ்வரசு காவல் துறையினரின் உடல் நலத்தையும், மன வளத்தையும் பேணிக் காக்கும் வகையில் தமிழக காவல் துறையில் பணிபுரியும் காவல் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் பெங்களூருவில் உள்ள National Institute of Mental Health and Neuro Science நிறுவனத்துடன் இணைந்து பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மக்கள் நலம் காக்கும் அரசில் சீருடைப் பணியாளரின் பணிகள் மிகவும் இன்றியமையாததும், மகத்தானதும் ஆகும்.

உலக அளவில், சமூக ரீதியாகவும், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியாகவும் ஏற்பட்டு வரும் பல்வேறு மாறுதல்களினால் காவல் பணிகளில் இருந்து வரும் கடும் சவால்களை ஒவ்வொருவரும் உணர்ந்து, அவற்றை எதிர்கொள்ளும் விதத்தில் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

"The best way to find yourself is,
to lose yourself in the
service of others" – என்ற

அண்ணல் காந்தியடிகளின் கூற்றின்படி, தன்னலம் கருதாமல், மக்கள் நலன் காக்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, பொதுமக்கள் காவல் நிலையங்களுக்கு வரும் போது, அவர்களை மனித நேயத்தோடு அணுகி, அன்பாக பேசி, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, பாரபட்சமின்றி குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு அரணாகவும், உற்ற நண்பனாகவும் இருக்க வேண்டும் என்று இத்தருணத்தில் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வல்லமை பெற்ற ஓர் அங்கம் காவல் துறை ஆகும்.

பல்வேறு சிரமங்களுக்கிடையே, காவல்துறையினர் சிறப்பாக செயல்பட்டு வந்த போதும், ஒரு சிலரது செயல்பாடுகள் அவ்வப்போது சில விமர்சனங்களுக்கு உள்ளாகிறது.

அவற்றை நீங்களும் அறிவீர்கள். காவல்துறையினர், தங்களது சிறப்பான பணியின் மூலம் இது போன்ற விமர்சனங்களை புறந்தள்ளி விட்டு, கடமையைச் செய்வதே, அனைத்திலும் சிறந்தது என உணர்ந்து, மக்கள் நலன் காக்கும் பணியில் முழுமையாக உங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பணிகளை தொடர்ந்து செய்து வரவேண்டுமென்று இத்தருணத்தில் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, அல்லும்—பகலும், தங்கள் குடும்பங்களைக்கூட கவனிக்க நேரமின்றி, சமுதாயக் கட்டமைப்பை பாதுகாக்க கடமையாற்றி வரும் காவல்துறையினரின் நற்பணிகளை பொதுமக்கள் பாராட்டி காவலர்கள் மேலும் சிறப்பாக செயல்படும் விதத்தில், அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

சீருடைப் பணியாளர்களின் தியாகத்தையும், கடமை உணர்வையும் பாராட்டி, கௌரவிக்கும் வகையில் இப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

இதுபோன்ற நிகழ்ச்சிகள், பதக்கங்களைப் பெறுவோர் மேலும் சிறப்பாக பணிபுரிய ஊக்கமளிப்பதுடன், பிற பணியாளர்களுக்கும் நற்பணியாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தையும் அளிக்கிறது.

இந்த விழாவில் சிறப்பாக பயிற்சி முடித்து மக்களுக்கு சேவையாற்ற உள்ள இளம் காவல் துணை கண்காணிப்பாளர்கள்,

தங்கள் பணிக் காலத்தில் சிறப்பாக பணியாற்றி பொது மக்களுக்கு நற்சேவை செய்து, அவர்களின் பாராட்டுதல்களைப் பெற்று, பல்வேறு பதவி உயர்வுகள் பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விழாவில் பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையில் அகில இந்திய அளவில் பணித்திறன் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் பரிசுகளைப் பெற்று நற்பணியாற்றி வரும் தமிழ்நாடு காவல் துறையினர் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதோடு, வருங்காலத்திலும் இதே போன்று பரிசுகளையும், பதக்கங்களையும் பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, உங்கள் அனைவரின் நலன் காப்பதில் எப்போதும் போல தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது.

நாட்டின் நலன் காப்பதில் நீங்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். அதனை நீங்கள் இலக்காகக் கொள்ள வேண்டும். இலக்கு எனக் கூறும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகின்றது.

ஒரு குருவின் மூலம் தத்துவங்களை கற்றுவந்த ஒரு சீடரின் நண்பர், ‘உன் குருவின் மூலம் தத்துவங்கள் முழுவதையும் கற்றுக் கொண்டாயா?’ என்று கேட்டார். ‘தத்துவங்களை அவசரப்பட்டு கற்க முடியாது, கொஞ்சம் கொஞ்சமாகத் தான் கற்க முடியும்’ என்றார் சீடர்.

‘உன் குருவுக்கு வயதாகி விட்டது, அவருக்குப் பின் உனக்கு யார் தத்துவங்களை கற்றுத் தருவது?’ என்று நண்பர் கேட்டார்.

நண்பரின் கேள்வி நியாயமானதாகப் படவே, சீடர், அந்த சந்தேகத்தை குருவிடமே கேட்டார்.

'குருவே, நீங்கள் இல்லாவிட்டால் தத்துவங்களை எனக்கு யார் சொல்லித் தருவார்கள்?' என்ற கேள்விக்கு,

'குறிப்பிட்ட இடத்திலிருந்து புறப்படும் நதிகளுக்கு யார் வழிகாட்டி?' என்று குரு எதிர் கேள்வி கேட்டார்.

'நீரும், அதன் வேகமும் தான் அதன் போக்கை தீர்மானிக்கிறது' என்று சீடர் கூறினார்.

'சரியாகச் சொன்னாய், பாறைகள், காடுகள் என்று எவ்வளவு பெரிய தடைகள் வந்தாலும் நதி திகைத்துப் போய் நின்று விடுகிறதா ?' என்று குரு கேட்டார்.

'நிற்பதில்லை குருவே' என்றார் சீடர்.

'எப்படி அந்த நதியில் ஓடும் நீர், தன் இலட்சியமான முகத்துவாரத்தை அடைகின்றது என்பதை யோசித்தாயா ?' என்றார் குரு.

சீடருக்கு குழப்பமாக இருந்தது. 'பெரும் தடைகள் வந்தால் சிறிய நீரோட்டங்கள் தேங்கி நின்று விடுகின்றன. ஆனால், உறுதியான கொள்கையும், ஆர்வமும் இருந்தால், வெள்ளம் போல தடைகளை வென்று தன் இலக்கை அடையலாம்' என்று விளக்கம் கொடுத்தார் குரு.

சீடரின் சந்தேகமும், குழப்பமும் தீர்ந்தது.

உண்மை, நேர்மை, நடுநிலைமை, ஒழுக்கம் தவறாமல் ஒரு போர்படை வீரனைப்போல், எல்லையைக் காக்கும் வீரனைப்போல திகழ வேண்டும்.

அதுதான் தாய்நாட்டிற்கும், தாய் மக்களுக்கும் நீங்கள் செய்யும் தலையாய கடமை என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற தாரக மந்திரத்தினை மனதில் நிறுத்தி, தமிழ்நாட்டை தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திட நீங்கள் உழைத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

"வெற்றி மீது வெற்றி வந்து நம்மைச் சேரும்—அதை
வாங்கித்தந்த பெருமையெல்லாம் உம்மைச் சேரும்"

தமிழ்நாட்டின் வெற்றிக்கு தலையாய பங்கு வகிக்கும் உங்களை மீண்டும் ஒருமுறை வாழ்த்துகிறேன்.

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். புகழ்!

தொடர்க.. அம்மா அவர்களின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
04.04.2018 அன்று, சென்னை, ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு காவல்துறை சார்பில் நடைபெற்ற காவலர் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா மற்றும் இந்திய குடியரசுத் தலைவர், மத்திய உள்துறை அமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

தமிழ்நாடு மட்டுமல்லாது பிற மாநிலங்களிலிருந்து வரும் வறியவர்களுக்கு இலவச புற்றுநோய் சிகிச்சை அளிக்கிறது அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையம்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திரமோடி அவர்களே!

மாண்புமிகு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்களே !

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களே! மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு.பொன் ராதாகிருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், டாக்டர் விஜய பாஸ்கர் அவர்களே! மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே !

அடையார் புற்றுநோய் மையத்தின் இயக்குநர் டாக்டர் சாந்தா அவர்களே! மற்றும் இம்மையத்தின் நிருவாகத்தினரே! இம்மையத்தில் பணிபுரியும் மருத்துவர்களே, செவிலியர்களே மற்றும்

பணியாளர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஆரோக்கியம்தான் மற்ற எல்லாச் செல்வங்களைவிடவும் சிறந்தது. இன்னும் சொல்லப்போனால் மற்ற எல்லா செல்வங்களையும் அனுபவிக்கவும், ஆரோக்கியம் இன்றியமையாததாய் திகழ்கிறது.

மகாபாரதத்தில் தர்மரின் பேரறிவை அறிய ஒரு கேள்வி கேட்கப்படும். "மனிதன் ஈட்டவேண்டிய மகத்தான செல்வம் எது?" என்பது கேள்வி. "ஆரோக்கியம்" என்பதுதான் தர்மரின் பதில். இதைத்தான் நமது முன்னோர்கள் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறினார்கள்.

புற்று நோயைக் குணப்படுத்த பல அளப்பறிய மருத்துவ முறைகளை மருத்துவ உலகம் கண்டுபிடித்து வருகிறது. அந்த வகையில், புற்றுநோயிலிருந்து மக்களை காப்பாற்றும் பணியில் ஆரம்ப காலங்களில் பெரும் பங்கு வகித்தவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள். அவரை பின்தொடர்ந்து இன்றளவும் அந்த பணியில் மகத்தான சேவை ஆற்றிக் கொண்டிருப்பவர் டாக்டர் வி.சாந்தா அவர்கள்.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இப்புற்றுநோய் சிகிச்சை மையம், அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு தரமான அறிவியல் ரீதியான புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, 64 ஆண்டுகளுக்கு முன் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. இந்த மையம் ஒரு சிறிய குடிலில் 12 படுக்கைகளுடன் 1954இல்

தொடங்கப்பட்டு, இன்று அது 535 படுக்கைகளுடன் ஒரு புகழ் பெற்ற ஒப்புயர்வு சிகிச்சை மையமாக திகழ்கிறது. இங்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 12 ஆயிரம் புதிய புற்று நோயாளிகளும், 1 இலட்சத்து 51 ஆயிரம் தொடர் சிகிச்சை பெறும் புற்று நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், ஆரம்ப நிலையில் இம் மருத்துவமனைக்கு வரும் புற்று நோயாளிகளில் 80–90 சதவிகிதத்தினர் வரை முழுமையாக குணமடைகின்றனர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் 1912ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில், எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி ஆவார்.

அவர் ஆற்றிய பணிகளை நினைவு கூறும் விதத்தில் அவரது சொந்த ஊரான புதுக்கோட்டையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அரசு பொது மருத்துவமனை" என பெயர் சூட்டப்பட்டுள்ளது என்பதை இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

தியாக உள்ளம் படைத்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் தொடங்கிய புற்றுநோய் நிறுவனம், இந்த அளவிற்கு வளர்ந்ததற்கு ஒரே காரணம் டாக்டர் வி.சாந்தா அவர்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சாதனை படைத்த மகளிருக்கு ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் நாள் மகளிர் தினத்தில் வழங்கப்படும் ஔவையார் விருதினை, முதன்முதலில் 2013ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களிடமிருந்து பெற்றவர்தான் இம்மையத்தின் இயக்குநர் டாக்டர் வி.சாந்தா அவர்கள்.

தமிழ்நாடு மட்டும் அல்லாது, பிற மாநிலத்தில் இருந்து வரும் மிகவும் வறிய நிலையிலுள்ள நோயாளிகளுக்கு இலவச புற்றுநோய் சிகிச்சை அளிப்பதை அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையம்

கொள்கையாக கொண்டுள்ளது. அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் உன்னதமான சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு இம்மையத்திற்கு தேவையான உதவிகளை வழங்கி வருவதுடன், இதனை மாநில அளவில் புற்றுநோய் சிகிச்சைக்கான, தலைமை மையமாகவும் அங்கீகரித்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் முயற்சியின் காரணமாக, அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தை ஒரு ஒப்புயர்வு மையமாகக் கருதி 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் மற்றும் மருத்துவ கருவிகள் அளிக்கும் வகையில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 60 சதவிகிதத்தினை மத்திய அரசும், 40 சதவிகிதத்தினை மாநில அரசும் வழங்குகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள், 12.06.2013 அன்று நடைபெற்ற சென்னை புற்றுநோய் மையத்தின் வைரவிழாவை தொடங்கி வைத்து உரையாற்றுகையில், "புற்றுநோய் மருத்துவ நிலையத்தால் கட்டப்பட்டு வரும் வைர விழா கட்டடத்திற்கு, தமிழ்நாடு அரசு சிறப்பு மானியமாக 5 கோடி ரூபாய் வழங்கும்" என்று அறிவித்தார்.

அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட மானியத் தொகையான 5 கோடி ரூபாயைக் கொண்டு இந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பதை நான் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

அடையார் புற்றுநோய் மையம் தமிழ்நாட்டில் புற்றுநோய் பாதிப்புக்குள்ளானவர்களைப் பதிவு செய்ய மாநில அரசின் தலைமை நிறுவனமாகத் திகழ்கிறது. அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையம், அரசுடன் இணைந்து புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புற்றுநோய் பாதிப்பு உள்ளவர்களை கண்டறியும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பிற மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படவிருக்கிறது. அரசு மருத்துவமனைகளை புற்று

நோய்க்கான சிகிச்சை அளிக்கும் வகையில் வலுப்படுத்தியதுடன், அவற்றின் மூலம் புற்றுநோய் பாதிப்புக்கு உள்ளானவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிய சிகிச்சையும் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.

அரசின் மருத்துவ மையங்கள் மூலம் 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கு, கருப்பைவாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் போன்றவற்றைப் பரிசோதித்து கண்டறியப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நோய் அறிகுறிகளுடன் உள்ள நோயாளிகளுக்கு அரசு மருத்துவமனைகள் மூலமும், மாண்புமிகு முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டு அங்கீகரிப்பட்டுள்ள மருத்துவமனைகளிலும், சிகிச்சையளிக்கப்பட ஆவன செய்யப்பட்டுள்ளது.

கடந்த 6 வருடங்களில், 1 கோடியே 71 இலட்சம் பெண்களுக்கு கருப்பைவாய் புற்றுநோய் கண்டறிதலுக்கான பரிசோதனையும் 2 கோடியே 10 இலட்சத்து பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் கண்டறிதலுக்கான பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளன. அதில், இந்நோய்களுக்கான அறிகுறிகளுடன் கண்டறியப்பட்டவர்கள் உயர் நிலை மருத்துவமனைகளுக்கு உரிய சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

புற்றுநோய் அறிகுறிகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்கு உதவியளிக்கும் விதமாக, தமிழ்நாடு அரசு 10 மருத்துவக் கல்லூரிகளில் ஏற்கனவே உள்ள பழைய கோபால்ட் கதிர் வீச்சு மருத்துவக் கருவிகளுக்கு பதிலாக மொத்தம் 199 கோடி ரூபாய் மதிப்பில் புதிய கருவிகளை அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசு, சென்னை அடையாறு புற்றுநோய் மையத்திற்கான உதவிகளை தொடர்ந்து அளித்து அதன்

புரவலராகத் தொடர்ந்து செயல்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு சிகிச்சைக்கு வருபவர்களுக்கு சிறந்த உடல் நலத்தையும், மிகச் சிறந்த நம்பிக்கையையும் வழங்கும் இந்த அடையார் புற்றுநோய் சிகிச்சை மையத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், இங்கு பணிபுரியும் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

சென்னை, அடையாறு புற்றுநோய் சிகிச்சை மைய விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
12.04.2018 அன்று ஆற்றிய உரை.

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவர 1,188 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன!

இவ்விழாவிற்கு தலைமை ஏற்றிருக்கும் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் குமாரி இந்திரா பானர்ஜி அவர்களே!

மாண்புமிகு சட்டம், நீதிமன்றம், சிறைத்துறை, சுரங்கம் மற்றும் கனிம வள அமைச்சர் சகோதரர் திரு. சி.வி.சண்முகம் அவர்களே! சிறப்புரை ஆற்றிய நீதியரசர் டி.எஸ். சிவஞானம் அவர்களே! வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு நீதியரசர்களே! வரவேற்புரை நல்கிய மரியாதைக்குரிய தலைமைச்செயலர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

மரியாதைக்குரிய தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் திரு.விஜய் நாராயணன் அவர்களே! தமிழ்நாடு அரசின் உள்துறை கூடுதல் தலைமைச்செயலர் திரு.நிரஞ்சன் மார்டி அவர்களே! சென்னை உயர்நீதி மன்ற தலைமைப்பதிவாளர் திரு. ஆர். சக்திவேல் அவர்களே!

தமிழ்நாடு அரசின் பதிவுத்துறைத் தலைவர் திரு.குமரகுருபரன் அவர்களே! சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் திரு.குமரப்பன் அவர்களே! மரியாதைக்குரிய அரசு வழக்கறிஞர்களே! அனைத்து வழக்கறிஞர் சங்கங்களின் தலைவர்களே! வழக்கறிஞர்களே! உயர்நீதிமன்ற அலுவலர்களே ! பத்திரிக்கை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என் இனிய காலை வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித்துறையில் மின்னணு ஆளுமை முறைகளை புகுத்துவதன் அவசியத்தையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளை கருத்தில்கொண்டும்,இத்துறையில்முழுமையாகமின்னணுஆளுமை முறைகளைக் கொண்டு வர ஏதுவாக, நீதிமன்றங்களில் நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையினை புகுத்திட மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசால், இம்முறை இன்று முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது.

போலி முத்திரைத்தாள்களை ஒழிக்கவும், முத்திரைத்தாள்கள் பயன்பாட்டில் பாதுகாப்பினை அதிகரிக்கவும் தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. பதிவுத்துறையில் சென்னை மண்டலத்தில் பயன்பாட்டில் உள்ள மின்னணு நீதிசாரா முத்திரைத்தாள் முறையை, மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் நீதித்துறையில் பயன்படுத்தப்படும் நீதிசார்ந்த முத்திரைத்தாள்கள் பயன்பாட்டிலும்

பாதுகாப்பான இம்முறையை கொண்டுவருவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்திட்டத்தை செயல்படுத்த, திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற மத்திய அரசு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஏற்கனவே உச்சநீதிமன்றத்திலும், டெல்லி, சத்தீஸ்கர், பஞ்சாப், இராஜஸ்தான், உத்தர பிரதேசம் மற்றும் ஹிமாச்சல பிரதேசம் மாநில உயர்நீதிமன்றங்களிலும் இம்முறையை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறது.

இந்த நீதிசார்ந்த மின்னணு முத்திரையை பொதுமக்கள் தாங்களாகவே இணையம் மூலம் உருவாக்கி பயன்படுத்தலாம். கணினி மற்றும் இணைய இணைப்பு இல்லாதவர்கள் மேற்கண்ட நிறுவனத்தால் அமைக்கப்பட்ட மையங்களில் அல்லது நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொகையினை செலுத்தி, நீதிசார்ந்த மின்னணு முத்திரைகளை பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறை, முதற்கட்டமாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையிலும், அடுத்த கட்டமாக அனைத்து முதன்மை மாவட்ட நீதிமன்றங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு அரசால் இயக்கப்படும் இ-சேவை மையங்கள் மூலமாகவும் இம்முறையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள்களில் தனிப்பட்ட இரசீது எண் அச்சிடப்பட்டிருக்கும். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் பிரிவில் இந்த முத்திரைத்தாளை ஒப்படைத்தால், அதன் உண்மைத் தன்மையை சரிபார்ப்பது மட்டுமின்றி, அதனை மீளவும் தவறான முறையில் பயன்படுத்தா வண்ணம் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு நீதிமன்றங்களில் புதிய தொழில்

நுட்பத்தை புகுத்தி அவற்றின் செயல்பாட்டை விரைவுபடுத்தவும், அதன் மூலம் பொதுமக்களுக்கு உரிய பயன்கள் விரைவாக சென்றடையவும் தமிழ்நாடு அரசு ஆவன செய்துள்ளது.

இதுமட்டுமன்றி, எண்ணில்லா நலத்திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு நீதித்துறைக்கு வழங்கியுள்ளது. அவற்றில் சிலவற்றை நான் இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

வழக்குரைஞர்களின் நலனைக்கருத்தில் கொண்டு பணியில் இருக்கும்போதே இறக்கும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயிலிருந்து, 7 இலட்சம் ரூபாயாக உயர்த்தியும், தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 4 கோடி ரூபாயிலிருந்து 8 கோடி ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவர ஏதுவாக கடந்த ஓராண்டில் பல்வேறு பதவிகளுக்கு 1,188 பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

நீதித்துறையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வண்ணம், மாநிலத்தின் பல்வேறு இடங்களில், கடந்த ஆண்டில் மட்டும் புதிதாக 149 நீதிமன்றங்களை உருவாக்க அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல், நீதிமன்றக் கட்டடங்களை பழுது பார்த்தல், இதர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக 92 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் சூரிய மின்சக்திக்கான உபகரணங்களை நிறுவுவதற்கு 1 கோடியே 42 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரிய கட்டிடத்தின் 125ஆம் ஆண்டு விழாவினை கொண்டாடுவதற்கு தமிழ்நாடு அரசால் ஒரு கோடியே 45 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுதவிர, 14ஆம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி வழக்கு பதிவுருக்களை ஸ்கேனிங் செய்து கணினிமயமாக்குவதற்காக 37 கோடி ரூபாய் நிர்வாக ஒப்பளிப்பு அளித்து தமிழ்நாடு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

On this happy occasion, I inform that this Government stand in support of judiciary for speedy disposal of cases by introducing new technology and improving infrastructure facilities.

விரைவாக நீதி கிடைக்கச் செய்வதைக் கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நீதிமன்றங்களின் தேவைகளுக்கு உடனுக்குடன் நிறைவேற்றும் உணர்வு கொண்ட அரசாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
20.04.2018 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற
நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமாக்கல் விழாவில் ஆற்றிய உரை.

அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை, எளியவருக்கு தங்கு தடையின்றி மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டும்!

மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி...

மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் நுண்கதிர் வீச்சாளர்கள் என 1,008 மருத்துவத் துறை பணிகளுக்கான

ஆணைகள் வழங்கும் இந்த நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்து சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி அவர்களே, வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வாரிய தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறையின் பல்வேறு துறைத் தலைவர்களே மற்றும் அலுவலர்களே! பணி நியமன ஆணையை பெறுவதற்காக இங்கு கூடியிருக்கின்ற மருத்துவர்களே! செவிலியர்களே! மருந்தாளுநர்களே மற்றும் நுண்கதிர் வீச்சாளர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே மற்றும் இங்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றார்கள் நம் முன்னோர்கள். 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்' என்றும் பெரியவர்கள் கூறுவார்கள். எனவே, நோயில்லாத வாழ்வைப் பெறுபவனே மிகப்பெரிய செல்வந்தன் என்பதில் சந்தேகமில்லை.

மனித குலத்தில் இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கக்கூடியவர்கள் மருத்துவர்கள். இன்றைக்கு தமிழ்நாடு மருத்துவத்தில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் விளங்குகிறது என்றால் அதற்கு காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீட்டிய முன்னோடித் திட்டங்கள் தான் என்பதை உலகு அறியும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் "தொலைநோக்கு திட்டம் 2023"இல் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக சுகாதார குறியீடுகளை தமிழ்நாடு அடையும் வண்ணம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அவைகளை நிறைவேற்றிட மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதிலும், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக சிறந்து விளங்கி வருகிறது.

தமிழ்நாடு, தாய் சேய் நலம் மற்றும் குடும்ப நல சேவைத் திட்டங்களை செயல்படுத்துவதில் முன்மாதிரி மாநிலமாக திகழ்வதோடு, நோய்களைத் தடுப்பதற்காக பல முன்னோடித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி உயர்தர மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவித்தல், அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், லீனியர் ஆக்ஸிலேட்டர், எம்.ஆர்.ஐ. ஸ்கேன், கேத் ஆய்வகங்கள், சி.டி. ஸ்கேன் போன்ற நவீன மருத்துவக் கருவிகளை வழங்குதல், போன்ற அம்மாவுடைய அரசு இன்றைக்கு செயல்படுத்தியிருக்கின்றது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவினி திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம் மற்றும் மகளிருக்காக அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம், விலையில்லா சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம், நடமாடும் மருத்துவமனை திட்டம், தொற்றாநோய் தடுப்பு கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சை அளிக்கும் திட்டம், தாய்ப்பால் வங்கி திட்டம், உயர்நிலை மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதி விரிவுபடுத்தல், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, விபத்து சேவை மையங்களுடன் கூடிய உயர்

சிறப்பு மருத்துவமனைகள் நிறுவுதல், "108" அவசரகால ஊர்தி சேவை போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, தொடர்ந்து சிறப்பான முறையிலே அம்மாவுடைய அரசு செயல்படுத்தி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகளில் உள்ள பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி, அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்குதடையின்றி மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டும் தான் இந்தியாவிலேயே முதன்முறையாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் 2012–ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த வாரியம், இதுவரை மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள்

உட்பட 23,880 பணியாளர்களை தேர்வு செய்துள்ளது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று 242 உதவி மருத்துவர்கள், 337 செவிலியர்கள், 308 மருந்தாளுநர்கள் மற்றும் 90 நுண்கதிர் வீச்சாளர்கள் மற்றும் 21 வட்டார சுகாதார புள்ளியியல் அலுவலர்கள், மற்றும் கருணை அடிப்படையில் 10 இளநிலை உதவியாளர்கள் என மொத்தம் 1,008 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட உள்ளது.

இவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் மகிழ்ச்சியான நிகழ்ச்சிதான் இந்த அரங்கில் தற்போது நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற அடிப்படையில், இன்றைக்கு பணி ஆணை பெற்றுள்ள உதவி மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், செவிலியர்கள் மற்றும் நுண்கதிர் வீச்சாளர்கள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து, அர்ப்பணிப்பு உணர்வுடன் தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு போதிய மருத்துவ சேவைகளை வழங்குமாறும், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு சுகாதார திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவும், மக்கள் நலம் மேம்படவும், மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில் தங்கள் பணிகளை செவ்வனே செய்ய வேண்டும் என உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருக்குறளில் ‘மருந்து’ என்ற அதிகாரம் இருக்கிறது. மருத்துவத் துறைக்கு வருகிறவர்கள் அவசியம் அந்த அதிகாரத்திலுள்ள பத்து குறள்களையும் படித்து, அதன்படி நடப்பதுடன் அந்த கருத்துக்களை பின்பற்ற வேண்டும். ஆங்கில மருத்துவத்தில் சிறந்த வல்லுநர்களாக இருந்தாலும்கூட அந்த மருத்துவங்களில் நமது தமிழ் மருத்துவத்தின் அடிநாதம் இருப்பதையும் உணரவேண்டும்.

சமீப காலத்தில் தமிழ்நாட்டு மக்களை அச்சுறுத்திய பல நோய்களிலிருந்து மக்களை மீட்டெடுத்ததற்கு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், துரித சிகிச்சைகளும், இரவு பகல் பார்க்காமல் மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் தியாக உள்ளத்தோடு ஆற்றிய பணியும் தான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

புதியதாக அரசுப்பணியில் சேர இருக்கின்ற உங்களுக்கு ஒரு சிறிய கதை கூற விரும்புகிறேன். காட்டில் வயதான சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அந்தச் சிங்கம், தனக்கு வயதாகி விட்ட காரணத்தினால், தனது குட்டி சிங்கங்கள் கொண்டு வந்து கொடுக்கும் உணவை நேரத்திற்குச் சாப்பிட்டு ஓய்வு எடுத்து வருவதைத் தவிர உழைக்க முன்வரவில்லை. மேலும், உழைப்பு இல்லாத காரணத்தினால், அதற்கு தூக்கமும் வரவில்லை.

இந்நிலையில், ஒரு நாள் காட்டில் உள்ள சில விலங்குகளைக் கூப்பிட்டு, தனக்கு சரியாக தூக்கம் வரவில்லை என்றும், அதற்கு

சரியான மருந்தைச் சொல்ல வேண்டும் என்றும் மற்ற விலங்குகளிடம் கேட்டுக் கொண்டது. அதைக் கேட்ட அந்த காட்டு விலங்குகள் தமக்குத் தெரிந்தவற்றை கூறின.

ஆனால், எதைச் செய்தும், அந்த சிங்கத்திற்கு தூக்கம் வரவில்லை. எனவே அனைத்து விலங்குகள் மீதும் கோபம் கொண்டது. இதை அறிந்த ஒரு நரி, நேராக அந்த வயதான சிங்கத்திடம் வந்தது. வந்த அந்த நரி, சிங்கத்திடம், “என்னுடைய தாத்தா ஒருவர் இந்த மலை மீது இருக்கிறார். அவர் தங்களுக்கு சரியான மருத்துவம் கூறுவார்”, என்று சொன்னது.

அதை நம்பிய அந்தச் சிங்கமும், மலை மீது ஏறியது. அங்கே சென்று பார்த்தால், அந்த தாத்தா நரி அங்கு இல்லை. உடனே, “எனது தாத்தா இன்று பக்கத்தில் உள்ள காட்டிற்குச் சென்றுள்ளது. நாளை தான் வருவார்.

எனவே, நாம் இன்று போய் நாளை வருவோம்” என்றது. இதைக் கேட்ட அந்த வயதான சிங்கம் மலையிலிருந்து இறங்கி, கீழே வந்தது. மலை மேலே ஏறி, இறங்கிய வயதான சிங்கத்திற்கு நன்றாக தூக்கம் வந்தது. மறு நாள் அந்த நரி வந்து, “நேற்று நல்ல தூக்கம் வந்ததா ?” எனக் கேட்டது.

உடனே ஆச்சரியத்துடன் அந்தச் சிங்கம் “எனக்கு நன்றாக தூக்கம் வந்தது உனக்கு எப்படித் தெரியும்,” எனக் கேட்டது. அதற்கு, அந்த நரி, “உழைத்தால் ஓய்வு தேவைப்படும், தூக்கம் தானாக வரும்”, எனச் சொன்னது.

உங்களிடம் வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் முன், அவர்களின் நோய்க்கான காரணத்தை அறிந்து அவர்களுக்கு என்ன தேவை என்பதை கண்டறிந்து, மருத்துவம் பார்த்து, நோய்களை வெற்றிகரமாக குணப்படுத்துவதன் மூலம் நீங்கள் தான் சிறந்த

மருத்துவர் என்ற நற்பெயரை நீங்கள் பெறுவீர்கள். அதுதான் நீங்கள் இந்த அரசுக்குக் காட்டும் நன்றியாக நான் கருதுகிறேன்.

மருத்துவத்துறையை பொருத்தவரை நீங்கள் படிக்கின்ற காலத்தில் பெற்ற மதிப்பெண்கள் பேசப்படுவது அல்ல. மருத்துவரான பிறகு மக்கள் உங்கள் மீது காட்டுகின்ற மரியாதைதான் பேசப்பட வேண்டும். மக்கள் உங்களை மனதார வாழ்த்த வேண்டும்.

இந்த மாதிரியான பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் தான், உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக, மனநிறைவுடன் நீண்ட நெடுங்காலம் வாழவைக்கும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் நன்றாக குறிப்பிட்டார்கள். இன்றைக்கு தமிழ்நாடு, மருத்துவத் துறையிலே ஒரு சிறந்த மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், மருத்துவர்களுடைய அர்ப்பணிப்புதான் என்பதை

இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இன்றைக்கு, அரசு மருத்துவமனை தனியார் மருத்துவமனைக்கு இணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, அதற்கு பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு, உடல் உறுப்பு அறுவை சிகிச்சை, கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு, தேசிய அளவில் முதலிடம் வகிக்கிறது என்று சொன்னால், மருத்துவர்களுடைய திறமை தான் இதற்குக் காரணம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அது மட்டுமல்ல, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த நாராயணசாமி, வயது **29**, ஒரு ஏழை தொழிலாளி, அவர் இரண்டு கைகளையும் இழந்தவர். அவர் இரண்டு கைகளையும் பொருத்தவேண்டும் என்று அரசிடத்திலே கோரிக்கை வைத்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் என்னிடம் கலந்து பேசினார்கள். இரண்டு கைகளையும் அவருக்கு பொருத்துவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று என்னிடம் கேட்டார். இது சாத்தியமா என்று கேட்டேன். நிச்சயமாக சாத்தியம் ஆக்க முடியும். நம்முடைய மருத்துவர்கள் சிறந்த மருத்துவர்கள், வல்லுநர்கள், நிச்சயமாக இதை நிறைவேற்றுவார்கள் என்று என்னிடத்திலே உறுதியளித்தார். இதன் பொருட்டு இன்றைக்கு இரண்டு கைகளையும் இழந்த அவருக்கு, இறந்த ஒருவரின் உடலிலிருந்து இரண்டு கைகளையும் எடுத்து பொருத்தி இன்றைக்கு இரண்டு மாதம் ஆகிறது. இன்றைக்கு சிறப்பாக இரண்டு கைகளையும் பயன்படுத்தக்கூடிய நிலையில் அவர் இருக்கின்றார். இந்தியாவிலேயே முதன்முறையாக அரசு மருத்துவமனையிலே உடல் உறுப்பு அறுவை சிகிச்சை மூலமாக இரண்டு கைகளையும் பொருத்தி வெற்றி கண்ட மாநிலம் தமிழ்நாடு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். ஆகவே, இந்த சாதனையை செய்த அந்த மருத்துவக் குழுவிற்கு உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இப்படி தமிழகம் மருத்துவத் துறையில் ஒரு மைல்கல் போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இங்கே பணி ஆணை பெறுகின்ற அனைவரும் சிறந்த முறையிலே பணியாற்றி மக்களிடத்திலே நற்பெயரைப் பெற்று நம்முடைய அரசிற்கு நற்பெயரை ஈட்டித் தரவேண்டும் என்று கேட்டு, உங்கள் அத்தனை பேரையும், புதிதாக பணி நியமன ஆணைகள் பெறுகின்ற அத்தனை பேரையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
26.04.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

இந்தியாவிலேயே உயர்கல்வி கற்போருடைய எண்ணிக்கை 46 சதவீதமாக உயர்ந்து தமிழகம் சிறந்து விளங்குகிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே துவங்கப்பட்ட திட்டங்கள் முடிவுபெற்று திறப்பு விழா காணுகின்ற நிகழ்ச்சி, புதிதாக அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றுக்

கொண்டிருக்கின்ற நிகழ்ச்சி மற்றும் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே அறிவிக்கப்பட்டு, சிறப்பாக நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தலைமை தாங்கி தலைமையுரையாற்றிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர் மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.செம்மலை அவர்களே, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் பன்னீர்செல்வம் அவர்களே, சங்ககரி சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய ராஜா அவர்களே, சேலம் மேற்கு தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு ஜி.வெங்கடாசலம் அவர்களே, மேடையிலே வீற்றிருக்கின்ற முன்னாள் நகர்மன்றத் தலைவர் திரு. கதிரேசன் அவர்களே, துணைத் தலைவர் திரு. ராம் அவர்களே, முன்னாள் கொங்கணாபுரம் ஊராட்சி மன்ற ஒன்றிய பெருந்தலைவர் திரு.மணி அவர்களே, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் மரியாதைக்குரிய திரு.சின்னசாமி அவர்களே மற்றும் வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அலுவலர்களே, கழகத்திலே பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிருவாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, ஊடக நண்பர்களே, பத்திரிகை நண்பர்களே அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே நம்முடைய எடப்பாடி நகரத்திற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து, ஒவ்வொன்றாக படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். 2011 சட்டமன்ற தேர்தலில் உங்களையெல்லாம் சந்திக்கின்றபொழுது, 30 வார்டுகளிலும் தங்குதடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அதை அப்படியே இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம் தெரிவித்தவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக ஆணை பிறப்பித்து, அதற்குத் தேவையான ரூபாய் 17.36 கோடியை ஒதுக்கி, அந்தப் பணி விரைவாக நடைபெற்று, அம்மாவினுடைய திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அம்மாவினுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு, நம்முடைய எடப்பாடி நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவேரி தண்ணீர் இன்றைக்கு சிறப்பாக கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்தில் வருகின்ற கோரிக்கையை, அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள். அதேபோல, சுற்றுச்சாலை, இன்றைக்கு எடப்பாடி நகரத்திலே உள்ளே வருகின்றபொழுது குறுகலான சாலை, கனரக வாகனங்கள் உள்ளே வரமுடியாத ஒரு சூழ்நிலை. இதை கருத்திலேகொண்டு அந்த சாலையை விரிவுபடுத்தவேண்டுமென்று சொன்னால், பல கட்டடங்களை இடிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது, அதைத் தவிர்ப்பதற்காக போக்குவரத்து நெரிசல் இல்லாமல் கனரக வாகனங்கள் எளிதாக செல்வதற்காக அம்மா புறவழிச்சாலை ஒன்றை நமக்குத் தந்து அதன் முதற்கட்ட பணி முடிக்கப்பட்டு திறந்திருக்கின்றோம், இரண்டாம்கட்ட பணி விரைவிலே திறக்கவிருக்கின்றோம், அதையும் நிறைவேற்றித் தந்தார்கள். அதேபோல மருத்துவமனை வேண்டுமென்று கேட்டோம், அதையும் ரூபாய் 4 கோடியில் கட்டிக் கொடுத்தார்கள், ஜலகண்டபுரத்திற்கும் வெள்ளாண்டிவலசுக்கு இடையே பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் அம்மா அவர்கள் கட்டிக்கொடுத்தார்கள். அதேபோல், நம்முடைய மாணவச் செல்வங்கள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்கவேண்டும், ஏழை, எளிய மக்கள் நிறைந்த இந்த பகுதியிலே உயர்கல்வி படிப்பதற்காக எங்களுக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்லூரியை கொடுத்து அழகான கட்டடத்தையும் கட்டிக் கொடுத்தார்கள், இன்றைக்கு கிட்டத்தட்ட 1,205 பேர் படிக்கின்றார்கள். இப்பொழுதுகூட, நான் வந்தபொழுது, உயர் படிப்பிற்காக இன்னும் சில பாடத்திட்டங்களை கொண்டுவர வேண்டுமென்று சொன்னீர்கள், அதையும் இந்த ஆண்டு இங்கே கொண்டு வருவதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல, நெடுஞ்சாலைத் துறை கோட்ட அலுவலகம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதுவும் திறக்கப்படுகின்றது.

இன்றைக்கு மின்சாரத் துறையைப் பொறுத்தவரைக்கும் டிவிஷன் அலுவலகம் மேட்டூரிலே இயங்கி வந்தது, டிவிஷன் அலுவலகம் போகவேண்டுமென்று சொன்னால் எடப்பாடியிலிருந்து மேட்டூருக்குச் செல்லவேண்டும், நம்முடைய பகுதிக்கு வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்முடைய பகுதிக்குக் கொடுத்து, கட்டடமும் கொடுத்து அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆக, என்னவெல்லாம் கேட்டோமோ, அத்தனையும் கொடுத்தார்கள். அதற்கு மேலாக நான் பேசுகின்ற இந்தப் பகுதியிலே வணிகவளாகம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், அப்பொழுதே அவர்கள் அறிவித்தார்கள், இப்பொழுது அந்தப் பணியும் துவங்க இருக்கின்றது, அதற்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெறுகின்றது. அதேபோல் நம்முடைய நகராட்சி மக்கள் இங்கே ஒரு அழகான பூங்கா வேண்டுமென்று கேட்டீர்கள், அதற்கும் அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பூங்கா அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, எடப்பாடி நகரத்தில் இருக்கின்ற சாலைகளை எல்லாம் விரிவாக்கம் செய்யவேண்டும், கழிவுநீர் முழுமையாக வெளியேற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள், அதையும் அம்மா அவர்களுடைய காலத்திலே நிறைவேற்றி இன்றைக்கு சாலைகள்

விரிவாக்கப்பட்டு போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலையாக உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

அதேபோல, நந்திகேஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னீர்கள், அதற்கும் அம்மா நிறைவேற்றுதல் செய்தார்கள். அதோடு பஸ் நிலையத்திற்கு அருகிலே ஒரு திருமண மண்டபம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதற்கும் அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து, அடிக்கல் நாட்டப்பட்டு, பணி துவங்க இருக்கின்றது. ஆக, என்னனென்ன திட்டங்கள் கேட்டோமோ, அதையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தந்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைய திறப்பு விழா பணிகள்

- IGFF 2014–2015 திட்டத்தில் (பொன்விழா ஆண்டு திட்டம்) ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் வாரச்சந்தை மேம்பாட்டு பணி முடிக்கப்பட்டு இன்றையதினம் திறக்கப்பட்டுள்ளது.
- IGFF 2014–2015 திட்டத்தில் (பொன்விழா ஆண்டு திட்டம்) ரூ.1 கோடி மதிப்பீட்டில் 16 எண்ணிக்கை துப்புரவு பணியாளர்கள் குடியிருப்புகள் கட்டும் பணி முடிக்கப்பட்டு இன்று திறப்பு விழா செய்யப்பட்டிருக்கின்றது.
- IGFF 2014–2015 திட்டத்தில் (பொன்விழா ஆண்டு திட்டம்) ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகளில் 18 கடைகள் பணி முடிக்கப்பட்டு இன்றையதினம் திறக்கப்படுகின்றது.
- TURIP-2016-2017(Phase-II) திட்டத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் 3(சிப்பம்) பணிகள் தார்சாலை 4.393 கி.மீ, சிமெண்ட்சாலை 1.100 கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டு இன்று திறப்பு விழா காணப்பட்டுள்ளது.

இன்று அடிக்கல் நாட்டப்படும் பணிகள்

- TUFIDCO LOAN 2014-2015 திட்டத்தின் கீழ் (பொன்விழா ஆண்டு திட்டம்) பேருந்து நிலையம் அருகில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் நகராட்சி வணிக வளாகம் கட்டும் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2017–2018இல் இடைப்பாடி நகராட்சியில் 5 இடங்களில் நுண் உர மையம் (MCC) ரூ.3.18 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயார் செய்தும், மக்காத குப்பைகளை பிரித்து அவ்வப்போது அகற்றி நகரில் குப்பைகள் தேங்காமல் இருக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

விரைவில் தொடங்கப்பட உள்ள பணிகள்

- சட்டமன்ற புதிய அறிவிப்புகள் 2017–2018இல் அறிவிக்கப்பட்ட திட்டமான இடைப்பாடி நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் வெள்ளண்டிவலசு பகுதியில் இன்றைக்கு திட்டத்தை நிறைவேற்றவிருக்கின்றோம் என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

- இடைப்பாடி நகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்க ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் CGF/ O&M Gap Filling Fund திட்டத்தில் விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இந்நகராட்சியில் நிறைவேற்றப்படும் பணிகள்

- இடைப்பாடி நகராட்சி பகுதியில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின்மூலம் ஏழை மக்களுக்கு 2,117 வீடுகள் தலா ரூ.2.10 இலட்சம்

மதிப்பீட்டில் மொத்தம் ரூ.44.45 கோடிக்கு வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட அனைத்து திட்டங்களாலும் இந்நகராட்சியில் வசிக்கும் 54,823 பொதுமக்களும் பயனடைகிறார்கள்.

ஆகவே, இவ்வளவு திட்டங்களையும் அம்மாவினுடைய அரசு சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைக்கப்பட்டு முடிவுற்ற பணிகள் மட்டும் 6 பணிகள், ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 7 கோடியே 44 இலட்சம், அடிக்கல் நாட்டப்பட்ட புதிய பணிகள்–6, அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 9 கோடி 77 இலட்சத்து 690. தொடங்கி வைக்கப்படும் கால்நடை பராமரிப்புத் துறை பணிகள்–1, ஒதுக்கப்பட்ட நிதி 2.974 இலட்சம். நலத்திட்ட உதவிகள் பெறும் 1,727 பயனாளிகளுக்கு சுமார் 8 கோடியே 79 இலட்சம் ரூபாய் இன்றைக்கு வழங்க இருக்கிறோம். ஆகவே, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக புதிதாக தொடங்கப்பட்ட பணிகள், அடிக்கல் நாட்டப்பட்ட பணிகள், நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்ச்சி சுமார் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். 2011இல் எடப்பாடி நகரம் எப்படி இருந்தது, 2011க்குப் பிறகு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை ஏராளமான திட்டங்கள் எடப்பாடி நகர மக்களுக்கு அளித்ததன் மூலமாக, இன்றைக்கு எடப்பாடி நகரம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை கண்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். கவுண்டம்பட்டியிலிருந்து அரசு மருத்துவமனைக்கும், அரசு மேல்நிலைப்பள்ளி வருவதற்கும் ஒரு பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் அம்மாவினுடைய அரசு 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டிக்

கொடுப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் என்னென்ன கோரிக்கை வைத்தீர்களோ அதையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் உட்புற சாலைகள், ஆங்காங்கே இருக்கின்ற 30 வார்டுகளில் இருக்கின்ற குறுக்கு சாலைகளை சீரமைக்கின்ற பணியும் அம்மாவினுடைய அரசால் துவங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு எடப்பாடி நகரம் பல்வேறு திட்டங்களின் வாயிலாக நீங்கள் வைத்த பெரும்பாலான கோரிக்கைகளை நான் நிறைவேற்றித் தந்திருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, எடப்பாடி தொகுதி ஒரு பின்தங்கிய பகுதியாக இருந்தது. ஆகவே, இந்த பின்தங்கிய பகுதியை வளர்ச்சி அடைந்த பகுதியாக கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே பல்வேறு திட்டங்களை நாங்கள் உருவாக்கி இன்றைக்கு செயலாக்கத்திலே கொண்டு வந்திருக்கிறோம். சித்தூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு, தரம் உயர்த்தி அதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அங்கே 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தி, அங்கே இருக்கின்ற மக்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்காக இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, நங்கவள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி அங்கேயும் 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தி, அங்கிருக்கின்ற பகுதி மக்களுக்கு தகுந்த சிசிக்சை அளிக்கப்படுகின்றது. அதேபோல கொங்கணாபுரம் ஒன்றியத்தில், கொங்கணாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, அங்கேயும் பொதுமக்களுக்கு தேவையான

சிசிக்சை அளிக்கப்படுகிறது. அதேபோல மாதிரி பள்ளி, அதுவும் அம்மாவினுடைய ஆட்சியிலேதான் திறக்கப்பட்டது. இன்றைக்கு கொங்கணாபுரம் ஒன்றியத்தில் வெள்ளாளபுரம் பகுதியில் முனியம்பட்டி பகுதி, எடப்பாடியில், செட்டிமாங்குறிச்சி, நந்தவள்ளியில் கட்டப்பட்டுள்ளன, ஆகவே, அனைத்து வசதிகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தி, அனைத்து வசதிகளையும் நாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கெங்கவள்ளியில் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தியிருக்கிறோம். அதேபோல, இன்றைய தினம் கொங்கணாபுரத்தில் ஆண்கள், பெண்கள் ஒன்றாக படித்திருந்த பள்ளியை, பெண்களுக்கென்று தனியாக பிரித்து மேல்நிலைப்பள்ளி உருவாக்கப்பட்டிருக்கிறது. கோணசமுத்திரத்தில் உயர்நிலைப் பள்ளி ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, கால்நடை செல்வங்கள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக பக்கநாட்டில் ஒரு புதிய கால்நடை மருந்தகத்தை கொடுத்திருக்கின்றோம்.

அதேபோல, விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களை, விலை வீழ்ச்சி அடைகின்றபொழுது அந்த தானியங்களை கூட்டுறவு சங்கத்தின் மூலமாக சேமித்து வைப்பதற்கு வேண்டிய கிடங்கு ஒன்று கட்டப்பட்டு அதில் வைத்துக் கொள்ளலாம். விலை குறைகின்றபொழுது, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய தானியங்களை வைத்து, குறைந்த வட்டியிலே கடனை பெற்றுக் கொள்ளலாம், தானிய விலை உயர்கின்றபொழுது விற்று, இன்றைக்கு இலாபம் அடையலாம். அந்தக் கட்டடத்தையும் ரூபாய் 2 கோடி செலவில் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். அதேபோல, வேளாண்மைத்துறை அலுவலகம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். எடப்பாடி நகரத்தில் மத்திய கூட்டுறவு வங்கி இன்றைக்கு துவங்கப்பட்டிருக்கின்றது. புதிய நியாயவிலைக் கடைகள் திறந்திருக்கின்றோம். புதிய நியாயவிலைக் கடைகளுக்கு கடைகள்

கட்டிக் கொடுத்திருக்கின்றோம், பால் உற்பத்தியாளர்களுக்கு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். பேருந்து நிறுத்தத்திற்கு நிழற்குடை கட்டிக் கொடுத்திருக்கின்றோம். பல்வேறு சாலைகளை புதுப்பித்துக் கொடுத்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 158 கோடியில் சிறப்பான திட்டம், இன்னும் ஒரு மாதத்தில் நிறைவு பெற்று, மேச்சேரி, நங்கவள்ளி உள்ளிட்ட அனைத்து பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் விரைவாக வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீரை அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டுவந்து, அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான தண்ணீரை வழங்கியிருக்கின்றோம். இவ்வளவு திட்டங்களையும் 2011–லிருந்து 2018–க்குள் நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். அனைத்து சாலைகளையும் சீர் செய்திருக்கின்றோம்.

அதேபோல், ஜலகண்டாபுரத்தில் இருக்கின்ற சாயக் கழிவுகள் எல்லாம் பக்கத்திலிருக்கின்ற ஏரியில் வந்து கலந்து கொண்டிருந்தது. அதை சுத்திகரிக்க வேண்டுமென்று சொன்னார்கள், அதற்கு ஏரியை சுத்திகரிக்கும் பணியை துவக்கியிருக்கின்றோம், அந்தப் பணியும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நம்முடைய கிழக்குக்கரை கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுகின்றபொழுது, நிறைய தண்ணீர் வீணாகின்றது, அதை தவிர்ப்பதற்காக, காங்கிரீட் கால்வாயாக மாற்றியமைப்பதற்கு தேவையான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நிறைய திட்டங்கள் நம்முடைய எடப்பாடி தொகுதிக்கு செய்திருக்கின்றோம், சேலம் மாவட்டத்திற்கு நிறைய திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றோம்.

பாலம் கட்டித்தந்திருக்கின்றோம், பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். கூட்டுக் குடிநீர் திட்டம் கொடுத்திருக்கின்றோம். அனைத்துப் பகுதிகளுக்கும் அம்மாவினுடைய ஆட்சியில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், எதிர்க்கட்சி மட்டும் இந்த ஆட்சியில் எதுவுமே செய்யவில்லை, எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை என்று சொல்கிறார்கள், நீங்களே வந்து பாருங்கள், மக்கள் மத்தியில் வந்து கேட்டு தெரிந்துகொள்ளுங்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் மக்களுக்குத் தேவையான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. மக்கள் வைத்த கோரிக்கையை கவனமாக பரிசீலித்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஏழை, எளியவர்களுக்கு கொடுக்கின்ற வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை தருகின்றோம். அதுமட்டுமல்ல, பத்திரப்பதிவு செய்யும் பொழுது, பட்டா மாறுதலுக்கு அந்தந்த தாலுகா அலுவலகத்திற்கு சென்றுதான் செய்யவேண்டுமென்ற நிலையை மாற்றி, பத்திரப்பதிவு செய்கின்றபொழுதே, அதற்காக ஒதுக்கப்பட்ட தனியான இடத்தில் பூர்த்தி செய்து பட்டா வேண்டுமென்றால் அந்த சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நேரடியாக சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்திற்கு அது அனுப்பி வைக்கப்பட்டு, அங்கே சரிபார்க்கப்பட்டு, பத்திரப்பதிவு செய்பவர்களுக்கு பட்டா வழங்குகின்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு பட்டாவிற்காக யாரும் அலைய வேண்டிய அவசியமில்லை. பதிவு செய்கின்ற போதே, அந்த பத்திர பதிவு அலுவலகத்திலிருந்து அந்த நகல் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்திற்கு சென்று அது பதிவு செய்யப்படும். தனி பட்டா வாங்குவதற்காக நீங்கள் செல்ல வேண்டியதில்லை. கூட்டு

பட்டாவாக இருந்தால் அதை சரிசெய்து, அதை அளந்து, அதை தனிப் பட்டவாக உங்களுக்கு வழங்குவதற்கு ஒருமாத காலம் ஆகும். இப்போது அந்த உத்தரவை வழங்க இருக்கின்றோம். தனி பட்டாவாக இருந்தால் உடனடியாக பத்திரப் பதிவு செய்தவுடன் பத்திர பதிவு அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்திற்கு வந்தவுடன் உங்களுக்கு வழங்கப்படும். ஆகவே, ஒரு வருடத்திற்கு சுமார் 7 இலட்சம் பத்திரப் பதிவு செய்யப்படுகிறது என்று சொன்னால், அந்த 7 இலட்சம் பேரும் இன்றைக்கு பட்டா மாறுதல் செய்ய வேண்டும் என்றால் தாலுகா அலுவலகத்திற்கு செல்ல வேண்டும். அந்த நிலையையும் அம்மாவுடைய அரசு இன்றைக்கு நிவர்த்தி செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, பட்டா மாறுதல் வேண்டும் என்று நீங்கள் விண்ணப்பித்தால், அம்மா திட்டத்தின் வாயிலாக உடனடியாக தீர்வு செய்யப்படுகிறது. எவ்வளவோ நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம்.

அதேபோல கல்வியிலே ஒரு புரட்சி, மறுமலர்ச்சியை நீங்கள் பார்க்க முடிகிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் உயர்கல்வி படிக்கக்கூடிய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. 2011இல் அம்மா ஆட்சி பொறுப்பேற்ற போது, அதற்கு முன்பு, திமுக ஆட்சி இருந்தது. திமுக ஆட்சிக்கு பிறகு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அம்மா முதலமைச்சராக ஆனவுடன் அம்மா கல்வியில் செய்த மாற்றம் புரட்சியின் காரணமாக இன்றைக்கு உயர்கல்வி கற்போருடைய எண்ணிக்கை உயர்ந்து, உயர்கல்வி கற்போருடைய எண்ணிக்கை 46 சதவிகிதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உயர் கல்வி படிப்பதிலே திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அப்படி ஒரு அற்புதமான திட்டத்தை அம்மா உருவாக்கியதன் காரணமாகத் தான் மாணவர்களுடைய உயர்கல்வி படிக்கின்ற எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு வேளாண் துறையை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டு 142 ஆண்டுகாலம் இல்லாத கடுமையான வறட்சி. அந்த வறட்சி காலத்தில் கூட, விலைவாசி உயராமல் பார்த்துக் கொண்டோம். பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் குடிநீர் பிரச்சினை இல்லாமல் பார்த்துக் கொண்டோம். ஆகவே, வறட்சியின் காரணமாக பெய்கின்ற மழைநீர் முழுவதுதையும் சேமித்து வைப்பதற்காக குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக முதல் கட்டமாக பரிட்சார்த்த முறையிலே 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 1,519 ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டன.மேலும் இன்றைக்கு கிட்டத்தட்ட 1,600 ஏரிகள் தேர்வு செய்யப்பட இருக்கின்றன. அதற்காக 331 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு, மதகுகள் சரிசெய்யப்பட்டு கால்வாயில் வருகின்ற தண்ணீர் முழுமையாக ஏரிக்கு வருவதற்கும், அதுபோல வெளியேறுகின்ற உபரிநீர் வருகின்ற அந்த கால்வாய்களையும் சீர்செய்வதற்கு எவ்வளவு நிதி தேவையோ அதையும் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, நிலத்தடி நீரை உயர்த்த வேண்டும் என்பதற்காக ஆங்காங்கே ஓடைகளிலும், நதிகளிலும் தடுப்பணை கட்டுவதற்காக கிட்டத்தட்ட மூன்றாண்டு கால திட்டமாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றைக்கு முதல் கட்ட பணி சுமார் 350 கோடி ரூபாயிலே இந்த ஆண்டுமுதல் துவக்க இருக்கின்றோம்.

ஆகவே, பெய்கின்ற மழைநீர் முழுவதையும் சேமித்து வைக்கப்பட்டு, சேமித்து வைக்கப்படுகின்ற நீர் நிலத்தடிக்கு சென்று நிலத்தடி நீர் உயர்ந்து மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி மற்றும் விவசாயத்திற்கு வேண்டிய நீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இவ்வளவு திட்டமும் நாங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம்.

ஆனால் எதிர்க்கட்சியைப் பொறுத்தவரைக்கும் இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை என்று சொல்கிறார்கள். அம்மாவினுடைய ஆட்சியில் தான் மக்களுக்கு தேவையான திட்டங்களை செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றத் தேர்தலில் சொன்னார்கள். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 12,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்று சொன்னார்கள், அதையும் அம்மாவினுடைய அரசால் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல அம்மா இருசக்கரவாகனத்திற்காக அதிகபட்சமாக 25,000 ரூபாய் மானியம் கொடுக்கிறோம். எந்த இருசக்கர வாகனம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். இதுவரையில் 3 இலட்சத்து 34 ஆயிரம் பேர் பதிவு செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட படிப்படியாக 3 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட அனைவருக்கும் ரூபாய் 25,000 ரூபாய் மானியத்தில் அவர்கள் விரும்புகின்ற இருசக்கர வாகனத்தை வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, அம்மாவால் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் அம்மாவினுடைய அரசு முழுமூச்சுடன் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கு நன்றியை தெரிவித்து, அதுமட்டுமல்ல, நான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தாலும் நான் எடப்பாடி தொகுதிக்கு அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றேன். எல்லா பகுதிகளுக்கும் போகிறேன். ஆங்காங்கே இருக்கின்ற மக்களை சந்தித்து, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றேன். ஆகவே, 234 தொகுதியும் முதலமைச்சருடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினாலே, ஆங்காங்கே பிரச்சினைகள் இருக்கின்ற பொழுது, அதையெல்லாம் சரி செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே நான் இப்பொழுது மாதத்திற்கு

இரண்டு முறையாக வந்துவிட்டு செல்கிறேன். முன்பெல்லாம் அடிக்கடி வந்தீர்கள், முதலமைச்சராக ஆன பின்பு தொகுதிக்கு வரவில்லை என்று நீங்கள் குறைபட்டுக் கொள்ளக்கூடாது. நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை நான் நிறைவேற்றித் தருகின்றேன். உங்களைப்போல் 234 தொகுதியில் உள்ள மக்களும் தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று எண்ணுகின்ற காரணத்தினால் அவர்களுடைய பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய காரணத்தினாலேதான் நான் அடிக்கடி வரமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும், உங்களை அடிக்கடி நேரடியாக சந்தித்து மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு நான் தயாராக உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
27.04.2018 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.

பட்டுமேல் அளவற்ற பற்று கொண்டவர்கள் நம்முடைய தமிழ்நாடு மக்கள்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சுருக்கமாக பேசினாலும், விளக்கமாக பட்டு வளர்ப்புத் துறையை பற்றி இந்த துறையினுடைய அமைச்சர் விளக்கமாக தெளிவாக எடுத்துரைத்த மதிப்பிற்கும் மரியாதைக்குரிய

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு. பா.பெஞ்சமின் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே, திட்ட விளக்கவுரை ஆற்றிய கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே!

- ✶ வரவேற்புரை ஆற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே!
- ✶ நன்றியுரை ஆற்றவுள்ள பட்டு வளர்ச்சித்துறையின் இயக்குநர் அவர்களே!

- ✶ இந்த நிகழ்ச்சியிலே, சிறப்பாக கருத்துக்களை எடுத்துரைத்த சட்டமன்ற உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே!
- ✶ சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி.பன்னீர்செல்வம் அவர்களே!
- ✶ கள்ளகுறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.திரு.கே.காமராஜ் அவர்களே!
- ✶ நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்களே!
- ✶ சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வெங்கடாசலம் அவர்களே!
- ✶ சேலம் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.பி.சக்திவேல் அவர்களே !
- ✶ சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ராஜா அவர்களே!
- ✶ ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.வெற்றிவேல் அவர்களே!
- ✶ ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.எம்.சின்னதம்பி அவர்களே!
- ✶ கெங்கவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.மருதமுத்து அவர்களே!
- ✶ ஏற்காடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.கு.சித்ரா அவர்களே!
- ✶ மாநில தலைமை கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே!

* பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.ஆர்.சின்னுசாமி அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே, கூட்டுறவு சங்க நிருவாகிகளே, பட்டு கூட்டுறவு சங்கத்திலே அங்கம் வகிக்கின்ற நிருவாகிகளே, வருகை தந்துள்ள இந்த துறையினுடைய அதிகாரிகளே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, பட்டு வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற விவசாய பெருங்குடிமக்களே, ஊடக நண்பர்களே, பத்திரிகை நண்பர்களே, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நலத்திட்ட உதவிகளை பெற வந்திருக்கின்ற பயனாளிகளே, அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஏன் என்று சொன்னால், இது விவசாயிகளின் நிகழ்ச்சி, நானும் ஒரு விவசாயி என்ற வகையில் கலந்து கொள்வதில் நான்

பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வளவோ அரசு நிகழ்ச்சிகள் இருந்தாலும், அந்த நிகழ்ச்சிகளைக் காட்டிலும், உழைக்கின்ற வர்க்கம் விவசாயிகள். ஆகவே, இந்த மக்களுக்காக, விவசாயிகளுடைய விழாவிலே கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி

"சின்ன சின்ன இழை பின்னிப் பின்னி வரும்
சித்திர கைத்தறி சேலையடி
நம்ம தென்னாட்டில் என்னாளும்
கொண்டாடும் வேலையடி"

என்று நெசவுத் தொழிலைப் பற்றி பட்டுக்கோட்டையார் இந்த பாடல் மூலம் தெளிவாக படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிப்பதிலும், மரபு மற்றும் பண்பாட்டினை பாதுகாப்பதிலும், விவசாயத்திற்கு அடுத்தப்படியாக கிராமப்புற மக்களுக்கு பெருமளவு வேலை வாய்ப்பினை வழங்கி வரும் கைத்தறி மற்றும் துணி நூல் துறையை ஊக்குவிக்கவும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், மாண்புமிகு அம்மா அவர்களாலும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பட்டு வளர்ப்பு தொழில் விவசாயம் சார்ந்த தொழில் என்பதால், கிராமப்புற மக்களுக்கு, குறிப்பாக மகளிருக்கு வேலை வாய்ப்பினையும், இத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு குறுகிய கால இடைவெளிகளில் தொடர் வருவாயையும் ஈட்டித் தருகிறது.

தமிழ்நாட்டில் மல்பெரி பட்டு வளர்ப்பு தொழில் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, கோயமுத்தூர், திருப்பூர், வேலூர், நாமக்கல்,

திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் கச்சாப் பட்டு நூலின் தேவை அளவான 3,000 மெட்ரிக் டன்னில் 1,900 மெட்ரிக் டன் மட்டுமே தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்காக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ✶ மல்பெரி நடவு மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரத்து ஐநூறு ரூபாய் வழங்கப்படுகிறது.
- ✶ ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஐந்து ஏக்கர் மல்பெரி நடவு செய்ய 52 ஆயிரத்து 500 ரூபாய் மானியமாக அரசு வழங்குகிறது.
- ✶ மல்பெரி பயிருக்கு சொட்டு நீர் பாசனம் 1 ஏக்கரில் நிறுவிட அதிகபட்ச மானியமாக 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.
- ✶ புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கு அதிகபட்சமாக 87 ஆயிரத்து 500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.
- ✶ பட்டு வளர்ப்பு தொடர்பான பயிற்சி, ஒசூரில் உள்ள பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் வழங்கப்படுகிறது.

* தானியங்கி பட்டு நூற்பு இயந்திரங்கள் நிறுவிட ரூபாய் குறைந்தபட்சம் 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் முதல் அதிகபட்சமாக ஒரு கோடியே ஆறு இலட்சம் வரை மானியமாக அரசு வழங்குகிறது.

* தரமான வெண் பட்டினை உற்பத்தி செய்திட பட்டு நூற்பாளர்களுக்கு கிலோ ஒன்றுக்கு 100 முதல் 150 ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்காக சுமார் 75 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது. மத்தியப் பட்டு வாரிய நிதி உதவியையும் சேர்த்து கடந்த 3 ஆண்டுகளில் 92 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்திய அளவில் கச்சாப் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. வெண்பட்டு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட்டு வருவதாலும், இத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்குத் தேவையான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதாலும், மாநிலத்தின் மல்பரி சாகுபடி பரப்பு படிப்படியாக அதிகரித்து தற்போது 24,427 விவசாயிகளால் 46,570 ஏக்கர் பரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டு பட்டுத்தொழில் தமிழ்நாட்டில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு, பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்காக சீரிய முனைப்புடன் செயல்பட்டு வருவதாலும், பட்டு விவசாயிகளின் கடின உழைப்பு மற்றும் ஒத்துழைப்பினாலும்,

* தேசிய மொத்த வெண்பட்டு உற்பத்தியில், 89 சதவீதம் வெண்பட்டு உற்பத்தி செய்து தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

* தேசிய அளவில் சராசரி பட்டுக்கூடு உற்பத்தியில் 100 பட்டுமுட்டை வளர்ப்புக்கு 80 கிலோ கிராம் பட்டுக்கூடு அறுவடை செய்து தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து 100 பட்டு முட்டை தொகுதிகளுக்கு 80 கிலோ கிராம் மற்றும் அதற்கு மேல் உற்பத்தி செய்யும் விவசாயிகளில் மாவட்ட அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 25,000 ரூபாய், 20,000 ரூபாய், 15,000 ரூபாய் பரிசு வழங்கவும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ஒரு இலட்சம் ரூபாய், 75,000 ரூபாய், 50,000 ரூபாய் பரிசு வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சிறந்த பட்டு உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு இன்று பரிசு வழங்கியதில் நான் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் பட்டு விவசாயிகள் பயன் பெறும் இந்த ஆண்டுக்கான கையேடு என்னால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த கையேட்டில் உள்ள ஆலோசனைகள் நன்கு பயன்படுத்தி, பட்டுத் தொழில் உற்பத்தியில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என இங்கே வருகை தந்துள்ள பட்டு உற்பத்தி செய்கின்ற விவசாய பெருங்குடி மக்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டை பட்டு உற்பத்தியிலும் முதல் மாநிலமாக திகழச் செய்யும் வகையில், பட்டு விவசாயிகள், பட்டு தொழில் முனைவோர்கள், பட்டு நூற்பாளர்கள், பட்டு நெசவாளர்கள் பட்டு வளர்ச்சித் துறை அலுவலர்கள் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

“ஒற்றுமையோடு அத்தனை நூலும்
ஒழுங்காக வந்தால் வளரும் – இதில்
ஒரு நூல் அறுந்தால் குளறும் – இதை ஒட்டும்
ஏழை கூட்டுறவாலே
இந்த உலகின் தொழில் வளம் உயரும்”

என்றார் பட்டுக்கோட்டையார் அவர்கள். ஒரு துணிக்கே இந்த நிலை என்றால், ஒரு இயக்கம் நன்றாக பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், நாட்டில் உள்ள அனைவரும் ஒழுங்கும், ஒற்றுமையும் அவசியம் என்பதை இங்கே தெளிவுப் படுத்த விரும்புகிறேன். இங்கு எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு காட்டில் நரிக்கும் நாய்க்கும் எப்பொழுதும் மோதல் இருந்து வந்தது. நாயை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற பகை உணர்வு நரியின் மனதில் வேர் பிடித்து இருந்தது. நாய்க்கும் நரியை ஒழித்துக் கட்டவேண்டும் என்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தது. ஒரு நாள், நரி ஒரு புதருக்குள் மறைந்திருந்தது. அப்போது நாய் அந்த வழியே இரை தேட வந்தது. இதை கவனித்த நரி, நாயை ஒரு வழி செய்திட வேண்டும் என்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தது.

அப்போது தனது குரலை மாற்றிய நரி, "நாயாரே! இந்தப் பக்கம் போகாதீர்கள். உம்மை ஒழிக்க உம் பகைவன் தன் கூட்டத்தோடு மறைந்து கிடக்கிறது. போனால் நீ மடிவது உறுதி" என்றது. இதைக் கேட்டதும் நாய் தலைதெறிக்க திரும்ப ஓடியது. இதனைப் பார்த்து நரி மகிழ்ந்தது. ஆனால் இது நரி செய்த செயல்தான் என நாய் பின்னர் அறிந்துக் கொண்டது.

உடனே நரியை அவமானப்படுத்த நினைத்த நாய் கரடியிடம் சென்று ஆலோசனை கேட்டது. அதற்கு கரடி, "நண்பரே! உங்கள் பகை நாளுக்கு நாள் வளர்ந்துக் கொண்டு போவது சரி இல்லை. இதற்கு தீர்வு காண விட்டுக் கொடுக்கும் பண்புதான் வேண்டும். பகைவனை நண்பனாக பார்க்க கற்றுக் கொண்டால் பகை வராது. நரிகுணம் பிறரை நோக வைப்பது தான். இதைப் புரிந்துக் கொண்டு நட்போடு பழகு", என்றது. "கரடியாரே! நான் உங்கள் அறிவுரைப்படி நடக்கிறேன். நரி திருந்துமா", என்றது நாய்.

இதனைக் கேட்ட புதருக்குள் மறைந்திருந்த நரி "நாயாரே! கரடி சொன்ன அறிவுரையை ஏற்று நானும் நடப்பேன். நட்பாக இருப்பேன்.

ஒற்றுமையாக இருந்தால் எந்த பகைவரும் நம்மைக் கண்டு நடுங்குவர். ஒற்றுமையே பலம் என்பது முன்னோர் வாக்கு. நட்பின் பெருமை உங்களால் புரிந்தது. இனி நானும் உங்கள் நண்பன்'', என்றது.

அன்று முதல் இரண்டும் ஒற்றுமையாக வேட்டைக்குச் சென்றன. இந்த கதையில் உள்ள நீதியினை நாம் அனைவரும் நமது நிஜ வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பட்டு உற்பத்தியைப் பொறுத்தவரை சேலம் மாவட்டதில் 30 பட்டு உற்பத்தியாளர் சங்கங்கள் இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் 300 பட்டு உற்பத்தியாளர் சங்கங்கள் இருக்கின்றன. அதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டு நூல் 1,900 மெட்ரிக் டன் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. நமக்கு வேண்டியது 3,000 மெட்ரிக் டன். விவசாய பெருங்குடி மக்கள் இன்னும் கூடுதலாக இந்த பட்டு உற்பத்தியிலே அக்கறை செலுத்தி நமக்குத் தேவையான 1,100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யவேண்டுமென்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன். அதற்குண்டான அனைத்து அடிப்படை தேவைகளையும் அம்மாவினுடைய அரசு செய்து கொடுக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லோருக்கும் இனிமையான விழா, திருமண விழா. அதில் தமிழ்நாட்டின் கலாச்சாரம், பண்பாட்டின்படி பட்டாடை உடுத்துவது சான்றோர்கள், ஆன்றோர்கள் நமக்கு கற்றுக்கொடுத்த ஒரு நிகழ்வு. ஆகவே பட்டு உற்பத்தியாளர்களாகிய நீங்கள் தயார் செய்கின்ற உடையை மணமக்கள் அணிகின்றார்கள், இந்தத் தொழில் மணமேடை வரை செல்கின்றது. நம் நாட்டுப் பெண்கள் பட்டாடை அணிவதில் மனமகிழ்ச்சி அடைகின்றனர். அதுபோல, நல்ல நிகழ்ச்சிக்காகவோ அல்லது வரவேற்பு நிகழ்ச்சிக்காகவோ

செல்கின்றபோது பட்டாடை அணிவித்து கௌரவிப்பார்கள். இது சாதாரண விஷயமில்லை, இது வரலாற்றுச் சிறப்புமிக்கது. எனவே, பட்டு மேல் அளவற்ற பற்று கொண்டவர்கள் நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இன்றைக்கு சாலை பாதுகாப்பு விதிகளை கடைபிடிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு கையேட்டினை அனைவரும் படித்துப்பார்க்க வேண்டும். விலை மதிக்க முடியாத உயிரை எந்தவிதத்திலும் சாலை விபத்தின் மூலமாக பறிகொடுத்து விடக்கூடாது. சாலைப் பாதுகாப்பு விதியினை அனைவரும் கடைபிடிக்கவேண்டும். வாகனஓட்டிகள் சாலைப் பாதுகாப்பு விதிகளை பின்பற்றினால் எந்த விபத்தும் ஏற்படாது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு சாலை விபத்துக்களை குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஆண்டுக்காண்டு வாகனங்களின் உற்பத்தி, பயன்பாடு அதிகரித்துக்கொண்டே இருப்பதால், சாலைகளின் விஸ்தரிப்பை அதிகரிக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அதிக நிதி ஒதுக்கீடு செய்து, தமிழகத்தில் 2011–லிருந்து இன்று வரை பல்வேறு சாலைகளை விரிவுபடுத்தி, தரமான சாலைகளாக சீர்செய்துள்ள காரணத்தினால் விபத்துக்கள் குறைக்கப்பட்டுள்ளது. சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆங்காங்கே பதாகைகளை அமைத்து, சாலைப் பாதுகாப்பு விதிகளை வாகன ஓட்டிகள் கடைபிடிக்க வேண்டுமென்ற தகவலை நாம் அவர்களுக்கு அளிப்பதின் மூலமாக விபத்துக்களை குறைக்க முடியும் என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன்.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள சேலத்திலிருந்து சென்னை வரை பசுமைச் சாலை என்ற திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றபொழுது சேலத்திலிருந்து சென்னைக்கு 3 மணி நேரத்தில் செல்ல முடியும். மாண்புமிகு அம்மா அவர்கள்

ஆட்சிக்கு வந்தபிறகு தான் சாலைகளின் விரிவாக்கம் அதிகமாக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கனரக வாகனங்கள் புறவழிச்சாலை வழியாக அதிகளவில் செல்கின்ற காரணத்தினாலே அனைவருக்கும் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலை களைவதற்கு, விரைந்து, காலதாமதம் இல்லாமல் செல்வதற்கு, விபத்தைத் தவிர்ப்பதற்கு உயர்மட்டப் பாலங்கள் அம்மாவினுடைய அரசால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. பாலம் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சேலத்திற்கு புறவழிச்சாலை அமைப்பதற்கும் அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சாலைகள் தரம் உயர்த்தப்படுகின்றன, அகலப்படுத்தப்படுகின்றன. பல்வேறு சாலைகள் இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டு தேசிய நெடுஞ்சாலைகளாகவும் உயர்த்துவதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இன்றையதினம், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக ஏற்கனவே ரூபாய் 414.350 இலட்சம் மதிப்பிலான 9 பணிகள் முடிக்கப்பட்டு, துவங்கப்பட்டுள்ளன. அதேபோல, ரூபாய் 1,440 இலட்சம் மதிப்பிலான 24 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 40.597 இலட்சம் மதிப்பிலான 1 கால்நடைத் துறைப் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் வாயிலாக ரூபாய் 1,311.821 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மூலம் கிட்டத்தட்ட 2,078 பயனாளிகள் பயன்பெறுகின்றனர். ஆக மொத்தம், ரூபாய் 3,206.768 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப்பணிகள், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்ற மகத்தான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது பக்கத்து தோட்டத்தில் பட்டுப் புழு வளர்ப்பு பணியில் விவசாய பெருங்குடி மக்கள் ஈடுபட்டிருந்தார்கள். பிறந்த குழந்தையை எப்படி நாம் கவனிக்கின்றோமோ, அதைப்போல, இந்தப் பட்டுப் புழு வளர்ப்பு அவ்வளவு முக்கியம். கிட்டத்தட்ட அதற்கு ஒரு காலநேரம் குறித்திருக்கின்றார்கள். முதற்கட்டத்திலிருந்து, முட்டையிலிருந்து அந்த புழு உருவாவதிலிருந்து, அது முதிர்ச்சி பெறுகின்ற வரை அதற்கு தேவையான உணவை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். இத்தனை மணி நேரத்திற்கு ஒரு முறை உணவு கொடுக்கவேண்டுமென்று கொடுத்துக் கொண்டிருந்தால்தான், அந்த புழு நன்றாக வளர்ந்து பட்டு கிடைக்கும். ஆகவே, வருகை தந்திருக்கின்ற விவசாயிகள் பிறந்த குழந்தையைப் போல இந்த புழுக்களை வளர்த்து பட்டுப் புழுவை எடுக்கின்றார்கள். இந்தப் பணி மெச்சத்தக்க பணி. அவர்களுடைய உழைப்பு என்றைக்கும் வீண்போகாது. அப்படிப்பட்ட விவசாய பெருங்குடிமக்கள் கலந்து கொண்டிருக்கின்ற இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெறுவதிலே மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய பணி தொடர என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***28.04.2018** அன்று சேலம் மாநகரில் நடைபெற்ற*
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

எத்தனை காலங்கள் ஆனாலும் பச்சையப்பன் கல்லூரி சிரஞ்சீவியாகவே இருக்க வேண்டும்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி

பெருமை மிக்க பச்சையப்பன் கல்லூரியின் 175ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.விஜயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சிக்கு முத்தாக இருக்கின்ற, வரவேற்புரை ஆற்றிய பச்சையப்பன் அறக்கட்டளை வாரியத்தின் தலைவர் மரியாதைக்குரிய திரு. எஸ்.ஜெயசந்திரன் அவர்களே!

முன்னிலை வகிக்கும் பச்சையப்பன் அறக்கட்டளையின் நிதி அறங்காவலர் பேராசிரியர் வி.ராமநாதன் அவர்களே! மற்றும் அறங்காவலர்கள் டாக்டர் ஆர்.பிரபாகரன் அவர்களே! திரு. கே.ஹேமநாத் அவர்களே! மற்றும் அறக்கட்டளையின் உறுப்பினர் செயலாளர் திரு. வி.துரைமோகன் அவர்களே!

நன்றியுரை ஆற்ற இருக்கின்ற பச்சையப்பன் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.காளிராஜ் அவர்களே! மற்றும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே ! தலைமைக் கழக நிர்வாகிகளே, மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திருமதி கோகுல இந்திரா அவர்களே,

சட்டப்பேரவை உறுப்பினர்கள் மரியாதைக்குரிய திரு.பலராமன் அவர்களே, மரியாதைக்குரிய திரு.விஜயகுமார் அவர்களே, மரியாதைக்குரிய திரு.சத்யா அவர்களே மற்றும் முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.சோமசுந்தரம் அவர்களே, திரு. பாலகங்கா அவர்களே, திரு.வாலாஜாபாத் கணேசன் அவர்களே மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! பேராசிரிய பெருமக்களே! மாணவ கண்மணிகளே! பெற்றோர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! செய்தியாளர்கள் (ம) ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

‘கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை’என்ற குறளின் வாயிலாக

‘ஒருவருக்கு அழியாத சீரிய செல்வமானது கல்வி என்றும்,
அது அல்லாமல், மற்றைய செல்வங்கள் எல்லாம்
பெருமையானவை அல்ல’ என்றும் உறுதியாக கூறியுள்ளார்.

அதனால்தான்.. அறம் செய்ய நினைத்த சான்றோர் பெருமக்கள், அந்தக் காலத்திலேயே அறக்கட்டளை வாயிலாக கல்விச் சாலைகளை நிறுவினார்கள். அன்ன சத்திரம் ஆயிரம் திறப்பதைக் காட்டிலும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்பதுதான் மிகவும் சிறப்பானதாக கருதப்படுகிறது.

அறவழியில் ஒருவருக்கு கல்வியை கொடுத்துவிட்டால்.. அவருடைய எதிர்கால தலைமுறைக்கே கல்வி கொடுத்தது போலாகிவிடும்.

தலைமுறை தலைமுறையாய் நாட்டு மக்கள் அனைவரும் கல்வி பெற்றுவிட்டால் அன்ன சத்திரங்களின் அவசியமே நமக்கு ஏற்படாது. அந்தக்கல்வியைக்கொடுக்கக்கூடியது‘அறம்’ஆகும்.அதனால்தான் கல்விச் செல்வத்தைவிட ஒரு சிறப்பான முதன்மையான செல்வம் இருக்குமேயானால் அது ‘அறம்’ ஒன்றாகத்தான் இருக்க முடியும் என்று அறத்தின் சிறப்பை திருவள்ளுவர் கூறுகிறார்.

இந்த பச்சையப்பன் கல்லூரி பழமையும், பெருமையும் மிக்க கல்லூரியாகும். பச்சையப்பன் கல்லூரியில் படிப்பதும், பணிபுரிவதும் பெருமையாகும். மிகச்சிறந்த அரசியல் தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் உருவாக்கிய மேன்மையான கல்லூரி இந்த கல்லூரி. மற்ற கல்லூரிகளில் படித்து சாதனை புரிந்த பெருமக்களை

நாம் அறிஞர்கள் என்றுதான் அழைக்கின்றோம். ஆனால், பச்சையப்பன் கல்லூரியில் படித்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மட்டும்தான் அறிஞர் என்றும், பின்னர் பேரறிஞர் என்றும் மக்களால் அழைக்கப்பட்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் ஆனார்.

கசடற கற்க!
கற்ற பின்,
அதன்படி நிற்க!

என்ற கருத்தை பின்பற்றி பச்சையப்பன் கல்லூரியை சரியாகப் பயன்படுத்தியவர்கள் அறிஞர்களாக முன்னேறுவார்கள் என்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்களே முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள்.

‘கல்விக்கும், அந்தக் கல்வியை வழங்கிய
கல்வி நிலையத்திற்கும் ஆயுள் மிகமிக அதிகம்’ என்பார்கள்.

இலட்சக்கணக்கானவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் படித்திருக்கிறார்கள். அந்தக் கல்வியை வழங்கிய பச்சையப்பன் கல்லூரியை காலமும், வரலாறும் பதிவு செய்து உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.

இன்னும் எத்தனை காலங்கள் ஆனாலும் பச்சையப்பன் கல்லூரி, சிரஞ்சீவியாகவே இருக்கும்; இருக்க வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

இந்த பொன்னான நேரத்தில், இந்த அறக்கட்டளையின் கருவாகத் திகழும், அமரர் பச்சையப்பன் அவர்களை நினைவுகூர்வது இன்றைய மாணவர்களை ஊக்கப்படுத்தும் என்று நினைக்கிறேன்.

அமரர் பச்சையப்பன் அவர்கள் தன் தாய் திருமதி பூச்சியம்மாள் மற்றும் இரண்டு சகோதரிகளுடன் 1759ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார்கள்.

ஆங்கிலேய வணிகர்களுக்கு மொழி பெயர்ப்பாளராய் விளங்கிய திரு.நாராயண பிள்ளை அவர்களிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

தர்ம சிந்தனை கொண்ட திரு. நாராயண பிள்ளை அவர்கள் ஆங்கிலப் பயிற்சியுடன் கணக்கு மற்றும் கடிதத் தொடர்பிலும் ஆழமான பயிற்சி அளித்து சிறுவன் பச்சையப்பன் அவர்களுக்கு அடிப்படைக் கல்வியை ஊட்டினார்கள். திரு. பச்சையப்பன் ஆங்கிலத்தில் அறிவு பெற்று வணிகத் தொடர்பில் சிறந்து விளங்கினார்கள்.

இரக்க குணத்தோடும், கருணை உள்ளத்தோடும் திரு. நாராயண பிள்ளை தனக்கு வழங்கிய கல்வியால்தான் தன் வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டு, அந்த மாற்றம் பலருக்கும் முன்னேற்றத்தை வழங்கியதை திரு. பச்சையப்பன் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் மறக்கவில்லை.

அதன் வெளிப்பாடுதான், இன்று அமரர் பச்சையப்பன் அவர்கள் பெயரில் அறக்கட்டளை உருவாகி அதன் வழியாக நாடு முழுவதும் கல்வி நிறுவனங்கள் மலர்ந்திருக்கின்றன.

பச்சையப்பன் அறக்கட்டளையால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் ஏதோ செங்கற்களாலும், கருங்கற்களாலும் கட்டப்பட்டவையாக நாம் கருதிவிடக்கூடாது. அவை அனைத்தும் திரு. பச்சையப்பன் அவர்களுடைய உழைப்பு, உண்மை, இரக்கம், கடவுள் பற்று, எளிமை, அன்பு, தியாகம் ஆகியவற்றால் கட்டமைக்கப்பட்டவை என்பதை நாம் மறக்கக் கூடாது.

பழமையும் பெருமையும் மிக்க இந்தக் கல்லூரி சென்னையின் மையப் பகுதியில் 1842–ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ஒரு பள்ளிக்கூடமாக தொடங்கப் பெற்று பிறகு கல்லூரியாக வளர்ந்தது.

* 1864இல் சிதம்பரத்தில் பள்ளிக்கூடம்,

- 1865இல் சென்னையில் பள்ளிக்கூடம்,
- 1866இல் செங்கல்வராய நாயக்கரின் பெயரில் வணிகவியல் பள்ளி,
- 1950ஆம் ஆண்டுகளில் காஞ்சிபுரத்திலும், சின்னக் காஞ்சிபுரத்திலும் கிளை பள்ளிக்கூடங்கள்,
- 1950ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் மறைந்த பெருமகனார் திரு. சி.கந்தசாமி நினைவாக இரண்டாம் நிலைக் கல்லூரி,
- 1965ஆம் ஆண்டு சென்னையில் பள்ளிக்கூடம்,
- 1967ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பெண்கள் கல்லூரி,
- 1967ஆம் ஆண்டு திரு. சி.கந்தசாமி அவர்களின் நினைவாக கடலூரில் ஒரு மகளிர் கல்லூரி,
- 1971ஆம் ஆண்டு சென்னை அண்ணா நகரில் ஆடவருக்கான கல்லூரி,
- 1972ஆம் ஆண்டு கிண்டியில் செல்லம்மாள் மகளிர் கல்லூரி என அறக்கட்டளை கல்வி நிறுவனங்கள்

திரு. பச்சையப்பன் அவர்களை எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றன.

இந்த அறக்கட்டளையின் காரண கர்த்தாவாகிய அறப்பணிச் செம்மல் திரு. பச்சையப்பன் அவர்களை அனைவரும் நினைவுகூரும் வகையில் அவருடைய திருவுருவச் சிலையை 05.01.1963 அன்று அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஏழை, எளிய மாணவர்கள், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்வியில்

முன்னேற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தொடங்கப் பெற்றதுதான் அறக்கட்டளை கல்வி நிறுவனங்கள்.

அறக்கட்டளையின் நோக்கம் வெற்றி பெற வேண்டுமானால் இங்கே பயிலும் மாணவர்கள் தங்கள் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து நடந்து இக்கல்லூரிக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும்.

இந்த நாட்டின் எதிர்காலமும், மிகப்பெரிய சொத்தும் மாணவர்கள்தான் என்று கருதிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாணவர்கள் பெரிதும் பயன்பெறும் கல்வித் துறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினார்கள். அதிக நிதி ஒதுக்கீடும் செய்தார்கள்.

அதனை மேம்படுத்த பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

புதிய பள்ளிகள், புதிய கல்லூரிகள், புதிய பாடத் திட்டங்கள், ஆசிரியர் மற்றும் கல்விப் பணியாளர்கள் அதிகமான அளவில் பணி நியமனம், மாணாக்கருக்கு கல்வி உதவித் தொகை, விலையில்லா கல்வி உபகரணங்கள், மாற்றியமைக்கப்பட்ட சத்துணவு வகைகள் என பல்வேறு திட்டங்களால் தமிழ்நாட்டை கல்வியில் சிறந்த தமிழ்நாடாக மாற்றிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் தமிழ்நாட்டில் குக்கிராமங்களிலிருந்து படித்து வந்த இளைஞர்கள் கூட, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் இந்திய தொழில்நுட்பத் தேர்வுகளிலும் அதிக அளவில் வெற்றி பெறத் தொடங்கினார்கள்.

2011 ஆம் ஆண்டு வரை உயர் கல்வியில் படிக்கின்ற மாணவர் சேர்க்கை விழுக்காடு 21 ஆக இருந்தது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் செயல்படும் அம்மா ஆட்சியில் இன்று உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விழுக்காடு **46.90** ஆக உயர்ந்திருக்கிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே செய்த புரட்சி மாற்றத்தின் விளைவாக, கல்விக்கு செய்த உதவியின் விளைவாக, இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்து இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த கல்வித் திட்டங்கள்தான் காரணமாகும்.

2017–2018ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் உயர்கல்வித் துறைக்கு மட்டும் **3** ஆயிரத்து **680** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. **9** புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன.

3 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டன. ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஒரு ஆண்டில் மட்டும் **188** உதவி பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்படி இந்த அரசு கடந்த ஓராண்டில் செய்த கல்விப் புரட்சியை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

அரசும், பச்சையப்பன் அறக்கட்டளை போன்ற சிறந்த கல்வி அறக்கட்டளைகளும், அறத்தின் வழியில் கல்வியை அள்ளி அள்ளிக் கொடுத்தாலும், அதை பெறுகிற மாணவச் செல்வங்கள் நன்கு பயனடைந்து, வளமான, நலமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த இனிய வேளையில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்வில் வெற்றி பெறுவது அல்ல
முழுமையான வெற்றி!
வாழ்க்கையில் வெற்றி பெறுவதுதான்
உண்மையான வெற்றி!

போட்டிகளில் முதன்மையான இடங்களை பிடிப்பது முழுமையான வெற்றி அல்ல.

முன்னேறிக் கொண்டே இருப்பதுதான்
உண்மையான வெற்றி!

உங்கள் முன்னேற்றத்திற்கு முதலீடு நீங்கள் செலவழிக்கும் நேரம்தான். உங்கள் நேரம்தான் உங்கள் வாழ்க்கை. உங்கள் வாழ்க்கைதான் நீங்கள் இந்த சமுதாயத்திற்கு சொல்லும் செய்தி!

இன்றைக்கு உங்களுக்கு பலவிதமான ஆசைகளைக் கூறி உங்கள் கல்வியை பாழ்படுத்த பல சுயநல சக்திகள் உருவாகி வருகின்றன. அவர்களுடைய போலி வாக்குறுதிகளை நம்பாமல் உங்களை பெற்றெடுத்த பெற்றோருக்கு நல்ல பிள்ளைகளாக, நம்பிக்கைக்குரிய பிள்ளையாக நீங்கள் கடமையாற்ற, உங்கள் வழியில் கடுமையாக உழைத்து முன்னேறுங்கள்.

இன்று மாணவர்களின் கவனத்தை சிதறடிக்கும் வலைதளங்கள், வாட்ஸ் அப், சின்னத்திரை, பெரிய திரை போன்றவற்றில் உங்களின் பொன்னான நேரத்தை செலவழிக்காமல், உங்கள் அறிவுக்கு தேவையான செய்திகளை பெறும் சாதனமாக மட்டுமே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உண்மையான செய்திகளை மட்டுமே நம்புங்கள். போலியான அவதூறான செய்திகள் அலங்காரமாக வந்து உங்களை மயக்கக்கூடும். அதையெல்லாம் நம்பி திசைமாறி விடாதீர்கள்.

சிறந்த ஆற்றலும், வலிமையான சக்தியும் உங்களிடம் ஏராளமாக பொதிந்து கிடக்கின்றன. உங்களை நீங்கள் முழுமையாக புரிந்து கொண்டால், வெற்றிகள் உங்களைத் தேடி வரும். இதை ஒரு நிகழ்வின் மூலம் கூறினால் உங்களுக்கு நன்கு விளங்கும் என கருதுகிறேன்.

இளைஞன் ஒருவன் குருவிடம் சென்று, ‘‘குருவே, நான் தோற்றுக் கொண்டே இருக்கிறேன். வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள் ஏதாவது இருந்தால் கூறுங்கள்’’ என்று கேட்டான். அதற்கு குரு, ‘‘தோற்று விடுவோம் என்ற உன் தாழ்வு மனப்பான்மையையும், தோல்வி மனப்பான்மையும் தூக்கி எறிந்துவிடு, மற்றவர்களைக் கவர்ந்து இழுக்குமாறு உன் தோற்றம் அமைய வேண்டும்.

அதற்கு ஒரே வழி, கழுதை அழுக்குப் பொதியை சுமப்பது போல, உன் மனதுக்குள் இருக்கும் கவலைகள், வருத்தங்கள் போன்றவற்றை சுமக்காமல், அவற்றை இறக்கி வைத்து விடு. உன் தோற்றம் பொலிவு பெற்று மற்றவர்களைக் கவரக்கூடியதாக மாறும். நினைப்பதை மிக உயர்வாக நினை. அவ்வாறு நினைத்தால், உன்னுடைய ஏழ்மைத் தன்மை, வறுமை ஆகியவற்றிலிருந்து நீ விடுதலை பெறுவாய்.

நீ எப்போதும் நியாயத்தை மட்டுமே பேசு. எதையும் கூர்மையாக உற்று நோக்கு. நீ எங்கே சென்றாலும், கூடவே மகிழ்ச்சியையும் எடுத்துச்செல். நல்லதை மட்டுமே நினை. உன் எண்ணம் போலத் தான் நீ வளர்வாய். உன் மனதிற்கு நீ அடங்கக் கூடாது. உனக்கு மனம் அடங்க வேண்டும்.

எதுவும் எளிதில் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்படாதே, உழைத்துப் பெறப்படுவது தான் நீண்ட நாள் நிலைக்கும். யாராலும் செய்ய முடியாது என்று மற்றவர்கள் நிராகரித்ததை, சவாலாக எடுத்து நீ செய்து காட்டு. நான் கூறியவற்றை பின்பற்றினால், உனக்கு நிச்சயமாக வெற்றி கிட்டும்’’, என்று குரு கூறினார்.

மேலே குரு தனது சீடனுக்கு கூறிய வெற்றி மந்திரங்கள் அந்த இளைஞனுக்கு மட்டுமல்ல, இதனை, இங்கே இருக்கிற அத்தனை இளைஞர்களும் பின்பற்றினால், தோல்வி என்பது உங்களை ஒருபோதும் நெருங்காது என்று உறுதியாக கூறிக்கொள்கிறேன். நீங்கள் வெற்றி பெற மீண்டும் உங்களை வாழ்த்துகிறேன். இங்கே

ஒரு முக்கிய ஒற்றுமையினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1968ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளையின் 125ஆம் ஆண்டு விழாவில் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு பெருமை சேர்த்தார்கள்.

1994ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளையின் 150ஆம் ஆண்டு விழாவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கலந்து கொண்டு இந்த கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்கள்.

இவ்விரு பெருந்தலைவர்களையும் தொடர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால், இந்த அறக்கட்டளையின் 175ஆம் ஆண்டு விழாவில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.

எனவே, எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய பச்சையப்பன் அறக்கட்டளை நிருவாகிகளுக்கும், பச்சையப்பன் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு விழாக் குழுவினருக்கும் மீண்டும் ஒரு முறை எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.05.2018 அன்று சென்னை, பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற பச்சையப்பன் கல்லூரியின் 175ஆவது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.*

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட ஏழை, எளிய மாணவ, மாணவிகளுக்கு முதலிடம் கொடுக்கும் கல்லூரி!

கல்வியிற் சிறந்த கலைவடிவம் கவிதையாய் பிறந்த கருணைத் தெய்வம்! புறநானூற்று வீரத்தின் புதுஉருவம் புதுமைகள் தினம் படைத்த அறிவுச் செல்வம்! அன்னைக் குலத்தை அரவணைத்துக் காத்த ஞானத் தாய்! ஆருயிராய்த் தமிழர்களை நேசித்த ஆற்றல் தலைவி!

இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, பழைமையும் பெருமையும் கொண்ட பச்சையப்பன் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு தலைமையேற்றுள்ள பச்சையப்பன் அறக்கட்டளையின் தலைவர் திரு. எஸ்.ஜெயச்சந்திரன் அவர்களே! இவ்விழாவின் தலைமை விருந்தினராக பங்கேற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு துணை

முதலமைச்சர் அண்ணன் திரு. பன்னீர்செல்வம் அவர்களே! விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! கழக மாணவர் அணிச் செயலாளர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.விஜயகுமார் அவர்களே! முன்னிலை வகிக்கும் பச்சையப்பன் அறக்கட்டளையின் நிதி அறங்காவலர், பேராசிரியர் வி.இராமநாதன் அவர்களே!

பச்சையப்பன் அறக்கட்டளையின் அறங்காவலர், டாக்டர் ஆர்.பிரபாகரன் அவர்களே! பச்சையப்பன் அறக்கட்டளையின் அறங்காவலர், திரு. ஹேமநாத் அவர்களே! பச்சையப்பன் அறக்கட்டளையின் அறங்காவலர் மற்றும் உறுப்பினர் செயலர் திரு. வி.துரைமோகன் அவர்களே! விழாவின் நிறைவாக நன்றியுரை ஆற்றயிருக்கும் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ்.காளிராஜ் அவர்களே! திரளாக இவ்விழாவில் பங்கேற்றுள்ள பச்சையப்பன் கல்லூரியின் பேராசிரியப் பெருமக்களே!

எதிர்கால இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரங்களான மாணவச் செல்வங்களே! ஆர்வத்துடன் இவ்விழாவில் பங்கேற்றுள்ள இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்களே!

ஆற்றல் மிகுந்த தலைமைக் கழகத்தின் நிருவாகிகளே! கழக முன்னோடிகளே! மகளிர் அணியைச் சார்ந்த சகோதரிகளே! பொதுமக்களே! தாய்மார்களே! சகோதர சகோதரிகளே! என் இதயத்தை விட்டு என்றும் நீங்காத இளைய தலைமுறைச் செல்வங்களே! பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

175 ஆண்டுகள் கடந்த பின்னும் மாறாத இளமையோடும், மங்காத புகழோடும் திகழ்ந்திடும் பச்சையப்பன் கல்லூரியின் 175–வது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்காக மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை” – என்கிறது திருக்குறள்.

கல்வியே ஒருவருக்கு அழியாத செல்வம். மற்ற செல்வங்கள் எல்லாம் செல்வங்கள் ஆக மாட்டாது என்பது வள்ளுவர் வாய்மொழி.

மாணவச் செல்வங்களின் அறிவை மேம்படுத்தி, நல்லொழுக்கம், பண்பாடு ஆகியவற்றை ஊட்டி, அவர்களுக்குள்ளே மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர வாய்ப்பளித்து, ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடையச் செய்வது கல்வியே !

ஆனால், இவற்றை அவர்கள் தனியே செய்திட முடியாது. அதற்கு ஒரு களம் தேவை. அந்தக் களம்தான் நாம் படிக்கின்ற கல்விச்சாலைகள். உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, உணர்வுகளின் வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளர்ச்சியைத் தருவது நாம் பயிலுகின்ற பள்ளிகளும், கல்லூரிகளுமே ஆகும்.

சமூகச் சிந்தனைகள் பள்ளிப் பருவத்திலிருந்து அவர்களது இதயத்தில் விதைக்கப் பட்டாலும், அவை உரமிட்டு வளர்க்கப்படுவது கல்லூரியில்தான்.

இந்த வளர்ச்சிதான் ஒருவனைக் கவிஞன் ஆகவோ, கலை வல்லுநராகவோ, விஞ்ஞானி ஆகவோ, விளையாட்டு வீரனாகவோ, தத்துவ மேதையாகவோ, நல்லாசிரியராகவோ, இயக்கத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கும் ஒரு தொண்டனாகவோ அல்லது வழிகாட்டும் ஒரு தலைவனாகவோ உருமாற்றுகிறது, உயர்த்துகிறது.

அப்படி சிறந்த விளங்கும், கல்லூரிகளின் கலங்கரை விளக்கமாக பச்சையப்பன் கல்லூரி திகழ்கிறது.

ஒரு கோவில் கட்டினால் – இந்துக்களுக்கு மகிழ்ச்சி,

ஒரு தேவாலயம் கட்டினால் – கிருஸ்தவர்களுக்கு மகிழ்ச்சி,

ஒரு மசூதி கட்டினால் – இஸ்லாமியர்களுக்கு மகிழ்ச்சி,

ஆனால், ஒரு கல்வி நிறுவனத்தை கட்டினால் – நம்மை படைத்த கடவுளுக்கே மகிழ்ச்சி என்பார்கள். அந்த வகையில், வறுமையில் பிறந்தாலும், கடின உழைப்பால் வாழ்வில் உயர்ந்து, தான் உழைத்துச் சம்பாதித்த அத்தனை சொத்துக்களையும் கல்விச் சேவைக்காக வழங்கி, இலட்சக்கணக்கான ஏழை எளிய மாணவர்களின் வாழ்வை உயர்த்திட உன்னத மாமனிதரான கல்வி வள்ளல் பச்சையப்பர் உருவாக்கிய, பச்சையப்பன் கல்லூரி இன்றும் அவரை நினைவுபடுத்தியபடியே இருக்கிறது. பல கல்லூரிகளுக்குள் கோவில்கள் இருக்கும். ஆனால், ஒரு கல்லூரியே கோவிலாக இருப்பது இங்கு தான்.

தமிழகத்தின் அறிவுச்சுடர் – அறிஞர் அண்ணா அவர்களைத் தந்தது இக்கல்லூரி, கணித மேதை – சீனிவாச ராமானுஜம் அவர்களைத் தந்தது இக்கல்லூரி, நாடக தந்தை – பம்மல் சம்பந்த முதலியார் அவர்களைத் தந்தது இக்கல்லூரி, தமிழே தன் வாழ்வு என வாழ்ந்த தமிழறிஞர் மு.வரதராசன் அவர்களைத் தந்தது இக்கல்லூரி, இன்னும், மக்களவைத் தலைவராக இருந்த அனந்த சயனம் அய்யங்கார், திராவிட இயக்க முன்னோடிகளான ஈ.வெ.கி.சம்பத், நாவலர் நெடுஞ்செழியன், இந்திய தேசிய காங்கிரசின் முன்னாள் தலைவர் திரு. சி.விஜயராகவாச்சாரியார், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ்.மனோகர், முன்னாள் ஆந்திர முதல்வர், திரு. பிரம்மானந்த ரெட்டி என, அறிவியலில், அரசியலில், திரைத்துறையில், விளையாட்டில் புகழ் பெற்று திகழும் சாதனை மனிதர்களை – சரித்திர நாயகர்களாக உருவாக்கிய பெருமை, இந்த பச்சையப்பன் கல்லூரிக்கு உண்டு.

இன்று பச்சையப்பர் பெயரில் ஆறு கல்லூரிகளும், ஏழு பள்ளிகளும், தமிழகமெங்கும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறது. இத்தனைக்கும் அடிப்படையாக இருப்பது பச்சையப்பரின் பெருந்தன்மையும், பரந்த மனதும், வள்ளல் குணமுமே ஆகும்.

“கல்வி கற்றோம் என்ற
கர்வத்திலே இன்பம்
உண்டாவதில்லை என் தோழா!
கல்லாத பேரையெல்லாம்
கல்வி பயிலச் செய்து
காண்பதில் தான் இன்பம் என் தோழா!”

– என்று பாடினார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்

இந்த வைர வரிகளுக்கு முன்னோடியாக வாழ்ந்தவர் பச்சையப்பர் என்று எடுத்துக் கூறுவதில், நான் மிகவும் பெருமை கொள்கிறேன்.

முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் கனவு கண்ட பேராசிரியப் பெருமக்கள் பணிபுரிகின்ற கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் கனவு கண்ட புதிய இந்தியாவை படைக்கும் ஆற்றல் மிக்க மாணவ கண்மணிகள் பயிலுகின்ற கல்லூரி பச்சையப்பன் கல்லூரி. மாணவச் செல்வங்களைப் பற்றிப் பேசும்போது தத்துவ ஞானி சாக்ரடீஸ் அவர்களுக்கும், அவருடைய மாணவர் ஒருவருக்கும் நடந்த உரையாடல் என் நினைவுக்கு வருகிறது.

ஒரு நாள், சாக்ரடீஸ் அவர்களிடம், அவரது மாணவன் ஒருவன் வந்து, வினா ஒன்றை எழுப்பினானாம்.

“ஐயா, மாணவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும்?” என்பதுதான் அந்த வினா. அதற்கு சாக்ரடீஸ்,

“மாணவன் என்பவன்,
கொக்கைப்போல இருக்க வேண்டும்.
கோழியைப் போல இருக்க வேண்டும்.
உப்பைப் போல இருக்க வேண்டும்.
உன்னைப் போல இருக்க வேண்டும்” என்றாராம்.

மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. “கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்” என்றான். “கொக்கு, ஒற்றைக் காலில் நீண்ட நேரம் பொறுமையாக நிற்கும். மீன்கள் வந்தவுடன் விரைந்து செயல்பட்டுப் பிடித்துவிடும். அதுபோல, ஒரு மாணவன் சரியான வாய்ப்புக் கிடைக்கும் வரை காத்திருந்து, அந்த வாய்ப்பு கிடைக்கும்போது அதை சிக்கெனப் பற்றி, அரிய செயல்களைச் செய்ய வேண்டும்” என்றார்.

“சரி, கோழியைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே அதற்கு என்ன அர்த்தம் ?” என்று கேட்டான் மாணவன்.

“கோழி என்ன செய்யும் ? குப்பையைக் கிளறும். ஆனால், அந்தக் குப்பைகளை விட்டுவிட்டு தனக்குத் தேவையான உணவை மட்டும் எடுத்துக்கொள்ளும். அதுபோல, மாணவர்கள் தாம் சந்திக்கும் தீமைகளைத் புறந்தள்ளி, நன்மைகளை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்” என்றார் சாக்ரடீஸ்.

“அடுத்தது, உப்பைப்போல இருக்க வேண்டும் என்றீர்களே...” என்று தொடர்ந்து வினவினான் மாணவன். “ஆமாம். அளவோடு கலக்கப்படும் உப்பு அந்த உணவின் சுவையை பன்மடங்காக கூட்டும். கலக்கிய உணவில் உப்பு கண்ணுக்குத் தெரியாது. ஆனால் அதன் சுவையை உணர்வதை தவிர்க்கமுடியாது.

அதுபோல, மாணவர்கள் எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் சிறப்பான தனித்தன்மையை வெளிப்படுத்தி, இத்துறையில் சிறந்தவர்

இவர்தான் என்று கூறும்படி விளங்க வேண்டும்'' என்று சொன்னார் சாக்ரடீஸ்.

இதை எல்லாம் கேட்டுக்கொண்ட மாணவன் கடைசியாக, ''எல்லாம் சரி, உன்னைப் போல இருக்க வேண்டும் என்றீர்களே.... அதற்கு என்ன அர்த்தம் ?'' என்று கேட்டான்.

''மாணவன் என்பவன் தனக்குள் எழக்கூடிய சந்தேகங்களை, எந்தவிதத் தயக்கமும் இல்லாமல், நீ எப்படி என்னிடம், எந்த தயக்கமும் இல்லாமல் கேட்டு தெளிவு பெறுகிறாயோ, அதைப்போல, மாணவர்கள் தங்களது ஆசிரியரிடம் கேட்டுத் தெளிவு பெற வேண்டும். அதற்காகத் தான் உன்னைப்போல இருக்க வேண்டும் எனச் சொன்னேன்'' என்று புன்னகைத்தாராம் சாக்ரடீஸ்.

இந்த கதையிலே வருகின்ற மாணவர்களைப் போல், பச்சையப்பன் கல்லூரி மாணவர்களும், தமிழகத்தில் உள்ள ஏனைய அனைத்து மாணவ, மாணவியர்களும் ஊக்கமும், உற்சாகமும் கொண்டவர்களாக எந்த தயக்கமும் இன்றி எதிர்வரும் இடையூறுகளைப் புறந்தள்ளி உறுதியான மனதுடன், அந்த சவால்களை வெற்றி கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும் என்பதை இந்த இனிய தருணத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

இக்கல்லூரியின் நூற்றாண்டு விழா, 1942ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாண கவர்னராக இருந்த சர் ஆர்தர் ஹோப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து, இக்கல்லூரியின் 125ஆவது நிறைவு விழா, 1968ஆம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களது தலைமையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இதனை அடுத்து, 1994ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழா அன்றைய முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் எழுச்சியுடன் நடத்தப்பட்டது.

கல்வியை அனைவரும் கற்க வேண்டும்,
கல்லாதவர்களே இல்லாத மாநிலமாகத்
தமிழகத்தை உருவாக்க வேண்டும்

– என்பதுதான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உயரிய லட்சியம். இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக எண்ணில்லா திட்டங்களை செயல்படுத்தி துறைகளுக்குள் உயர்ந்த துறையாக உயர்கல்வித் துறையை உருவாக்கி, இந்திய மாநிலங்களிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கக் கூடிய மாநிலமாக தமிழகத்தை மாற்றிக் காட்டியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மட்டுமல்லாமல் கல்லூரி மாணவச் செல்வங்களுக்கும், விலையில்லா மடிக்கணினிகள் வழங்கியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

2011–2012ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், உயர்கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1,736.92 கோடி தான். ஆனால், 2017–2018ஆம் ஆண்டில் இத்தொகை மூன்று மடங்குக்கும் மேலாக உயர்த்தப்பட்டு மொத்தம் ரூ. 3,680.39 கோடி உயர்த்தி வழங்கப்பட்டது.

இந்த நிதியாண்டில் அதாவது, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்தொகை மேலும் உயர்த்தப்பட்டு, உயர்கல்விக்காக 4,620.20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் பயனாக, உயர்கல்வி பயில்வோர் எண்ணிக்கை தமிழ்நாட்டில் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

தமிழகத்திலேயே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை, எளிய மாணவ, மாணவிகளுக்கான கல்லூரிகளில் முதலிடம் வகித்து, அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற பச்சையப்பன் கல்லூரி, இன்னும் மென்மேலும் வளர்ந்து, மேலும் பல நூற்றாண்டுகள் காணவும், தமிழ் இனத்திற்கு தொடர்ந்து கல்வித் தொண்டாற்றவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து, அமைகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
04.05.2018 அன்று சென்னை, பச்சையப்பன் கல்லூரி வளாகத்தில்
நடைபெற்ற பச்சையப்பன் கல்லூரியின் 175ஆவது ஆண்டு
நிறைவு விழாவில் ஆற்றிய உரை.

தூத்துக்குடி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ரூ.15.99 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் போற்றும் மகத்தான தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த சிறப்பான விழா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி கொண்டிருக்கின்ற மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை

அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே! முன்னிலை வகிக்கும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்களே! மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே!

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களே! மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே! மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலெட்சுமி அவர்களே!

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் திரு.க.பாஸ்கரன் அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே! வரவேற்புரை ஆற்றிய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என். வெங்கடேஷ் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் திரு.எஸ்.முருகதாஸ் அவர்களே! நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு,

இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். நீண்ட நெடிய காலமாக இந்த கோவில்பட்டி நகர மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி தண்ணீர் கிடைக்க வேண்டுமென்று கோவில்பட்டிக்கு வந்திருந்த வேளையில், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தெய்வமாக இருந்து இந்த திட்டத்திற்கு ரூபாய் 82.14 கோடி ஒதுக்கீடு செய்து திட்டம் நிறைவேற்றப்பட்டு, இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை துவக்கி வைப்பதற்காக மரியாதைக்குரிய சகோதரர் கடம்பூர் ராஜு அவர்கள் என்னை அழைத்தார். இங்கே வந்து பார்க்கின்றபொழுது, தூத்துக்குடி மாவட்டமே இங்கே குழுமியிருக்கின்ற காட்சியை நான் பார்க்கின்றேன். இந்த கூட்டுக்குடிநீர் திட்ட துவக்க விழா ஒரு மாநாடுபோல் காட்சியளிக்கின்றது. வருகின்ற சாலையின் இருபுறங்களிலும் மக்கள் வெள்ளம், இங்கே நடைபெறுகின்ற இந்த கூட்ட அரங்கிலும் மக்கள் வெள்ளம். ஆக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எந்தளவிற்கு மக்களிடத்திலே ஆதரவு பெருகி வருகிறது என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

‘இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு’

என்ற திருக்குறளுக்கு ஏற்ப மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணப்படி செயல்படும் இந்த அரசு, இன்று கோவில்பட்டி நகராட்சிக்கான இரண்டாவது பைப்லைன் திட்டப்பபணிகள் துவக்க விழாவையும், புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டுவிழாவையும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவையும் இங்கு சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறது. ‘பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு’ என்று பாரத நாட்டையும்

‘செந்தமிழ் நாடென்னும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே’ என்று தமிழ்நாட்டையும்

‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்’ என்று தமிழ் மொழியையும்;

‘முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே’

என்று தூத்துக்குடியையும் பாடிய தேசியக்கவி பாரதியாரை பெற்றெடுத்து, இந்திய வரலாற்றில் நிரந்தர இடத்தையும் நீங்காத புகழையும் பெற்றது இந்த தூத்துக்குடி மாவட்டமாகும். அத்தகைய பெருமைமிக்க தூத்துக்குடி மாவட்டத்தில், கோவில்பட்டி நகராட்சியில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதை நான் பெருமையாக கருதுகிறேன்.

தீப்பெட்டிக்கு சிவகாசியும், பூட்டுக்கு திண்டுக்கல்லும், மாட்டுக்கு மணப்பாறையும், பட்டுக்கு காஞ்சிபுரமும், மல்லிகைக்கு மதுரையும், நெல்லுக்கு தஞ்சாவூரும், காளைக்கு காங்கேயமும், முட்டைக்கு நாமக்கல்லும், கோயிலுக்கு கும்பகோணமும், அரிசிக்கு மண்ணைச்சநல்லூரும், பலாவுக்கு பண்ருட்டியும், அல்வாவிற்கு திருநெல்வேலியும் பெயர் பெற்றதைப் போல;

கடலை மிட்டாய்க்கு உலகப் புகழ்பெற்றது இந்த கோவில்பட்டியாகும். காரணம், கோவில்பட்டியில் தயாரிக்கப்படும் கடலைமிட்டாய் கெட்டுப்போகாமல் இருப்பதற்கு செயற்கையான இரசாயனம் எதுவும் இங்கு கலக்கப்படுவதில்லை என்றும், இயற்கையாக விளையும் பொருட்களைக் கொண்டே தயாரிக்கப்படுவதால்தான் கோவில்பட்டி கடலைமிட்டாய் மிகவும் ருசியாக இருப்பதால் இந்த கடலை மிட்டாய்க்கு தமிழ்நாடு மட்டுமல்ல இந்திய நாட்டிலே வரவேற்பு மிகுதி என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவில்பட்டி மக்களும் கடலை மிட்டாய் போல் மிகவும் இனிமையானவர்கள், உண்மையிலும் உபசரிப்பிலும் கோவில்பட்டி மக்கள் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

உழைப்பாளர்களை அதிகம் கொண்டுள்ள கோவில்பட்டியின் மீது எனக்கு தனிப்பட்ட அன்பும் மரியாதையும் இருக்கிறது. எனவேதான், கோவில்பட்டி மக்களின் நலன் கருதி, அவர்களின் அடிப்படைத் தேவையான குடிநீருக்கு ஒரு நிரந்தர தீர்வு காணும் நோக்கத்தில் புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்ட துவக்க விழாவிற்கு நான் நேரடியாக வந்து கலந்துக் கொண்டுள்ளேன். 'நீர் இன்று அமையாது உலகு' என்ற குறளுக்கேற்ப, நீர் ஆதாரத்தைப் பெருக்குவதிலும், கிடைக்கின்ற நீரை எல்லா மக்களுக்கும் பகிர்ந்து அளிப்பதிலும், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாத அளவிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வதிலும், மாண்புமிகு அம்மாவின் அரசு கவனமாக நடந்து கொள்கிறது.

1976ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கூட்டு குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கோவில்பட்டி நகராட்சிக்கு நாளொன்றுக்கு வழங்கப்பட்டுவந்த 60 இலட்சம் லிட்டர் குடிநீர் இங்குள்ள மக்களுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தால்தான், 2012ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 81 கோடியே 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இந்த குடிநீர் திட்டத்திற்கு வடிவம் கொடுத்தார்கள். வேகமாக வளர்ந்து வரும் கோவில்பட்டி நகராட்சி, ஆண்டுக்கு ஆண்டு மக்கள் தொகை பெருகி வருவதை கருத்தில் கொண்டும், 2040ஆம் ஆண்டில் இந்நகராட்சியில் உத்தேசமான மக்கள் தொகையை கணக்கில் கொண்டும், வருங்காலத்தில் இங்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும் பட்சத்தில் தனி ஒருவருக்கு நாளொன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்க வேண்டிய தேவையை கருத்தில் கொண்டும், தொலைநோக்குப் பார்வையுடன் திட்டமிட்டும் இந்த புதிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தினால், கோவில்பட்டி நகராட்சியில் தற்பொழுதுள்ள மக்கள் தொகையை கணக்கில் கொண்டு நாள் ஒன்றுக்கு 100 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

இதைத்தவிர, 2.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 4 நீர் ஊற்று கிணறுகள் அமைப்பதற்கும், 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 27 ஆயிரத்து 846 வீட்டு குடிநீர் இணைப்புகளுக்காக பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு மக்களின் அத்தியாவசிய தேவைகளை கவனமாக கருத்தில் கொண்டுதான் மக்கள் பணியாற்றி வருகிறது. அதற்கு ஒரு உதாரணம்தான் இந்த கோவில்பட்டி நகராட்சிக்கான

குடிநீர் அபிவிருத்தி திட்டம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இனிய விழாவின் மூலம் மக்களிடம் நான் அன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், வீதியோர குழாயில் வீணாக நீர் வடிந்து கொண்டிருக்கும் போது, ஒரு நொடிகூட தாமதிக்காமல் விரைந்து, அக்குழாயில் வீணாகும் நீரை நிறுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்பட வேண்டும்.

'நீர் என்பது உயிருக்கு நேர்' என்று நாம் கருதி ஒவ்வொரு துளி நீரையும் தங்கத்திற்கு மேலாக சேமிக்க பழக வேண்டும். "அனைத்து வளங்களுக்கும் தண்ணீர் வளம்தான் தாய்" என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். "ஊர் வளம் பெற, நீர் வளம் காப்போம்" என்று இந்த இனிய வேளையில் நீங்களெல்லாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், இந்த இனிய விழாவில் தூத்துக்குடி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு துறைகளின் சார்பாக 5 ஆயிரத்து 636 பேர் பயன்பெறும் வகையில் 15 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும் நான் வழங்கியுள்ளதை பெருமையாகக் கருதி மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசு நலத்திட்ட உதவிகளை பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி மேன்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி எல்லா நலன்களையும் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதைப்போல, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பள்ளிக்கல்வித்துறை, தூத்துக்குடி மாநகராட்சி, ஊரக வளர்ச்சித்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் வேளாண்மைத்துறை சார்பில் 128 கோடியே 13 இலட்சம்

ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பெற்ற 129 கட்டடங்கள் என்னால் இன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக திறந்து வைக்கப்பட்டதையும் நான் பெருமையாக கருதுகின்றேன். மேலும் 47 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 144 திட்டங்களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

‘‘மக்களால் நான், மக்களுக்காக நான்’’

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வேத வாக்கை பின்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் கனவாகவும் நினைவாகவும் மலர்ந்திருக்கின்ற இந்த திட்டப்பணிகளை திறந்து வைத்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற, நான் ஒருபோதும் தவறியதில்லை’ என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும், மக்களுக்காக உழைக்கின்ற அரசு மக்கள் பணியிலிருந்து ஒருநாளும் தவறாத அரசு என உறுதிப்பட கூறுகின்றேன்.

இதை ஒரு கதையின் மூலம் கூறினால் நன்றாக இருக்கும். ஒரு காலத்தில் ஒரு மன்னர் மக்கள் போற்றும்படி ஏழைகளுக்கு பல தர்ம காரியங்கள் செய்து ஆட்சி நடத்தி வந்தார். அதனால், அவர் சொர்க்கத்திற்கு சென்று பல ஆண்டுகள் இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் சித்திரகுப்தன் அந்த மன்னரிடம், “உனக்கு இன்றோடு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை புறப்படத் தயாராக இரு” என்று கட்டளையிட்டார். “என்னை திரும்பி பூலோகம் அனுப்ப என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?” என்று மன்னர் கேட்டார். ‘‘நீ செய்த நல்ல காரியங்கள் மூலம் பயன் பெற்ற யாரும் பூலோகத்தில் இல்லை. ஆகவே தான், நீ பூலோகம் செல்ல வேண்டும்” என்றார் சித்திரகுப்தன்.

“நான் சொர்க்கலோகத்திலேயே தொடர்ந்து இருக்க ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்” என்று மன்னர் சித்திரகுப்தனிடம் கேட்டார்.

அதற்கு சித்திரகுப்தன் சற்று யோசித்து விட்டு ‘மன்னா நீ பூலோகத்திற்கு போய் உனது தர்ம காரியங்களால் இன்னும் பலன்பெறும் ஒரு ஜீவனையாவது கண்டு பிடித்து கூறினால், தொடர்ந்து சொர்க்கத்தில் இருக்கலாம்’ என்றார். அந்த மன்னர் பூமிக்கு வந்து பார்த்து போது அவர் வாழ்ந்த இடம் தலைகீழாக மாறி போயிருந்தது.

மக்களில் யாரையும் அவருக்கு அடையாளம் தெரியவில்லை, தனக்கு தெரிந்தவர் யாராவது தென்படுகிறாரா? என்று மன்னர் தேடி அலைந்தார்.

அந்த ஊரிலேயே மிகவும் வயோதிகரை தேடி கண்டுபிடித்து ‘மன்னர் சந்திர சேனனை உமக்குத் தெரியுமா?’ என்று கேட்டார்.

“எனக்குத் தெரியாது, வேண்டுமானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப்பொந்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது, அதனிடம் சென்று கேள்” என்றார் அந்த முதியவர்.

இரவு நேரம் வரை காத்திருந்து அந்த ஆந்தையை கண்டுபிடித்து அதனிடம் மன்னர் பேசினார். கோபத்துடன் இருந்த அந்த வயோதிக ஆந்தை, “எனக்குத் தெரியாது, இங்கே ஒரு வயது முதிர்ந்த நாரை இருக்கிறது. அதை கேட்டுப்பார் தெரியும்,” என்றது.

ஒரு வழியாக நாரையை கண்டுபிடித்து அதனிடம், “மன்னரை தெரியுமா?”என்று கேட்ட போது, “எனக்கு சரியாக நினைவில்லை, ஆனால் பக்கத்து ஏரியில் என்னைவிட ஒரு வயதான ஆமை இருக்கிறது. அதனிடம் சென்று கேள்” என்று நாரை கூறிவிட்டது.

மன்னர் ஏரிக்குச் சென்று ஆமையை சந்தித்து, தன்னைப் பற்றி கேட்டார். அந்த ஆமையின் முகத்தில் திடீரென்று மகிழ்ச்சி தாண்டவமாடியது. "நன்றாகத் தெரியும். அந்த மன்னனால்தான் இந்த ஏரி இருக்கிறது. இங்கு உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றன. இந்த ஏரியைச் சுற்றி தோப்புகள் பசுமையாக இருக்கின்றன, இதில் பறவைகள் உயிர் வாழ்கின்றன. இந்த ஏரி இருப்பதால்தான் இங்கு விவசாயமும் நன்றாக நடக்கிறது" என்றது அந்த ஆமை.

"ஆமையே, நான்தான் அந்த மன்னன். நான் இந்த ஏரியை வெட்டியதாக எனக்கு நினைவில்லையே" என்றார் மன்னர்.

"இல்லை மன்னா", ஏரி உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் வெட்டப்பட்டது. அப்போது முதல் இந்த ஏரியில் மட்டும் எப்போதும் தண்ணீர் வற்றுவதே இல்லை. எனவே, இந்த பகுதியின் செழிப்பிற்கே நீ தான் காரணமாக அமைந்து விட்டாய். நானும் பல ஆண்டுகளாக இந்த ஏரியில் மகிழ்ச்சியாக உயிர் வாழ்கின்றேன். இன்னும் பல உயிரினங்கள் இங்கு உயிர் வாழப்போகின்றன" என்றது அந்த ஆமை. மன்னர் மகிழ்ந்தார். மகிழ்ச்சியுடன் சொர்க்கத்திற்கு சென்றார். அந்த மன்னனைப் போல்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை மக்களுக்கு செய்த தொலைநோக்குப் பார்வையுடன் செய்த நல்ல காரியங்களின் பலன் பல தலைமுறைகளுக்கும் பயன்படும். அப்படிப்பட்ட திட்டங்களைத்தான் அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த அரசு மக்கள் அரசு! இந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு!

விவேகத்துடன் விரைந்து செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை அம்மாவினுடைய அரசால் தொடர்ந்து இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இன்றைக்கு

குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு செயல்படுத்துகின்றது.

இன்றைக்கு, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களிலே சேமித்து வைப்பதற்காக குடிமராமத்து என்கிற ஒரு அற்புதமான திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். முதல்கட்டமாக அதற்கு ரூ.100 கோடி ஒதுக்கி பரிட்சார்த்த முறையிலே 1,519 ஏரிகளை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு அந்த ஏரிகளையெல்லாம் ஆழப்படுத்தினோம். கடந்த காலங்களிலே பெய்த மழைநீர் அந்த ஏரிகளில் நிரம்பியிருக்கிறது. இன்றைக்கு விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது, குடிநீருக்கு தேவையான நீரும் கிடைக்கின்றது, நிலத்தடிநீரும் உயர்ந்திருக்கின்றது. ஆகவே, குடிமராமத்து திட்டம் ஒரு அற்புதமான திட்டம். ஆகவே, இந்த திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள், அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மீண்டும் இந்தத் திட்டம் விரிவுபடுத்துவதற்காக 1,511 ஏரிகள் இன்றைக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் திட்டத்திற்காக 331 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், அவர்கள் வளம் பெறவேண்டும் என்று சொன்னால், நீர் மிக முக்கியம், அந்த நீரை சேமிப்பதற்காக அம்மாவினுடைய அரசு திட்டமிட்டு, இன்றைக்கு இந்த திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல. ஆங்காங்கே

இருக்கின்ற ஓடைகள், நதிகள் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று கோரிக்கைகள் வந்தன. அந்த கோரிக்கைகளை ஏற்று, மூன்றாண்டு கால திட்டமாக இந்த திட்டத்தை உருவாக்கி 1,000 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கி, அந்த மூன்றாண்டு காலத்திலே, ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கீடு செய்து, குறிப்பிட்ட அளவு தடுப்பணை கட்ட அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, முதல் கட்டமாக 350 கோடி ரூபாய் தடுப்பணை கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. பருவமழை பெய்கின்ற காலங்களிலே, பெய்கின்ற நீர் ஓடையின் வழியாக, நதியின் வழியாக கடலில் சென்று வீணாகின்றது. ஆகவே, அந்த நீரை ஆங்காங்கே தடுப்பணை கட்டப்பட்டு, அந்த நீர் சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீரை உயரச் செய்து, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. அந்தத் திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு சொட்டு நீர் கூட வீணாகக் கூடாது. அந்த நீரை எப்படியெல்லாம் சேமித்து வைக்கவேண்டும் என்று அரசு திட்டமிட்டு இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கிராமம், கிராமத்திலே இருக்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் இரவென்றும், பகலென்றும் பாராமல் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு ரத்தத்தை மண்ணிலே சிந்தி உழைக்கின்ற விவசாயிகளுக்கு தேவையான நீரை கொடுப்பதுதான் அம்மாவினுடைய அரசின் முதல் கடமை என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க

வேண்டுமென்பதற்காக, உளுந்து பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக, அரசாங்கமே உளுந்தை கொள்முதல் செய்கின்றது. சந்தை விலையைவிட அதிக விலை கொடுத்து உளுந்தை அம்மாவினுடைய அரசே கொள்முதல் செய்கின்றது. சந்தை விலை ரூபாய் 45 என்றால், அரசாங்கம் ரூபாய் 54 கொடுக்கின்ற காரணத்தினால் விவசாயிகள் பயனடைகின்றனர். இப்படிப்பட்ட நிலை உருவாக்கப்பட்டு, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கு, இதற்காக 3,000 டன் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை 250 டன் உளுந்து விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, விவசாயிகள் பாதிக்கப்படுகின்றபொழுதெல்லாம், அவர்களின் நஷ்டத்தை அரசே ஏற்று, விவசாயிகளை காப்பாற்றுகின்ற அரசாக அம்மாவினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

சில இடங்களில், விவசாயிகள், கிட்டத்தட்ட 1,000 அடி வரை ஆழ்துளை குழாய் அமைத்தால்தான் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலையிருப்பதினால், கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல், சிக்கனமாக பயன்படுத்துவதற்காக அம்மாவினுடைய அரசு சொட்டுநீர் பாசனத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற 75 சதவிகித மானியத்தின் மூலமாக சொட்டுநீர் பாசன கருவிகளை பெற்று அதை பயன்படுத்தி வேளாண் தொழிலை மேற்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, விவசாயிகளுக்கு தேவையான வேளாண் கருவிகள் வாங்குவதற்கு அம்மா அரசு மானியம் கொடுக்கின்றது. விதைகள், உரம் வாங்க மானியம் கொடுக்கின்றது. இந்தியாவிலேயே கிட்டத்தட்ட 3–4 ஆண்டு காலமாக இந்தியாவிலேயே அதிக உணவு

தானிய உற்பத்தியை பெருக்கி முதல் பரிசை பெற்ற மாநிலம் நம் தமிழ்நாடு. அதற்காக கிருஷி கர்மாண் என்ற விருதையும் நாம் பெற்றிருக்கின்றோம். இன்றைக்கு விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்கின்ற காரணத்தினாலே, அதிக அளவு உற்பத்தியை தமிழகத்திலே காண முடிகின்றது, இன்றைக்கு வேளாண் பெருமக்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதேபோல, விலையில்லா அரிசி கொடுக்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல கல்வியில், மாணவ சமுதாயம் அதிக அளவில் படிக்க வேண்டுமென்பதற்காக, அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலும், இன்றைக்கு அம்மாவினுடைய அரசும் ஆங்காங்கே 11 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை திறந்திருக்கின்றது. இதன்வாயிலாக, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கிராமத்திலே வாழ்கின்ற ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள்கூட உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம்.

2011இல் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்கின்றபொழுது, 100க்கு 21 சதவிகிதம்தான் உயர்கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை இருந்தது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கல்வியிலே புரட்சி செய்து, படிக்கின்ற மாணவர்களுக்கு காலணி, விலையில்லா நோட்டுப் புத்தகம், பை, சைக்கிள் மற்றும் அறிவுப்பூர்வமான கல்வி பெறுவதற்கு மடிக்கணினி போன்ற ஏராளமான நலத்திட்ட உதவிகள் செய்ததன் விளைவாக, இன்றைக்கு இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 46.34 சதவிகிதம் உயர்ந்திருக்கின்றது என்ற பெருமையை அம்மாவினுடைய

அரசு கொடுத்திருக்கின்றது. எந்தவொரு மாநிலம் கல்வியில் சிறக்கின்றதோ, அந்த மாநிலம் அனைத்திலும் வளம் கொழிக்கும். பண்பு, ஒழுக்கம், அன்பு என அனைத்தும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் கல்வி கிடைக்க வேண்டும். அப்படிப்பட்ட கல்வியை நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு அம்மாவினுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது. ஒரு நாடு வளம்பெற வேண்டுமென்றால் கல்வி மிக முக்கியம் என்ற காரணத்தினால்தான், மற்ற துறைகளைக் காட்டிலும், கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கக் கூடிய விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளை உள்ளடக்கிய **246** குடியிருப்புகளுக்கு, ரூபாய் **106** கோடி மதிப்பீட்டில் இன்னொரு கூட்டுக் குடிநீர் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கி தரப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் இன்னும் **6** மாதகாலத்தில் நிறைவடைய வேண்டிய நிலையில் உள்ளது. ஆகவே, அம்மாவினுடைய அரசு தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி தண்ணீரை வழங்க, அம்மாவினால் அடிக்கல் நாட்டப்பட்டு, இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. குடிப்பதற்கு நீர் மிக முக்கியம். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய கூட்டுக் குடிநீர் திட்டம் மிக வேகமாக விரைந்து செயல்படுத்தப்பட்டு, முடிக்கப்பட்டு, முதலில் கோவில்பட்டியில் திறந்திருக்கின்றோம். இன்னும் **6** மாதகாலத்தில் ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி ஆகிய மூன்று தொகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கும் தங்குதடையில்லாத பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி குடிநீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் விருதுநகர் மாவட்ட மக்களுக்கும் தங்குதடையில்லாத பாதுகாக்கப்பட்ட தாமிரபரணி குடிநீர் வழங்கவேண்டுமென்பதற்காக விருதுநகரின் மூன்று தொகுதிகளில் உருவாக்கப்பட்ட திட்டமும், குறுகிய காலத்தில் முடிவு பெற்று துவக்கி வைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இத்தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, தூத்துக்குடி நகரத்திலும் ரூபாய் 292 கோடி மதிப்பீட்டில், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழாவிலே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட திட்டம் முடிவுற்று இன்றைக்கு தூத்துக்குடி நகராட்சியில் வாழும் மக்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கக்கூடிய ஒரு நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் மூலமாக, பணிகளுக்கு செல்கின்ற, அமைப்புசாரா பணியில் இருக்கின்ற பெண்களுக்கும், குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கும், வீட்டிற்கும் செல்வதற்கு, மானிய விலையில் இருசக்கர வாகனம் கொடுக்கின்றோம். ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் இருசக்கர வாகனம் கொடுப்பதற்கு, அதிகபட்சமாக ரூபாய் 25 ஆயிரம் மானியம் அரசு கொடுக்கின்றது. இத்திட்டத்தில் இதுவரை பதிவு செய்துள்ள 3,34,000 நபர்களுக்கும் இன்னும் இரண்டாண்டு காலத்திலே இருசக்கர வாகனம் கொடுத்து, அந்த திட்டம் அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். இப்படிப்பட்ட நிலை அம்மாவினுடைய ஆட்சியில்தான் பெண்களுக்குக் கிடைத்திருக்கின்றது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மருத்துவத்துறை சிறந்த முறையில் விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்றையதினம், 2011ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதற்குப் பிறகு கிராமப்புற மக்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக 229 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தியாவில் இவ்வளவு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எந்த மாநிலத்திலும் திறக்கப்படவில்லை, தமிழகத்தில் தான் திறக்கப்பட்டிருக்கின்றது. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை கொண்ட மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு, 120க்கும் மேற்பட்ட மருத்துவமனையும் அம்மாவினுடைய அரசால் தான் திறக்கப்பட்டிருக்கின்றது. ஆங்காங்கே கிராமத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டு, அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழைகளுக்கு அங்கேயே சிகிச்சை பெற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு தான் இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றது.

இன்றைக்கு ஸ்டான்லி மருத்துவமனையில், நம்முடைய அரசு டாக்டர்கள் குழுவின் கடும் முயற்சியால், திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த இரண்டு கைகளும் இல்லாத ஒருவருக்கு இரண்டு கைகள் பொருத்தப்பட்டு, அவர் நலமாக இருக்கின்றார். அப்படிப்பட்ட சாதனையை நம்முடைய மருத்துவத் துறை படைத்திருக்கின்றது. இந்திய வரலாற்றிலேயே, அரசு மருத்துவமனையில் இப்படி இரண்டு கைகளும் பொருத்தப்பட்ட வரலாறு, தமிழகத்தில் இருக்கின்ற டாக்டர்கள் செய்திருக்கிறார்கள். அந்த மருத்துவ குழுவில் இருந்த டாக்டர்களுக்கும், அந்த குழுவை சேர்ந்தவர்களுக்கும் இந்த நேரத்தில் வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, மதுரையில் இருதய மாற்று அறுவை சிகிச்சை அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு

அரசு மருத்துவமனை நாட்டு மக்களுக்குத் தேவையான நன்மைகள் செய்கின்ற ஒரு மருத்துவமனையாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இன்றைக்கு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையிலே இந்தியாவிலேயே தொடர்ந்து மூன்றாண்டு காலம் முதலிடத்தில் வகித்துக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைக்கு மருத்துவ சிசிச்சை அளிப்பதில் இந்தியாவிலேயே முதலிடத்தில்இருக்கின்றதுஎன்பதைசுட்டிக்காட்டவிரும்புகின்றேன். இன்றைக்கு பிறக்கின்ற குழந்தைகளின் இறப்பு சதவிகிதம் குறைந்திருக்கின்றது.இதயதெய்வம்புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தபொழுது, குழந்தைகள் ஊட்டத்தோடு பிறக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கை எடுத்தார்கள். 2016 தேர்தல் அறிக்கையிலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நான் ஆட்சிக்கு வந்தவுடன் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொடுக்கப்படுகின்ற 12,000 ரூபாய் 18,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்று சொன்னார்கள். அதனடிப்படையிலே இன்றைக்கு 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது அதில் ரூ.4,000ஐ பிரித்து இரண்டு கட்டமாக, அம்மா தாய்சேய் நல பெட்டகம் என்ற ஒரு அருமையான திட்டத்தை வகுத்து அதிலே பேரிச்சம்பழம், ஆரஞ்சு போன்ற பொருட்கள் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மூன்று மாதத்தில் கொடுக்கிறோம், 5 மாதத்தில் கொடுக்கிறோம். ஆகவே, அந்த பெட்டகத்தில் உள்ள பொருட்களை தாய்மார்கள் எடுத்துக்கொள்ளும்பொழுது அந்தக் குழந்தைகளின் எடை அதிகமாகின்றது, ஆகவே, பிறக்கின்ற குழந்தைகளெல்லலாம் சத்தோடு, அதிக எடையுடன் பிறக்கின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னென்ன எண்ணினார்களோ அதையெல்லாம் இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஜல்லிக்கட்டு இன்றைக்கு அருமையாக நடந்து கொண்டிருக்கின்றது. மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சரும் நானும் இங்கே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் எல்லாம் துவக்கி வைத்தோம். இன்றைக்கு நம்முடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழகத்திலே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு அம்மாவினுடைய அரசுதான் அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. அதேபோல இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி காலத்திலே பல்வேறு சாலைகள் சீரமைத்து கொண்டு இருக்கின்றோம். எட்டையபுரம், கோவில்பட்டி 17 கிலோ மீட்டர் டிஎன்ஆர்சியில் எடுத்து கொள்ளப்பட்டு சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, டிடிகே, தூத்துக்குடி, திருச்செந்தூர், கன்னியாகுமரி வரை 127 கிலோ மீட்டர் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த பணிகள் எல்லாம் முடிவுறும் தருவாயில் உள்ளன. அதுமட்டுமல்ல, பல்வேறு சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு தரமான சாலை, இன்றைக்கு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இங்கு தரமான சாலைகள் தமிழ்நாட்டிலே போடப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கெங்கு எல்லாம் பாலங்கள் வேண்டுமோ, அங்கே எல்லாம் பாலப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. புரட்சித்தலைவி அம்மாவுடைய ஆட்சி பொற்கால ஆட்சி, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னென்ன கனவுகள் கண்டார்களோ அதை எல்லாம் இன்றைக்கு அம்மாவுடைய அரசு இன்றைக்கு நனவாக்கி கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இது உங்களுடைய அரசு, இது மக்களுடைய அரசு, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து செயல்படுகின்ற அரசு அம்மாவுடைய

அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டி இன்னும் பல பேர் புதுசு புதுசாக ஆரம்பித்து விட்டார்கள். இன்றைக்கு புதிய புதிய கட்சிகள் எல்லாம் இங்கே துவக்கியுள்ளார்கள். புதிய கட்சிகள் துவங்குவது குறித்து வேறுபட்ட கருத்து எங்களுக்கு கிடையாது. ஆனால், இதுநாள் வரை என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இன்றைக்கு நதிகள் எல்லாம் இணைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். காலம் போன காலத்தில் நதிகளை இணைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டத்தை நடத்தி, அது முடிகின்ற தருவாயிலே இப்போது புதிதாக பல தலைவர்கள் முளைத்து சொல்லி கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக் கூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். அதிமுக அரசு வேறு எந்த கட்சியும் கிடையாது.

இன்றைக்கு பல்வேறு எதிர்கட்சிகள் எல்லாம், இந்த அரசு மீது குற்றம் சுமத்துகிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசை பொறுத்தவரை இன்றைக்கு நேர்மையான அரசாக நடைபெற்று கொண்டிருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை துல்லியமாக செயல்படுத்தி கொண்டிருக்கின்றோம். அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்றிருக்கிறோம். இந்திய அளவிலே எடுத்துக் கொண்டால், இன்றைக்கு போக்குவரத்து துறையாக இருந்தாலும் அதற்கு தேவையான பரிசை பெறுகின்றோம். மின்சார துறையாக இருந்தாலும் அதற்கு தேவையான பரிசை பெறுகின்றோம். வேளாண்மை துறையாக இருந்தாலும் இந்தியளவிலே பரிசை பெறுகின்றோம். ஆகவே, எல்லா துறைகளிலும் இன்றைக்கு முன்னோடி துறையாக விளங்கி கொண்டிருக்கிறது. மருத்துவ துறையாக இருந்தாலும் இந்தியாவிலே முதல் பரிசு பெறுகின்றோம். கல்வியிலும் முதல் பரிசு. ஆக எல்லா துறைகளுமே இன்றைக்கு சிறப்பாக விளங்கிடும் அரசாக அம்மாவுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டுக்காக உழைத்தவர். எனக்கு முன்னாலே, மாண்புமிகு அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள் சொன்னது போல, எனக்கு பின்னாலும் நூறாண்டு காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அதிகாரத்தில் இருந்து, இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை கொடுக்கும் என்ற வாக்குறுதி தந்தார்கள்.

அதன் அடிப்படையிலே இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, கிராமத்திலே வாழ்கின்ற ஏழைகள் கூட உயர்நிலைக்கு உருவாவதற்கு அனைத்து திட்டங்களையும் வகுத்து, அதை உங்கள் இல்லம் போய் சேருகின்ற அளவிற்கு நடைமுறைப்படுத்துகின்ற அரசாக திகழும் திகழும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அருமை சகோதரர் இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து, அவரோடு இணைந்து பணியாற்றிய நிருவாகிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கும், வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்,

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
11.05.2018 அன்று தூத்துக்குடி மாவட்டம்,
கோவில்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை

ஆண்டுதோறும் சுமார் 5 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இதமான தட்பவெப்பம் கொண்ட மலை ஏற்காடு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஒவ்வொரு ஆண்டும் ஏற்காட்டில் நடைபெறுகின்ற கோடை விழா நிகழ்ச்சி மக்களின் மனதில் ஒரு எழுச்சியும், மகிழ்ச்சியும் அளிக்கின்ற இந்த 43ஆவது கோடை விழா மற்றும் மலர்காட்சி தொடக்க விழாவிலே, சிறப்பாக, அற்புதமாக, தனக்கே உரிய பாணியில் நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!

இன்றைக்கு வேளாண்மைத் துறையிலே எந்தளவிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது, என்ன திட்டங்களை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை விளக்கமாக, தெளிவாக எடுத்து உரைத்திருக்கின்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே!

தமிழகத்திலே சுற்றுலாத் துறையின் மூலமாக தமிழகம் எவ்வளவு வளர்ச்சியை கண்டிருக்கின்றது, மக்களுக்கு எவ்வளவு மனமகிழ்ச்சியை இந்தத் துறை அளித்திருக்கின்றது என்பதை புள்ளிவிவரத்தோடு சுட்டிக்காட்டிய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி.என்.நடராசன் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறையின் அரசு முதன்மை செயலாளர் திரு. அபூர்வ வர்மா அவர்களே!

திட்ட விளக்கவுரை ஆற்றிய வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், மிகத் தெளிவாக, சிறப்பாக வேளாண்மைத் துறையிலே அத்தனையும் அத்துப்படியாக இருக்கின்ற திரு. ககன்தீப்சிங் பேடி அவர்களே!

இறுதியாக நன்றியுரை ஆற்றவுள்ள, இந்த கோடை விழா சிறப்பாக நடைபெற வேண்டும், நம்முடைய மாவட்ட மக்கள் மட்டுமன்றி, அண்டை மாவட்ட மக்களும் மகிழ்ச்சியுற கண்டு களித்து இன்புற வேண்டுமென்பதற்காக அருமையான கோடை விழாவினை ஏற்பாடு செய்த ஆற்றல்மிகு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரோஹிணி பாஜிபாகரே அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய காமராஜ் அவர்களே! இங்கே சிறப்பான உரையாற்றிய ஏற்காடு சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி சித்ரா அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரியாதைக்குரிய சுந்தரம் அவர்களே!

மரியாதைக்குரிய பன்னீர்செல்வம் அவர்களே! முன்னாள் அமைச்சர், மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய செம்மலை அவர்களே! மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மரியதைக்குரிய வெங்கடாசலம் அவர்களே! மரியாதைக்குரிய சக்திவேல் அவர்களே! மரியாதைக்குரிய மருதமுத்து அவர்களே! மரியாதைக்குரிய ராஜா அவர்களே! மரியாதைக்குரிய சின்னத்தம்பி அவர்களே! மரியாதைக்குரிய வெற்றிவேல் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே! சேலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய தலைவர் திரு ஆர்.சின்னுசாமி அவர்களே!

உள்ளாட்சிஅமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! கூட்டுறவு சங்க நிருவாகிகளே! கழகத்திலே பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிருவாகிகளே! அரசு உயர் அதிகாரிகளே! வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

அத்தனை பேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, இன்று ஏற்காட்டில் நடைபெறும் 43வது கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை துவக்கி வைப்பதில் நான் உண்மையிலே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு 1976 முதல் கோடை விழா சிறப்பாக ஏற்காடு மலையிலே கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த வருடம் 43ஆவது கோடை விழா மற்றும் மலர்க் கண்காட்சி விழா இன்று முதல் 16ஆம் தேதி வரை கிட்டத்தட்ட 5 நாட்களுக்கு சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது என்ற செய்தியை அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதை சுற்றுலாப் பயணிகளும் மகிழ்ச்சியோடு கண்டு களிப்பார்கள் என்ற

நம்பிக்கையோடு இருக்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஒரு நாட்டின் சொத்துக்களில் முதன்மையானது இயற்கை வளங்கள். அவற்றிற்கும் முதன்மையானது மலை வளம் என்பதை நாம் உணர வேண்டும். ஏற்காட்டு மலையால், நாம் பெறுகின்ற செல்வங்கள் ஏராளம். கண்ணிற்கு குளிர்ச்சியையும், மனதிற்கு மகிழ்ச்சியையும் தருகின்ற வண்ண, வண்ண மலர்கள்தான் இறைவன் படைப்புகளிலே அபூர்வமான, அதிசயமான படைப்புகளாக விளங்குகின்றன. காரணம், அழகும் வாசனையும் ஒருங்கே கொண்ட தெய்வீக படைப்பு மலர்கள் என்பதால் இறைவனுக்கு அவை சூட்டப்படுகின்றன.

இந்த ஆண்டு நடைபெறுகின்ற ஏற்காடு மலர்க்கண்காட்சியில் சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்து அளிக்கும் வகையில் வண்ண ரோஜா, கார்னேசன், ஜெர்பெரா, சாமந்தி போன்ற 2 இலட்சத்து 50 ஆயிரம் மலர்களை கொண்டு காண்போரை வியக்க வைக்கும் வகையிலும், தமிழ்நாட்டின் பெருமைகளை பறைசாற்றும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள தலைமைச் செயலகம், வேளாண் பெருமக்களுக்கு கூட்டுப் பண்ணை திட்டத்தினை அறிமுகப்படுத்துகின்ற விதத்திலே மலர்களால் உருவாக்கப்பட்டுள்ள டிராக்டர், 25.03.2018 அன்று துவக்கி வைக்கப்பட்ட சேலம் விமான போக்குவரத்து சேவையை நாட்டு மக்களுக்கு தெரிவிக்கின்ற விதத்திலே மலர்களால் உருவாக்கப்பட்டுள்ள விமான மாதிரி, இளைய சமுதாயத்தினரை கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர், அழகிய பெண் உருவம் கொண்ட மலர்களால் அலங்கரிக்கப்பட்ட உருவம்,மேலும் குழந்தைகளை கவரும் வகையில் 15 ஆயிரம் வண்ண ரோஜா மலர்களால் உருவாக்கப்பட்ட மோட்டு, பத்லா மற்றும் சிங்சாங் போன்ற கார்ட்டூன் உருவங்கள் காண்போர் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் வண்ணமாக அமைந்துள்ளன. 50க்கும் மேற்பட்ட மலர் வகைகளை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பூந்தொட்டிகளில் பல வண்ணங்களில்

உருவாக்கப்பட்டுள்ளது சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு விருந்தாகும்.

ஏற்காடு மலைப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்கச் செய்யும் வகையில் தோட்டக்கலைத்துறை சார்பில் சுமார் 36 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அரசு தாவரவியல் பூங்கா மற்றும் மரபியல் பூங்கா ஆகியவை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 15.10.2012 அன்று காணொலி காட்சியின் மூலம் திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் ஏற்காட்டிற்கு சுற்றுலா பயணிகள் அதிகமாக வரத்தொடங்கினார்கள்.

இந்த இனிய வேளையில் ஏற்காட்டின், பழமையையும் பெருமையையும் நாம் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் சேர்வராயன் மலையில் அமைந்துள்ள இந்த ஏற்காடு மலையானது, சுமார் 1,515 மீட்டர் உயர்ந்து கம்பீரமான, பசுமையான தோற்றத்துடன் பார்ப்பவர்களின் கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கும் ஒரு அழகு மலையாகத் திகழ்கிறது.

ஏரியும் காடும் கலந்த ஒரு மலை என்பதால் இது ஏற்காடுமலை என அழைக்கப்படுவதாக கூறுவார்கள். 19ஆம் நூற்றாண்டில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஒரு ஆங்கிலேயரால் ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட காபி செடிகள் இங்குள்ள கிரான்ச் எஸ்டேட்டில் முதன்முதலில் நடவு செய்யப்பட்டு, அதன்பிறகு இந்த மலைப்பிரதேசத்தில் உள்ள மற்ற எஸ்டேட்களிலும் பயிரிடப்பட்டு, இது ஒரு 'காபி மலை'என்று பெயர்பெறும் அளவிற்கு வளர்ந்தது. அதன் பிறகு பலா, ஆரஞ்சு, கொய்யா போன்ற பழ வகைகளையும் இங்கு பயிரிட தொடங்கினார்கள். ஏற்காடு மலையானது மரம், செடி, பூக்கள், விலங்குகள், அருவிகள், பள்ளத்தாக்குகள், பறவைகள் போன்ற இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு பாதுகாப்பான "வண்ணமிகு மலைப் பகுதி"யாக இன்றைக்கு இயற்கை சூழலால் திகழ்ந்து காட்சியளிக்கின்ற ஒரு மலைப்பிரதேசம்.

இங்குள்ள பள்ளிக்கூடங்கள் “ஏற்காடு ஒரு கல்வி பூங்கா” என்பதை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலேயர்கள் கதிரவன் மறையும் குளிர்ச்சியான நேரத்தில் ஏற்காடு மலையின் காட்சியை அமர்ந்து ரசித்த இருக்கைகளை, இன்று பெண் இருக்கைகள் (Lady’s Seat), ஆண் இருக்கைகள் (Gent’s Seat), குழந்தை இருக்கைகள் என்று அழைக்கப்படுகின்றன.

இங்கு அமைந்துள்ள தொலைநோக்கியுடன் கூடிய காட்சி கோபுரம் ஒட்டுமொத்த ஏற்காடு மலையின் அழகையும் கண்டு ரசிக்க பெரிதும் உதவுகிறது.

ஏற்காடு அரசு தோட்டக்கலைப் பண்ணை மற்றும் அண்ணா பூங்கா மூலம் வருடம் 7 இலட்சத்து 50 ஆயிரம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்காடு பகுதி விவசாயிகளுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 83 இலட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைக்கிறது.

இந்த மலர்க்கண்காட்சியைத் தவிர மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்த, நாய் கண்காட்சி, ஆரோக்கிய குழந்தைகள் போட்டி, பாரம்பரிய உணவு போட்டி, கோலப் போட்டி, படகு போட்டிகள் ஆகியவை நடைபெற உள்ளன. கலை பண்பாட்டுத்துறை சார்பில் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. இவை அனைத்தையும் சுற்றுலா பயணிகள் கண்டு களித்து கோடை விடுமுறையை இன்பமாக கழிப்பதற்காக இந்த நேரத்திலே உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி இந்தக் கோடை விழா நிகழ்ச்சி.

இங்கே ஒரு முக்கியமான தகவலை உங்களிடம் நான் கூறியாக வேண்டும். பூச்சிகள் தாவரங்களை தின்னும் என்று நாம்

கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இங்குள்ள தாவரவியல் பூங்காவில் பூச்சியை தின்னும் அதிசய பிட்சர் தாவரங்கள் இருக்கின்றன.

12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூக்கள் இங்கு பூப்பது ஏற்காடுக்கு மேலும் பெருமையை சேர்க்கிறது.

இங்கு அதிக குளிரும் இல்லாமல், அதிக வெப்பமும் இல்லாத இதமான தட்ப வெட்பம், சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கிறது. இங்கு நிலவும் இதமான தட்பவெட்ப சூழ்நிலையை அனுபவிக்க, ஆண்டுதோறும் சுமார் 5 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் ஏற்காடு மலைக்கு வருகை புரிந்த வண்ணம் உள்ளனர். இந்த வருடம், கடந்த வருடத்தைவிட அதிக பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்காட்டை 'ஏழைகளின் ஊட்டி' என்று கூற காரணம், கையில் கொஞ்ச பணமும் நடந்து செல்ல போதுமான வலிமையும் இருந்தால் போதும், இந்த ஏற்காடு நம் இதயத்தோடு இணைந்து நம்மை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்திவிடும்.

இன்றைய அவசர உலகத்தில் மனிதன் இயற்கையை நேசிக்க, இம்மாதிரியான மலர்க்கண்காட்சிகளை தமிழ்நாடு அரசு கோடைக்காலத்தில் மலைப்பிரதேசங்களில் ஏற்பாடு செய்து வருகின்றது. இந்த மலர்க் கண்காட்சியானது ரசிக்க மட்டுமல்ல, அந்த மலர்கள் சொல்லும் அரிய செய்தியை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மரங்களை வெட்டக்கூடாது, செடிகளை அழிக்கக்கூடாது என்பதுதான் அந்தச் செய்தி. இந்த மலர்க் கண்காட்சியின் மூலம் நான் சொல்லும் செய்தியும் அதுதான்.

இந்த ஆண்டு கோடை விழா பசுமை விழாவாக கொண்டாடப்படுகிறது என்றும், தமிழ்நாட்டை முன்னணி பசுமை

மாநிலமாக மாற்றம் செய்ய இவ்விழாவுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு இலவசமாக 1 இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றில் இடம் பெற்ற எத்தனையோ மன்னர்களின் பெயர்களை நாம் படித்திருக்கின்றோம்.அத்தனை மன்னர்களின் பெயர்களும் நம் நினைவில் நிற்பதில்லை. ஆனால், சக்கரவர்த்தி அசோகன் போன்ற ஒரு சிலர் மட்டும்தான் நம் நினைவுகளில் இப்போதும் நிற்கிறார்கள். ஏனென்றால், அவர் தொலைநோக்கு சிந்தனையுடன் சாலை ஓரங்களின் இருபுறமும் குளிர்ச்சிதரும், நிழல்தரும் மரங்களை நட்டு வளர்த்தார். அதனால், அவருக்கு காலத்தால் அழியாத நிரந்தர புகழ் கிடைத்தது. எனவே, நாம் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு மரமாவது வைத்து அதை வளர்க்க வேண்டும் என்று இந்த இனிய வேளையில் உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் தனியார் தோட்டத்தில் உள்ள மரம் காற்றில் சாய்ந்து விட்டால் கூட, அந்த மரத்திற்கு பதிலாக இன்னொரு மரக்கன்றை உடனடியாக நடவேண்டும். அதனால்தான் அந்த நாடுகள் பசுமை நிறைந்த சொர்க்கபுரியாக திகழ்கின்றன.அந்த நாடுகள் மலர்கள் நிறைந்த வண்ண தேசமாக உலக சுற்றுலா பயணிகளை அதிகமாக கவர்ந்திழுக்கின்றன. நம் நாட்டு மக்களும் அதைவிட இயற்கை பிரியர்கள்தான், இயற்கையை நேசிக்கக்கூடியவர்கள்தான். தாமாகவே முன்வந்து இயற்கையை பாதுகாத்து வருகிறார்கள். ‘வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்’என்பதை மாற்றி ‘ஆளுக்கு ஒரு மரம் வளர்ப்போம்’ என்ற மனநிலைக்கு வந்துவிட்டார்கள்.

மரம் நடுவதை மேலும் ஊக்கப்படுத்தத்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்த தினத்தன்று ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மரங்களை மாண்புமிகு

அம்மாவின் அரசு நட்டு வருகிறது. இந்த வருடம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 70ஆவது பிறந்த தினத்தன்று 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் இலக்கோடு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் முதல் மரக்கன்றை நட்டு, அத்திட்டத்தை துவக்கி வைத்தார்கள் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அரசு திட்டங்களில் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மரக்கன்று நடுவதை ஒரு கடமையாகவும், நிகழ்ச்சியாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்தி வந்தார்கள்.

அதேபோன்று, அரசு நிகழ்ச்சிகள் அனைத்திலும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் ஒரு மகத்தான, மக்களுக்கான விழாவாக மாற்றி அமைத்தது, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு செய்திருக்கின்ற ஓரிரு சாதனைகளை மட்டும் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன்.

✶ சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், “கூட்டுப் பண்ணையத் திட்டம்” என்ற முன்னோடித் திட்டம் மூலம் 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 2,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது. இக்குழுக்களுக்கு அறுவடை இயந்திரங்கள், 747 டிராக்டர்கள், 1,849 பவர் டில்லர்கள், 1,369 களையெடுக்கும் இயந்திரங்கள், 783 சுழற்கலப்பைகள், 666 புதர் வெட்டும் கருவிகள் மற்றும் 3,412 இதர பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டு, 1,98,800 சிறு, குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இதன் மூலமாக வேளாண் உற்பத்தி பெருகும். அதற்காகத்தான் இந்தியாவிலே உணவு தானிய உற்பத்தியில் தொடர்ந்து முதலாவதாக இருந்து

தமிழ்நாடு கிரிஷ் கர்மாண் விருதை பெற்று வருகின்றது.

- ✶ மானாவாரி விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்த 803 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 25 இலட்சம் ஏக்கர் பரப்பில் நான்காண்டுகளில் மானாவாரி நிலங்களை தொகுப்பாக மேம்படுத்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் நடப்பாண்டில் 10 இலட்சம் ஏக்கர் பரப்பில் விரிவுபடுத்தப்படும்.

- ✶ எளிதில் அழுகும் காய்கறிகள் மற்றும் பழங்களில், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைத் தவிர்த்து விவசாயிகள் நல்ல விலை பெறவும், மதிப்புக் கூட்டும் பொருட்களை உருவாக்கவும் தரமான பழங்கள், காய்கறிகள் மக்களுக்கு தடையின்றி கிடைக்கவும், 398 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் விநியோகத் தொடர் மேலாண்மைத்திட்டம் 10 மாவட்டங்களில்செயல்படுத்தப்படுகிறது.

- ✶ வேளாண் கல்வியிலும் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தேசிய அளவில் உள்ள 82 பல்கலைக்கழகங்களில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் முதல் நிலை வகிக்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறை கூறுபவர்கள் எப்போதும் குறைகூறி கொண்டுதான் இருப்பார்கள். மக்கள் நலப்பணிகள் செய்வதைகூட இவர்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் குறை சொல்கிறார்கள். அதை ஒரு காலமும் மக்கள் நம்பமாட்டார்கள். இதை ஒரு கதையின் மூலம் கூறினால் சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி தினமும் ஆற்றிலிருந்து தன் தோட்டத்திற்கு குடத்தில் தண்ணீர் எடுத்து வந்து செடிகளுக்கு ஊற்றுவதை வழக்கமாக கொண்டிருந்தார். அவர் சுமந்து வரும் குடத்திலிருந்து தண்ணீர் ததும்பி வழி நெடுக சிந்திக் கொண்டிருந்தது.அந்த தோட்டத்தின் ஓரத்தில் ஒடுக்கு விழுந்து,

எதற்கும் பயன்படாமல் இருந்த ஒரு அலுமினிய குடம் அன்றாடம் இதைப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்த தண்ணீர் குடத்தைப் பார்த்து 'தண்ணீரைக் கூட சிந்தாமல் சிதறாமல் எடுத்துச் செல்ல தெரியவில்லையே, நீ எல்லாம் ஒரு குடமா ?' என்று கிண்டலும் கேலியும் செய்தது. ஒருநாள் தண்ணீர் குடம் தன் எஜமானனாகிய விவசாயிடம், இது பற்றி கூறி வருத்தப்பட்டது. அதற்கு அந்த விவசாயி"குடமே! உன் அருமை அந்த ஓட்டைவாய் குடத்திற்கு தெரியவில்லை. இயலாமையால் மற்றவர்களை குறை கூறுவதையே பிழைப்பாக்கிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் அந்த குடம் ஓரம் கட்டப்பட்டு விட்டது. நான் உன்னை சுமந்து வரும் பாதையில் இருக்கும் பூஞ்செடிகளை கவனித்தாயா? அவையெல்லாம் இந்த அளவிற்கு அழகாக வண்ண வண்ணமாக பூத்திருக்க நீதான் காரணம் என்று அந்தக் குடத்திற்கு தெரியுமா?'"உன்னிடமிருந்து சிந்தும் தண்ணீர் ஒரு துளியும் வீணாவதில்லை. உன் பக்கமாக இருக்கும் இடத்தில் பூஞ்செடி விதைகளை விதைத்து விட்டேன். நீ தினமும் சிந்தும் தண்ணீரில்தான் அவை இன்று அழகாக பெரிதாக வளர்ந்து, அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்துதான் நான் வீட்டை அலங்கரிக்கின்றேன். மீதமுள்ள பூக்களை விற்று பணமும் சம்பாதிக்கின்றேன்'' என்று அந்த ஓட்டை குடத்தின் காதில் விழும்படி கூறினார். 'தண்ணீரை அந்தக்குடம் வீணாக செலவழிக்கிறது என்று தவறாக நினைத்து விட்டேன். வழியில் உள்ள தாவரங்கள் வளர்வதில் அந்தக் குடம், என்னை முந்திக் கொண்டதை உணர்ந்து கொண்டேன்'', என்று கர்வம் பிடித்த குடம் தன் தலைகனத்தை இறக்கி வைத்தது. அன்றிலிருந்து குறை சொல்வதைஅந்த அலுமினியக் குடம் நிறுத்திக்கொண்டது.

அதைப்போலத்தான் பலர் இன்றைக்கு புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள். அதைத்தான் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்.

நெடுங்சாலைத் துறையின் மூலமாக சில சாதனைகளை நாம் படைத்திருக்கின்றோம். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் 2,514.67 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2011 முதல் 2016வரை இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 1,481.863 கிலோ மீட்டர் சாலைகள் ரூபாய் 729.3 கோடி மதிப்பீட்டிலும், 46 பாலங்கள் ரூபாய் 323.54 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2016–2017ஆம் ஆண்டில் 401.364 கிலோ மீட்டர் சாலைகள் ரூபாய் 223.39 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 4 பாலங்கள் ரூபாய் 9.25 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதும் சரி, அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகும் சரி, சேலம் மாவட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையில் இருக்கின்ற பெரும்பாலான சாலைகளும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாளையதினம் நடைபெறவிருக்கின்ற நிகழ்ச்சியிலே, தாரமங்கலம் நகராட்சியில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலை அமைக்க அடிக்கல் நாட்டப்படவிருக்கிறது. அதேபோல சேலம் மாநகரத்தில் முள்ளுவாடிகேட் மற்றும் அணைமேடு பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அடிக்கல் நாட்டுவிழா நிகழ்ச்சியும் நடைபெறவிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதேபோல, ஏற்காடு மலைப்பகுதியில், பக்கவாட்டுச் சுவர், தடுப்புச் சுவர், பாதுகாப்புச் சுவர், கான்கிரீட் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிகளுக்கு வெள்ள நிவாரண நிரந்தர சீரமைப்பு மூலம் ரூபாய் 42.96 கோடிக்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது, பணி விரைவில் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேளாண்மைத் துறை என்பது ஒரு முதன்மையான துறையாகும். தமிழ்நாட்டில் ஏறக்குறைய விவசாயிகள், விவசாயத்தைச் சார்ந்த பணிகள், விவசாய தொழிலாளர்கள் என ஏறக்குறைய 65 சதவிகிதம் வேளாண்மையை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்குத் தேவையான திட்டங்களை தீட்டி, அவர்களுக்கு தேவையான நன்மைகளை செய்வதுதான் அரசின் முதன்மையான கடமையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், நீரைப் பாதுகாக்க வேண்டும், வேளாண் தொழிலை பாதுகாக்க வேண்டும். நீர் இருந்தால்தான் வேளாண் துறை சிறக்கும். விவசாயிகள் வறட்சி வருகின்றபொழுதும், வெள்ளம் வருகின்றபொழுதும் பாதிக்கப்படுகின்றார்கள். விவசாயி பாதிப்புக்குள்ளாமல் விளைச்சல் பெறவேண்டுமென்று சொன்னால், அது சாதாரண விஷயமல்ல, அது அரிது. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு, வறட்சி வருகின்றபொழுது, நிவாரணம் வழங்கக்கூடிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. அம்மா இருக்கின்ற காலத்திலும் சரி, அம்மா மறைவிற்குப் பிறகும் சரி, அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றோம். அதேபோல், வெள்ளத்தால் பாதிக்கின்ற விவசாயிகளுக்கும், பயிர் இழப்பீட்டுக்கும் உதவி செய்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு தான்.

வேளாண் பெருமக்கள் எப்பொழுதெல்லாம் பாதிக்கப் படுகின்றார்களே, அப்பொழுதெல்லாம் உதவி செய்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். முதன்மைத் துறை வேளாண்மைத் துறை. வேளாாண்மைத் துறை சிறந்தால்தான் உணவு உற்பத்தி அதிகமாகக் கிடைக்கும். உணவு உற்பத்தி சேமிப்பு செயல்படுத்தப்பட்டால்தான் மக்களுக்குத் தேவையான உணவு, தானிய பொருட்கள் தடையில்லாமல் கிடைக்கும். இந்திய

அளவிலேயே உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. அந்தளவிற்கு, வேளாண் பெருமக்களுக்குத் தேவையான உதவிகளை செய்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இரவென்றும், பகலென்றும் பாராமல் உழைக்கின்ற வேளாண் பெருமக்களுக்கு தேவையான அத்தனை உதவிகளையும் செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டதைப்போல், மனதுக்கு அமைதி, நிம்மதி கிடைக்க வேண்டும். ஒரு மனிதன் எவ்வளவு பாடுபட்டாலும் நிம்மதி இல்லையென்றால் அவன் வாழ்க்கையை முழுமையாக வாழ முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிம்மதி இயற்கையை பார்த்தால்தான் கிடைக்கும். அந்த இயற்கை மலையில்தான் இருக்கின்றது. இயற்கைக்கு மயங்காத மனிதர்களே கிடையாது, அதை இரசிக்கின்ற பொழுதுதான் மனம் அமைதி அடைகின்றது. அப்படிப்பட்ட அமைதியை கொடுப்பதற்குத்தான் இந்த கோடை விழா என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் கோடை விழாவில் 2 இலட்சத்து 20 ஆயிரம் மலர்கள் பார்க்கின்றோம். ஒரேயிடத்தில், நம்முடைய தோட்டக்கலைத் துறை, சுற்றுலாத் துறை, வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மாவட்ட நிருவாகமும் ஒன்றாக இணைந்து இந்த கோடை விழாவை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். வண்ண, வண்ண மலர்களை நாம் கண்டுகளிக்கக்கூடிய, மனதிற்கு இனிமையான, மகிழ்ச்சியான அந்தக் காட்சியைப் பார்க்கின்றோம். ஆக, மனம்

நிறைவு பெறுகின்றது, மனம் அமைதி பெறுகின்றது, மனம் நிம்மதி பெறுகின்றது. அத்தனையும் கிடைப்பதற்குத்தான் இந்த கோடை விழா. அதுவும், ஏழை, எளிய மக்கள் நிறைந்த மாவட்டம் நம்முடைய மாவட்டம், அண்டை மாவட்டங்களான கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் இருக்கின்ற அத்தனை மக்களும் இந்தக் கோடை விழாவை பார்த்து, கண்டு, களித்து, மனநிறைவு பெறுகின்ற ஒரு அற்புதமான நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தக் கோடை விழா நம் மனதிற்கு மகிழ்ச்சியான சம்பவத்தை கொடுப்பது மட்டுமல்ல, இதில் என்னென்ற அரிய வகை செடிகள் இருக்கின்றன, என்ன மருத்துவ குணங்கள் இருக்கின்றது என்பதையும் நாம் பார்க்கின்றோம், எவ்வளவு காய்கறிகள் இருக்கின்றன என்பதையும், அதனை எப்படி பயிரிட்டு நமக்குக் கொடுக்கின்றார்கள் என்பதையும் நாம் பார்க்கின்றோம். அப்படிப் பார்க்கின்றபொழுது, கொய்யா, மா, வாழை போன்ற பல்வேறு கனிகள் மிகச் சிறப்பாக நம்முடைய விவசாயிகள் பயிரிட்டு, அதை கண்காட்சியாக வைத்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த கோடை விழா கண்காட்சி மகிழ்வதற்கு மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கைக்கு அடித்தளமாகவும் அமைகின்றது. அதுமட்டுமல்ல, நம்முடைய வேளாண் பெருமக்கள் அதிக மகசூல் பெறவேண்டுமென்பதற்காக நம்முடைய தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை இரண்டும் இணைந்து, பல்வேறு உத்திகளை நமக்கு கண்காட்சியாக வைத்திருக்கின்றார்கள். அதைப் பார்த்து, விஞ்ஞானப்பூர்வமாக விவசாயப் பணிகளை மேற்கொண்டால் அந்த விவசாயிகள் பயிரிடுகின்றபொழுது அதிக லாபத்தை, அதிக விளைச்சலை பெறமுடியும். அதுமட்டுமல்ல, எல்லாத் துறையிலும் நாம் கண்டுள்ள

வளர்ச்சியை, அரசு மக்களுக்கு வழங்குகின்ற திட்டங்களை, அரசின் செயல்பாட்டினை இந்த அரங்குகள் மூலமாக தெரிந்துகொள்ள முடியும்.

ஏற்காடு மலைவாழ் மக்கள், ஏழை மக்கள், அன்றாடம் உழைத்தால்தான் உணவு கிடைக்கும் என்ற நிலையில் வாழ்கின்ற மக்கள். அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்துதர வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இங்கே பட்டா வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். சட்டப்படி, யாருக்கெல்லாம் வழங்க முடியுமோ அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு முன்வரும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

மலைவாழ் ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை அம்மாவினுடைய அரசு கனிவோடு பரிசீலித்து ஏற்காடு மலையிலும் பள்ளி அடுத்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றுக்கணக்கான மலைவாழ் மக்களின் குழந்தைகள் அங்கேயே தங்கி, அனைத்து வசதிகளுடன் கூடிய பள்ளி கட்டிக் கொடுக்கப்படும். அந்த மாணவர்களுக்கு உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தரப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, கருமந்துறையிலும் அடுத்த ஆண்டு முதல் பள்ளி ஒன்று அமைத்துக் கொடுக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் கோரிக்கையை ஏற்று, கருமந்துறையில் இரண்டு மினி பஸ்களும், ஏற்காடு மலையில் இரண்டு மினி பஸ்களும் இயக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை

தெரிவித்துக் கொள்கின்றேன். நம்முடைய தமிழகத்தில் 20 மாவட்டங்கள் மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியாக கண்டறியப்பட்டிருக்கின்றன. அவர்களின் அடிப்படை தேவைகளான, சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி போன்ற பல்வேறு வகையான வசதிகளை நிறைவேற்றித் தருவதற்காக அம்மாவினுடைய அரசு தனி கவனம் செலுத்தி, பல்வேறு திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றது. மத்திய அரசிடமிருந்து சில நிதியுதவி கிடைக்கின்றது. அந்த நிதியுதவி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மலைவாழ் மக்களின் நலன் கருதி நான் குறிப்பிட்ட அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தனியே எந்த முடிவும் எடுக்காமல், ஒரு திட்டத்தை எப்படி செயல்படுத்தினால் சிறக்கும் என்று மூத்த அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடன் கலந்துபேசி, முடிவெடுத்துதான் அந்தத் திட்டத்தை நான் அறிவிக்கின்றேன். பலரோடு பேசுகின்றபொழுதுதான் அந்தத் திட்டம் சிறக்கும். ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு பிரச்சினை இருக்கும். அவற்றை உள்வாங்கி, ஒருமித்த கருத்தோடு, திட்டத்தை வகுத்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். அப்படித்தான் அம்மாவினுடைய அரசு இன்றைக்கு வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த கோடை விழா நிகழ்ச்சியின் ஆரம்பத்தில், நம்முடைய கலைஞர்கள் நமது காதுக்கினிய அற்புதமான படைப்புகளை படைத்தார்கள். அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, வண்ண,

வண்ண மலர்களை உருவாக்கி, நமது கண்ணுக்கு குளிர்ச்சியாகவும், மனதிற்கு மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற அற்புதமான மலர்களை நம் மனம் குளிர அருமையாக அமைத்துக் கொடுத்த, தோட்டக்கலைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், அதற்குத் துணையாக இருந்த வேளாண்மைத் துறை முதன்மை செயலாளர் அவர்களுக்கும், சுற்றுலாத் துறை முதன்மை செயலாளர் அவர்களுக்கும், அதற்கு முன்னேற்பாடு செய்த மாண்புமிகு வனத்துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மற்றும் அவர்களோடு இணைந்து சிறப்பாக இந்த கோடை விழா அமைய வேண்டுமென்பதற்காக பாடுபட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
12.05.2018 அன்று சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடைபெற்ற
43ஆவது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி
தொடக்க விழாவில் ஆற்றிய உரை

உள்கட்டமைப்பு வசதி எவ்வளவு இருக்கின்றதோ அந்த அளவுக்கு தொழில் வளம் பெருகும் வாய்ப்பும் இருக்கிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பணியாற்றிய காலத்திலே போடப்பட்ட திட்டங்கள் இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி, இன்றைக்கு இந்த உயர்மட்ட புதிய பாலத்தை திறக்கின்ற நிகழ்ச்சி, ஏற்கெனவே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே அனுமதிக்கப்பட்டு தற்போது அதை நடைமுறைக்கு

கொண்டுவருவதற்காக அடிக்கல் நாட்டு விழா மற்றும் புதிய காவல் நிலையங்கள் துவக்க விழா, மாநகர காவல் ஆணையம் சார்பில் தயாரிக்கப்பட்ட சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறும்பட குறுந்தகடு வெளியீட்டு விழா ஆகிய விழா நிகழ்ச்சியில் வரவேற்புரை நிகழ்த்திய மதிப்பிற்கும் மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்து முன்னிலை உரையாற்றிய சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய திரு. வி.பன்னீர்செல்வம் அவர்களே, முன்னிலை உரையாற்றிய சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்கும் மரியாதைக்குரிய திரு.ஜி.வெங்கடாசலம் அவர்களே, சேலம் மாநகர காவல் ஆணையர் அவர்களே, கோவை மேற்கு மண்டலத்தின் காவல்துறை தலைவர் அவர்களே, சேலம் சரகத்தினுடைய காவல்துறை துணைத்தலைவர் அவர்களே, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களே மற்றும் நெடுஞ்சாலைத் திட்ட கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை, நபார்டு மற்றும் கிராம சாலையினுடைய கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்களே, திரு கே.காமராஜ் அவர்களே, முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.ஏ.பி.சக்திவேல் அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.எஸ்.வெற்றிவேல் அவர்களே, திரு. ஆர்.எம்.சின்னத்தம்பி அவர்களே, திரு.அ.மருதமுத்து அவர்களே மற்றும் மத்திய மாவட்ட கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.இளங்கோ அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் திரு. சின்னசாமி அவர்களே, முன்னாள் மேயர் திரு. சவுண்டப்பன் அவர்களே, திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே, கழகத்தினுடைய முன்னோடி பொறுப்பாளர்களே, அரசு உயர் அதிகாரிகளே, முன்னாள் உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிருவாகிகளே,

பெரியோர்களே, தாய்மார்களே, கழக உடன்பிறப்புகளே, சகோதரிகளே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, இறுதியாக நன்றியுரை ஆற்ற இருக்கின்ற கட்டமைப்பு, பராமரிப்புத் துறையின் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்

இன்றைய தினம், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலே நம்முடைய சேலம் மாநகர் மக்களுடைய நீண்ட நாட்கள் கோரிக்கை, சேலத்தின் புறவழிச்சாலை பகுதியான பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே அடிக்கடி போக்குவரத்து நெரிசல், காலையிலும், மாலையிலும் பள்ளிக்குச் செல்கின்ற மாணவர்கள், வேலைக்குச் செல்கின்ற பணியாளர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோர் பாதிக்கப்படுகின்றார்கள். பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவியர்கள் பள்ளிக்கு சரியான நேரத்தில் செல்ல முடிவதில்லை, பணிக்கு செல்லும் ஊழியர்கள் சரியான நேரத்தில் பணிக்கு செல்ல முடிவதில்லை. ஒரு சில நேரங்களில், ஏவிஆர் ரவுண்டானா, திருவாகவுண்டனூர் ரவுண்டானா ஆகிய இடங்களில் கிட்டத்தட்ட அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை தவிர்க்க வேண்டும் என்பதற்காக, பொதுமக்களுடைய கோரிக்கைகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்தார்கள். இது தேசிய நெடுஞ்சாலை ஆயிற்றே, இதற்கு ஏற்கெனவே சுங்க கட்டணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள், நாம் எப்படி பாலம் கட்ட முடியும் ? மாநில நிதியிலிருந்து எப்படி இதற்கு செலவழிக்க முடியும் ? ஆகவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தான் இதற்கு பாலம் கட்ட வேண்டும், அதற்கு நீங்கள்

முயற்சி செய்யுங்கள் என்று சொன்னார்கள். நான் பலமுறை மத்திய தரைவழி போக்குவரத்திற்கு கடிதம் எழுதப்பட்டது, அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை. மீண்டும் அம்மாவை சந்திக்கின்ற ஒரு சூழ்நிலை வந்தபோது, மாண்புமிகு அம்மாவிடத்திலே சொன்னேன், நீங்கள் தெரிவித்தபடி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தான் இந்த பாலத்தை கட்டவேண்டும், அவர்கள் பராமரிக்கப்படுகின்ற சாலை, இருந்தாலும் நாம் கடிதம் எழுதினோம், அதற்கு பதிலும் கிடைக்கவில்லை. அந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றவில்லை. ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அருள்கூர்ந்து காலையிலும், மாலையிலும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றன, இந்த போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக இந்த இரண்டு இடத்திலும் ஒரு உயர்மட்ட பாலத்தை கட்டிக் கொடுங்கள் என்று முதல் கோரிக்கையாக வைத்தோம். கிட்டத்தட்ட மூன்று பாலங்கள், ஏவிஆர் ரவுண்டானா, திருவாகவுண்னூர் ரவுண்டானா, இரும்பு ஆலை சந்திப்பு மூன்று பாலத்திற்கும் கிட்டத்தட்ட 125 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது, மாநில வருவாயிலிருந்துதான் இதை செலவழிக்கும் சூழ்நிலை இருக்கிறது, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பராமரிக்கின்ற சாலையை நம்முடைய மாநில நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்காக நீங்கள் கேட்கிறீர்கள் என்று சொல்லி உடனடியாக கையெழுத்து போட்டு அனுமதி கொடுத்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய நினைவாக இன்றைக்கு காட்சி அளிக்கின்றது. ஒரு தலைவர் பிறக்கின்றார், வாழுகின்றார், மறைகின்றார், அவர் இருக்கின்ற காலத்திலே அவர் வகிக்கின்ற பதவி இருக்கின்றபொழுது, நாட்டு மக்களுக்கு என்ன செய்தார் என்பது தான் என்றென்றைக்கும் மக்கள் மனதிலே நிலைத்திருக்கும். ஆகவே, இந்தப் பாலம் நம் அனைவருடைய

நெஞ்சிலே நிலைத்திருக்கின்ற அளவிற்கு மாண்புமிகு அம்மா அனுமதி கொடுத்து, இன்றைக்கு அம்மாவினுடைய அருள் ஆசியால், ஏற்கனவெ திருவாகவுண்டனூர் ரவுண்டானா பாலம் கட்டி முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. இப்பொழுது உரிய காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு, ஏவிஆர் ரவுண்டானாவிலிருந்து உயர்மட்ட பாலம் கட்டி முடிக்கப்பட்டு, இன்று அம்மாவினுடைய ஆசியால் திறக்கப்பட்டிருக்கின்றது. இதுதான் அம்மாவினுடைய அரசு. எந்தத் திட்டத்தை போட்டாலும், உரிய காலத்திற்கு நிறைவேற்றக்கூடிய அரசு அம்மாவினுடைய அரசு தான். அதற்குப் பிறகு இரும்பு ஆலை சந்திப்பில் மத்திய தரைவழி அமைச்சகத்திற்கு நமக்கு அனுமதி கொடுக்காத பிறகுதான் அனுமதி கிடைத்தது. நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் பலமுறை சென்று தரைவழி போக்குவரத்துத் துறை அதிகாரியிடத்தில் தெரிவித்து அமைச்சரிடத்திலே தெரிவித்து அதற்கு உடனடியாக அனுமதி கொடுத்தார்கள், அந்தப் பணியும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஐந்து ரோட்டில் தமிழ்நாடு அரசு நிதியிலிருந்து ஒரே திட்டத்திற்கு 320 கோடி ரூபாய் வழங்கிய வரலாறு கிடையாது, சேலத்திற்கு தான் ஒரே பாலத்திற்கு 320 கோடி ரூபாய் கொடுத்தார்கள். இங்கிருந்தும், ஒமகூலூரிலிருந்தும், ஏற்காட்டிலிருந்தும் போகலாம். ஆகவே, எல்லா பகுதியில் செல்கின்ற வாகனங்கள் தங்குதடையில்லாமல், நெரிசல் இல்லாமல் செல்வதற்கு 320 கோடி ரூபாய் அம்மா கொடுத்து, அதுவும் மிக வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல மணல்மேட்டில் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது. அந்தப் பாலம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படும். லீ பஜார் பாலம் நிலம் எடுக்கும் பிரச்சினையினால் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. இருந்தாலும், அந்தப் பணியை வேகமாக முடிப்பதற்கு அவர்களோடு பேசி, சமாதானப்படுத்தி, ஒப்புதலைப் பெற்று அந்தப்பணி குறுகிய காலத்திலே முடிக்கப்பட்டு அந்தப் பாலம் திறக்கப்படுகின்ற பொழுது லீ பஜாருக்கு செல்லுகின்ற கனரக

வாகனங்கள் தடையில்லாமல், போக்குவரத்து நெரிசல் இல்லாமல் செல்லமுடியும். அங்கு போக்குவரத்து நெரிசல் இல்லாத சூழ்நிலை உருவாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னோம். அந்த ரயில்வே கடவிற்கு குறுக்கே ஒரு உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்து அந்தப் பாலம் முடிகின்ற தருவாயில் இருக்கின்றது. எங்கெங்கே பாலங்கள் கேட்டோமோ அங்கெல்லாம் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன. முள்வாரி கேட் டெண்டர் விடப்பட்டது, அந்த டெண்டர் ஒப்பந்ததாரர் அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதன் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதுவும், ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு அங்கேயும் விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலேயே எந்த ஒரு மாவட்டத்திற்கும் இல்லாத அளவிற்கு சேலம் மாவட்டத்திற்கு தான் ஒரே நேரத்தில் அதிக பாலத்தை கொடுத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். வீரபாண்டியிலே ஆட்டையாம்பட்டி, மொசக்காலிப்பட்டி கிலோமீட்டர் **2/2** புதிய பாலம் **3.5** கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆத்தூரில் கொத்தம்பாடி கல்பவனர் சாலை உயர் மட்ட பாலம் சுமார் **4.25** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, இன்று என்னால் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதே போல ஆத்தூர் நகருக்கு புறவழிச்சாலை வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று இன்றைக்கு **55** கோடி மதிப்பில் ஆத்தூர் நகருக்கு புறவழிச்சாலைஅமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். காரமங்கலத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்கு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அம்மாஅவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று, ஒரு புறவழிச்சாலைக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சேலம் மாவட்டத்திலிருந்து நெடுஞ்சாலைத் துறை மூலமாக 2,514 கிலோமீட்டர் சாலைகள் இருக்கின்றன. 2011–2016 வரைக்கும் 1,482 கி.மீ சாலைகள் 729 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பராமரிக்கப்பட்டிருக்கின்றது. 46 பாலங்கள் இதுவரை 133.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளன. 2016–2017ஆம் ஆண்டில் 401 கி.மீ சாலைகள் 229 கோடி ரூபாய் மதிப்பிலும், 4 பாலங்கள் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துக் கொள்கின்றேன். வருகின்ற 2017–2018ஆம் ஆண்டு 102.45 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் சுமார் 76 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 13 பாலங்கள் சுமார் 523.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கை பேணிக் காக்கின்ற சேலம் மாவட்டம் ஆத்தூர் காவல் நிலையத்தை ஊரக காவல் நிலையம் மற்றும் நகர காவல் நிலையம் என இரண்டாக பிரித்து, ஆத்தூர் நகர காவல்நிலையம் இன்றையதினம் துவக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏத்தாப்பூர் காவல் நிலையத்தை இரண்டாக பிரித்து ஏத்தாப்பூர் காவல்நிலையம் மற்றும் கருமந்துரை காவல்நிலையம் என இரண்டாகப் பிரிந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய கருமந்துரை காவல் வட்டம் ஆய்வாளர் தலைமையில் கருமந்துரை மற்றும் களியக்கோவில் காவல் நிலையத்தை உள்ளடக்கி அந்த காவல் நிலையமும் திறக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பசுமை வழிச்சாலை மிகமிக முக்கியம். நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி உள்கட்டமைப்பை பொறுத்துதான் இருக்கிறது. இன்றைக்கு நாளுக்குநாள் படித்தவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்லும் பொழுது அவர்களுக்கு வேண்டிய வேலைவாய்ப்பை உருவாக்கித்

தரவேண்டும். அப்படியென்றால் புதிய புதிய தொழில் துவக்கப்பட வேண்டும். அப்படி புதிய புதிய தொழில் துவக்கப்பட வேண்டும் என்றால் தேவையான உள்கட்டமைப்பு இருந்தால்தான், புதிய தொழில் முனைவோர் முன் வருவார்கள். ஆகவேதான், பசுமை வழிச்சாலையின் மூலமாக நம்முடைய பகுதி வளர்ச்சி அடைவதற்கு இந்த திட்டத்தை விரைவிலே கொண்டு வருவதற்கு அம்மாவினுடைய அரசு மத்திய அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே இரண்டாவது பசுமை வழிச்சாலை திட்டம். இந்த பசுமை வழிச்சாலை திட்டம் நிறைவேற்றிகின்ற பொழுது, நம்முடைய வடக்கு மாவட்டம், மேற்கு மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் ஒரு நல்ல வளர்ச்சியை காணமுடியும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த பசுமை வழிச்சாலை வருகின்ற பொழுது கனரக வாகனங்களும் அந்த வழியாக செல்கின்றது, விபத்துக்கள் குறைகின்றன, எரிபொருள் சிக்கனம் ஏற்படுகின்றது, குறைந்த நேரத்திலே உரிய இடத்திற்கு செல்ல முடிகின்றது. இவ்வளவு வசதிகள் இருப்பதால் தான் தொழில் வளம் பெருகும். உள்கட்டமைப்பு வசதி எவ்வளவு இருக்கின்றதோ, அந்த அளவுக்கு தொழில் வளம் பெருகுவதற்கான வாய்ப்பு இருக்கிறது, அந்த அடிப்படையிலே தான் இந்த பசுமை வழிச்சாலையை சேலத்தில் இருந்து சென்னை வரை திட்டம் தீட்டப்பட்டுள்ளது, விரைவிலே நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, ஏர்போர்ட் போல பஸ்போர்ட், எல்லா வசதிகளும் கூடிய பஸ் போர்ட் ஒன்று அமைக்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மத்திய அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ஏர்போர்ட்டில் இருப்பது போன்று எல்லா வசதிகளும் பஸ் போர்ட்டில் இருக்கின்றது.

சாலையை விரிவுபடுத்துகின்ற ஒரு திட்டம். திருச்செங்கோடு, சங்ககிரி, ஓமலூர் வரை நான்கு வழி சாலையை உருவாக்குவதற்கு விரைவிலே ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அதேபோல, ஈரோடு–பவானி, பவானி–மேட்டூர், மேட்டூர்–தொப்பூர் அந்த சாலையும் அகலப்படுத்தப்பட இருக்கின்றது. மத்திய பாதுகாப்புத் துறைக்கு தேவையான உதிரி பாகங்கள் நம்முடைய சேலம் மாவட்டத்திலே உற்பத்தி செய்யக்கூடிய சிறு சிறு நிறுவனங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையும் மத்திய அரசிடம் வைத்திருக்கின்றேன். அப்படி பாதுகாப்புத் துறைக்கு உதிரி பாகங்கள் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்திற்கு வருகின்றபொழுது நம்முடைய மாவட்டத்திலே படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம், வேளாண் பெருமக்கள் நிறைந்த பகுதி, ஆகவே, வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர்நிலை முக்கியம். ஆகவே, நீரை சேமிப்பதற்கு பல்வேறு வகையிலே அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. குடிமராமத்து திட்டத்தின் மூலமாக ஏரிகளை ஆழப்படுத்துவது, பலப்படுத்துவது போன்ற பணிகளும் செய்யப்படுகின்றன. ஆங்காங்கே இருக்கின்ற நதிகள், ஓடைகள் வழியாக தடுப்பணை கட்டப்பட்டு பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் தடுத்து நிறுத்தி நிலத்தடி நீரை உயர செய்து வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைப்பதற்கான வழிமுறையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கின்றது. ஒரு மூன்றாண்டுகள் திட்டமாக உருவாக்கப்பட்டு, அதற்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, முதல் கட்டமாக 350 கோடி ரூபாயிலே அந்த தடுப்பணை கட்டுகின்ற பணியும் துவங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாம் கட்ட பணி துவங்குவதற்காக 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அந்த ஏரிகளுக்கு முழுக்க முழுக்க

விவசாயிகளையே பயன்படுத்தி நிறைவேற்ற இருக்கின்றோம். அந்த பாசன விவசாயிகள் சங்க நிருவாகத்திடமே நாம் ஒதுக்கப்படுகின்ற நிதியை அவர்களுக்கு கொடுத்து, அவர்களே அந்தப் பணியை செய்து முடிக்கின்ற ஒரு திட்டத்தை குடிமராமத்து திட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் அந்த ஏரியிலே சேமித்து, விவசாயிகளுக்கு தேவையான நீரை பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசுதான் உருவாக்கிக் கொடுத்துள்ளது, வேறு எந்த அரசும் உருவாக்கவில்லை.

இன்றைக்கு பலபேர் பேசுகிறார்கள், அதை செய்தேன், இதை செய்தேன் என்று. இவ்வளவு திட்டங்களை நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கடந்த கால ஆட்சியாளர்கள் மக்களுக்கு எந்த ஒரு பயனுள்ள திட்டத்தையாவது தந்தார்களா? எதுவுமே கிடையாது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் பல்வேறு திட்டங்களை நாட்டு மக்களுக்கு அளித்து, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு அதை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஓமலூர், தாரமங்கலம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதியிலே கடந்த கால வறட்சியின் போது நான் சுற்றிப் பார்க்கின்றபொழுது நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது, அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் வறட்சி பாதித்த பகுதிகளுக்கு சென்று தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுது பல்வேறு விவசாயிகள் காய்கறிகளை பயிரிட்டிருக்கின்றார்கள், தக்காளி பயிரிட்டு அதிகமாக விளைச்சல் வருகின்றபொழுது, அது விலை குறைகின்றது. அதிகமாக விளைச்சல் உற்பத்தி ஆகின்றபொழுது, அந்த நஷ்டத்தை போக்குகின்ற வகையில், அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி ஓமலூர் தாரமங்கலத்திற்கு இடையிலே பிரம்மாண்டமான காய்கறி மார்க்கெட் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலமாக பழங்கள், காய்கறிகள் சேமித்து வைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, விலை வீழ்ச்சி அடைகின்றபொழுது அதில் வைத்துக் கொள்ளலாம், விலை ஏறுகின்றபொழுது எடுத்து அதை விற்பனை செய்கின்றபொழுது விவசாயிகள் நஷ்டத்திலிருந்து காக்கப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்க இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நீரினுடைய அவசியம் மிக முக்கியம். எல்லா நதிகளுமே பக்கத்து மாநிலத்திலிருந்து உற்பத்தியாகிதான் நம்முடைய மாநிலத்திற்கு வருகிறது. காவேரி கருநாடகத்தில் உற்பத்தியாகிறது, முல்லைப் பெரியாறு கேரளாவில் உற்பத்தியாகிறது, பாலாறு ஆந்திராவிலிருந்து உற்பத்தியாகிறது. இதற்கு ஒரு நிரந்தர தீர்வு காணவேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் நான் வலியுறுத்திச் சொன்னேன். மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் திரு.நிதின் கட்கரி அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபொழுது என்னிடத்தில் சொன்னார்கள், நீங்கள் கடிதம் எழுதினீர்கள், பாரத பிரதமிடத்திலும் கோரிக்கை வைத்தீர்கள். இன்றைக்கு கோதாவரி, காவேரியை இணைக்கின்ற மிகப் பெரிய திட்டத்தை நாங்கள் உருவாக்க இருக்கின்றோம், ஆகவே, கோதாவரியில் அதிக நீர் வருகின்றது. அந்த நீரை தெலுங்கானா, ஆந்திரா வழியாக தமிழகத்திற்கு கொண்டுவந்து நம்முடைய பகுதியாகிய மாயனூர் கேரேஜ் என்னும் இடத்தில் அந்த தண்ணீரை கொண்டு வந்து இணைக்க வேண்டும். அப்படி கோதாவரி தண்ணீர் 125 டி.எம்.சி. நமக்கு கொடுப்பதாக மத்திய அரசால் திட்டம் தீட்டப்படுகிறது. இதன் மூலம் அந்த பகுதி மக்களுக்கு நிலையான நீர் கிடைக்கும். மேட்டூர் அணையில் இருக்கும் அந்த நீர் சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம் மற்றும் திருச்சி மாவட்டம் வரை கால்வாய் வெட்டி அதன் மூலமாக ஆங்காங்கு இருக்கின்ற ஏரிகளை நிரப்புகின்ற பொழுது மூன்று மாவட்டங்களில் இருக்கின்ற

விவசாயிகள் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே வேளாண் துறை, மருத்துவத் துறை மற்றும் அனைத்துத் துறைகளிலும் முதன்மையாக விளங்கக்கூடிய நிலை தமிழகத்திலே பார்க்க முடிகின்றது. கல்வித் துறையில் இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை தமிழகம் தான் முன்னிலை வகிக்கின்றது. சாலை போக்குவரத்திலும் தமிழகத்தில்தான் சாலை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது என்று மத்திய அரசே கூறியிருக்கிறது. அந்த அளவிற்கு அம்மாவினுடைய அரசு எல்லா துறைகளிலும் வளர்ச்சியை காண்பதற்கு திட்டங்களை தீட்டியிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டி, அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு, ஏழை எளிய மக்களின் அரசு, மக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி மிகச் சிறப்பாக, துரிதமாக இந்த பாலப்பணியை குறுகிய காலத்திற்குள் முடித்த ஒப்பந்ததாரர்களுக்கும், நிறைவேற்றுவதற்கு துணையாக நின்ற நெடுஞ்சாலைத் துறையை சேர்ந்த அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
13.05.2018 அன்று சேலத்தில் நடைபெற்ற
அரசு விழாவில் ஆற்றிய உரை

ரூ.64 கோடி மதிப்பீட்டில் ஈரோடு அரசு பொது மருத்துவமனை அருகில் உயர்மட்ட பாலம்!

இன்றைய நிகழ்ச்சியின் வாயிலாக காலிங்கராயன் மணிமண்டபம் திறப்புவிழா மற்றும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆண்டுவிழா, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா ஏற்கெனவே நடைபெற்றிருந்த முடிவுற்ற திட்டப் பணிகளுக்கு துவக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான, எழுச்சியான இந்த நிகழ்ச்சிக்கு தலைமையேற்று, தலைமையுரையாற்றிய மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே சிறப்பான அத்தனை கருத்துக்களையும் அள்ளி அழகாக நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்ற உங்களுடைய சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே, இந்த நிகழ்ச்சியை

சிறப்பிப்பதற்காக வருகை தந்துள்ள மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்களே, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் மருத்துவர் வி.சரோஜா அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சத்தியபாமா அவர்களே, திரு.பி.கோபாலகிருஷ்ணன் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ராமலிங்கம் அவர்களே, திரு.சிவசுப்பிரமணியன் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற காலிங்கராயன் அவர்களது வாரிசுதாரர்களே, அம்மா பேரவை ஒன்றிய கழகச் செயலாளர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு தலைவர் திரு.விஸ்வநாதன் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற பவானி ஒன்றிய செயலாளர் அவர்களே, அம்மா பேரவை ஒன்றிய கழகச் செயலாளர் அவர்களே, பவானி ஒன்றிய கழகச் செயலாளர் மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, வருகை தந்திருக்கின்ற அரசு உயரதிகாரிகளே, மேடையிலே வீற்றிருக்கின்ற கழகத்தின் முன்னாள் நிருவாகிகளே, ஒன்றிய நகர, பேருராட்சி, ஊராட்சி கழகத்தினுடைய நிர்வாகிகளே, கழக உடன்பிறப்புக்களே,

கழகத்திலே பல்வேறு பொறுப்புக்களை வகிக்கின்ற நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, நலத்திட்ட உதவி பெறுகின்ற பெரியோர்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தை தெரிவித்து இன்றைய தினம் வரலாற்று சிறப்புமிக்க காலிங்கராயன் அவர்களுடைய திருவுருவச் சிலையை திறந்திருக்கின்றோம். இது ஒரு வரலாறு சிறப்புமிக்க நிகழ்வு. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே காலிங்கராயன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவேண்டும் என்பதற்காக நிதிஉதவிகளை செய்து அந்தப்பணி தொடங்கப்பட்ட நிலையில், இன்றைக்கு காலிங்கராயன் மண்டபம் கட்டப்பட்டு அனைவருடைய ஆசியோடு, ஒத்துழைப்போடு இன்றைக்கு திறந்திருக்கின்றோம். ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையம் பவானி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 1899ஆம் ஆண்டு இந்தப் பள்ளி துவக்கப்பட்டது. 119 ஆண்டுகள் பழமை வாய்ந்த பள்ளி இந்த பவானி அரசு மேல்நிலைப்பள்ளி. 1978ஆம் ஆண்டு இந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்த சிறப்பு வாய்ந்த பள்ளிதான் என்னையும் உருவாக்கி உங்களிடம் நிறுத்தியிருக்கிறது. நான் இந்தப் பள்ளியில் 1967ஆம் ஆண்டு 6ஆம் வகுப்பிலே சேர்ந்து 11ஆம் வகுப்பு எஸ்.எஸ்.எல்.சி வரை இந்த பள்ளியிலே விடுதியில் தங்கி படித்தேன். என்னோடு பலபேர் இங்கே தங்கியிருந்தார்கள். ஆறாண்டு காலம் இந்தப் பள்ளியிலே சுற்றி சுற்றித் திரிந்தவன் நான். விளையாட்டு மைதானம் முழுவதும் சுற்றித் திரிந்தவன் நான். அப்பொழுது எங்களுடைய ட்ரில் மாஸ்டர் மரியாதைக்குரிய பெரியவர் திரு. குப்புசாமி அவர்கள் இருந்தார், அந்தக் காலம் ஒரு பொற்காலமாக இருந்தது. நல்ல உயர்வு கொண்ட உள்ளம் கொண்ட ஆசிரியர் பெருந்தகைகள் எல்லாம் எங்களுக்கு ஆசிரியர்களாக இருந்து அவர்கள் போதித்த பாடங்களை கற்று, இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றோம் என்று மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பள்ளியை

வரலாற்று சிறப்புமிக்க பள்ளியாக நான் கருதுகின்றேன். ஒரு தமிழகத்தினுடைய முதலமைச்சராக உருவாக்கிய இந்தப் பள்ளிக்கு இந்த பெருமை சாரும் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். இந்தப் பள்ளியிலே படித்த மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்விக்கு சென்றிருக்கிறார்கள், பல அறிஞர்களை தோற்றுவித்த பள்ளி இந்தப் பள்ளி.

2016–2017ஆம் ஆண்டில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் 500 மதிப்பெண்களுக்கு 490 மதிப்பெண் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும், 480 மதிப்பெண்களுக்கு மேல் 5 மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள்,400 மதிப்பெண்களுக்கு மேல் 40க்கு மேற்பட்ட மாணவர்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர். 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் கடந்த ஆண்டில் 1200க்கு 1,126 மதிப்பெண்கள் பெற்று இப்பள்ளிக்கு மேலும் பலர் பெருமை சேர்த்துள்ளனர். அவர்களுக்கு என் வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் உடற்கல்வித் துறையில் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பங்கு பெற்று பல அரிய சாதனைகளைப் புரிந்துள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களும் அவரது வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசும் கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஆகவே, இந்த கல்வித்துறைக்கு முக்கியயத்துவம் கொடுக்கின்ற வகையிலே உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் பள்ளித்துறைக்கு அமைச்சராக வந்திருக்கின்றார். இது இந்த மாவட்டத்திற்கு கிடைத்த பெருமை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவுகள் எல்லாம் இன்றைக்கு நனவாக்கப்பட்டு வருகின்றன. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011 முதல் 2016 வரை தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்று சிறந்த ஆட்சி செய்தார்கள். அந்த

காலகட்டத்தில், கிராமங்களிலிருந்து நகரம் வரை ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, அடித்தளத்திலே வாழ்கின்ற மக்களுக்குக் கூட அந்தப் பகுதியிலே கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக 221 தொடக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டன. 112 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. இன்றைக்கு தமிழகம் கல்வியிலே சிறந்த மாவட்டமாக திகழ்ந்திருக்கிறது என்று சொன்னால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள்தான் காரணம்.

இந்தியாவிலேயே அதிக பள்ளிகளை உருவாக்கிய மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அம்மாவின் அரசும் கடந்த இரண்டாண்டுகளில் 6 தொடக்கப் பள்ளிகளை துவக்கியுள்ளது. 4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 169 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 102 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியினை அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு அம்மாவின் அரசு தொடர்ந்து நல்ல கல்வியை கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து பள்ளிகளிலும் மாணாக்கர்களின் கல்வி வசதியை மேம்படுத்தும் வகையிலும், கற்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பள்ளிக் கல்வித்துறையில் மாணவர்களின் படிப்பு எவ்வித பாதிப்புமின்றி சீராக நடைபெறுவதற்கு ஏதுவாக கடந்த 7 ஆண்டுகளில் சுமார் 58 ஆயிரத்து 691 ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த கால ஆட்சியிலே,

ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. அதனால் மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் குறைந்து இருந்தது.

கல்லாதவர்களே தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்பதே எனது கோட்பாடாகவும், எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது என்று புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வாக்குக்கேற்ப, வசதி படைத்த குழந்தைகளுக்கு என்ன கல்வி கிடைக்கின்றதோ அதே கல்வியை ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மாணாக்கர்களும் பெற வேண்டுமென்ற நோக்கத்தில், மாணாக்கர்களுக்கு விலையில்லா புத்தகங்கள், புத்தகப் பை, சீருடைகள், காலணிகள், எழுதுபொருட்கள் உட்பட 14 வகையான நலத்திட்ட பொருட்கள் மாணாக்கர்களுக்கு விலையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்கு பள்ளிக்கு சென்றுவர வசதியாக மிதிவண்டி, கற்றலை எளிதாக்கி இணையதளம் மூலம் கல்வி பயில வசதியாக 36 இலட்சம் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய வரலாற்றில் எங்கும் கிடையாது. இன்றைக்கு இந்தியாவிலே சிறந்த கல்வி நம்முடைய மாநிலத்தில் தான் கிடைக்கிறது. ஒரு விஞ்ஞான கல்வியை நம்முடைய மாணவர்களுக்கு கொடுத்தால், நம்முடைய மாணவர்களும் போட்டியிலே வெற்றி பெறமுடியும். விஞ்ஞான உலகத்தை நம்முடைய தமிழ்நாடு மாணவர்கள் படைப்பார்கள்.

இந்த நேரத்திலே ஒரு சிறிய கதையை தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஒரு இளைஞர் குருவிடம் பயிற்சி பெறச் சென்றான். சென்ற முதல் நாளே அந்த குரு அந்த இளைஞரிடம் “பயிற்சி என்பது நான் சொல்லித் தெரிவதைவிட நீ அனுபவத்தில் புரிந்து கொள்வது மிகவும் நல்லது” என்றார். அந்த இளைஞரும் குருவைப் பார்த்து, “உங்களைப் பார்த்து விரைவில் தெரிந்து கொள்வேன் குருவே” என்றார். உடனே, குருவைப் பின்பற்ற ஆரம்பித்த அந்த இளைஞர்,

குருவின் செயல்கள் அனைத்தையும் அப்படியே பின்பற்ற ஆரம்பித்தார். அத்துடன் அதை குருவிடமும் தெரிவித்தார். அதற்கு அந்த குரு, ‘‘என்னை அப்படியே பின்பற்றினால், அது மிகவும் தவறு. இதை விரைவிலேயே நீ தெரிந்து கொள்வாய்’’ என்றார். ஒரு நாள் தியானம் செய்து முடித்த குரு, ஆற்றின் மீது தண்ணீரில் நடந்து மறு கரையை அடைந்தார். இதைப் பார்த்த அந்த இளைஞர், ‘‘ தியானம் செய்தால், நாமும் தண்ணீரில் நடக்கலாம்’’ என்று நினைத்து தியானம் செய்துவிட்டு தண்ணீரில் நடக்க முனைந்தார். ஆனால், ஆற்றில் கால் வைத்த அடுத்த விநாடியே தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டான். உடனே, ‘‘என்னைக் காப்பாற்றுங்கள் குருவே’’ என அலறினான். அந்த இளைஞரைக் காப்பாற்றி கரைக்கு அழைத்து வந்த குரு, ‘‘ஆற்றில் கால் வைத்து நடக்க எந்தெந்த தடங்களில் கற்களைப் புதைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும். கண்மூடித்தனமாக என்னை பின்பற்றக்கூடாது. எப்போதும் சிந்தித்து செயல்பட வேண்டும்’’ என்று அறிவுறுத்தினார். அதுபோலத்தான், இளைஞர்கள் யாரும் கண்மூடித்தனமாக பின்பற்றக் கூடாது. எதற்காக சொல்கிறேனென்றால், பலபேர் ஏதேதோ பேசுகின்றார், யார் என்றெல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆகவே, இளைஞர்கள் நன்றாக தெரிந்து பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஒரு விஷத்தையும் சிந்தித்து சரியான பாதையிலே செயல்பட வேண்டும். அப்போதுதான் நாம் நினைத்த மாதிரியான வெற்றிகளை நாம் அடைய முடியும் என்பதை வருங்கால இந்தியாவின் சிற்பிகளான நீங்கள் எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த பள்ளி ஆண்டு விழாவில், ஈரோடு மாவட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்திய திரு. காலிங்கராயன் அவர்களின் மணி மண்டபத்தையும் திறந்து வைத்துள்ளேன் என்பதை நினைத்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

விவசாயத்திற்கு இன்றியமையாததாக விளங்கும் நீர் கிடைக்கப் பெறும் வகையில், அணைக்கட்டுகளை உருவாக்கிய பெரியோர் நினைவைப் போற்றும் வகையில், மணி மண்டபங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், முல்லைப் பெரியாறு அணையை உருவாக்கிய கர்னர் பென்னிகுயிக் அவர்களுக்கு நினைவு மண்டபமும், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டிய கரிகால் பெருவளத்தான் அவர்களுக்கு மணிமண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகள் பாசனம் பெற நற்பணி ஆற்றியவர் காலிங்கராயன் அவர்கள் ஆவார். ஈரோடு மாவட்டத்தின் அணிகலனாகத் திகழ்வது காலிங்கராயன் கால்வாய் ஆகும். இந்த காலிங்கராயன் கால்வாயைக் கட்டிய பெருமை திரு.லிங்கையன் என்கிற காலிங்கராயன் அவர்களையே சாரும். திரு.காலிங்கராயன் பாண்டிய நாட்டு தலைவரான பிறகு தன் ஆளுகைக்கு உட்பட்ட புஞ்சை நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற வேண்டுமென திட்டமிட்டு, நாட்டு மக்களின் உதவியுடன் காலிங்கராயன் அணையினைக் கட்டி கால்வாயினையும் வெட்டினார் என்பது வரலாறு.

காவேரி ஆற்றின் கிளை நதிகளான பவானியையும், நொய்யலையும் இணைக்கும் கால்வாய் காலிங்கராயன் கால்வாய், இதன் மூலம் பவானி ஆற்றிலிருந்து நீர் பிரித்தெடுக்கப்பட்டு, காவேரி ஆற்றின் ஓரமாகவே, அதன் தென் கரையில் சுமார் 56 மைல்கள் கிழக்காக ஓடி ஆவுடையார் பாறை என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் இணைகிறது.

பவானி ஆற்றை நொய்யல் ஆற்றுடன் இணைப்பதற்கு 32 மைல் தூரம் கால்வாய் வெட்டினால் போதும் என்ற நிலை இருந்த

போதிலும், அதிகமான நிலங்கள் பாசனம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், நீர் தேங்கி நின்று வயலுக்கு பாய வேண்டுமென்ற எண்ணத்துடனும், நீரின் வேகத்தைக் குறைத்து கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகள் தடுக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், 56 மைல் தூரத்திற்கு இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

கால்வாயின் இரு கரைகளும் காரையால் கட்டப்பட்டு இருப்பதால், "காரை வாய்க்கால்" என்றும், பாம்பு போல் நெளிந்து செல்வதால், "கோண வாய்க்கால்" என்றும் இதனை அப்பகுதி மக்கள் அழைக்கின்றனர். இதன் மூலம், ஈரோடு மாவட்டத்திலுள்ள 15 ஆயிரத்து 743 ஏக்கர் நிலம் தற்போது பாசன வசதி பெற்று வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட வலுவான அணையினையும், கால்வாயினையும் கட்டிக் கொடுத்தவரும், நதிகள் இணைப்பில் முன்னோடியாக விளங்கியவரும், மக்களுக்கு பல அறப்பணிகளை செய்தவருமான திரு.காலிங்கராயன் அவர்களுக்கு சிலை அமைக்க வேண்டும் என்றும், காலிங்கராயன் அணைக்கட்டுப் பகுதியினை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்றும், அப்பகுதி மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

அக்கோரிக்கையினை ஏற்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 2016ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் திரு.காலிங்கராயன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க ஆணையிட்டார். அதன்பேரில், ஈரோடு மாவட்டம், பவானி காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் பொதுப்பணித் துறையின் சார்பில் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மணி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மணி மண்டபத்தில் சுமார் 7 அடி உயரத்தில் காலிங்கராயன் அவர்களது முழு உருவ வெண்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த காலிங்கராயன் சிலையையும், மணி மண்டபத்தையும் திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

வருங்காலத்தில் திரு.காலிங்கராயன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு சார்பில் விழா கொண்டாடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு அரசு பொது மருத்துவமனை அருகில் 64 கோடியில் உயர்மட்ட பால பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஈரோடு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தை விரிவுபடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஈரோடு வெளிவட்ட சாலை நிறைவு பெறும் நிலையில் இருக்கின்றது. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் பல்வேறு சாலைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

புரட்சித்தலைவி அம்மா ஆட்சிக்காலத்தில், சென்னையிலே தொழில் முதலீட்டாளர் மாநாடு நடத்தி சுமார் 2,42,160 கோடி ரூபாய் ஈர்க்கப்பட்டது. அதன் காரணமாகத்தான் புதிய, புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் வந்து கொண்டிருக்கின்றன. பவானியிலிருந்து மேட்டூர் வரை, மேட்டூரிலிருந்து தொப்பூர் வரை 45 மீட்டர் அகலத்தில் நான்கு வழிச்சாலை அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டுப்புறத்திலிருந்து சத்தியமங்கலம் வரை, சத்தியமங்கலத்திலிருந்து கோபிசெட்டிப்பாளையம் வரை, கோபிச்செட்டிப் பாளையத்திலிருந்து சித்தூர் வரை ஆகிய இடங்களுக்கு நான்கு வழிச்சாலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்தியமங்கலம்–அத்தானி–பவானி வரை சாலை விரிவுபடுத்தப்பட இருக்கின்றது. ஈரோட்டிலிருந்து கரூர்வரை நான்கு வழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஈரோட்டிலிருந்து திருச்செங்கோடு வரை நான்கு வழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு அவினாசி—அத்திக்கடவு திட்டத்தை மாநில அரசு நிதியிலிருந்து செயல்படுத்தப்படும். இதனால் திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்ட விவசாய பெருமக்கள் பயன்பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் கொடுக்கிறோம். நெசவாளர்களை காப்பாற்றக் கூடிய அரசு அம்மாவினுடைய அரசு.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, கல்வியிலே ஒரு புரட்சி ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு ஒன்றாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பாடத்திட்டத்தை மாற்றிக் கொடுத்திருக்கிறோம். நான்கு வகுப்பிற்கு இந்த ஆண்டு பாடத்திட்டத்தை மாற்றிக் கொடுத்திருக்கின்றோம். இந்தியாவிலேயே தமிழகத்திலே தான் சிறந்த கல்வி கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் வழங்கிய அரசு அம்மாவின் அரசு. அதேபோல காப்பீட்டு திட்டத்தின் மூலமாக 3,200 கோடி ரூபாய் பெற்றுத் தந்த அரசு அம்மாவின் அரசு. இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசுதான் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது.

2006 முதல் 2011வரை கடுமையான மின்வெட்டு இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாண்டு காலத்தில் தடையில்லா மின்சாரத்தை வழங்குவேன் என்று சட்டமன்றத்தில் சூளுரைத்தார்கள். அவர்களது முயற்சியின் காரணமாக இன்றைக்கு அம்மாவினுடைய அரசு மின்சாரத் துறை தன்னிறைவு பெற்றுள்ளது.

மானிய விலையில் பணிக்கு செல்லும் மகளிர்களுக்கு இருசக்கர வாகனம் வழங்கப்படும் திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு விழாவிற்கு வரும்போது அளித்த கோரிக்கைகளை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, 1,000 மாணவர்கள் அமரக்கூடிய புதிய கலையரங்கம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளியின் பராமரிப்பு பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்கப்படும் என்பதையும் இதற்கெல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடமாடும் வாகனத்தில் ஏடிஎம் கருவி சேவையை மாண்புமிகு கூட்டுறவுதுறை அமைச்சர் தலைமையேற்று தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கு இப்பகுதி மக்கள் மிகச் சிறப்பாக, எழுச்சியாக, மகிழ்ச்சியோடு என்னை வரவேற்றது என் மனதை நெகிழ வைத்தது என்பதைத் தெரிவித்து வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***13.05.2018** அன்று ஈரோடு மாவட்டம்,*
பவானி அரசு மேல்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில்
அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை

அரசு தோட்டக்கலையின் மூலம், தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா பணியாளர்களுக்கு வழங்கப்படும் கூலி ரூ.250லிருந்து 300ஆக உயர்த்தி வழங்கப்படும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஊட்டி தாவரவியல் பூங்கா பகுதியில் எழுச்சியோடு, சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற 122ஆவது உதகை மலர்க் கண்காட்சி துவக்க விழா மற்றும் குந்தா நீரேற்று புனல் மின் திட்டப் பணிகளுக்கு துவக்க விழா மற்றும் அரசின்

சார்பாக கட்டி முடிக்கப்பட்ட பணிகளுக்கான திறப்பு விழா, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. இன்னசென்ட் திவ்யா அவர்களே!

காலத்தின் நேரம் கருதி, திட்ட விளக்க உரை ஆற்ற முடியாமல் அமர்ந்திருக்கின்ற வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று, சிறந்த கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு நகராட்சி, நிர்வாகம், ஊரகவளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று, சிறந்த கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய செல்லூர் ராஜு அவர்களே!

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர். சரோஜா அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.அர்ஜுணன் அவர்களே! நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.கோபால கிருஷ்ணன் அவர்களே!

குன்னூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சாந்தி அ.ராமு அவர்களே! உதகமண்டலம் சட்டப்பேரவை உறுப்பினர்

திரு.ஆர்.கணேஷ் அவர்களே! மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சுந்தரம் அவர்களே! மாநிலங்களவை உறுப்பினர் திரு.விஜயகுமார் அவர்களே! சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சின்ராஜ் அவர்களே! திரு.ஈஸ்வரன் அவர்களே! முன்னாள் அமைச்சர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையத் தலைவர் திரு. அ.மில்லர் அவர்களே! எரிசக்தித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு.விக்ரம் கபூர் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர் திரு.புத்திசந்திரன் அவர்களே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! கூட்டுறவு சங்க நிர்வாகிகளே! சுற்றுலா பயணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை அன்னை ஈன்றெடுத்த அற்புதங்கள் ஏராளம். உலகின் ஒட்டுமொத்த அழகும், அற்புதங்களும் இந்த உதகையில் அணிவகுத்து நிற்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

சிகரங்கள், பள்ளத்தாக்குகள், மலைமுகடுகள், நீர்த்தேக்கங்கள், நீர்வீழ்ச்சிகள், மலர்த் தோட்டங்கள், சிற்றோடைகள், பூங்காக்கள்,

படகு இல்லம், நீர் மின் நிலையங்கள் என்று கண்களையும், மனதையும் இந்த உதகமண்டலம் குளிர வைக்கின்றது. இன்றளவும் இங்கு வாழ்ந்து வரும் இருளர், குறும்பர், பணியர், தோடர், கோத்தர், காட்டு நாயக்கர் போன்ற பழங்குடியினராலும், படுகர் இன மலைவாழ் மக்களாலும் இப்பகுதியின் பழமையும், பண்பாடும் காக்கப்பட்டு வருகின்றன.

இரவு நேரங்களில் வெள்ளி நிலா விளையாடும் எழில் மலையாக உதகை மலை காட்சியளிப்பதால் 11ஆம் நூற்றாண்டு காலக்கட்டத்தில் ராஜாக்கள் இந்த மலையை "நிலா மலை" என அழைத்ததாகக் கூறப்படுகிறது.

'கிரி' என்றால் 'மலை' என்னும் பொருளில் பிற்காலத்தில் "நீலகிரி" என பெயர் மாறியதாகவும் கூறப்படுகின்றது. சிலப்பதிகார காப்பியத்தில் "நீலகிரி" பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

நீலகிரி இந்தியாவின் முதல் உயிர்க்கோள் காப்பகம் என்பது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கின்றது.

இந்த 122ஆவது மலர்க்காட்சியிலே பல்வேறு சிறப்பு மிக்க மலர்களால் அலங்கரிக்கப்பட்ட, காட்சிப்படுத்தப்பட்ட, மனதிற்கினிய சம்பவங்களை நாம் பார்த்தோம். 10,000 சர்பரா மற்றும் ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்ட 9 அலங்கார வளைவுகள், ஆர்கிட் மலர்களால் ஆன பட்டாம்பூச்சியின் உருவ அமைப்பில் அமைந்த நுழைவு வாயில், 1,500 ஆர்கிட்ஸ் மற்றும் 1,000 கார்னேஷன் மலர்களைக்கொண்டு உருவாக்கப்பட்ட கார்டூன் பொம்மை, 1 இலட்சம் கார்னேஷன் மலர்களைக் கொண்டு தத்ரூபமாக உருவாக்கப்பட்ட மேட்டூர் அணை, 800 கார்னேஷன் மலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட மிக்கிமவுஸ் உருவம் ஆகிய அனைத்தும் உங்கள் அனைவரையும் கவரும்வண்ணம் அமைக்கப்பட்டுள்ள அற்புதமான ஒரு காட்சியை நமக்கு தந்திருக்கின்றார்கள். இது காண்போர் மனதை மகிழ்ச்சியூட்டுவது மட்டுமல்ல, அருமையாக

வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை வடிவமைத்த வேளாண் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு இந்த நேரத்திலே பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனென்றால், இயற்கையை ரசிக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சி தேவை அந்த மகிழ்ச்சி எங்கே கிடைக்கும் என்று சொன்னால், இயற்கையில் தான் கிடைக்கும், அந்த இயற்கையான சூழலை இங்கே உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். பார்க்கின்ற இடங்களெல்லாம் மலர்களாக காட்சியளிக்கின்றது, அந்த கண்கவர் மலர்களெல்லாம் இன்றைக்கு மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய இந்த தாவரவியல் பூங்காவிலே நாம் பார்க்க முடிகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஹாலந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துலிப், டிஸ்பக்ஸ், கேளா லில்லி போன்ற மலர்களாலும் சிலிகோனிய மலர்கள் உட்பட 25,000 பலவண்ண பூந்தொட்டிகள், கண்ணாடி மாளிகையில் உள்ள 5,000 பூத்தொட்டிகள் என்று பார்ப்போர் மயங்கும் வண்ணம் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட மலர் கண்காட்சியை நம்முடைய வேளாண்துறையை சார்ந்தவர்கள் அருமையாக அமைத்திருக்கின்றார்கள்.

தேயிலை, காபி, காய்கறிகள், பழங்கள், உணவுப்பயிர்கள் ஆகியவற்றை தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல், பிற நாடுகளுக்கும் இந்த நீலகிரி மாவட்டம் வழங்கி வருகின்றது.

நீலகிரி மலையைத்தான் மலைகளுக்கெல்லாம் அரசி என்று புகழ்வார்கள். அத்தகைய மலையரசிக்கு மக்கள் அரசியாகிய நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களால் மகுடம் சூட்டி மகிழ்ந்த மாவட்டம் நீலகிரி மாவட்டம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

4,000க்கும் மேற்பட்ட ரகங்களைக் கொண்ட ரோஜா தோட்டம், அலங்கார விளக்குகள், பாதாள சாக்கடை, கழிப்பறை, நஞ்சநாடு தேயிலை தொழிற்சாலை, அரசு தோட்டக்கலைப் பண்ணை, ஊட்டி ஏரி புனரமைப்பு, தொட்டபெட்டாவில் தேயிலைப் பூங்கா, பழங்குடியினர் பண்பாட்டு மையம் போன்ற பல திட்டங்களால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உதகையின் அழகிற்கு மேலும் அழகு சேர்த்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து, இப்போது நடைபெறுகின்ற மாண்புமிகு அம்மாவின் அரசும் ஊட்டியை தன் செல்லப் பிள்ளையாக நினைத்து பாராட்டி, சீராட்டி பல்வேறு திட்டங்களை இந்த மாவட்ட மக்களுக்கு அளித்து வருகிறது.

எனவேதான், கடந்த 30.12.2017 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் போது உதகை நகராட்சிக்கான 27 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், 5 கோடி ரூபாய் செலவில் நஞ்ச நாடு, இன்ட்கோ கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை உட்பட 57 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 258 பணிகளை நான் துவக்கி வைத்தேன்.

அதைப்போல 272 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,088 பணிகளுக்கு அன்றைய தினமே அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றைய விழாவில் 19 ஆயிரத்து 79 பயனாளிகளுக்கு

81 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமன்றி, நீலகிரி மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு செய்து வரும் பணிகள் ஏராளம். அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- ✶ நீலகிரி மாவட்டத்தில் முற்றிலுமாக பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டு, பிளாஸ்டிக் இல்லாத மாவட்டமாக நீலகிரி மாவட்டம் மாற்றப்பட்டுள்ளது.
- ✶ "உன்னத உதகை" திட்டமானது 03.10.2017 அன்று ஆரம்பிக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ உதகை ஏரி சுத்திகரிப்பு நிதியிலிருந்து கோடப்பமந்து கால்வாயினை தூர் வாரி தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✶ தமிழ்நாட்டிலேயே அதிகப்படியான வன உரிமை சட்டத்தின் கீழ் பழங்குடியினருக்கு வன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ உச்ச நீதிமன்ற ஆணையின்படி பிரிவு 17 மற்றும் ஜென்மம், பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் தேவர்சோலை பேரூராட்சி மூலம் 30 பணிகள் 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஓவேலி பேரூராட்சி மூலம் 38 பணிகள் 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மூலம் 7 பணிகள் ஒரு கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன.
- ✶ மேலும், ஜென்மம் நிலங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு ஓவேலி பேரூராட்சி, கூடலூர் நகராட்சி மற்றும்

நெலாக்கோட்டை ஊராட்சிகளில் 340 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இப்பகுதிகளில் 630 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு வீட்டுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றது.

- ✶ உதகையில் உள்ள அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூரில் உள்ள சிம் பூங்கா மற்றும் பழவியல் நிலையம் ஆகியவை 10 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- ✶ நடப்பாண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் 100 எக்டேர் பரப்பளவில் 50 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்ட்ராபெரி பயிர் விரிவாக்கத் திட்டமும், ஸ்ட்ராபெரி திசு வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்ய 20 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ✶ நீலகிரி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, சிறிய வகையிலான வண்ணத்துப் பூச்சி வடிவில் தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் அமைக்க நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

- ✶ வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வனத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு பழங்குடியின குடியிருப்புக்கும் சாலை, குடிநீர், தெருவிளக்கு, வீடுகள், உண்டி உறைவிடப் பள்ளி ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

- ✶ அனைத்து மக்களும் வனம், வன உயிரினங்கள் மற்றும் இயற்கை வளங்களை பார்த்து மகிழவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், வனத்துறை எடுத்து வரும் நடவடிக்கைகளை அறிந்துக்

கொள்ளவும், நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி, கெய்ரன்ஹீல் மற்றும் லாங்உட்ஷோலா ஆகிய மூன்று இடங்களில் சூழல் சுற்றுலா தலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரங்களை உயிர்பன்மை பாதுகாப்புடன் இணைக்கப்படும்.

* பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தின் பிரதான பயிரான உருளைக்கிழங்கு பயிருக்கு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 2 கோடி ரூபாய் அளவிற்கு பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் நீலகிரி மாவட்ட விவசாயிகள் அனைவரும் இப்பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து, இயற்கை இடர்பாடுகளில் இருந்த தங்களை காத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* நீலகிரி மாவட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள சிறு தேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றிற்கு ரூபாய் 2 வீதம் மானியம் அளிக்க கடந்த 30.12.2017 அன்று நான் வந்தபோது அறிவித்தேன். அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்த ஆணைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன, அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நீலகிரியை இயற்கை வளம் கொழிக்கும் எழில் பூமியாகவும், பொழுதுபோக்கு மலையாகவும் மட்டும் நாம் கருதிவிட முடியாது.

இன்றைக்கு தமிழ்நாட்டை இருளில்லா மாநிலமாகவும், மின் மிகை மாநிலமாகவும் மாற்றியதில் இங்குள்ள பைகாரா இறுதிநிலை நீர்மின் நிலையம், மரவகண்டி, மாயார் மற்றும்

குந்தா நீர்மின் நிலையங்களுக்கும் பங்கு இருக்கிறது என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன்.

150 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட பைகாரா இறுதி நிலை நீர்மின் நிலையம் 1994ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. ஆசியாவிலேயே அதிக அழுத்தம் மற்றும் உயரம் கொண்ட முதல் புனல் மின் உற்பத்தி நிலையம் இதுதான்.

இந்த மின்நிலையம் அமைப்பதற்காக இங்கே எந்த வனப் பகுதியும் ஆக்கிரமிக்கப்படவில்லை. இங்கு வன விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படவில்லை என்பதுதான் இந்த நீர்மின் நிலையத்தின் தனிச்சிறப்பு.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மின்சாரத் தட்டுப்பாட்டிலும், தொடர்ந்து ஏற்பட்ட மின்சாரத் தடைகளாலும், தமிழ்நாடு இருளில் மூழ்கியிருந்தது. தமிழ்நாட்டு மக்கள் ஆகிய நீங்கள் அப்போது எத்தனை துன்பங்களை அனுபவித்தீர்கள் என்பதை மறந்திருக்க மாட்டீர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மக்களின் துயரத்தை தன் துயரமாகக் கருதி, அறிவும் ஆற்றலும் மிக்க மின்பொறியாளர்களை முடுக்கிவிட்டு, நீண்ட கால மின் திட்டங்களுக்கு தேவைப்படும் பல்வேறு ஒப்புதல்களைப் பெற்று விரைந்து செயல்பட்டு, தமிழ்நாட்டை ஒளிமயமான மாநிலமாக மாற்றினார்கள். அதன் விளைவுதான் இன்று வரை தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டு இல்லங்களை தொடர்ந்து மிளிரச் செய்யவும்,

தொடர்ந்து தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக தக்க வைத்துக் கொள்ளுதல் போன்ற உயரிய நோக்கத்திற்காக மின் உற்பத்தியை பெருக்குதல், மின்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மின் தொடரமைப்புகளை நிறுவுதல், மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்குதல் போன்ற பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு முனைப்புடன் செய்து வருகிறது. அந்த வகையில், எரிசக்தித் துறையின் சார்பில், நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு கிராமம், காட்டுகுப்பை பகுதியில் ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4X125 மெகாவாட் குந்தா நீரேற்று புனல்மின் திட்டத்திற்கான பணிகளை இன்று நான் துவக்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

2021–2022ஆம் ஆண்டில் நிறைவு பெறவுள்ள இத்திட்டம், நாளொன்றுக்கு 3 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் உடையது. அதனால் ஆண்டுக்கு சுமார் ஆயிரத்து 95 மில்லியன் யூனிட் மின்சாரம் தமிழ்நாட்டிற்கு கூடுதலாகக் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பொதுப்பணித்துறை சார்பில் கட்டப்படவுள்ள 5 கட்டடங்கள் மொத்தம் 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 திட்டப் பணிகளுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

அதைப்போல தோட்டக்கலைத் துறை சார்பில் தாவரவியல் பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி குடில், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலகம் உள்ளிட்ட 3 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6 கட்டடங்களை இன்று நான் திறந்து வைத்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இனிய விழாவில், நான் மக்களுக்கு அன்பாக கூறிக்கொள்வது; சமூக அக்கறையோடு மின்சாரத்தை சிக்கனமாக செலவு செய்யுங்கள்.

நாம் சேமிக்கும் ஒவ்வொரு யூனிட் மின்சாரமும், தமிழ்நாடு மட்டுமல்லாமல், நம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் முக்கியம் என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

உதகையில் 122ஆவது மலர்க்காட்சி இன்று முதல் வருகின்ற 22ஆம் தேதிவரை நடைபெற உள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த மலர்க்காட்சியை 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இந்த வருடம் 35 ஆயிரம் தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு, அவை பல்வேறு வடிவங்களில் சுற்றுலா பயணிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல வண்ண மலர்கள் மற்றும் இந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் லில்லியம் மலர்களின் தொகுப்பு இந்த மலர்க்காட்சியில் முக்கிய இடத்தை பிடித்துள்ளன.

சிறந்த பூங்காக்களுக்கான போட்டி உட்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்று அவற்றில் வெற்றி பெறும் வெற்றியாளர்களுக்கு 51 சுழற்கோப்பைகளும் மற்றும் 600 பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

கோப்பைகளையும், பரிசுகளையும் பெறப் போகின்ற வெற்றியாளர்களுக்கு முன்கூட்டியே நான் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலர்க்காட்சியைத் தவிர பேரணி, இரவு சந்தை, காய்கறி கண்காட்சி, புகைப்படக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், படகு போட்டி, புத்தக கண்காட்சி, பழக்காட்சி, தேயிலை மற்றும் சுற்றுலா விழா என மே மாதம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்ச்சி

வெள்ளத்தில் ஆழ்த்த தமிழ்நாடு அரசால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ''மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்'' என்ற அதே வழியைத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த நாங்களும் பின்பற்றுகிறோம். ஆனால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஓரம் கட்டப்பட்டவர்கள் இன்று அம்மா அவர்களின் பெயரைக் கூறிக் கொண்டு, 'நாங்கள் சர்வ வல்லமையும் சக்தியும் படைத்தவர்கள்' என்று கூறி ஒரு மாயபிம்பத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். அது கானல் நீராக மறைந்துவிடும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். எது பிம்பம்? எது உண்மை? என்று எல்லோருக்கும் தெரியும். இதை கூறுகிறபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

மலையிலிருந்து கற்களை உடைத்து விற்று பிழைப்பு நடத்திவரும் ஒருவன் பல ஆண்டுகளாக இடைவிடாமல் எப்போதும் இறைவழிபாடு செய்து வந்தான். அதைப்பற்றி யாராவது கேட்டால், 'மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் இறைவனை வேண்டுகிறேன்' என்று அவன் கூறுவான். அவனுடைய நண்பர்களும் இதை நம்பினார்கள். ஒருநாள் இறைவன் அவனை சோதிக்க நினைத்து திடீரென்று அவன் கண்ணுக்கு எதிரே காட்சியளித்தார். 'பக்தா! உனக்கு என்ன வேண்டும் கேள்' என்று இறைவன் கேட்டார்.

பலகாலம் தன் எண்ணத்தில் ஒளிந்து கொண்டிருந்த ஆசையை அவன் அப்போது வெளிப்படுத்தினான்.

'இறைவா, நான் வல்லவர்களுக்கெல்லாம் வல்லவனாகி, இந்த நாட்டை ஆள வேண்டும்' என்றான். 'சரி, எதை வல்லமை என்று நினைக்கிறாயோ, அதுவாகவே நீ மாறிவிடுவாய்' என்று கூறிவிட்டு

இறைவன் மறைந்துவிட்டார். ‘உலகத்தையே சுட்டெரிக்கும் கதிரவன்தான் வல்லமை படைத்தது, நான் அதுவாக வேண்டும்’ என்று அவன் நினைத்தான். மறுநொடியில் அவன் கதிரவனாக மாறினான். உலகில் உள்ள எல்லாவற்றையும் தன் கதிரால் அழித்து அதில் இன்பம் கண்டான். ஆனால், மேகங்களை கதிரவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கதிரவனின் கதிர்களைக்கூட மேகங்கள் திருப்பி அனுப்பின. ‘கதிரவனை விட மேகங்களுக்கு வலிமை அதிகம்’ என்று அவன் நினைத்த மாத்திரத்திலேயே அவன் மேகமாக மாறினான். அப்போது பலமாக காற்று வீச ஆரம்பித்தது. அந்தக் காற்று மேகக்கூட்டங்களை இங்கும் அங்குமாக அலைக்கழித்தது. ‘மேகத்தைவிட இந்தக் காற்றுக்கு வலிமை அதிகம்’ என நினைத்தான். அடுத்த நிமிடமே அவன் காற்றாக மாறினான். வேண்டியவர்களுக்கு தென்றலாகவும், வேண்டாதவர்களுக்கு புயலாகவும் அவன் மாறிமாறி வீசினான். அவன் வீசுவதை மறித்துக் கொண்டிருந்த ஒரு மலையை ஊடுருவி அவனால் செல்ல முடியவில்லை. ‘இந்தமலைதான் மிகமிக சக்தி படைத்ததைப் போல் தெரிகிறது’ என்று நினைத்த மாத்திரத்தில் அவன் மலையாக மாறிவிட்டான். அந்த மலையையும் ஒருவன் உளியைக் கொண்டு உடைத்துக் கொண்டிருந்தான். இந்த உலகத்தில் சக்தி வாய்ந்த அனைத்தையும்விட இந்த மனிதன்தான் வலிமையுடைவனாக அவனுக்குத் தெரிந்தான். உடனடியாக அவன் பழையபடி கல் உடைக்கும் தொழிலாளியாக மாறினான். ‘நினைப்புதான் பொழப்பைக் கெடுக்கும்’ என்ற உண்மையை அவன் உணர்ந்து பழையபடி மலைக்குச் சென்று கல் உடைக்க ஆரம்பித்தான்.

இருப்பதை விட்டு பறப்பதற்கு ஆசைப்பட்டால் இருப்பதையும் இழந்துவிடும் நிலைதான் ஏற்படும்.

அதே போலத்தான் மக்களுக்காக உழைப்பதாக கூறிக்கொண்டு ஊரை சுற்றுபவர்கள், இறுதியில் கல் உடைக்கும்

தொழிலாளியைப் போல் தனது பழைய நிலைக்கே வருவார்கள் என்பது இந்தக் கதையின்மூலம் தெளிவாக தெரிகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தபொழுது, காவல் துறை சிறப்பாக செயல்பட்டு, இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்பட்டது தமிழகத்தில்தான் அம்மாவினுடைய ஆட்சியிலும் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டு இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்படுகின்ற மாநிலங்களில் தமிழகம்தான் முதலிடம் என்ற ஒரு பெருமை அடைகின்ற அளவிற்கு இந்தியாவிலேயே சிறந்த காவல் நிலையமாக கோவை, ஆர்.எஸ்.புரம் காவல் நிலையமும், சிறந்த ஐந்தாவது காவல் நிலையமாக சென்னை, அண்ணா நகர் காவல் நிலையமும் இன்றைக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்படுவதிலே, தமிழகம் சிறந்து விளங்குகின்றது என்பதை இந்த காவல் நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தெள்ளத்தெளிவாக தெரிகின்றது.

அதேபோல, இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் பெறப்பட்டது. பல்லாண்டு காலமாக நாம் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தோம், டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமத்தை பெறுவதற்கு பல ஆண்டுகாலம் பிடித்தது, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவை நனவாக்குவதற்காக இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மத்திய அரசிடத்திலே கோரிக்கை வைத்து, அந்த டிஜிட்டல் உரிமத்தையும் பெற்றுத் தந்தது.

அதேபோல, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக தாட்கோ மூலம் சுயதொழில் தொடங்க இன்றைக்கு 237 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, விவசாயிகள்

உரிய நேரத்திலே பயிர் செய்யவதற்காக பயிர்க் கடனாக 9,84,990 விவசாயிகளுக்கு, ரூபாய் 5,813.13 கோடி பயிர்கடன் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு செயல்படுகின்றது. பருவகாலங்களில் விவசாயிகள் உரிய முறையிலே பயிர் செய்ய வேண்டுமென்பதற்காக இந்த கடனுதவியும் அம்மாவினுடைய அரசால் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அம்மாவினுடைய அரசால் ரூபாய் 2,247 கோடி வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதனால், 9 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றார்கள், அவர்களுக்கு இந்தியாவிலேயே அதிகமாக ரூபாய் 3,500 கோடி பயிர் காப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, ஏழை, எளிய மக்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட, ரூபாய் 840 கோடி செலவில் 40,000 சூரிய மின்சக்தியுடன் கூடிய முதலமைச்சரின் பசுமை வீடுகள் இன்றைக்கு கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டு 50 ஆண்டு நிறைவடைந்ததையொட்டி, அரசு சார்பில் தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக கொண்டாடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவினுடைய ஆட்சியில் 402 பள்ளிகளை தரம் உயர்த்தி கல்வியில் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். 112 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகளாகவும், இந்த ஓராண்டில் 4 பள்ளிகள், 810 நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளாகவும், இந்த ஓராண்டில் 19 பள்ளிகள் மற்றும் 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களால், 65 அரசு கலைக் கல்லூரிகளும், இந்த ஓராண்டு காலத்தில் 11 அரசு கலைக் கல்லூரிகளுமாக மொத்தம்

76 கல்லூரிகளை நமது அரசு வழங்கியுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாணாக்கர்கள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழலை அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. இதன் விளைவாக மாணவர்களின் சேர்க்கை தொடக்கக் கல்வியில் 99.85 சதவிகிதமும், நடுநிலைப் பள்ளிகளில் 99.11 சதவிகிதமும் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விகிதமும், மேல்நிலைப் பள்ளிகளில் 77.64 சதவிகிதமும் உயர்ந்திருக்கின்றது. அகில இந்திய அளவில், தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை 46.94 சதவிகிதம் உயர்ந்து, இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவத்துறை பொறுத்தவரையில், கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு அந்தப் பகுதியிலேயே சிகிச்சை அளிக்கவேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆங்காங்கே ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்கினார்கள். 212 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கி, எழை, எளிய மக்கள் தங்கள் பகுதியிலேயே சிகிச்சை பெறவேண்டும் என்பதற்காக இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கினார்கள். அதேபோல, அம்மாவினுடைய அரசும் இன்றையதினம் கிட்டத்தட்ட 42 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அரசாணை வெளியிட்டுள்ளது. அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக இன்றைக்கு உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. அம்மாவினுடைய ஆட்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 4 மருத்துவக் கல்லூரிகளும், அம்மாவினுடைய ஆட்சிக்கு பின்னால் ஓராண்டு காலத்திலே புதுக்கோட்டை, கரூரிலே 2 மருத்துவக் கல்லூரிகளை அம்மாவினுடைய அரசு துவக்கியிருக்கிறது என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை மூலமாக இரண்டு கைகளை இழந்த ஒருவருக்கு இரண்டு கைகளும் பொருத்தப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த ஒரு தொழிலாளி இரண்டு கைகளையும் இழந்திருக்கிறார். அவருக்கு இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளையும் எடுத்து பொருத்தப்பட்டு இரண்டு மாதம் ஆகிறது, இன்றைக்கு நல்ல நிலையில் இருக்கின்றார். ஆகவே, இன்றைக்கு சரித்திர சாதனை படைத்திருக்கின்றது. இந்தியாவிலேயே, அரசு மருத்துவமனையில் இப்படி இரண்டுகைகளையும் இழந்த ஒருவருக்கு மாற்று உறுப்பு அறுவை சிகிச்சையின் மூலமாக இரண்டு கைகளும் பொருத்தப்பட்ட வரலாறு கிடையாது, நம்முடைய மருத்துவர்கள் சிறந்த முறையிலேயே மருத்துவ சிகிச்சை செய்து, ஒரு தொழிலாளிக்கு இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளையும் எடுத்து அவருக்கு பொருத்தப்பட்டு, இன்றைக்கு நலமுடன் இருக்கின்றார். ஆகவே, மருத்துவத் துறையிலே ஒரு சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு, இதய மாற்று அறுவை சிகிச்சை 110 பேருக்கு செய்திருக்கிறோம், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை 318 பேருக்கு செய்திருக்கிறோம், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை 161 பேருக்கு செய்திருக்கிறோம், நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை 102 பேருக்கு செய்திருக்கிறோம். கணையம் 7 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கின்றன. இதுதவிர, 388 வட்டங்களில் நடமாடும் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் அரசு மருத்துவமனை மற்றும் தமிழகத்திலுள்ள தனியார் மருத்துவமனைகள் இணைந்து செயல்பட்ட மாற்று உறுப்பு அறுவை சிசிச்சைகள் ஆகும். மேலும் 1,056 இறந்த கொடையாளிகளிடமிருந்து 5,933 முக்கிய உறுப்புகள் தானமாக பெறப்பட்டு தொடர்ந்து அகில இந்திய அளவில் மூன்றாவது முறையாக தமிழகம் உடல் தானத்தில்

முதன்மை மாநிலமாக பரிசை பெற்றுள்ளது. இந்த பெருமை நம்முடைய தமிழகத்திற்கு கிடைத்திருக்கிறது.

அதேபோல, இன்றைக்கு காலியாக உள்ள அரசு பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு தேர்வு வாரியத்தின் மூலமாக அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில் 55,619 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அம்மாவுடைய அரசு இந்த ஓராண்டில் 9,434 பணியிடங்களை நிரப்பப்பட்டு இருக்கின்றன.

காவல்துறை பணியை பொறுத்த வரைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சி காலத்தில் 1,02,432 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அம்மாவுடைய அரசு இந்த ஓராண்டிலே 15,621 காலிப் பணியிடங்கள் நிரப்பட்டு இருக்கின்றன.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக 72,843 ஆசிரியர் பணியிடங்கள் அம்மாவுடைய ஆட்சியிலே நிரப்பப்பட்டன. ஆசிரியரல்லாத பணியிடங்கள் 14,711 பணியிடங்கள் மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சி காலத்திலே நிரப்பப்பட்டன.

இன்றைக்கு அம்மாவுடைய அரசு பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திலேயே 2,357 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள், 59 பட்டதாரி ஆசிரியர்கள், 4,352 ஆய்வக உதவியாளர்கள், 187 உதவி பேராசிரியர்கள் என ஓராண்டு காலத்திலே இந்த காலிப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டு இருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக 4,468 மருத்துவர்கள் உட்பட 6,438 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள் இந்த ஓராண்டு காலத்தில் மட்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி காலத்திலிருந்து இதுவரைக்கும் நம்முடைய மாணாக்கர்கள் சிறந்த முறையிலே கல்வி கற்க வேண்டும் என்பதற்காக மடிக்கணினிகளை கொடுத்த அரசு அம்மாவுடைய அரசு. இந்த ஆறு ஆண்டு காலத்தில் மட்டும் 36 இலட்சத்து 25 ஆயிரத்து 74 மடிக்கணினிகள் மாணவ மாணவிகளுக்கு கொடுக்கப்பட்டு அறிவுபூர்வமான கல்வி கொடுத்த அரசு அம்மாவுடைய அரசு. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் விலையில்லா மடிக்கணினிகள் கொடுக்கவில்லை. ஆனால் தமிழகத்திலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்முடைய மாணவர்கள் திறமைமிக்க மாணவர்களாக, அறிவுபூர்வமான மாணவர்களாக, விஞ்ஞான பூர்வமான கல்வியை கொடுக்க வேண்டும் என்பதற்காக அம்மாவுடைய அரசு, அம்மாவுடைய ஆட்சி காலம் தொடங்கி இன்றைக்கு வரை 36 இலட்சத்து 25 ஆயிரத்து 74 மடிக்கணினிகளை கொடுத்து மாணவர்களுக்கு விஞ்ஞான கல்வி கொடுத்த அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருகிறேன்.

அதுமட்டுமல்ல கால்நடை மருத்துவத்துறை மூலமாக இன்றைக்கு 810 கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு வாய்பேசுகின்ற மக்களுக்கு சுகாதார வசதியை செய்து கொடுக்கின்ற அம்மாவுடைய அரசு வாய்பேசாத இருக்கின்ற ஜீவன்களுக்கும் அம்மாவுடைய அரசு உரிய சிகிச்சை அளிக்கின்ற விதத்திலே 810 கால்நடை கிளை நிலையங்களை அம்மாவுடைய அரசு திறந்திருக்கின்றன. 20 புதிய கால்நடை மருத்துவமனைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. 110 கால்நடை கிளை நிலையங்கள் புதிதாக துவக்கப்பட்டு உள்ளன. இப்படி கிளை நிலையங்கள் துவக்கப்பட்டதன் காரணத்தினால் வேளாண் பெருங்குடி மக்கள்

தாங்கள் வளர்க்கின்ற கால்நடைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால், இந்த மருத்துவமனைகளுக்கு கால்நடைகளை அவர்கள் கொண்டு போய் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, திருமண உதவி திட்டத்தின் மூலம், 25,000 ரூபாய், 50,000 ரூபாய் மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்கு ஆண்டு வருமான வரம்பை 72,000 ஆக உயர்த்திய அரசு அம்மாவுடைய அரசு. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு உயர்த்தினார்கள். மாநில நலன் பேணும் மாண்புமிகு அம்மாவின் அரசும், இந்த நிதியை 12,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தினோம். இதில் 4,000 ரூபாய் மதிப்பில் 12ஆவது வாரம் ஒரு முறையும், 16வது வாரம் ஒருமுறையும், என இரண்டு முறை அம்மா தாய்சேய் நல ஊட்டசத்து பெட்டகம் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, இந்த தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுவதன் விளைவாக அந்த சத்தான பொருளை கொடுப்பதன் மூலமாக அந்த கர்ப்பிணி பெண்கள் உண்ணுகின்ற போது அந்த குழந்தையுடைய எடை அதிகரித்து ஒரு நல்ல எடையுள்ள குழந்தையாக பிறப்பதற்கு அம்மாவுடைய அரசு தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகத்தை புதிதாக அறிமுகப்படுத்தி வழங்க உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். இந்த திட்டத்தினால் தமிழ்நாடு முழுவதும் 46 இலட்சத்து 61 ஆயிரம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 4,326 கோடியே 93 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

அம்மா மகப்பேறு சஞ்சீவி கிட் என்பது கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்குகின்ற திட்டம், பிறந்த குழந்தைகளுக்கு

16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், எந்த அரசு வழங்குகிறது ? இந்தியாவிலேயே ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் கூட சுகாதாரமாக இருக்க வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகத்தைத் தந்து அந்த குழந்தை சிறப்பாக ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, வழங்கிக் கொண்டிருக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு. கர்ப்பிணித் தாய்மார்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக இலவச 108 ஆம்புலன்ஸ் வாகனமும் இன்றைக்கு பயன்படுத்தப்படுகிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றத் தேர்தலிலே கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்கள், நான் முதலமைச்சராக வந்தவுடன் உழைக்கும் மகளிர்க்கு மானிய விலையிலே அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, அம்மாவினுடைய அரசு இன்று அதை செயல்படுத்தியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை 3 இலட்சத்து 34 ஆயிரம் பேர் இதிலே பதிவு செய்திருக்கின்றார்கள், அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 1 இலட்சம் பேருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும். அதற்காக, ஒவ்வொரு ஸ்கூட்டருக்கும் அதிகபட்சமாக 25,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும். இந்தியாவிலேயே எங்கும் இந்தத் திட்டம் இல்லை. இன்றைக்கு வேலைக்கு செல்கின்றவர்கள், உழைக்கின்றவர்கள் உரிய நேரத்தில் வேலைக்கு செல்வதற்கும், பணி முடிந்தவுடன் வீட்டிற்கு செல்வதற்கு அம்மா இருசக்கர வாகனம் மிக பயனுள்ளதாக இருக்கும். இப்படி ஏராளமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, நீலகிரி மாவட்ட மக்களின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள். இந்த மாவட்ட மக்கள் அளிக்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றி மக்களிடத்திலே தனி இடத்தை பெற்றவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இங்குள்ள மக்கள் மீது எப்படி அன்பு செலுத்தினார்களோ, அதே அளவிற்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசும், இந்த மக்கள் மீது அன்பு கொண்டிருக்கின்றது என்ற அடிப்படையிலே, இங்கே இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளும், பொதுமக்களும் வைத்த கோரிக்கைகளையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றும் என்பதை சுட்டிக்காட்டி, சில திட்டங்களை இங்கே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வைத்த கோரிக்கைகளெல்லாம் அம்மாவினுடைய அரசால் பரிசீலிக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்து அந்தக் கோரிக்கைகளையெல்லாம் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாலங்களெல்லாம் தொட்டபெட்டா, கக்குச்சி, எப்பநாடு, உள்ளத்தி ஆகிய ஊராட்சிகள், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள உபதலை, திட்டப்பள்ளி ஆகிய 2 ஊராட்சிகள், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தேனாடு, கோணவக்கரை, குஞ்சப்பணை, நெடுகுளம் ஆகிய 4 ஊராட்சிகள், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சேரங்காடு, மசனக்குடி, நிலாக்கோட்டை ஆகிய 3 ஊராட்சிகள் என மொத்தம் 15 கிராம ஊராட்சிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும்பொருட்டு, குப்பைகளை சேகரிப்பதற்காக மோட்டார் பொருத்தப்பட்ட 15 pickup வாகனம் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, உதகை நகராட்சிக்குட்பட்ட முக்கிய 28 சாலைகளுக்கு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தேவர் சாலை பேரூராட்சியில் பேருந்து நிறுத்தம் மற்றும் வணிகவளாகங்கள் கட்டப்படுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வசனக்குடி, முதுமலை, ஸ்ரீமதுரை, நிலாக்கோட்டை மற்றும் சேரங்கோடு ஆகிய 5 கிராம ஊராட்சிகள், குடிசைகளில் வாழும் 125 பழங்குடியினருக்கு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 125 வீடுகளும், கூடலூர் நகராட்சி மற்றும் ஓவேலி பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 165 வீடுகளும் கட்டித் தரப்படும். இப்பகுதி மலைப்பகுதியாக உள்ளதால், கூடுதல் மதிப்புடன் பணிகள் மேற்கொள்ளப்படும். அந்தப் பணிகளும், அவர்கள் கொடுத்த அந்த கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

உதகை மசனக்குடி, சுக்கநல்லார் சாலையில் தெப்பக்காடு பகுதியில் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாலம் மிக குறுகியதாக உள்ளதாகவும், இந்தப் பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டப்படவேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள், அதையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள குடிநீர் வினியோகம் செய்யும் அனைத்து குழாய்களும் மாற்றியமைக்கப்படும் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூர் நகராட்சிக்குப்பட்ட பகுதியில் குடிநீர் வினியோகம் சீர்செய்ய அனைத்து குடிநீர் வினியோகம் செய்யும் குழாய்கள் மாற்றியமைக்கப்படும். உதகமண்டலம் தோட்டக்கலைத் துறையின் மூலம் தாவரவியல் பூங்கா, அரசு ரோஜா பூங்காவில் பணியாற்றும்

தற்காலிக பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினக்கூலி 250 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கித் தந்த அரசு இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு, நீண்ட, நெடிய காலமாக காவேரி பிரச்சினை, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருக்கின்றபொழுது, 1986ஆம் ஆண்டு அப்பொழுதே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார். இந்தக் காவிரி நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு உடனடியாக நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார். அதற்குப் பிறகு மத்திய அரசால் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. எனவே, நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, 2007இல் இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பு 2013இல் அரசிதழில் வெளியிடப்பட்டது, சட்டப் போராட்டத்தின் மூலமாக. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே இதற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே, உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து, தமிழகத்திற்கு தேவையான நீரைப் பெறுவதற்கு, நம்முடைய உரிமை நிலைநாட்டுவதற்கு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தை அணுகினார்கள். இன்றைக்கு உச்சநீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இன்றையதினம், இறுதித் தீர்ப்பை வழங்குவதாக நேற்று அறிவித்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 32 ஆண்டு காலம், தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும், பொதுமக்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் பிரதானமாக இதற்காக போராடி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த காவேரி நதிநீருக்காக 4 நாட்கள்

உண்ணாவிரதம் இருந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அப்படி பல்வேறு போராட்டங்களின் மூலமாக 32 ஆண்டுகாலமாக தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினை இன்றைக்கு தீர்வு காணக்கூடிய ஒரு சூழ்நிலையை, இன்று நாம் இறுதி வடிவத்தை, இறுதி கட்டத்தை அடைந்திருக்கின்றோம். ஆகவே, இன்றைய தினம் நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எதை, எதை நினைத்தார்களோ, அதையெல்லாம் உச்சநீதிமன்றம், பெரும்பாலானவை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு தீர்ப்பு அளிக்கப்படுகின்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இன்றைக்கு நமக்குக் கிடைக்கவேண்டிய நீரினுடைய அளவு குறையாமல் கிடைப்பதற்கு பாதுகாப்பான வாரியத்தை அமைக்கப்பட வேண்டுமென்று இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கின் அடிப்படையிலே, இன்றைக்கு வாரியம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு அம்மா என்ன நினைத்தார்களோ அதை இன்றைக்கு நடைமுறைப்படுத்துகின்ற அரசாக இன்றைக்கு திகழ்ந்து கொண்டிருக்கின்றது. சட்டப்போராட்டத்தின் மூலமாக இன்றைக்கு, நீதியை நிலைநாட்டக்கூடிய சூழ்நிலை வந்திருக்கின்றது. நிச்சயமாக நல்ல தீர்ப்பு இன்றைக்கு கிடைக்க இருக்கின்றது. ஏற்கெனவே, நடுவர் மன்ற ஆணையம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்த தீர்ப்பு வழங்கப்படுமென்ற ஒரு செய்தியை உச்சநீதிமன்றம் தெரிவித்திருக்கின்றது. அதன் அடிப்படையிலே, இன்றைய தினம், 2 மணி அளவிலே தீர்ப்பு வழங்குவதாக அறிவித்திருந்தார்கள். இன்றைக்கு தீர்ப்பு வழங்காவிட்டால் 22ம் தேதி இறுதி தீர்ப்பு வழங்கப்படும் என்றும் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள்.

நம்முடைய எண்ணங்களும், நம்முடைய கோரிக்கைகள் எல்லாம் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றவரை என்ன நினைத்தார்களோ அதை நிறைவேற்றுவதுதான் நம்முடைய இலட்சியம். அவர்கள் இலட்சியப்படி, காவேரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் நடுவர்மன்ற ஆணைய தீர்ப்பின்படி அமைக்க வேண்டுமென்று நாம் வாதாடினோம். அவ்வாறு வாதாடியதற்கு இறுதி வடிவம் கிடைக்க இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்ன நினைத்தார்களோ, அதை அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இது சாதாரண விஷயமல்ல. இன்றைக்கு தமிழகத்தினுடைய ஜீவநதியாக இருப்பது காவேரி நதிநீர். ஆகவே, அந்த நதியில் கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்திதான் நம்முடைய விவசாயிகள் இன்றைக்கு விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றோம். அண்டை மாநிலங்களில் உற்பத்தியாகின்ற நதிநீர் நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றது. அங்கே வருகின்றபொழுதுதான் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றது. ஆகவே, 32 ஆண்டுகாலம் காவேரி நதிநீர் பிரச்சினைக்கு இன்றையதினம், தீர்வு காணப்படவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, நல்ல தீர்ப்பு நமக்குக் கிடைக்கும், நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களும், பொதுமக்களும் நினைத்த தீர்ப்பு நிச்சயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம், நம்புகின்றோம். ஆகவே, உச்சநீதிமன்றம் நல்ல தீர்ப்பை வழங்கும். தமிழக மக்களும், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களும் எண்ணியதை அம்மாவினுடைய அரசு நிறைவேற்ற பாடுபடும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச்சிறப்பாக, எழுச்சியாக இந்த

122ஆவது மலர்க்கண்காட்சி நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த வேளாண் பெருமக்களுக்கும், வேளாண்மைத் துறை முதன்மை செயலாளர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அத்தனை அரசு அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்*
18.05.2018 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நடைபெற்ற
122ஆவது உதகை மலர்க்கண்காட்சி மற்றும்
குந்தா நீரேற்று புனல் மின் திட்டப்பணிகள்
தொடக்க விழாவில் ஆற்றிய உரை

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் ஒரு மரக்கன்றையாவது நட்டு, வளர்ப்பதை தன் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

கொடைக்கானல் கோடை விழா 57வது மலர்க் கண்காட்சி தொடக்க விழா மற்றும் முடிவுற்ற பணிகள், தொடங்கியுள்ள பணிகளுக்கு திறப்பு விழா, அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே பங்குபெற்று, சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சிறப்பித்த சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் அரசு முதன்மை செயலாளர்

திரு. அபூர்வ வர்மா அவர்களே! மற்றும் திட்ட விளக்க உரையாற்றிய வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, இங்கே சிறப்பான கருத்துக்களை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.உதயகுமார் அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர், வக்ஃபு வாரியத்தலைவர் திரு.அன்வர்ராஜா அவர்களே! முன்னாள் அமைச்சர் திரு.நத்தம் விஸ்வநாதன் அவர்களே! முன்னாள் மேயர், வாரியத்தலைவர் திரு. மருதுராஜ் அவர்களே! முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.நடராஜன் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திரு.திவான் பாஷா அவர்களே! திரு.பாரதி முருகன் அவர்களே! திரு.ஜெயசீலன் அவர்களே! முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.நடராஜன் அவர்களே! முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சுப்புரத்தினம் அவர்களே! திரு.ஏ.பி.செல்லச்சாமி அவர்களே!

திரு.பழனிசாமி அவர்களே! முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.தவசி அவர்களே! முன்னாள் நகர மன்றத் தலைவர் திரு. ஸ்ரீதர் அவர்களே! திரு. சண்முகசுந்தரம் அவர்களே! திரு. வி.கே.முருகன் அவர்களே! மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! கூட்டுறவு சங்க நிர்வாகிகளே! பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! சுற்றுலாப் பயணிகளே!

இறுதியாக நன்றியுரை ஆற்றவுள்ள திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் டி.ஜி. வினய் அவர்களே! அரசு

அலுவலர்களே! உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, “செல்வம் எத்தனையுண்டு புவிமீதே– அவை யாவும் படைத்த தமிழ்நாடு”– என்ற மகாகவி பாரதியாரின் பாடலை மெய்ப்பிக்கும் வகையில், தமிழ்நாடு அனைத்துவகை இயற்கை செல்வங்களையும் ஒருங்கே பெற்று திகழ்கிறது. இன்றளவும் பழமையும், பண்பாடும் மாறாமல் இருந்து வருகிறது.

பல மலைகளைக் கொண்ட குறிஞ்சி பகுதிகளையும், பல காடுகளைக் கொண்ட முல்லைப் பகுதிகளையும், பரந்த பசுமையான வயல்வெளிகளைக் கொண்ட மருதம் பகுதிகளையும், நீண்ட அழகான கடல் பரப்பைக் கொண்ட நெய்தல் பகுதிகளையும் தன்னகத்தே கொண்டு, வெளிமாநிலத்தவரையும், வெளிநாட்டினரையும் அதிகமாக கவர்ந்திழுக்கும் உலகின் முக்கிய சுற்றுலா மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

குறிப்பாக மலையும் மலையைச் சார்ந்த இடங்களான ஊட்டி, ஏற்காடு, கொடைக்கானல் போன்ற சுற்றுலா தலங்களுக்கு அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள்.

இத்தகைய சுற்றுலா பயணிகள்தான் தமிழ்நாட்டின் பழமை, கலை, பண்பாடு ஆகியவற்றின் பெருமைகளை தங்கள் நாடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள். தமிழ்நாட்டின் புகழ் உலகம் முழுவதும் சென்றடைவதற்கு இச்சுற்றுலா தலங்களின் பங்குதான் முதன்மையாக இருக்கிறது. அதனால்தான், குறிப்பாக ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற சிறந்த சுற்றுலா மையங்களின் பராமரிப்பிலும் வளர்ச்சியிலும் தமிழ்நாடு அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. வெளிமாநிலம், வெளிநாடுகளிலிருந்து இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை நமது விருந்தினர்களாக கருதி அவர்களையெல்லாம் மகிழ்விக்கும் வகையில்தான் ஒவ்வொரு ஆண்டும் ஊட்டியிலும், ஏற்காட்டிலும், கொடைக்கானலிலும் தமிழ்நாடு அரசு சார்பில் மலர்க்கண்காட்சி ஏற்பாடு செய்யப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள வண்ண பூக்களும், செடிகளும் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

கடந்த வாரம் 12ஆம் தேதி ஏற்காட்டில் மலர்க்காட்சியை தொடங்கி வைத்தேன். நேற்று உதகையில் மலர்க் காட்சியை தொடங்கி வைத்தேன். அதைத்தொடர்ந்து இன்று கொடைக்கானலில் 57ஆவது மலர்க் கண்காட்சியை நான் தொடங்கி வைக்கின்றேன்.

இந்த 57ஆவது கொடைக்கானல் மலர்க் கண்காட்சியிலே இன்றைக்கு பல்வேறு வகையான பூக்கள் மூலமாக அலங்கரிப்பட்ட வடிவமைப்புகளை பார்க்கின்றோம். 60 வகையான மலர்களைக் கொண்டு 800 ரகங்கள் நடவு செய்யப்பட்டு, தற்போது மலர்கள் பூத்துக் குலுங்கி, பார்வையாளர்களின் கண்ணுக்கு விருந்தளிக்கின்றது. பால்சம், பிரமுலாஸ், பிகோனியா மற்றும் அலங்காரச் செடிகள் 5,000 பூந்தொட்டிகளில் கண்ணாடி மாளிகையில் பார்வையாளர்கள் கண்டுகளித்து மகிழ்கின்ற வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. கார்னேஷன், ஜெர்பிரா, ரோஜா மற்றும் கண்ணைக் கவரும் பல வண்ண மலர்களைக் கொண்டு, 2 இலட்சம் மலர்களைக்

கொண்டு, யானை, ஜல்லிக்கட்டுக் காளை, மாட்டுவண்டி, மயில், தாஜ்மஹால், நடன மங்கைகள் உருவங்கள் என தத்ரூபமாக மலர்களால் உருவாக்கப்பட்ட காட்சி இங்கே வைக்கப்பட்டுள்ளது. இம்மலர் கண்காட்சியின் சிறப்பம்சமாக 17 அடி உயரத்தில் கொடைக்கானலின் சிறப்பான வெள்ளி நீர்வீழ்ச்சி 10,000 கார்னேஷன் மலர்களால் உருவாக்கப்பட்டு, பார்வையாளர்கள் வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் கண்டுகளிக்கும்வண்ணம் காய்கறிகளைக் கொண்டு 10 அடி நீளம் கொண்ட டிராகன் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. தர்ப்பூசணி, பூசணிக்காய், கத்தரிக்காய் மற்றும் பலவகையான காய்களைக் கொண்டு, உருவங்கள் தத்ரூபமாக, நாம் மகிழக்கூடிய அளவிற்கு அமைக்கப்பட்டுள்ளது.

இங்கே பேசிக்கொண்டிருந்தபொழுது, ஏற்கெனவே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களும், மரியாதைக்குரிய முன்னாள் மேயர் திரு.மருதுராஜ் அவர்களும், முன்னாள் அமைச்சர் திரு.நத்தம் விஸ்வநாதன் அவர்களும் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். இங்கே, சிறுமலை என்ற பகுதி இருக்கின்றது. அந்த பகுதியிலே சுற்றுலா பயணிகள் கண்டுகளிக்கக்கூடிய அளவிற்கு, சுற்றுலாத் துறை மூலமாக அதை நவீனப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அது, அரசால் ஆய்வு செய்து பரிசீலிக்கப்படுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மூன்று இடங்களிலும் மலர்க்கண்காட்சி மிக மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனக்கு மனநிறைவை தருகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமான சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

கொடைக்கானல்மலை, கோடை காலத்திற்கு ஏற்ற மலை என்பதால், இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்கள் தாங்கள் வசிக்கவும், ஒய்வு எடுக்கவும், ஏற்ற இடமாக கருதி இங்கு வந்தார்கள். அதனாலேயே இந்த மலையின் பல பகுதிகள் ஆங்கிலேயர்களின் பெயர்களைக் கொண்டே இன்றளவும் அழைக்கப்பட்டு வருகின்றன.

சங்க காலத்திலேயே இந்த மலையை 'கோடை மலை' என்று அழைத்திருக்கிறார்கள். ஆனாலும், வருடம் முழுவதும் மக்கள் வசிக்க ஏற்ற இதமான தட்பவெப்ப நிலை இங்கு நிலவுகிறது. எனவே தான், கோடை காலத்தில் மட்டுமல்லாமல், வருடத்தின் எல்லா நாட்களிலும் சுற்றுலா பயணிகள் இங்கு வந்த வண்ணம் உள்ளார்கள். கொடைக்கானலில் விண்மீன் வடிவத்தில் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஏரி, பியர் ஷோலா என்ற உயரமான நீர்வீழ்ச்சி, தற்கொலைமுனை என்று அழைக்கப்படுகின்ற 5,000 அடி ஆழமான பள்ளத்தாக்கு, 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் அரிய குறிஞ்சி மலர்கள் நிறைந்த பகுதியில் இருக்கும் குறிஞ்சி, ஆண்டவர் கோயில், தூண்பாறை, காட்டிற்குள் அமைந்துள்ள பேரிஜம் ஏரி, 8 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பைசன் வெல்ஸ், கி.மு. 5,000 ஆண்டுக்கு முன் வாழ்ந்த ஆதி மனிதனின் வாழ்க்கைக்கு நம்மை இழுத்துச் செல்லும் டால்மென் சர்க்கிள் போன்ற இன்னும் பல இடங்கள் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகின்றன.

அதைப்போல, உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விப்பதற்காக ஆண்டுதோறும் மே மாதத்தில் இந்த பிரையண்ட் பூங்காவில் மலர்க்கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த வருடம் பல்வேறு இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பலவகையான மலர்களையும் சேர்த்து சுமார் 25 ஆயிரம் மலர்கள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

ஆண்டுக்கு ஆண்டு பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளை வரவேற்று உபசரித்து, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தர வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழ்நாடு அரசுக்கு இருப்பதால்தான், இந்த கொடைக்கானலை உள்ளடக்கிய திண்டுக்கல் மாவட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை கொடுத்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும், வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் திண்டுக்கல் மாவட்டத்திற்கு நல்லபல நலத்திட்டப் பணிகளை செய்துவருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். அந்த வகையில், 08.03.2017 அன்று 103 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிலான 1,644 பணிகளை காணொலிக் காட்சி மூலம் துவக்கி வைத்தேன்.

31.12.2017 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் 681 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 115 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டன. அன்றைய தினமே 187 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 105 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில் 24 ஆயிரத்து 521 பயனாளிகளுக்கு 63 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு நான் இங்கு வந்து இந்த மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்துவிட்டு உங்களிடையே கொடைக்கானலின் பெருமைகளை பேசிவிட்டு போவது மட்டும் என்னுடைய பணி அல்ல. இங்கே வரும் சுற்றுலா பயணிகளுக்கு மேலும் என்னென்ன தேவை என்பதையெல்லாம் அறிந்து அவற்றிற்கான திட்டங்களை வகுப்பதும், அதனை தொடர்ந்து செயல்படுத்துவதும் என் தலையாய கடமையாக நான் கருதுகிறேன்.

இன்று கூட கொடைக்கானலில் 10 ஏக்கரில் 10 கோடி ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ரோஜா தோட்டம் மற்றும் கொய் மலர்கள் செயல்முறை மாதிரி பண்ணை ஆகியவற்றை நான் திறந்து வைத்துள்ளேன்.

இதில் 1,500க்கும் மேற்பட்ட ரோஜா ரகங்கள் பெறப்பட்டு 15 ஆயிரம் ரோஜா செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகள் அமர்ந்து இளைப்பாற "ஆம்ப்ஃபி தியேட்டர்" (Amphi Theatre) அமைக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது.

இயற்கையாக அமைந்துள்ள இதன் நில அமைப்பும் அதில் நடவு செய்யப்பட்டுள்ள ரோஜா செடிகள் மற்றும் புல்தரைகள் தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்திய அளவில் வியப்பாக பேசும் அளவிற்கு அமையும் என்பதில் ஐயமில்லை.

பிரையன்ட் பூங்கா மேம்பாட்டு பணிகளுக்கென 6 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொடர்பு மையம், தோட்டக்கலைத் துறை அலுவலகங்கள், கழிவறை வசதி உள்ளிட்ட சீரமைப்பு பணிகளும், புதிய கழிவறை, சுற்றுச்சுவர் மறுசீரமைப்பு, உணவுக்கூடம், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பிரையன்ட் பூங்காவில் நடப்பு நிதியாண்டில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறுவர் பூங்கா மேம்படுத்துதல்,

கண்காணிப்பு கேமரா அமைத்தல், வாகன நிறுத்துமிடம் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் சுற்றுலா பயணிகள் வசதிக்காக மின்னணு கழிவறைகள் (e-toilet) ஏற்படுத்தி அவை பயன்பாட்டில் உள்ளன. கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காண, கீழ்க்குண்டாறு குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உரக்கிடங்கு அபிவிருத்திப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவை தவிர, கொடைக்கானல் நகராட்சியில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்திட, பேவர் பிளாக் சாலை, தார்ச்சாலை மற்றும் பைப் லைன் அமைத்தல் உள்ளிட்ட பணிகளும் நடைபெற்று வருகின்றன.

கொடைக்கானல் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் நலன் கருதி அடுக்குமாடி குடியிருப்புகள், நவீன எரிவாயு தகன மேடை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கொடைக்கானல் நட்சத்திர ஏரியை சுற்றிலும் உள்ள ஏரிச்சாலை, பாரிக்கவை–கூக்கால் சாலை, பூலத்துார், வடகவுஞ்சி, பண்ணைக்காடு, மங்களங்கொம்பு, பள்ளங்கி சாலை புதுப்பிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கொடைக்கானல்–பழனி சாலையில் 7 இடங்களில் தடுப்பு சுவர் அமைத்தல், கொடைக்கானலில் பிரதான சாலையான கொடைக்கானல் மலைச்சாலை, பூலத்துார், போலுார், வத்தலக்குண்டு, தாண்டிக்குடி ஆகிய சாலைகளில் சீரமைப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. வத்தலக்குண்டு– தாண்டிக்குடி சாலையில் தடுப்பு சுவர் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. கோசன் – கிளாவரை சாலை சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கொடைக்கானலில் போக்குவரத்து நெரிசலுக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு கொடைக்கானல் பேருந்து நிலையம் அருகில் போக்குவரத்துத்துறைக்கு சொந்தமான இடத்தில், பலநிலை வாகன நிறுத்துமிடம் மற்றும் வணிக வளாகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பயண நேரத்தையும், போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும்விதமாக, கொடைக்கானலுக்கு மாற்றுப் பாதையாக பெரியகுளம் முதல் பெருமாபள்ளம் வரை அடுக்கம் வழியாக 36 கிலோ மீட்டர் நீளத்திற்கு பழைய சாலையினை புதுப்பித்து அகலப்படுத்த 2015–2016ஆம் ஆண்டு ஆணைகள் வெளியிட்டார்கள். அதன்படி, 70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 29 கிலோ மீட்டர் பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 7 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கொடைக்கானல் மலைச்சாலையில் அடிக்கடி மழைக்காலங்களில் ஏற்படும் சாலை அரிப்புகளையும், நிலச்சரிவுகளையும், சாலை சேதங்களையும் தடுக்கும்பொருட்டு, சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள 7.5.2018 அன்று ரூபாய் 44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இப்பணிகள் தொடங்கப்படும்.

திண்டுக்கல் முதல் நத்தம் வரை 38 கிலோ மீட்டர் நீள சாலையினை ரூபாய் 250 கோடி மதிப்பீட்டில் இருவழிச்சாலையாக அமைக்கவும் மற்றும் தைப்பூச பக்தர்களுக்கு தனியாக நடைபாதை அமைக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். விரைவில் இப்பணி துவங்கப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல தாராபுரம் பழநி சாலையினை அகலப்படுத்தி தைப்பூசம் மற்றும் உத்திரம் ஆகிய திருவிழாக் காலங்களிலே பக்தர்கள் தங்குதடையில்லாமல், எந்த விபத்தும் இல்லாமல் பயணம் செய்ய சாலையின் இருபுறங்களிலும் அந்த பக்தர்களுக்காக தனிப் பாதை அமைத்துக் கொடுக்கப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒருநாடு செல்வ செழிப்போடு இருக்கிறது என்பதை அந்த நாட்டின் பூமிக்கு அடியில் இருக்கின்ற கனிம வளங்களை கொண்டு தீர்மானிக்கிறோம். ஒருநாடு அழகாக இருக்கிறது என்பதை அந்த நாட்டின் பூமிக்கு மேலே இருக்கின்ற இயற்கை வளங்களைக் கொண்டுதான் தீர்மானிக்கிறோம். இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாடு அழகு நிறைந்த மாநிலமாக திகழ்வதற்கு, இங்கே நமது பாரம்பரியத்தையும் பழமையையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற நீண்ட நெடிய பசுமையான வயல்வெளிகள், அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் உணவு வகைகள், காவேரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணி போன்ற ஆறுகள், அடர்ந்த வனப்பகுதிகள், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற மலைப் பிரதேசங்கள், கடல் பரப்புகள் ஆகியவைதான்.

நம் நாட்டிற்கு அழகையும், அழகுடன் சேர்த்து செல்வத்தையும் கொடுக்கின்ற அத்தகைய இயற்கை வளங்களைக் காப்பது என்பது இந்நாட்டில் வசிக்கின்ற ஒவ்வொரு தனிமனிதனின் கடமையாகும். எத்தனை அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டாலும், இத்தகைய கடலையும், மலைகளையும், காடுகளையும் மனிதர்களால் உருவாக்க முடியாது. ஆனால், அந்த அறிவியலைக் கொண்டு இயற்கையை பாதுகாக்கவும், சிறந்த முறையில் பராமரிக்கவும் முடியும்.

மக்களை பாதுகாத்து வருகின்ற இந்த இயற்கையை அழிக்காமல், சிதைக்காமல், பாதுகாப்பதுதான் அந்த இயற்கைக்கு நாம் செலுத்தும் நன்றியாக கருத வேண்டும். ஒரு மனிதன் தன்

வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒரு மரக்கன்றையாவது நட்டு, அதனை வளர்த்து பாதுகாப்பதை தனது வாழ்நாள் குறிக்கோளாக கொள்ள வேண்டும்.

இயற்கையிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளமாக இருக்கிறது. எந்த இயற்கையும் தனக்காக வாழ்வதில்லை. மரம் தனக்காக காய்ப்பதும் இல்லை, பழுப்பதுமில்லை. தேனீக்கள் தனக்காக மட்டும் தேனை சேமித்து வைப்பதில்லை. பூஞ்செடிகள் தனக்காக மலர்வதில்லை. எல்லாப் பயன்களையும் மனிதர்கள்தான் அனுபவிக்கிறார்கள்.

அத்தகைய இயற்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவை வாழ்வதற்கும், வளர்வதற்கும் அதிக இடங்களைக் கொடுத்து, நம்மைச் சுற்றி இயற்கைச் சூழலை உருவாக்கிக் கொண்டால், அந்த இடம் அழகாகவும், அமைதியாகவும் இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கமாக கொண்டுதான் இப்படிப்பட்ட மலர்க் கண்காட்சிகள் அரசால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இனிய வேளையில் "இயற்கைக்கு தோழனாக இருப்போம்! இயற்கைக்கு அரணாக இருப்போம்!" என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்வோம்.

இங்கே வண்ணமயமாக அழகாக, அணிவகுத்து நிற்கின்ற இந்த மலர்களையெல்லாம் பார்க்கின்றபோது, மாண்புமிகு அம்மா அவர்களைப் பார்ப்பதுபோல் இருக்கிறது. இனம், மதம், மொழி, நாடு, காலம் அனைத்தையும் கடந்து ஜீவராசிகள் அனைத்துக்கும் பொதுவான இயற்கையின் அடையாளம்தான் மலர்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் அனைத்து ஜீவராசிகள்மீதும் பற்றும் பாசமும் கொண்ட அன்பின் அடையாளமாக திகழ்ந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தனக்காக பூக்காத பூக்களைப் போல மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தனக்காக வாழாதவர்கள், மக்களுக்காக வாழ்ந்தவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, இயற்கைக்குத் தோழனாகவும், இயற்கைக்கு அரணாகவும் திகழ்ந்து வருகிறது. தான், தமக்கு என்று சுயநலத்தோடு வாழ்ந்து வருபவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்தி வருவதோடு, 'தமிழ்நாட்டை கைப்பற்றலாம்' என்று பகல் கனவு காண்கிறார்கள்.

தொண்டர்களை ஏமாற்றுவதற்கு என்னென்ன நாடகம் நடத்த முடியுமோ, அனைத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் நாடகத்தை நாடகமாகத்தான் மக்கள் ரசிக்கிறார்கள். இதை ஒரு கதையின் மூலம் கூறினால் நன்கு புரியும்.

மன்னர்கள் காலத்தில் ஒரு ஊரில் உள்ள பஞ்சாயத்தாரிடம் ஒரு வழக்கு வருகிறது. ஒருவன் சொல்கின்றான். 'ஐயா, நான் இவரிடம் நிலம் வாங்கினேன்.. வாங்கி அதை உழும்பொழுது ஒரு பானையில் புதையல் இருந்தது. நான் நிலத்தைத்தான் வாங்கினேன். புதையலை வாங்கவில்லை. அதனால் இந்தப் புதையல் அவருக்குத்தான் சேர வேண்டும்' என்றான். ஆனால், நிலத்தை விற்றவனோ, 'அதெப்படி, அந்தப் புதையல் எனக்குச் சொந்தமாகும்? நான்தான் நிலத்தை விற்றுவிட்டேனே!' என்கிறான்.

பஞ்சாயத்தாரும் அந்த ஊர் மக்களும் இந்த வழக்கைக் கேட்டு திகைத்துப் போகிறார்கள். தீர்ப்பு சொல்லமுடியாமல் பஞ்சாயத்தார் வழக்கை அடுத்த வாரத்திற்கு ஒத்திப் போடுகிறார்கள். அந்த இடைப்பட்ட ஒருவாரம் ஊர்முழுவதும் இந்த வழக்கைப் பற்றியும் இப்படிப்பட்ட நல்லவர்கள் இந்தக்காலத்திலும் இருக்கிறார்களே! என்றும் மக்கள் ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மறுவாரம் வழக்கு விசாரணைக்கு திரும்பவும் வருகிறது. அவர்கள் இருவரும் சண்டையிட்டபடியே பஞ்சாயத்துக்கு வருகிறார்கள். பஞ்சாயத்தார் விசாரித்தார். நிலத்தை விற்றவன், 'நான் நிலத்தை விற்றாலும் புதையல் என்னுடையதுதான்' என்கிறான். நிலத்தை வாங்கியவன், 'அதெப்படி, நான் வாங்கி விட்டேனே! அதனால் அதில் இருப்பது அனைத்தும் என்னுடையதுதான்' என்கிறான். பஞ்சாயத்தார் உட்பட மக்களும் வியப்பில் மூழ்கிவிடுகிறார்கள். போனவாரம் வேறுமாதிரியாக பேசியவர்கள், இந்த வாரம் மாற்றிப் பேசுகிறார்கள். இந்த ஒரு வாரத்தில் என்ன நடந்தது என்று யோசித்தனர். அப்போது பஞ்சாயத்திலிருந்த ஒரு பொற்கொல்லர் எழுந்து, ''அய்யா அது வேறு ஒன்றும் இல்லை, போனவாரம் இந்தப் புதையலை சோதித்தவன், உள்ளே இருப்பது செப்புக் காசுகள்'' என்று கூறினான்.

''செப்புக் காசுகளால் பிரயோஜனம் இல்லை என்பதால் தங்களை அவர்கள் நல்லவர்களாக காட்டிக் கொண்டார்கள். நேற்று நான் திரும்பவும் அந்த புதையலை சோதித்து அந்த புதையல் முழுவதும் பொற்காசுகள் இருப்பதாக உறுதியாக கூறினேன். அதன் விளைவுதான் இப்போது அவர்கள் இருவரும் தங்கள் உண்மை முகத்தை காட்டியிருக்கிறார்கள்'' என்றார்.

கடைசியாக பஞ்சாயத்தார், ''உழைக்காமல் கிடைத்த இந்த புதையல், உங்கள் இருவருக்கும் சொந்தமில்லை. கடினமாக உழைக்கும் இந்த ஊர் மக்களுக்குத்தான் இந்தப் புதையல் சொந்தம், அதை மக்களுக்குக் கொடுத்து விடுவோம்'' என்று தீர்ப்பு சொன்னார்கள்.

கட்சிக்கும், ஆட்சிக்கும் உழைப்பவர்கள் பக்கம்தான் மக்கள் நிற்பார்கள். அவர்களின் ஆதரவும் கிடைக்கும். புதையல் போன்ற மக்கள் ஆதரவு உழைக்காதவர்களுக்கு என்றும் கிடைக்காது என்று கூறி, இந்த மலர்க் கண்காட்சி விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த

நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனக்கு முன்னாலே மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அழகாக, தெளிவாக பல்வேறு கருத்துகளை எடுத்து வைத்தார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுதும் சரி, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகும், அம்மாவினுடைய அரசு இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்கள் வழங்கியது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டதென்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், பல மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தியாவிலேயே பல்லாயிரக்கணக்கான காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்தக் காவல் நிலையங்கள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு, இந்தியாவிலேயே பரிசு கொடுக்கின்ற ஒரு திட்டத்தை வகுத்தார்கள். அந்தத் திட்டத்திலே நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற காவல் நிலையத்தையும் ஆய்வு செய்தார்கள். அப்பொழுது ஆய்வு செய்கின்றபொழுது இன்றைக்கு தமிழகத்திலுள்ள கோவை ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம் முதன்மைக் காவல் நிலையம் என்று இந்தியாவிலேயே சிறப்புப் பரிசை பெற்றது. அதேபோல, அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாவது பரிசை பெற்றது. ஆகவே, இன்றைக்கு காவலர்கள் சிறந்த முறையிலே பணியாற்றிய காரணத்தினால், இந்தியாவில் இருக்கின்ற காவல் நிலையங்களிலே சிறந்த காவல் நிலையம் தமிழ்நாட்டில் இருக்கின்ற கோவையில் இருக்கின்ற ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம்தான் சிறந்த காவல் நிலையம் என்று பரிசை பெற்றிருக்கின்றது. அதேபோல், இந்தியாவிலேயே ஐந்தாவது

காவல்நிலையமாக சென்னை அண்ணா நகர் காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்டது. ஆகவே, சட்டம், ஒழுங்கு எந்தளவிற்கு பேணிக்காக்கப்படுகிறது, ஆகவே, இன்றைக்கு எந்த இடத்தில் எந்தத் தவறு நடந்தாலும் உடனடியாக காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமிழகத்திலே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய ஆட்சியாக அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து பல்வேறு கோரிக்கைகளை வைத்து இன்றைக்கு திட்டங்களை அம்மாவினுடைய அரசு பெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திற்கும் கேபிள் டி.வி நிறுவனத்திற்கு டிஜிடல் ஒளிபரப்பு உரிமம் வழங்கியது கிடையாது. ஆனால், அம்மாவினுடைய அரசு கோரிக்கை வைத்த உடனேயே, மத்திய அரசு டிஜிடல் ஒளிபரப்பு உரிமையை தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த டிஜிடல் ஒளிபரப்பு உரிமம் பெற்ற காரணத்தினாலே, குறைந்த கட்டணத்திலே அதிக சேனல்கள் இன்றைக்கு மக்கள் பார்க்கக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் பயன்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, தாட்கோ மூலமாக இன்றைக்கு இளைஞர்களுக்கு கடனுதவி வழங்கி, அவர்கள் கடன் பெறுவதற்கு புதிய திட்டங்கள் மூலமாக, அந்த தொழில் துவங்குவதற்காக இன்றைக்கு ரூபாய் 234 கோடி சுயதொழில் தொடங்குவதற்காக, அம்மாவினுடைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

அதேபோல, விவசாயிகள் உரிய காலத்திலே பயிரிடல் செய்வதற்காக பயிர்க்கடன் இன்றைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகின்றது. 9,84,909 விவசாயிகளுக்கு ரூபாய்

5,813 கோடி பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. ஆகவே, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு வேளாண்மைத் துறையிலே சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக இன்றைக்கு குறிப்பிட்ட காலத்திலே பயிர் செய்ய வேண்டுமென்பதற்காக, விவசாயிகளுக்கு உரிய காலத்திலே கடன் வழங்கி, அந்த விவசாயிகள் உரிய காலத்திலே பயிர் செய்து, இன்றைக்கு வேளாண் பெருமக்கள் அதிக விளைச்சல் பெறுவதற்கு இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் பயிர்க் கடன் உரிய காலத்தில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்திலே கடந்த வருடம் 140 ஆண்டு காலம் இல்லா வறட்சி. இந்த வறட்சியினால் விவசாயிகள் பயிரிட்ட அந்த பயிர்கள் எல்லாம் கருகி விட்டது. விவசாயிகள் கவலையடைந்தார்கள், விவசாயிகள் நஷ்டமடைந்தார்கள். கோரிக்கை வைத்தார்கள், எங்கள் பயிர்கள் எல்லாம் காய்ந்துவிட்டது, கருகிவிட்டது, ஆகவே எங்களுக்கு அந்த வறட்சி நிவாரணம் கிடைக்க வேண்டும் அந்த கோரிக்கை வைத்தார்கள், அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே அம்மாவினுடைய அரசு ரூபாய் 2,247 கோடி வறட்சி நிவாரணமாக விவசாயிகளுக்கு வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. அதேபோல, இன்றைக்கு பயிர் காப்பீடு திட்டத்தின் மூலமாக இந்திய அளவிலேயே தமிழகம்தான் அதிக பயிர் காப்பீடு திட்டத்தின் மூலமாக ரூபாய் 3,265 கோடியை விவசாயிகளுக்கு பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. இன்னும் பல விவசாயிகளுக்கு இந்த காப்பீட்டு திட்டத்தின் மூலமாக இந்த நிதியை பெற்றுத் தருவதற்கும் அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் பெருமக்கள் திண்டுக்கல் மாவட்டதில் கூட அதிகமாக தென்னை மரங்கள் பயிரிட்டிருக்கிறார்கள். ஆகவே, தென்னை மரம் பயிரிட்டிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு போதிய வருமானம் இல்லையென்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, தமிழகம் முழுவதுமுள்ள தென்னை மரங்கள் சாகுபடி செய்துள்ள வேளாண் பெருமக்கள் அதிக வருமானம் பெறவேண்டும்

என்பதற்காக நீரா பானம் உற்பத்தி செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த அனுமதியையும் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பெய்கின்ற மழை நீர், எங்கு பெய்தாலும் சரி, அது வீணாகாமல், ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக 1,158 பண்ணைக் குட்டைகள் ரூபாய் 136 கோடியிலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல, இன்றைக்கு மழைநீர், பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாக கடலிலே கலக்கப்படுகின்றன. அப்படி வீணாகக் கடலிலே கலக்கப்படுகின்ற அந்த நீர் ஆங்காங்கே இருக்கின்ற ஓடைகள், நதியின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, அந்த தடுப்பணைகள் கட்டப்படுவதின் மூலமாக பெய்கின்ற மழைநீர் அங்கே தேக்கி வைக்கப்படுகின்றது. அந்த தேக்கி வைக்கப்பட்ட நிலத்தடி நீர் உயர்கின்றது, வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. மக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைக்கின்றது. அந்தத் திட்டத்திற்காக அம்மாவினுடைய அரசால், மூன்றாண்டு கால திட்டமாக ரூபாய் 1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, அதற்கு முதற்கட்டமாக, ரூபாய் 350 கோடி நிதி ஒதுக்கீடு தடுப்பணைகள் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு.

அதேபோல, கூட்டுப்பண்ணை திட்டத்தின் வாயிலாக இன்றைக்கு விவசாய குடிமக்களே ஒருங்கிணைந்து அந்தத் திட்டத்தின் வாயிலாக அவர்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக அந்த கூட்டுப் பண்ணை திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு தான் இன்றைக்கு வழங்கியிருக்கின்றது.

அதேபோல, வறட்சி காலங்களிலே, இன்றைக்கு பார்த்தீர்களானால், வறட்சியால் பாதிக்கப்பட்ட பல்வேறு விவசாயிகள்

1,000 அடி borewell போட்டாத்தான் தண்ணீர் கிடைக்கும். அந்தத் தண்ணீரை வைத்து விவசாய பெருங்குடிமக்கள் விவசாயம் செய்ய வேண்டும். அந்த 1,000 அடியிலிருந்து வருகின்ற நீர் குறைந்த அளவாகத்தான் இருக்கின்றது. அந்த குறைந்த அளவு நீரை வேளாண் பெருமக்கள் அதை சரியான முறையிலே பயன்படுத்த வேண்டுமென்பதற்காக சொட்டு நீர் பாசனத் திட்டத்தை இன்றைக்கு உருவாக்கி, 1 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் முழுவதும் மானியம், அதற்குமேல் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும் 75 சதவிகித மானியத்தைக் கொடுத்து, அந்த குறைந்த நீரை வைத்து சிறந்த விவசாயத்தை செய்ய வேண்டுமென்பதற்காக வேளாண் பெருமக்களுக்காக இந்தத் திட்டத்தை உருவாக்கிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் பெருமக்களுக்கு மானிய விலையிலே இன்றைக்கு வேளாண் கருவிகள் கொடுக்கப்படுகிறது. டிராக்டர், விதைகள், உரம் கொடுக்கிறார்கள். வேளாண் பெருமக்களுக்கு இன்றைக்கு உற்பத்தி செய்வதற்கு ஊக்கமாக செயல்படுகின்ற அரசு அம்மாவினுடைய அரசாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அதேபோல, இன்றைக்கு சோலார் மின்மோட்டார் நம்முடைய விவசாயிகளுக்கு மானிய விலையிலே கொடுக்கின்றோம். இப்படிப்பட்ட திட்டங்கள் வாயிலாக, இன்றைக்கு எனக்கு முன்னாலே மாவட்ட அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை வாரி, வாரி வழங்கியதன் விளைவாக விவசாயம் வளர்ந்திருக்கிறது, இன்றைக்கு வேளாண் பெருமக்கள் சிறந்த முறையில் விவசாயம் செய்த காரணத்தினாலே, இந்தியாவிலேயே உணவு தானிய உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்காக தொடர்ந்து

கிருஷி கர்மாண் என்ற உயர்ந்த விருதை மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, ஒவ்வொரு ஆண்டும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்த தினம் வருகின்றபொழுது, மரக்கன்று நடுகின்றோம். ஏனென்றால் மரம் வளர்ப்பது நம்முடைய கடமை. இயற்கை வளம் இருந்தால் தான் மழை பொழியும், மழை பொழிந்தால்தான் நீர் கிடைக்கும், நீர் கிடைத்தால்தான் வேளாண் பெருமக்கள் சிறந்த விவசாயம் மேற்கொள்வார்கள், குடிநீருக்குத் தேவையான நீர் கிடைக்கும். ஆகவே, அப்படிப்பட்ட இயற்கை வளங்களை மேலும் செம்மைப்படுத்த அம்மாவினுடைய அரசு ஒவ்வொரு ஆண்டும் அம்மாவினுடைய பிறந்த நாள் வருகின்றபொழுது, அம்மாவினுடைய பிறந்த நாள் விழாவை நினைவு கூருகின்ற வகையிலே, இந்த ஆண்டு 70 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டது. அதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே வந்து நேரடியாக இந்த மரக்கன்று நடவு விழாவை நடவு செய்தார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல, கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு இன்றைக்கு மானிய விலையிலே மின்சாரம் வழங்கப்படுகின்றது.

அதேபோல, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் ரூபாய் 930 கோடி அம்மாவினுடைய அரசு வழங்கியிருக்கின்றது. இதன் மூலமாக 6,51,000 நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளார்கள். ஏழை, எளிய மக்களுக்கு உரிய சிகிச்சை தனியார் மருத்துவமனையின் மூலம் கிடைப்பதற்காக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் மூலமாக அம்மாவினுடைய அரசு ரூபாய் 930 கோடி வழங்கியிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாடு, உயர்மட்ட சாலைகள் மற்றும் துறைமுகம் மேம்பாட்டிற்காக சுமார் ரூபாய் 1 இலட்சம் கோடி மத்திய அரசிடமிருந்து பெறுவதற்குண்டான நடவடிக்கையை அம்மாவினுடைய அரசு எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினை 30 மாவட்டங்களில் சிறப்பாக கொண்டாடினோம். இதன் மூலமாக 30 மாவட்ட மக்களையும் நான் நேரில் சந்தித்தேன். அப்பொழுது, ரூபாய் 5712.90 கோடி மதிப்பீட்டில் 3200 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டினேன். அதேபோல, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளை முன்னிட்டு 10 ஆண்டு நிரம்பிய சிறைவாசிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பையும் கொடுத்திருக்கின்றேன். விரைவிலே, 10 ஆண்டுகள் நிறைவு பெற்ற சிறைவாசிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, 61 நிறுவனங்கள் ரூபாய் 62,738 கோடி மதிப்பீட்டிலே 96,340 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கி தந்திருக்கின்றோம். கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இருக்கின்றபொழுது, விபத்து ஏற்பட்டு இறந்தால் ரூபாய் 5 இலட்சம் அம்மாவினுடைய அரசு தருகின்றது.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாக வெளியிட்டார்கள், வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித்தொகை இருமடங்காக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். அதன் மூலமாக

57,762 நபர்கள் பயன்பெற்றார்கள், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 14 கோடியே 86 இலட்சம்.

அதேபோல, இன்றைக்கு எனக்கு முன்னாலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழகாகச் சொன்னார்கள். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் 65 சதவிகிதம் வேளாண் பணிகளை மேற்கொள்கின்றோம். ஆகவே, நம்முடைய தமிழகம் வேளாண்மைத் துறையைச் சார்ந்த ஒரு மாநிலமாக இருக்கின்ற காரணத்தினாலே, வேளாண் பெருமக்களுக்கு பயன்பெற வேண்டுமென்பதற்காக, அந்த வேளாண் பெருமக்கள் பல ஆண்டுகாலமாக வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக, ஆங்காங்கே இருக்கின்ற, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற ஏரி, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக்கொள்ளலாம் என்ற உத்தரவை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இதன்மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற விவசாய பெருங்குடி மக்கள், அந்த ஏரிகளில் இருக்கின்ற, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளி தங்கள் நிலங்களுக்கு இயற்கை எருவாகப் பயன்படுத்தினார்கள். இதன் மூலமாக இன்றைக்கு வேளாண் உற்பத்தி அதிகமாக விளைந்திருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, அரசின் சார்பாக, முன்மாதிரியாக 1,519 ஏரிகளை எடுத்து, ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, ஆங்காங்கே இருக்கின்ற அந்த ஏரிகள், குளங்களை ஆழப்படுத்துவதன் மூலமாக பெய்கின்ற மழைநீர் முழுவதும் அங்கே சேமிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக குடிமராமத்து என்ற ஒரு திட்டத்தை உருவாக்கினோம். அந்தத் திட்டம் முழுவதும் அந்தந்த பாசன விவசாயிகள் சங்கமே மேற்கொள்ள வேண்டும், அதற்கான நிதியை அவர்களிடத்திலே கொடுத்து அதை

அவர்களை செய்யச் சொன்னோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, விவசாய பெருங்குடி மக்கள் மேலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று மேலும் 1,519 ஏரிகள், அந்த ஏரிகளுக்கு தேவையான முழு நிதியையும் அம்மாவினுடைய அரசே தருகின்றது. அந்த ஏரிகளை ஆழப்படுத்துதல், கரையை பலப்படுத்துதல், வருகின்ற கால்வாய், வரத்துக் கால்வாயினுடைய தூர்வாருதல், அதேபோல, உபரி நீரை வெளியேற்றுதல், மதகை சரி செய்தல் போன்ற திட்டங்களை அந்த விவசாயிகளே செய்ய வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு பாசன விவசாயிகள் சங்கத்திற்கு அந்த ஏரிக்கு எவ்வளவு நிதி தேவையோ அத்தனை நிதியும், முழுவதையும் அம்மாவினுடைய அரசு வழங்கியது. அந்த ஏரி தூர்வாருகின்றபொழுது, அந்த ஏரியை பலப்படுத்துகின்றபொழுது, மதகை சரிசெய்கின்றபொழுது, அந்தக் கால்வாயில் வருகின்ற நீர், அதை முறையாக வருவதற்கு தூர்வாருகின்ற நிலையை உருவாக்குவதற்காக அம்மாவினுடைய அரசால் ரூபாய் 325 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது, முழுக்க, முழுக்க விவசாய பிரதிநிதிகளை வைத்து செயல்படுகின்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, 40,000 சூரிய மின்சக்தியுடம் கூடிய 840 பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதேபோல், தமிழ்நாடு பெயர் சூட்டப்பட்டு இன்றைக்கு நிறைவடைந்ததையொட்டி, அரசு சார்பில் தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக கொண்டாடப்படவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

கல்வியிலே ஒரு புரட்சி. எல்லா துறைகளை காட்டிலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்கின்ற துறை கல்வித்துறை. ஒரு மாநிலத்திலே கல்வி வளர்ந்தால் அனைத்தும் வளரும். பொருளாதாரம் வளரும். எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும் என்றால் கல்வி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். கல்வி கொடுப்பதற்காக அம்மாவுடைய அரசு அதிக நிதியை இந்த துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சி காலத்தில் இருந்து இன்று வரை 116 ஆரம்ப பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. 829 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

ஆங்காங்கே கிராமத்திலே வாழ்கின்ற மக்கள், நகரத்திலே வாழ்கின்ற மக்கள் தங்கள் பகுதிகளிலேயே பள்ளிகளை தரம் உயர்த்துகின்ற போது அந்தப் பள்ளியிலே பள்ளி குழந்தைகளை சேர்ப்பதால் சேர்க்கை விகிதம் உயர்ந்திருக்கிறது. பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டதன் விளைவு தொடக்கப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 99.85 சதவிகிதமாகவும், நடுநிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 99.11 சதவிகிதமாகவும், உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 93.15 சதவிகிதமாகவும், மேல்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 77.64 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. இது எல்லாம் அம்மாவுடைய ஆட்சியிலே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏழை எளிய நடுத்தர மக்களின் குழந்தைகளும் உயர்கல்வி படிக்க வேண்டும். தனியார் பள்ளியிலே போய் சேர்ந்தால் பல்லாயிரக்கணக்கான ரூபாயை செலவு செய்து தான் உயர்கல்வி

படிக்க கூடிய நிலை இருக்கிறது. திறமையான அறிவுபூர்வமான மாணவர்களாக இருப்பார்கள், பொருளாதார சூழ்நிலை காரணமாக பல்லாயிரக்கணக்கான ரூபாயை செலவு செய்து உயர்கல்வி படிக்க முடியாத ஒரு சூழ்நிலை. ஆகவே, அப்படிப்பட்ட மாணவர்கள் குறைந்த கட்டணத்திலே படிப்பதற்காக இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி காலத்திலிருந்து இன்று வரை 76 அரசு மற்றும் கலை கல்லூரிகள் திறந்து, இன்றைக்கு உயர்கல்வி படிக்கின்ற சூழ்நிலையை அம்மாவுடைய அரசு உருவாக்கி தந்திருக்கிறது.

ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள், கிராமத்திலே வாழ்கின்ற விவசாயி, தொழிலாளிகளுடைய குழந்தைகள் இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கிறோம். இந்த திட்டத்தின் வாயிலாக இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை தமிழகத்திலே 46.94 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

2011ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே அமர்கின்ற போது 100க்கு 21 பேர் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வியில் ஒரு புரட்சி மறுமலர்ச்சி ஏற்படுத்தியதன் விளைவாக, பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட்டதன் விளைவாக, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கியதன் மூலமாக, மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, வேளாண்மை கல்லூரி என்று பல்வேறு கல்லூரிகள் அரசின் மூலமாக உருவாக்கியதன் விளைவாக ஏழை எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ மாணவிகள் இன்றைக்கு உயர்கல்வி படிக்கின்ற எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதை இன்றைக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கின்றது. இப்படி கல்வியிலே ஒரு சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, இந்திய அளவிலே மருத்துவத் துறையிலே சிறந்து விளங்குகின்றோம். 2011–லிருந்து இன்று வரை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 254 சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு தகுந்த சிகிச்சை அங்கேயே கொடுக்க வேண்டும் என்பதற்காக 254 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்திருக்கின்றோம். அதேபோல, ஏற்கனவே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக 153 தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. 30 படுக்கை கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. இதன்மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற அந்த ஏழை எளிய மக்கள் அந்த பகுதியிலே உரிய சிகிச்சை மேற்கொள்வதற்காக இன்றைக்கு அம்மாவுடைய அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவி இருக்கின்றது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அரசு மருத்துவமனைகள் 65. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகள் 6 அம்மாவின் அரசிலே. மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை, இந்தியாவிலேயே தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக இந்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக முதல் பரிசை பெற்றுக் கொண்டு இருக்கின்றோம். இந்திய அளவிலே இன்றைக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதியை சேர்ந்த ஒரு தொழிலாளிக்கு இரண்டு கைகளும் கிடையாது. அந்த இரண்டு கையும் இழந்த அந்த ஏழை தொழிலாளிக்கு இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளும் எடுத்து அவருக்கு பொருத்தப்பட்டு இரண்டு மாதம் ஆகிறது. நலமுடன் இருக்கின்றார். ஆகவே, மருத்துவத்துறையிலே எந்த அளவிற்கு அம்மாவுடைய அரசு சாதனை படைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்காக சிறப்பாக சேவை செய்த அரசு மருத்துவர்களை நான் இந்த நேரத்திலே பாராட்ட விரும்புகின்றேன். இந்திய அளவிலேயே அரசு மருத்துவமனையில் இரண்டு கைகள் பொருத்தப்பட்ட வரலாறு கிடையாது. அந்த வரலாற்றை படைத்த அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு

இருக்கிறேன். அதேபோல, இதய மாற்று அறுவை சிகிச்சை 110 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. சிறுநீரகம் 318 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. கல்லீரல் 161 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது. நுரையீரல் 102 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது. கணையம் 7 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இருக்கிறது. இதுதவிர 356 வட்டங்களில் நடமாடும் மருத்துவமனைகள் செயல்பட்டு கொண்டு இருக்கிறது. நடமாடும் மருத்துவமனை மூலமாக ஆங்காங்கே கிராமத்திலே இருக்கின்ற மக்கள், நடமாடும் மருத்துவமனையிலே தங்கள் உடலை பரிசோதித்து தங்கள் உடலிலே என்ன நோய் இருக்கிறது என்பதை கண்டறிந்து அந்த நோயை குணப்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாக்கிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையிலே முன்னிலை மாநிலமாக விளங்கி கொண்டு இருக்கிறது. 156 இறந்த கொடையாளிகளிடமிருந்து 5,933 முக்கிய உறுப்புகள் தானமாக பெறப்பட்டு தொடர்ந்து அகில இந்திய அளவில் மூன்றாவது முறையாக தமிழகம் உடல் தானத்திலே முதல் மாநிலமாக அதற்கான பரிசையும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படி ஏராளமான திட்டங்களை அம்மாவுடைய அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

காவிரி நதிநீர் பிரச்சினை குறித்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அழகாக குறிப்பிட்டார்கள். காவிரி நதிநீர் என்பது ஒரு ஜீவநதி. இன்றைக்கு காவிரி நதிநீரிலிருந்து தான் 20 மாவட்டங்கள் குடிநீர் ஆதாரங்களை பெறுகின்றன. காவிரி நதிநீர் பிரச்சினை தொடர்பாக பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்கள் 1986ஆம் ஆண்டு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் மூலம் கோரிக்கை வைத்தார்கள். மத்திய அரசு நடுவர் மன்றம் அமைக்க ஒரு இடைக்கால தீர்ப்பு வழங்கியது. 205 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் என்று நடுவர் மன்ற ஆணையமும் ஆணையிட்டது. இறுதி தீர்ப்பை 2007ல் வழங்கியது. நடுவர் மன்ற ஆணையம் வழங்கிய தீர்ப்பை மத்திய அரசு கிடப்பில் போட்டது. அரசிதழில் வெளியிட காலம் தாழ்த்தியது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து, உச்சநீதிமன்றம் 2013ல் தீர்ப்பு வழங்கியது. அந்த தீர்ப்பிலே மத்திய அரசு உடனடியாக நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டது. அதன் வாயிலாக, மத்திய அரசு நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டது. நடுவர் மன்ற ஆணை வழங்கிய தீர்ப்பின்படி 192 டிஎம்சி தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தினார் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆனால் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காததால், மாண்புமிகு அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்த வழக்கை அம்மாவின் அரசு திறமையாக அனைத்து ஆதாரங்களுடன் திறமையான மூத்த வழக்கறிஞர்களை வைத்து வாதாடியதன் விளைவாக இன்றைக்கு நல்ல வாதங்களை எடுத்து வைத்து உச்சநீதிமன்றத்திலே நேற்றைய தினம் 32 ஆண்டுகாலம் நடந்து வந்த காவிரி நதிநீர் பிரச்சினை தீர்வு காண்கின்ற வகையில் உச்சநீதிமன்றத்திலிருந்து நல்ல தீர்ப்பை தமிழ்நாடு அரசு பெற்று தந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் மெரினா கடற்கரை எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் தொடர்ந்து 80 மணிநேரம் உண்ணாவிரதம்

இருந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். யார் யாரோ பேசுகிறார்கள். விவசாயிகளுக்காக நன்மை செய்தோம் என்று. ஆனால் நன்மை செய்த ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். சட்டத்தின் மூலம் நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு நீரை பெறுவதில் சட்டப் போராட்டம் நடத்திய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய நீரை பெற்று தருவதற்காக தனது இறுதி மூச்சு வரை போராடினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து அறவழியில் போராடி வெற்றி பெற்று தந்துள்ளது என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். காவிரி நதிநீர் பெறுவதற்கு மற்ற கட்சிகளை விட அதிக அக்கறை எடுத்துக் கொண்ட கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முடிவின்படி, அம்மாவின் அரசு வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்தின் மூலம் நேற்றைய தினம் பெற்றுத் தந்துள்ளது. இந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பு கிடைப்பதற்கு பாடுபட்ட இதயதெய்வம் புரட்சிதலைவி அம்மா அவர்களுக்கு நாம் என்றென்றும் நன்றி சொல்வோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த பூமியிலிருந்து மறைந்தாலும், அம்மா அவர்கள் செய்த சாதனைகள் மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். அதுதான் தலைவர்களுக்கு கிடைக்கின்ற பெருமை. அந்த பெருமைக்குரியவர் புரட்சித்தலைவி அம்மா என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

இந்த இயற்கை கொஞ்சும் எழில்மிகு கொடைக்கானலிலே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகை தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவிலே சுற்றுலா பயணிகள் வருவதையொட்டி, நம்முடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய

திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் இந்த பகுதி அழகுப்படுத்த வேண்டும், நிறைய திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை எல்லாம் அரசு கனிவோடு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுத்து, மலைப் பிரதேசங்களில் இயற்கையான சூழ்நிலையை உருவாக்கி, நம்முடைய தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, வெளிமாநிலத்திலே இருக்கின்றவர்களும், வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்களும் கண்டுகளித்து மகிழ்கின்ற அளவிற்கு இயற்கை கொஞ்சுகின்ற மலையாக ஏற்காடு, உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகிய மலைப்பிரதேசங்களை அழகுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அம்மாவுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்,

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.05.2018 அன்று*
திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் நடைபெற்ற
கொடைக்கானல் கோடை விழா 2018 மற்றும்
57ஆவது மலர்க் கண்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை

ரூ.3,770 கோடி மதிப்பீட்டிலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,

வளர்ச்சியடைந்த வெளிநாட்டு நகரங்களுக்கு நிகராக சென்னை போக்குவரத்தின் தரம் உயர்வுக்கு அடையாளமாக சென்னை மெட்ரோ இரயில் திட்டம் விளங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் எழும்பூர் மெட்ரோ, சென்ட்ரல் மெட்ரோ, சைதாப்பேட்டை மெட்ரோ, நந்தனம், தேனாம்பேட்டை மற்றும் ஏ.ஜி.–டி.எம்.எஸ். ஆகிய 6 புதிய மெட்ரோ நிலையங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததிலும் மற்றும் பச்சை வழித்தடத்தில் நேரு பூங்கா முதல் சென்ட்ரல் மெட்ரோ நிலையம் வரையிலும், நீல வழித்தடத்தில் சின்னமலை முதல் ஏ.ஜி.–டி.எம்.எஸ். வரையிலுமான சுரங்க வழித்தடத்தில் பயணிகள் சேவையை மாண்புமிகு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் மரியாதைக்குரிய

திரு.ஹர்தீப்சிங்புரி அவர்களுடன் இணைந்து அர்ப்பணிப்பு செய்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவை சிறப்பிக்க வருகை புரிந்துள்ள மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு.ப. தனபால் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார் அவர்களே! மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே!

வருகை தந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! வருகை தந்துள்ள மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசின் உயர் அலுவலர்களே! வருகை தந்துள்ள தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற His Excellency, Ambassador of Japan to India, Japan Embassy at New Delhi Consul General of Japan in Chennai Chief Representative, JICA at New Delhi. மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை முதன்மை செயலாளர் முனைவர் டி.வி.சோமநாதன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ்குமார் பன்சால் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!

அரசு அலுவலர்களே! மெட்ரோ இரயில் திட்ட அலுவலர்களே! பணியாளர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது போக்குவரத்தின் பரிணாம வளர்ச்சி நம்மை பிரமிக்க வைக்கின்றது.

கால்வலிக்க ஊர் ஊராக நடை பயணம்! குதிரைகளில் பயணம், சக்கரங்களைப் பயன்படுத்தி குதிரை வண்டி, மாட்டு வண்டிகளில் பயணம்!

எரி பொருளைப் பயன்படுத்தி தரை வழிப் பயணம்! நீர் வழிப் பயணம்! வான்வழிப் பயணம்! – என மக்களின் தேவைக்கேற்ப பயண

முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், மனிதன் தனது அறிவின் கூர்மையைப் பயன்படுத்தி அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் துணையுடன் போக்குவரத்தை எளிமையாகவும், நவீனமயமாகவும் அமைத்துக் கொண்டான். பொது போக்குவரத்து முறையின்அதிநவீன வளர்ச்சிதான் மெட்ரோ இரயில் ஆகும். உயர்த்தப்பட்ட வழித்தடங்களில் பறக்கும் இரயிலில் பயணித்தபோது வியப்படைந்த நாம் – இன்று உன்னதமான சிலிர்ப்பூட்டும் சுரங்க வழிப்பயணத்தை குளிர்சாதன வசதியுடன் அனுபவித்து வருகிறோம். இதனை மனித இனம் கண்ட மற்றொரு மகத்தான அறிவியல் வளர்ச்சியாக கருத வேண்டும்.

சென்னை மக்களின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும், மக்களின் பயண நேரத்தை குறைப்பதுடன் பயணம் எளிமையாகவும், வசதியாகவும் அமைய தொலைநோக்குப் பார்வையுடன் மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இத்திட்டத்திற்கு தேவையான நிதி உதவிகளை வழங்கினார்கள்.

அதன் விளைவுதான் இன்று இத்திட்டத்தில் பல்வேறு வழித்தடப் பகுதிகளில் பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றன. இந்த மெட்ரோ இரயில் போக்குவரத்தானது, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் ஆகியவற்றுடன் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் 22 கி.மீ. நீளத்தில் செயல்படுத்தப்படும் "பச்சை" வழித்தடத்தில் விமான நிலையம் முதல் நேரு பூங்கா வரை ஏற்கெனவே பயணிகள் சேவை நடைபெற்று வருகிறது. தற்போது திறக்கப்படும் நேரு பூங்கா முதல் சென்ட்ரல் மெட்ரோ வரையிலான சுரங்கப் பாதையுடன் அனைத்து பச்சை வழித்தடப் பகுதிகளிலும் பயணிகள் சேவை தொடங்கியுள்ளது. மேலும் 23 கி.மீ. நீளத்திலான "நீல" வழித்தடத்தில் விமான

நிலையம் முதல் சின்னமலை வரை ஏற்கனவே பயணிகள் சேவை நடைபெற்று வருகிறது. இன்று திறக்கப்படும் சின்னமலை முதல் ஏ.ஜி.–டி.எம்.எஸ். வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியுடன் 13 கி.மீ. நீளத்திலான பாதையில் பயணிகள் சேவை நடைபெற தொடங்கியுள்ளது. எஞ்சியுள்ள 10 கி.மீ. நீளத்திலான ஏ.ஜி.–டி.எம். எஸ். முதல் வண்ணாரப்பேட்டை வரையில் சுரங்க பாதை மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் முடியுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

29.06.2015 அன்று கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கி.மீ. முதல் உயர்த்தப்பட்ட வழித்தடத்திலும், 21.09.2016 அன்று சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையிலான 8.6 கி.மீ. நீளத்திலான உயர்த்தப்பட்ட மெட்ரோ இரயில் வழித்தடத்திலும் மற்றும் ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் 1.2 கி.மீ. நீளத்திலான உயர்த்தப்பட்ட வழித்தடத்திலும் பயணிகள் சேவை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன.

மேலும், வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் – விம்கோ நகர் வரையிலான 3,770 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை மெட்ரோ இரயிலின் முதல் கட்ட நீட்டிப்பு திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 23.07.2016 அன்று அடிக்கல்

நாட்டப்பட்டது. 9.05 கி.மீ. தூரம் நீட்டிப்பதற்கான இந்த திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறுவதற்கு மாண்புமிகு முன்னாள் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சரும், மாண்புமிகு துணை குடியரசுத் தலைவருமான திரு.வெங்கய்யா நாயுடு அவர்கள் பேருதவி புரிந்தார்கள். அவர்களுக்கு இந்த தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நீட்டிப்புத் திட்டத்தின் கட்டுமானம் மற்றும் அமைப்புகளை நிறுவும் பணிகளில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பணிகள், ஜூன் 2020 க்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

14.05.2017 அன்று கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையிலான 7.4 கி.மீ. நீளத்திலான முதல் சுரங்க வழித்தடத்தை முன்னாள் மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சரும், மாண்புமிகு துணை குடியரசுத் தலைவருமான, திரு.வெங்கய்யா நாயுடு அவர்களும், நானும் இணைந்து துவக்கி வைத்ததை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் நினைவு கூற விரும்புகிறேன்.

இந்த இனிய விழாவில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- இந்தியாவில் செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ இரயில் திட்டங்களில், மொத்த வழித்தடத்தில் அதிகப் பகுதி சுரங்கப் பாதையாக அமைக்கப்படுவது சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில்தான்.

- இந்த திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்தின் போதே சென்னை சென்ட்ரல், எழும்பூர் இரயில் நிலையம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்து மற்றும் விமான நிலையம் ஆகிய பல்வகை போக்குவரத்து அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டது தனிச் சிறப்பாகும்.

➢ இத்திட்டத்தின் கீழ்தான் முதன் முதலில் சுரங்கப் பாதை மெட்ரோ இரயில் நிலையங்களில் பயணிகளின் நலன் கருதி நடைமேடை தடுப்புக் கதவுகள் அமைக்கப்பட்டு, நிலையங்களுக்குள் தூசுகள் புகாமலும், குளிர்பதனம் குறையாமலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகளுக்கு பாதுகாப்பும், மின்சக்தி சேமிப்பும் ஏற்படுகிறது.

➢ மெட்ரோ இரயில் வண்டியை பிரேக் பிடித்து நிறுத்தும்போது, அதன் மூலம் தானாகவே மின் சக்தியை உற்பத்தி செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

➢ மெட்ரோ இரயிலில் பயணம் செய்யும் மாற்றுத் திறனாளிகள் கூடுதல் நேரத்துடன் பாதுகாப்பாக இறங்குவதற்கு வசதியாக ரயில் இயக்குபவருடன் தொடர்பு கொள்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

➢ மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து பயணிகள் தங்கள் வீடுகளுக்கு செல்வதற்கு வசதியாக ஓலா, ஊபர் போன்ற போக்குவரத்து அமைப்புகளுடன் இணைந்தும், ஆட்டோ ரிக்ஷா வசதியும் செய்யப்பட்டுள்ளன.

➢ மாநகரப் பேருந்து கழகத்தின் சிறிய பேருந்துகளை மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்தும் மற்றும் அவற்றின் வழியாகவும் இயக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

➢ மேலும் பயணிகளுக்கு சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

➢ சென்னை மெட்ரோ இரயிலின் 13 உயர்த்தப்பட்ட ரயில் நிலையங்களிலும், 7 சுரங்கப் பாதை இரயில் நிலையங்களிலும் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் இயக்கம் ஆகியவற்றில் பசுமைத்

திட்டத்தை செயல்படுத்தியதற்காக IGBG Green Mass Rapid Transit System என்ற அமைப்பின் உயரிய விருதான “பிளாட்டினம் விருது” நமது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

➢ சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் திறக்கப்பட்டுள்ள வழித்தடப் பகுதிகளில் இதுவரை 1.64 கோடி பேர் பயணம் செய்துள்ளார்கள். இன்று துவக்கி வைக்கப்படும் சுரங்கப்பாதை வழித்தடங்களையும் சேர்த்து அனைத்து வழித்தடங்களிலும் பயணிப்பவர்களின் எண்ணிக்கை பன்மடங்கு கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

54 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் - I, தற்போது சென்னை பெருநகர் பகுதியில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலுக்கு போதாது என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் கட்டம் IIல் மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களை செயல்படுத்த முடிவு செய்துள்ளது.79ஆயிரத்து 961 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள 107.55 கி.மீ. நீளத்திலான 3 வழித்தடங்களான – மாதவரம் முதல் சிறுசேரி வரையில் ஒரு வழித்தடமும், சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் கலங்கரை விளக்கம் வரை ஒரு வழித்தடமும் மற்றும் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை ஒரு வழித்தடமும் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் கடனுதவி பெறுவதற்காக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதி பங்களிப்பு ஆகியவற்றை விரைவில் வழங்க வேண்டுமென

இந்த தருணத்தில் மாண்புமிகு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

I request the Hon'ble Minister of State for Housing and Urban Affairs Thiru Hardeep Singh Puri to give early approval and sanction of Central share of funds for the Phase-II of Chennai Metro Rail Project.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் II கீழ் செயல்படுத்தப்படவுள்ள 107.55 கி.மீ. நீளத்திலான 3 வழித்தடங்களில், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் மற்றும் மாதவரம் முதல் கோயம்பேடு வரையிலுமான 52.01 கி.மீ. நீளத்திலான வழித்தடப் பகுதிக்கு மட்டும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடனுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இதற்கான நிதி ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடம் இருந்து பெறப்பட்டவுடன் கட்டுமானப் பணிகள் துவக்கப்படும். மேலும் 17.12 கி.மீ நீளத்திலான சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து கலங்கரை விளக்கம் வரையிலான வழித்தடப் பகுதிக்கு ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவி பெறுவதற்கான முயற்சியை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகின்றது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகரத்தை உலகத்தரத்துக்கு இணையாக மேம்படுத்த பல்வேறு துறைகளின் சார்பில் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும், மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில், சென்னை பெருநகரத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டு வருகிறது. எனவே தான், இன்று சென்னை மாநகரம் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து ஈர்க்கும் ஒரு பெருநகரமாக, அனைத்து நவீன வசதிகளுடன்

கூடிய புதுமையான நகரமாக உருவெடுத்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். குறிப்பாக, மெட்ரோ இரயில் திட்டம் சென்னை மக்களுக்கும், சென்னைக்கு வந்து செல்லும் வெளியூர் பயணிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் அனைத்து அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும், பணியாளர்களுக்கும், உழைப்பாளர் நண்பர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் அறிவித்தபடி கோயம்புத்தூர் மாநகரத்தில் புதிய மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த பணிக்கான நிதியினை ஜெர்மன் நிதி நிறுவனமான Kfw வழங்குகிறது.

மேலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் IIஇன் கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வழித்தடம் நான்கை மாற்றியமைத்து, கலங்கரை விளக்கம் முதல் வடபழநி, போரூர் வழியாக பூந்தமல்லி வரை எடுத்துச் செல்வதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியையும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இது தவிர, விமான நிலையத்துடன் முடிவடையும் மெட்ரோ இரயில் பாதையை வண்டலூர் அருகில் உள்ள கிளாம்பாக்கம் கிராமத்தில் அமைக்கப்பட உள்ள புறநகர் பேருந்து நிலையம் வரை நீட்டிப்பு செய்து சென்னை நகரில் உள்ள துரித போக்குவரத்து அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதற்கான சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் 1இன் கீழ் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் 45 கி.மீ. நீளத்திலான வழித்தடங்களிலும் 9.05 கி.மீ. நீளத்திலான நீட்டிப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் மற்றும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள 107.55 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் கட்டம் IIஇன் பணிகள் அனைத்தும் நிறைவடையும் நேரத்தில், சென்னை பெருநகர் உலகத்தரத்திலான போக்குவரத்து கட்டமைப்பை பெற்று நாட்டிலேயே முதன்மை நகரமாக மாறிவிடும். சென்னை பெருநகரத்திற்குள் எந்த ஒரு பகுதியிலிருந்தும் மற்றொரு பகுதிக்கு எளிதாகவும், விரைவாகவும், சென்றடைய இந்த பொது போக்குவரத்து வசதி பெரிதும் பயன்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சென்னை நகரம் போக்குவரத்து நெரிசலில்லா நகரமாகவும் உருவாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

மேலும், சென்னை பெருநகர் பகுதியில் மெட்ரோ இரயில் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக சுமார் 80 ஆயிரம் கோடி முதலீடு வரும் ஆண்டுகளில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தில் கட்டம் II இன் கீழ் செய்யப்படவுள்ளது. இவ்வளவு பெரிய அளவிலான முதலீட்டால், சென்னை பெருநகர் பகுதியில் பெருமளவிலான பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதோடல்லாமல், வேலைவாய்ப்பு வசதிகளும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே இத்தகைய சிறப்பு மிக்க சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை இங்கு செயல்படுத்துவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்திற்கும், நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான துறைக்கும், இத்திட்டத்திற்கு நிதி பங்களிப்பு வழங்கிய ஜப்பான் அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமைக்கும் மீண்டும் ஒரு முறை எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

I once again thank the Ministry of Housing and Urban Affairs, the Department of Economic Affairs of Government of India and the Government of Japan and Japan International Co-operation Agency for extending full support for implementing this prestigious Chennai Metro Rail Project.

இந்த விழாவை சிறப்புற நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நல் உள்ளங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

வளர்க புரட்சித் தலைவரின் புகழ்!

தொடர்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்*
25.05.2018 அன்று சென்னை, எழும்பூர் மெட்ரோ இரயில் நிலையத்தில்
நேரு பூங்காவிலிருந்து சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் மற்றும்
சின்னமலை முதல் ஏ.ஜி.–டி.எம்.எஸ். வரையிலான
மெட்ரோ இரயில் சுரங்கப்பாதைகளில் பயணிகள்
சேவையைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை

சமய நல்லிணத்திற்கு முன்மாதிரியான மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி தரணி போற்றும் தங்கத் தாரகை! தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக மாற்றிய காவல் தெய்வம்! அனைத்து தமிழ்நாட்டு மக்களையும் தன் குழந்தைகளாக நினைத்த உன்னதத் தலைவி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

ரமலான் நோன்பு திறக்கும் இந்த இனிய இஃப்தார் நிகழ்ச்சியில் உங்கள் உடன்பிறப்பாக கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள கழக ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஓ.பன்னீர் செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட தலைமை இமாம் திருவல்லிக்கேணி பள்ளிவாசல் ஹாஜி சையத் முகமது அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள திரு.குலாம் முகமது மெஹடிகான் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மரியாதைக்குரிய சையத் மொய்னுதீன் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள ஆற்காடு இளவரசர் மரியாதைக்குரிய முகம்மது அலி அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற ஆற்காடு இளவரசி மரியாதைக்குரிய சாயீதா பேகம் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள சட்டப் பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் திரு.தமிமுன் அன்சாரி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மரியாதைக்குரிய திருமதி. பாத்திமா முசப்பர் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள சட்டப் பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. தனியரசு அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மரியாதைக்குரிய அமதுல் ஆஃதிபா அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மரியாதைக்குரிய முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பூவை எம்.ஜெகன்மூர்த்தி அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இருக்கின்ற திரு. அபுபக்கர் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள திரு. வை.ஜவஹர் அலி அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மரியாதைக்குரிய பேராயர் டாக்டர் மா.பிரகாஷ் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அ.அன்வர்ராஜா அவர்களே! சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்களே!

நன்றியுரை ஆற்ற இருக்கின்ற அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர் திரு. அ.தமிழ்மகன் உசேன் அவர்களே! மேலும் இங்கு வருகை தந்துள்ள தலைமைக் கழக நிர்வாகிகளே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மாவட்டக் கழகச் செயலாளர்களே! கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! தோழமைக் கட்சித் தலைவர்களே மற்றும் பிரதிநிதிகளே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

அரங்கத்தில் வீற்றிருக்கின்ற தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்களே! ஊடகத் துறை நண்பர்களே! இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே!

திருக்குரான் அருளப்பட்ட புனித ரமலான் மாதத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இஸ்லாமிய பெருமக்கள் ரமலான் மாதத்தில் மேற்கொள்ளும் நோன்பிற்கு தனிச் சிறப்புகள் உண்டு. நோன்பு என்பது ஏழைகளின் பசிக் கொடுமையை சுயமாக அறிந்து கொள்ள விழைகின்ற ஆன்மிகத் தேடல் ஆகும்.

“அனாதை ஆனாலும், உறவினர் ஆனாலும், ஏழை ஆனாலும், அவர்களுக்கு உணவளிப்பது பெரியதோர் நற்பணியாகும்” என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

“தொழுகையை நிலை நிறுத்துங்கள்” என்று சொல்லும் ஒவ்வொரு இடத்திலும் “ஏழைகளுக்கு வழங்குங்கள்” என்பதையும் சேர்த்தே வலியுறுத்துகிறது திருக்குர்ஆன்.

வசதி உள்ளவர்கள் ஒவ்வொருவரும் ஏழைகளுக்கு வழங்கவேண்டிய ‘ஜக்காத்’தை கடமையாக்கியதும் இந்த

மாதத்தில்தான். அது மட்டுமல்ல, தெய்வத் தத்துவத்தையும், சகோதர மனப்பான்மையையும், மக்கள் மனத்தில் விதைப்பது இந்த ரமலான் மாதத்தில்தான். இஸ்லாம் அன்பின் வழியில் ஒற்றுமையை வலியுறுத்துகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அனைத்து மக்களையும் தம் மக்களாக நினைத்து, ஒற்றுமையை மட்டுமே வேதமாக கருதி செயல்பட்டதன் விளைவாகத்தான், தமிழ்நாட்டு மக்கள் மத, இன வேறுபாடுகள் இல்லாமல் மற்ற மாநில மக்களுக்கு உதாரணமாக வாழ்ந்து வருகிறார்கள். தொழுகை, நோன்பு, தர்மம் ஆகியவைதான் ஒருவனுக்கு ஆன்ம நிறைவைத் தரும் என்று பல இடங்களில் அறிவுறுத்தும் பெருமகனார் நபிகள் நாயகம் ஸல் அவர்கள் தொழுகை, நோன்பு, தருமம் ஆகியவற்றைவிட ஒரு சிறந்த செயல் ஒன்று இருப்பதாகக்கூறுகிறார்.

“மக்களிடையில் சமரசம் செய்து வையுங்கள். மக்களிடையில் உறவுகளை சீர்குலைப்பதே அழிவிற்குக் காரணம் ஆகும்” என்கிறார் பெருமகனார் அவர்கள்.

பெருமகனாருடைய வாக்கு, இந்தக் காலத்திற்கும் எத்தனை பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதை உணர்கிற பொழுது, இஸ்லாத்தின் பெருமையும் அருமையும் நமக்கு தெள்ளத் தெளிவாகிறது.

ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கிற எந்த செயலையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை.“குழப்பம் செய்வது கொலையைவிட கொடியதாகும்” என்கிறது திருக்குரான். எனவே, நாட்டில் குழப்பத்தை உண்டாக்குபவர்களை இஸ்லாம் மிகக் கடுமையாக கண்டிக்கிறது. “இறைவன் உனக்கு உபகாரம் செய்திருப்பது போல நீயும் உபகாரம் செய்” என்கிறது திருக்குரான். இஸ்லாமிய சமுதாயத்தை சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மகளிருக்கு உதவுவதற்காக மாவட்ட அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள்

மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்காக ஒன்றுக்கு ஒன்று (1:1) என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை, மாண்புமிகு அம்மா அவர்களால் 2012–2013 முதல் இருமடங்காக உயர்த்தப்பட்டு ஒன்றுக்கு இரண்டு (1:2) என்ற விகிதாச்சாரத்தில் 20 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிருவாக மானியம் 2 கோடியாக உயர்த்தி ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்காக புனரமைப்பு மானியமாக ஆக ஆண்டுதோறும் ரூ60 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு வரும் நிர்வாக மானியம் ரூ30 இலட்சமாக உயர்த்தப்பட்டு, ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

உலமா ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை மாண்புமிகு அம்மா அவர்களால் 2,600 ஆக உயர்த்தப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களால் 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்காக வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் கூறியபடி உலமாக்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

பள்ளிவாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 3 கோடி ரூபாயில் ஒரு தொகுப்பு நிதி (Corpus fund) உருவாக்கப்பட்டுள்ளது.

புனித ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க அரசின் சார்பில் அரிசி வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் 2001ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டு புனித ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க தமிழ்நாடு முழுவதும் உள்ள **3,000**க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களுக்கு **5,145** மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

நாகூர் தர்கா சந்தனக்கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக்கட்டைகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ரமலான் நோன்பு நமக்கு சொல்லும் பல செய்திகளில் 'நம்பிக்கை' என்ற செய்தியை மிகவும் முக்கியமான செய்தியாக நான் கருதுகின்றேன்.

"எவர் ரமலானில் முழுநம்பிக்கையுடன் நோன்பு நோற்கிறாரோ அவரது முன்பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன", என்று நபிகள் நாயகம் கூறுகின்றார்கள். நம்பிக்கை தான் நமது வாழ்க்கை. நம்பிக்கை தான் நம்மை உயர்த்தும். நம்பிக்கை தான் நம்மை வளமாய், நலமாய் வாழவைக்கும். அதே நம்பிக்கை தான் நமது பாவங்களையும் நிச்சயம் அழிக்கும் என்பது நோன்பு நமக்கு சொல்லும் செய்தியாகும். இங்கு எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு நாள் இஸ்லாமிய பெரியவர் ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது வழியில் வாடிய முகத்துடன் சிலர் இறைவனை வணங்கிக் கொண்டிருந்தனர். "நீங்கள் யார் ? உங்களின் வாட்டத்திற்கு காரணம் என்ன ?" என்று அந்த இஸ்லாமிய பெரியவர் அவர்களைப் பார்த்து கேட்டார்.

அதற்கு அவர்கள் "நாங்கள் நரகத்திற்கு அஞ்சி இறைவனை வணங்கிக் கொண்டிருக்கிறோம்" என்றனர். அதற்கு அந்த பெரியவர் "நரகத்திற்கு அஞ்சி இறைவனை வணங்குகிறீர்களே !

உங்களை அல்லா நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுவாராக !" என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றார். செல்லும் வழியில் இன்னும் சிலரை கண்டார். அவர்களின் உடல் இளைத்து வெளுத்து காணப்பட்டனர்.

அவர்களிடம் இந்த பெரியவர் “உங்களின் இந்த நிலைக்கு என்ன காரணம் ?,” என்று கேட்டார். அதற்கு அவர்கள் “நாங்கள் சொர்க்கத்தின் மீது ஆசை வைக்கிறோம். இதை இறைவனின் கவனத்திற்கு எடுத்துச் செல்ல இறைவனை வணங்குகிறோம்” என்றனர்.

அதற்கு அந்த பெரியவர், “உங்களுக்கு இறைவனின் கவனம் இந்த வணக்கத்தினால் மட்டுமே கிடைக்கவேண்டும் என்றில்லை. அல்லா அவர்களே உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவார்,” என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றார்.

மீண்டும் அவர் தனது பயணத்தை தொடர்ந்தார். வழியில் இன்னும் சிலரைக் கண்டார். அவர்கள் முகப்பொலிவுடன் காட்சியளித்தனர். “நீங்கள் யார் ?” என்று கேட்டார் அந்தப் பெரியவர். அதற்கு அவர்கள் “நாங்கள் நரகத்திற்கும் அஞ்சவில்லை, சொர்க்கத்தையும் விரும்பவில்லை. அல்லாவின் விருப்பப்படி எது கிடைத்தாலும் அதனை ஏற்றுக்கொள்கிறோம். கிடைத்ததை பிறருடன் பகிர்ந்துக் கொள்வோம். அல்லாவின் அன்புதான் எங்களின் உள்ளத்தில் ஆட்சி செய்கிறது”, என்று நம்பிக்கையுடன் கூறினார்கள்.

அதனைக் கேட்ட அந்தப் பெரியவர் மிகவும் மகிழ்ந்தார். “நீங்கள்தான் தன்னல நோக்கமின்றி தவம் செய்யும் தூயவர்கள்” என்று கூறி அந்த இடத்தை விட்டு அகன்றார். எவர் ஒருவர் தன்னலமின்றி இறைவனின் மீது முழு நம்பிக்கை வைத்து, அவர் அளிப்பவைகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு பகிர்ந்து கொள்கிறார்களோ ! அவர்களே இறைவனின் அன்பினை முழுமையாக பெற்ற தூயவர்கள் ஆவார்கள். நமக்கு தேவையானது எது என்று இறைவன் எண்ணுகிறோரோ, அதனை நமக்கு தவறாமல் அளிப்பார். “இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை” என்ற பாடல் இதைத்தான் வலியுறுத்துகிறது.

சமய நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியான மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. எனவே, மதமும் ஆன்மிகமும் ஒற்றுமைக்கு உரமாக இருக்க வேண்டும் என்றும்,

அந்த உரத்தில்தான் அனைத்து மக்களும் வளமாகவும், நலமாகவும் வாழ வேண்டும் என்றும், இந்த இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியின் மூலம் எல்லாம் வல்ல இறைவனை உளமார வேண்டுகிறேன்.

இந்த நிகழ்ச்சியினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க! அண்ணா நாமம்! வளர்க! மாண்புமிகு புரட்சித்தலைவரின் புகழ்! தொடர்க! மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்
நடத்தப்பட்ட இப்தார் நோன்பு திறப்பு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்*
ஆற்றிய உரை (07.06.2018)

ரூ.2,247 கோடி வறட்சி நிவாரணமாக வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு!

இந்த சூழலில் இந்த அருமையான தீர்ப்பைப் பெற்றதை அத்தனைபேரும் இணைந்து கொண்டாடுகின்ற இந்த நிகழ்வாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற பொதுக்கூட்ட நிகழ்ச்சியிலே மாவட்டத்தினுடைய செயலாளர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே!

தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.துரைக்கண்ணு அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர், கழக அமைப்புச் செயலாளர் டாக்டர் கோபால் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளர் திரு.பாரதிமோகன் அவர்களே!

பூம்புகார் சட்டப்பேரவை உறுப்பினர், தெற்கு ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளர் திரு.பவுல்ராஜ் அவர்களே!

சீர்காழி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.பாரதி அவர்களே!

மயிலாடுதுறை சட்டப்பேரவை உறுப்பினர், ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர், கழக அமைப்புச் செயலாளர் திரு.முருகுமாறன் அவர்களே!

கூட்டத்திற்கு தலைமை தாங்கி, அருமையாக சிறப்புரையாற்றிய முன்னாள் அமைச்சர், மாவட்டக் கழகத்தின் அவைத்தலைவர் திரு.ஜீவானந்தம் அவர்களே!

முன்னாள் அமைச்சர், கழக இணைச்செயலாளர் திரு.கே.ஏ.தனபால் அவர்களே! மாவட்ட கழக இணைச் செயலாளர் சகோதரி செல்வி மீனா அவர்களே! முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர் திரு.விஜயபாலன் அவர்களே! திரு.செல்லையன் அவர்களே! எம்.ஜி.ஆர் மன்ற மாவட்டச் செயலாளர் ஆத்தூர் திரு.செல்வராஜ் அவர்களே! மாவட்ட அம்மா பேரவை செயலாளர் திரு.நற்குணம் அவர்களே! மாவட்ட மகளிர் அணிச் செயலாளர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி.சக்தி அவர்களே!

மாவட்ட விவசாய அணிச் செயலாளர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வீராசாமி அவர்களே! மாவட்ட வழக்கறிஞர் அணிச் செயலாளர் திரு.துரைசாமி அவர்களே! மாவட்ட வழக்குரை பிரிவு செயலாளர் திரு ஆர்.பரந்தாமன் அவர்களே, மற்றும் கழகத்தினுடைய நிர்வாகிகள் திரு.ஜி.நாகரத்தினம் அவர்களே, மரியாதைக்குரிய திரு.எஸ்.ஆர்.சிவபெருமான் அவர்களே, மரியாதைக்குரிய எஸ்.கணேசன் அவர்களே, மரியாதைக்குரிய நாகூர் ஹமான் ஹாஜா அவர்களே, திரு.சுதாகர் அவர்களே, மரியாதைக்குரிய

டாக்டர் முகுந்தன் அவர்களே, மரியாதைக்குரிய ரத்னபாண்டியன் அவர்களே, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ராசிமணி அவர்களே, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.மூர்த்தி அவர்களே. முன்னாள் எம்.எல்.ஏ. திரு.ரங்கநாதன் அவர்களே, முன்னாள் எம்.எல்.ஏ. திரு.எ. நடராஜன் அ வர்களே, முன்னாள் எம்.எல்.ஏ. திரு.கே. கலையரசன் அவர்களே, மற்றும் ஒன்றிய கழகத்தினுடைய செயலாளர்கள் மரியாதைக்குரிய ஜெயராமன் அவர்களே, மரியாதைக்குரிய ராஜமாணிக்கம் அவர்களே, மரியாதைக்குரிய சந்தோஷ்குமார் அவர்களே, மரியாதைக்குரிய ராஜேந்திரன் அவர்களே, மரியாதைக்குரிய தமிழரசன் அவர்களே, மரியாதைக்குரிய குணசேகரன் அவர்களே, மரியாதைக்குரிய கிரிதரன் அவர்களே, மரியாதைக்குரிய பாலசுப்பிரமணியன் அவர்களே, மரியாதைக்குரிய சிவா அவர்களே, மரியாதைக்குரிய ராதாகிருஷ்ணன் அவர்களே, மற்றும் கழகத்தினுடைய நிர்வாகிகள் மரியாதைக்குரிய தங்க கதிரவன் அவர்களே, பக்கிரிசாமி அவர்களே, திரு.ஜி.கே.செந்தில்நாதன் அவர்களே, திரு. எழிலரசு அவர்களே, திரு. எல்.ரமேஷ்பாபு அவர்களே, தேர்வு கழகத்தினுடைய செயலாளர் திரு.ரவி அவர்களே, திரு.ஜி.ராமமூர்த்தி அவர்களே, திரு.எம்.சி.பாலு அவர்களே, திரு.ஜி.கிருஷ்ணமூர்த்தி அவர்களே, திரு.அப்துல் ஹாசித் அவர்களே, திரு.டி.சௌரிராஜன் அவர்களே, மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் திரு.எஸ்.பாபு அவர்களே, திரு.ஷேக் அய்ப் அவர்களே, திரு.எஸ்.நாகராஜன் அவர்களே, ஆர்.கண்ணகி அவர்களே, திருமதி சங்கீதா அவர்களே, முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன் அவர்களே, திரு.ஏ.கே.சந்திரசேகரன் அவர்களே, திரு.மாறன் அவர்களே, திரு.கே.எஸ்.எஸ்.செல்வராஜ் அவர்களே, திரு.சண்முகம் அவர்களே, மற்றும் மேடையிலே வீற்றிருக்கின்ற கழக முன்னோடி நிர்வாகிகளே, கழகத்தினுடைய அனைத்துமட்ட நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, கழக உடன்பிறப்புக்களே, சகோதரிகளே, விவசாய பெருங்குடி மக்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே,

அனைவருக்கும் முதற்கண் எனது நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்கி,

காவேரி பிரச்சினை ஒரு சாதாரண விஷயமல்ல. கிட்டத்தட்ட 38 ஆண்டுகாலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பிரச்சினைக்கு இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் தீர்வு எட்டப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நாகை, திருவாரூர், திருச்சி மாவட்டம் போன்ற டெல்டா பகுதி விவசாய பெருங்குடி மக்கள், வேளாண் பெருமக்கள் இந்த காவேரி நீரை முழுமையாக பயன்படுத்தி வாழ்வாதாரத்தை அமைத்துக் கொண்டார்கள். 38 ஆண்டுகாலம் தமிழக விவசாய பெருங்குடி மக்களும், பல்வேறு கட்சித்தலைவர்களும் இந்த நீரை பெறுவதற்காக போராடினார்கள். இதிலே முக்கியமாக போராடி பங்கு வகித்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். யார் வேண்டுமானாலும் போராடலாம், ஆனால் யார் போராடினால் தீர்வு கிடைக்கும் என்பது மக்களுக்குத் தெரியும். அந்தத் தீர்வை பெற்றுத் தந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும்தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1970இல் இந்தப் பிரச்சினை வந்தது. அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்தது. 1971இல் சட்டமன்றம், மேலவை ஆகிய இரண்டு அவைகளிலுமே நிதிமன்றத்திலே வழக்கு தொடரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில், அன்றைய முதலமைச்சராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கருணாநிதி அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார். ஆனால் 1972இல் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார், எவ்வளவு drama பாருங்கள், 1971இல் சட்டமன்றத்திலும், மேலவையிலும்,

வழக்கு தொடர வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தீர்மானத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கை 1972இல் சட்டமன்றம், மேலவை ஆகிய இரு அவைகளுக்கும் தெரிவிக்காமலேயே வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்கின்றார். ஏன் ? அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் சிக்கலிலே சிக்கிக் கொண்டு தவித்துக் கொண்டிருந்த நேரம், அப்பொழுது மத்தியிலே ஆட்சியில் இருந்த மரியாதைக்குரிய முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், நீங்கள் வாபஸ் பெறாவிட்டால், நடப்பது வேறு என்று எச்சரிக்கை விடுத்ததன் காரணமாக, கருணாநிதி, இரண்டு அவைகளுக்கும் தெரியாமலேயே, வாபஸ் பெற்றுக்கொண்டு, விவசாயிகளுக்கு துரோகம் இழைத்தவர் கருணாநிதி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு காலம் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அதற்குக் காரணம் அவர்கள்தான். அன்றைக்கு ஒழுங்காக வழக்கை நடத்தியிருந்தால், நமக்கு தீர்வு கிடைத்திருக்கும், விவசாயிகளினுடைய பிரச்சினை தீர்ந்திருக்கும். இன்றைக்கு அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று பேசுகின்றார்கள், walking போவது போல் ஊர், ஊராக நடைப்பயணம் போய்க் கொண்டிருக்கிறார். ஏன் அன்றைக்கு வாபஸ் வாங்கினீர்கள் ? எத்தனையோ கூட்டத்தில் பேசினோம், அதற்கு பதிலே கிடையாது. அவர்கள் அன்றைக்கு தவறு செய்தார்கள். அன்றையதினம் பிரதமராக இருந்தவர் எச்சரிக்கை விடுத்ததன் காரணமாக, தமிழக மக்களைப் பற்றி கவலையில்லை, தமிழக விவசாயிகளைப் பற்றி கவலையில்லை, தான் பிழைத்தால் போதும் என்று கருதி, வழக்கை வாபஸ் பெற்றது அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கு பிறகுதான், 1983இல், தமிழ்நாடு காவிரி நீர் பாசன விவசாய விளைபொருள் நல உரிமை பாதுகாப்பு சங்கம், நடுவர் மன்றம் அமைக்க உச்சநீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல்

செய்கிறார்கள். அதில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1986ல் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலத்திலே அந்த வழக்கோடு தமிழக அரசும் இணைத்துக் கொண்டது. அதற்குப் பிறகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1986ல் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசிற்கு கடிதம் எழுதுகின்றார். ஆக, நடுவர் மன்றம் அமைப்பதற்கு காரணமாக இருந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நிரூபித்துக் காட்டுகின்றார். அவர் மறைவிற்குப் பிறகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்து சட்டப் போராட்டம் நடத்துகின்றார்கள். அவருடைய ஆட்சிக்காலத்திலே, நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்பு வந்தது. அந்த இடைக்கால தீர்ப்பை, மத்திய அரசிதழிலே வெளியிடச் செய்தார்கள். நமக்கு 205 டி.எம்.சி. அந்த இடைக்கால தீர்ப்பில் கிடைக்கப் பெற்றது. அதன் பிறகு, நடுவர்மன்றம் இன்றைக்கு அந்த இறுதித் தீர்ப்பை வழங்க வேண்டும். அந்த காலகட்டத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியிலே ஆட்சி, மாநிலத்திலும் ஆட்சி, ஏதாவது செய்தார்களா என்றால், எதுவுமே செய்யவில்லை. 05.02.2007இல் நடுவர்மன்ற ஆணையத்தின் இறுதி தீர்ப்பு வருகிறது. அந்த இறுதி தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா ? அதுவும் இல்லை. 19.02.2007இல் கருணாநிதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டுகிறார், அந்தக் கூட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அம்மா தெரிவித்த கருத்தை அதிலே வலியுறுத்தப்படுகின்றது. நீங்கள் மத்தியிலும் ஆட்சி, மாநிலத்திலும் ஆட்சியில் இருக்கின்றீர்கள், இந்த சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு, உடனடியாக, நடுவர் மன்ற ஆணையம் வழங்கிய இறுதி தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடுங்கள் என்று கோரிக்கை வைத்தோம், அதுமட்டுமல்ல, அதிகாரம் படைத்த காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைக்க வேண்டும்

என்று வலியுறுத்தினோம். நடுவர் மன்ற ஆணையத்திலே நமக்கு ஏதாவது பாதகமான அம்சங்கள் இருந்தால், அதை உச்சநீதி மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளலாம் என்ற கருத்தையும் வலியுறுத்தினோம். அதையெல்லாம் அவர்கள் பொருட்படுத்தவேயில்லை. இதனால், உடனடியாக கேரள அரசு 23.04.2007இல் நடுவர் மன்ற ஆணையத்தில் எங்களுக்கு சரியான தீர்ப்பு கிடைக்கவில்லை என்று உச்சநீதிமன்றத்தில், வழக்கைத் தொடர்ந்தார்கள். அதைத் தொடர்ந்து, 24.04.2007இல் கர்நாடகா அரசும், எங்களுக்கு நடுவர் மன்ற ஆணையத்தினுடைய இறுதி தீர்ப்பு திருப்தியில்லை, எங்களுக்கு பாதகமாக அமைந்திருக்கிறது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார்கள். அதற்குப் பிறகு, அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, 5வது மாதம் 2007இல், உச்சநீதிமன்றத்திலே வழக்கை தொடர்ந்தார்கள். ஆக, இடைப்பட்ட காலம் 2 மாதகாலம் இருந்தது. இரண்டு மாதகாலத்திலே உண்மையிலேயே, சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளிடத்திலே, பாசம், அன்பு இருந்திருந்தால், நமக்கு கிடைக்கவேண்டிய இறுதி தீர்ப்பு கிடைத்திருக்கிறது, இந்த தீர்ப்பை வைத்து அரசிதழிலே வெளியிட்டு, காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் அமைத்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை. இன்றைக்கு ஸ்டாலின், மத்தியிலே சரியான அழுத்தம் கொடுக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். நீங்களும் 2007இல் மத்தியில் ஆட்சியில், அதிகாரத்தில் இருந்தீர்கள், தீர்ப்பு வந்து 2 மாதகாலம் என்ன செய்தீர்கள் ? அப்பொழுது அழுத்தம் கொடுத்திருக்கலாம் அல்லவா ? உச்சநீதிமன்றம் செல்கின்றவரை ஏன் காத்திருந்தீர்கள் ? அந்த 2 மாதகாலத்தில் அழுத்தம் கொடுத்திருந்தால், நிச்சயமாக நடுவர்மன்ற ஆணையத்தினுடைய இறுதி தீர்ப்பின்படி, மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டிருக்கும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்கும், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டிருக்கும், நமக்கு கிடைக்கவேண்டிய நீர் கிடைத்திருக்கும். யார் செய்தது துரோகம் ?

திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது துரோகம், கருணாநிதி துரோகம் செய்தார், மறுக்க முடியுமா ?

இன்றையதினம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 22 நாட்கள் ஒரு மாநிலத்தினுடைய உரிமையைப் பெறுவதற்காக, இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழர்களுடைய, மக்களுடைய கருத்துக்களை இன்றைக்கு டெல்டா பாசன விவசாயிகளுடைய உரிமைக்குரல் நாடாளுமன்றத்திலே ஒலித்தது, 22 நாட்கள் தொடர்ந்து ஒலித்தது, மறக்க முடியுமா ? நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இன்றைக்கு நாடாளுமன்றமே நடக்காத அளவிற்கு ஒத்திவைக்கின்ற அளவிற்கு அழுத்தம் கொடுத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை யாரும் மறுக்க முடியாது. மத்தியிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி, அதிகாரத்தில் இருந்தபொழுது, கட்சியைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாக இருந்தபொழுது ஏன் செய்யவில்லை ? நீங்கள் செய்திருந்தால் நமக்கு விடிவுகாலம் பிறந்திருக்கும். உங்களுக்கு எதற்கு ஆட்சி, அதிகாரம் மக்கள் கொடுத்தார்கள் ? இப்படிப்பட்ட பிரச்சினை வருகின்றபொழுது, அதை சரியாகக் கையாண்டு மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் உங்களை நாடாளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அமைச்சர்களாகவுமாக்கி, அதிகாரத்தை கொடுத்தார்கள். ஆனால், அதையெல்லாம் மறந்து விட்டார்கள். தங்களுடைய சுய லாபத்திற்காக, அதிகாரத்திற்காக நீங்கள் பதவியிலே அமர்ந்து கொண்டிருந்தீர்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியல்ல, இந்திய வரலாற்றிலேயே ஒரு மாநில பிரச்சினைக்காக, மாநில மக்களுடைய ஒட்டுமொத்த பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எடுத்து வைப்பதற்காக 22 நாட்கள் தொடர்ந்து அவையை ஒத்திவைத்து வரலாறு படைத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். 2006–லிருந்து 2011 வரைக்கும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு சரியாக நடத்தவில்லை, ஆனால்

அவர்கள் நம்மைப் பார்த்து, வேகமாக செய்யவில்லை, துரிதமாக செய்யவில்லை, சரியான முறையில் சட்டவல்லுநர்களை வைத்து வாதாடவில்லை என்றெல்லாம் குற்றச்சாட்டை எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின், செயல்படாத தலைவர் அந்தக் கட்சிக்கு செயல்தலைவர் என்று வைத்திருக்கின்றார்கள், அவர் நம்மைப் பற்றி ஏளனமாக பேசுகிறார். நான்காண்டு காலம் எங்கே போனீர்கள் ?, 2007 முதல் 2011 வரை கிடப்பிலே போட்டுவிட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2011இல் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் மீண்டும் இதற்கு உயிரூட்டினார்கள். அப்பொழுது இருந்த பாரதப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தார், பலமுறை கடிதம் எழுதினார், விடிவு காலம் பிறக்கவில்லை. தீர்ப்பை நீங்கள் மத்திய அரசிதழில் வெளியிடுங்கள் என்று பலமுறை மத்திய அரசிற்கு கடிதம் எழுதினார், பிரதமரை நேரிலே சந்தித்து கோரிக்கை வைத்தார். கேட்கவில்லை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதி மன்றத்திலே வழக்கைத் தொடர்ந்தார். அந்த வழக்கின் அடிப்படையில், உச்சநீதிமன்றம், நடுவர் மன்றம் வழங்கிய இறுதி ஆணையை அரசிதழிலே வெளியிடவேண்டும் என்ற தீர்ப்பை பெற்ற தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதற்காக தஞ்சையிலே, விவசாய பெருங்குடி மக்கள் எல்லாம் சேர்ந்து பாராட்டு விழா நடத்தினார்கள். அப்பொழுது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், நானும் ஒரு விவசாயி என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள். ஆகவே, விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அம்மாவிற்கு பொன்னியின் செல்வி என்ற பட்டத்தை கொடுத்தார்கள். இதெல்லாம் ஒரு வரலாற்று சாதனை, ஒரு முதலமைச்சர் எப்படி இருக்கவேண்டும், என்ற வரலாற்றை பெற்றவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். 2013ல் வரலாற்று சாதனையை பெற்றார்கள். இன்றைக்கு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், நடுவர்மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழிலே வெளியிட்டார்கள். அதற்குப் பிறகு, நடுவர்மன்ற

ஆணையத்தில் என்னென்ன அம்சங்கள் குறிப்பிட்டதோ, அதையெல்லாம் மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும், காவிரி மேலாண்மை ஆணையம், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு அமைக்க வேண்டும், எதையுமே அமைக்கவில்லை, கிடப்பிலே போட்டுவிட்டார்கள். பலமுறை அப்பொழுது இருந்த பிரதமருக்கு நேரிலேயும், கடிதங்கள் மூலமாகவும் வலியுறுத்தினார்கள், எதையுமே செய்யவில்லை. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஒரு வழக்கை தொடர்ந்தார்கள், அந்த வழக்கிற்குத்தான் இப்பொழுது தீர்வு காணப்பட்டிருக்கிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்போராட்டத்தின் வாயிலாக இந்த வெற்றியை பெற்றுத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் பெரும் பங்கு வகித்திருக்கின்றது. ஒட்டுமொத்த விவசாயிகளினுடைய பிரச்சினையை தீர்த்து வைத்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி தீர்ப்பு மத்திய அரசின் அரசிதழிலே வெளியிடப்பட்டிருக்கிறது. காவேரி மேலாண்மை வாரியத்திற்குப் பதிலாக காவேரி மேலாண்மை ஆணையம் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு, இரண்டும் அமைக்க வேண்டுமென்று உச்சநீதிமன்றம் கூறிய தீர்ப்பின் அடிப்படையிலே இன்றைக்கு மத்திய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு, காவேரி மேலாண்மை ஆணையத்திற்கும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவிற்கும் உறுப்பினர்கள் கொடுத்துவிட்டோம். அதேபோல, பாண்டிச்சேரியில் இருக்கின்ற அரசும் இரண்டு குழுவிற்கும் உறுப்பினர்களைக் கொடுத்துவிட்டார்கள். கேரள அரசும் இரண்டு குழுவிற்கும் உறுப்பினர்களைக் கொடுத்துவிட்டார்கள். கர்நாடக அரசு உறுப்பினர்களை கொடுக்க மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசை வலியுறுத்தி நான் நேற்று பேசினேன்,

நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகின்றபொழுது, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றேன். பருவகாலம் துவங்கி, மழை பொழிந்து கொண்டிருக்கிறது, விவசாயிகள் தண்ணீரை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இரண்டு குழுவையும் அமைத்து, அந்தக் குழுவின் முதற்கூட்டம் நடைபெற்று, அதன் வாயிலாக, பல ஆண்டுகாலம் போராடிக் கொண்டிருந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு தேவையான தண்ணீரை எங்களுக்குத் தாருங்கள் என்று அவர்களை நாங்கள் வலியுத்தியிருக்கின்றோம். மாண்புமிகு மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் திரு.நிதின்கட்கரி அவர்களை சந்திக்கின்றபொழுது, இது நீண்டகாலப் பிரச்சினை, உச்சநீதிமன்றத்தின் வாயிலாக மத்திய அரசு நல்ல முடிவை எடுத்து குழுவை அமைத்திருக்கிறது, விரைவாக குழுக் கூட்டத்தைக் கூட்டுங்கள், அந்தக் குழு கூட்டத்தின் வாயிலாக எங்களுக்கு கிடைக்க வேண்டிய நீரை வழங்குவதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று அவர்களிடம் கோரிக்கை வைத்தோம்.

ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் இவ்வளவு பிரச்சினையை கையாண்டு நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். 16 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அதிகாரத்தில் இருந்தார்கள், மத்தியிலே. என்றைக்காவது காவேரி பிரச்சினைக்காக குரல் கொடுத்தார்களா ? என்றைக்காவது போராட்டம் நடத்தினார்களா ? எதுவுமே செய்யவில்லை. மத்தியிலே ஆட்சி, மாநிலத்திலே ஆட்சி, உரிமைக்காக குரல் கொடுத்தீர்களா ? ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா ? எதுவுமே கிடையாது. அதுமட்டுமல்ல. இன்றைக்கு மாண்புமிகு அம்மா கட்டிக்காத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தினுடைய உரிமையை பெறுவதற்காக, விவசாயிகளுடைய நீண்டகால பிரச்சினையை தீர்வு காண்பதற்காக விரைவாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அனைத்து மாவட்ட

தலைநகரங்களிலும் உண்ணாவிரதம் இருந்து விவசாயிகளுடைய குரலை ஒலிக்கச் செய்து நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சி என்பதை யாராலும் மறுக்க முடியாது. அதுமட்டுமல்ல, உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலே மத்திய அரசு காலம் தாழ்த்தியதன் விளைவாக, இன்றைக்கு நாம் வழக்கை தொடர்ந்தோம். ஆகவே, இன்றைக்கு விவசாயிகளின் உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற அரசு, அம்மாவினுடைய அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். நீதி அவமதிப்பு வழக்கை நாம் தொடர்ந்தோம். இவர்கள் ஏதாவது செய்தார்களா ? ஒன்றும் செய்யவில்லை. 2007லிருந்து ஆட்சியில் இருந்தீர்கள், தமிழ்நாட்டு விவசாயிகளுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக எந்த நடவடிக்கையாவது எடுத்தீர்களா ?

இன்றைக்கு தீர்ப்பு வரும் என்று எதிர்பார்த்தார்கள், நிச்சயமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அம்மாவினுடைய அரசும் நிச்சயமாக தீர்ப்பை பெற்றுவிடாது என்று கருதி, ஊர், ஊராக போய் நடைப்பயணம் மேற்கொண்டார்கள், இந்த நடைப்பயணம் எல்லாம் 2007லே தொடங்கியிருக்கலாமே, 2007லே தொடர்ந்திருந்தால் உங்கள் தயவோடு மத்தியிலே ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள், நினைத்திருந்தால் அப்பொழுது நீங்கள் சாதித்திருக்கலாம், அப்பொழுது விவசாயிகளுடைய பிரச்சினையை தீர்த்திருக்கலாம், பல ஆண்டுகளாக தீர்க்கமுடியாத ஒரு பிரச்சினையை தீர்ப்பதற்கு வாய்ப்பு 2007இல் கிடைத்தது. ஆனால், மக்களைப் பற்றி சிந்திக்கவில்லை, விவசாயிகளைப் பற்றி சிந்திக்கவில்லை, அப்பொழுதெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இன்றைக்கு மத்திய அரசு காலம் தாழ்த்தியதன் காரணமாக, அதை கண்டிக்கின்ற வகையிலே, நாம் அனைத்து மாவட்ட தலைநகரிலும் உண்ணாவிரதம் இருந்தோம். அவர்களுக்கும், நமக்கும் அதுதான் வித்தியாசம். நாம் மக்களைப் பற்றி, விவசாயிகளைப் பற்றி

சிந்திக்கின்றோம். அவர்களுக்குப் பிரச்சினை வருகின்றபொழுது கைகொடுக்கின்றோம். பிரச்சினையை தீர்ப்பதற்காக போராடுகின்றோம். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு அரசுதான் அம்மாவினுடைய அரசு. மக்களுக்காக சேவை செய்கின்ற இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு காவேரி நதிநீர் பிரச்சினையில் தீர்ப்பை பெற்றுத்தந்த ஒரே கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான், சட்டப் போராட்டத்தின் வாயிலாக வெற்றியை தேடித் தந்ததும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த மண்ணிலேயிருந்து மறைந்திருக்கலாம், ஆனால் இன்றைக்கும் மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அதற்குக் காரணம், மெரினா கடற்கரையிலே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நினைவகம் அருகிலே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்துகொண்டு, விவசாயிகளுடைய நலன் காப்பதற்காக தொடர்ந்து 80 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்து வருத்திக் கொண்டவர். தனது இறுதி மூச்சு இருக்கின்றவரை விவசாயிகளுக்காக போராடினார் ஒவ்வொரு விவசாயிகளுடைய நெஞ்சத்திலும் நிலைத்து நிற்பார் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்பொழுதுகூட, ஸ்டாலின் சட்டமன்றத்தில் பேசினார். நீங்கள் ஜுன் 12ஆம் தேதி குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று சொன்னார். எல்லா விவசாயிகளுக்கும், மக்களுக்கும் தெரியும். அணையிலே நீர் இருந்தால், நிச்சயமாக நாங்கள் திறந்திருப்போம். போதிய நீர் இல்லை. இதை வைத்து அரசியல் செய்யலாம் என்று பார்க்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மு.க.ஸ்டாலின் நாங்கள் உரிய நேரத்திலே, டெல்டா பாசன விவசாயிகள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர்

அணையிலிருந்து சரியான நேரத்தில் தண்ணீர் திறந்தோம் என்று சொல்கின்றீர்களே, அப்படியென்றால், 20.8.1989ல்தான் உங்களுடைய ஆட்சியில் தண்ணீர் திறந்தீர்கள், 22.8.1990ல் தான் தண்ணீர் திறந்தீர்கள், 01.07.1999இல் தான் தண்ணீர் திறந்தீர்கள் 18.07.2007இல் தான் தண்ணீர் திறந்தீர்கள், 28.7.2009ல் தான் மேட்டூரிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்தீர்கள். மேட்டூரிலிருந்து 28.07.2010இல் பாசனத்திற்காக தண்ணீர் திறந்தீர்கள், இதெல்லாம் திமுக ஆட்சி காலத்தில் திறக்கப்பட்ட விவரம். யார் ஆட்சியில் இருந்தாலும், மேட்டூர் அணையில் போதுமான தண்ணீர் இருந்தால்தான் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியும். தண்ணீர் இல்லாதபோது, யார் ஆட்சியில் இருந்தாலும் திறக்க இயலாது. எல்லாமே போராடி, போராடி எல்லாவற்றிலும் தோல்வி கண்டுவிட்டார்கள். இதைவைத்து போராட்டம் செய்யலாம் என்று நினைத்தார்கள், அதுவும் முடியவில்லை, அதற்காக ஒரு வெளிநடப்பு செய்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக 2011லிருந்து கிட்டத்தட்ட ஐந்தாண்டு காலம், உரிய நேரத்தில் தண்ணீர் திறக்க முடியவில்லை. அப்படி தண்ணீர் திறக்க முடியாத நேரத்திலெல்லாம், டெல்டா பகுதியில் இருக்கும் விவசாய பெருங்குடி மக்கள்குறுவை சாகுபடி சரியான நேரத்தில் சாகுபடி செய்யவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு, குறுவை தொகுப்புத் திட்டத்தை கொடுத்தார்கள். ஆகவே, நிலத்தடி நீரை பயன்படுத்திகுறுவைசாகுபடியை செய்யலாம்என்று அம்மாவினுடைய அரசு விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான நிதியுதவி வழங்கப்பட்டது. அம்மா இருந்த காலத்திலே வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து, அம்மாவினுடைய அரசும் விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்பதற்காக, 115 கோடியே 67 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம், அம்மாவினுடைய அரசு அதை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது. சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இன்றைக்கு பல்வேறு வகையிலே உதவி செய்யவேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை

அறிவித்திருக்கிறோம். திமுக ஆட்சிக்காலத்தில் கொடுக்கவில்லை. இன்றைக்கு தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர், கரூர் மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்வதற்கு, மேட்டூர் அணையிலிருந்து இன்றைக்கு தண்ணீர் திறந்துவிட இயலாத காரணத்தால் குறுவை சாகுபடி திட்டத்தை அம்மாவினுடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டுமென்றால், 90 அடி தண்ணீர் இருக்க வேண்டும், அணையில் நீர் போதிய அளவு இல்லாததால் நீரை திறந்துவிட இயலவில்லை. நிச்சயமாக பருவமழை பெய்யும், நாம் நினைக்கின்ற அளவு மேட்டூர் அணை நிரம்பும், நமக்கு தேவையான நீர் நிச்சயம் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் வறட்சி நிவாரணமாக வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசுதான். இந்தியாவிலேயே பயிர் காப்பீட்டுத் திட்டம் அதிகமாக பெற்றுத் தந்த ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 27 கோடி அம்மாவினுடைய அரசு கொடுத்துள்ளது. நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக, சொட்டு நீர் பாசன முறையை அம்மாவின் அரசு இன்று நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். டிராக்டர் போன்ற வேளாண் கருவிகள் வாங்க இன்றைக்கு மானியம் மற்றும் உரமானியம் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. சிறு, குறு விவசாயிகள் வாங்கிய கூட்டுறவு கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது அம்மாவினுடைய அரசுதான்.

அதேபோல, நான் முதலமைச்சர் மட்டுமல்ல, விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் என்பதால் விவசாயி ரத்தத்தை மண்ணில் சிந்தி உழைப்பன் என்பதை நன்கு புரிந்ததால், அவர்களுக்கு எந்தெந்தவகையில் உதவி செய்ய முடியுமோ அத்தனை வழியிலும் அம்மாவினுடைய அரசு உதவி செய்யும் என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். கிடைக்கின்ற நீரை முழுமையாக சேமிக்க குடிமராமத்து திட்டம் கொண்டு வந்து, கடந்து ஆண்டு

ரூ.100 கோடி செலவில் 1,519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, பரீட்சார்த்த முறையில் திட்டத்தைக் கொண்டுவந்து, மாவட்டத்தின் பல இடங்களில் இருக்கின்ற குளங்கள் எல்லாம் தூர்வாரப்பட்டுள்ளது. தூர்வாரியதின் விளைவாக பொழிகின்ற மழை நீர், ஏரி, குளங்களிலே தேக்கி வைக்கப்பட்டுள்ளது, மேலும், கிடைக்கின்ற வண்டல் மண் விவசாய பெருங்குடி மக்களுக்கு இயற்கை உரமாக பயன்படுகின்றது. இந்தத் திட்டம் சிறப்பாக இருக்கின்றது என்று பல விவசாய சங்கத்தைச் சார்ந்தவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் இதை விரிவுபடுத்துங்கள் என்று கோரிக்கை வைத்ததன்விளைவாக, மீண்டும் இந்த ஆண்டு ரூபாய் 328 கோடி ஒதுக்கப்பட்டு, 1,511 ஏரிகள் தூர்வாரப்படும். இந்தத் திட்டத்தை முழுக்க, முழுக்க விவசாயிகளே நடைமுறைப்படுத்துகின்றார்கள், டெண்டர் கிடையாது. விவசாயிகள் 10 சதவீத பங்களிப்பு, 90 சதவீதம் அரசாங்கம் கொடுக்கிறது. இந்த திட்டத்தின் நோக்கம் ஏரிகளை ஆழப்படுத்துதல், கரையை பலப்படுத்துதல், ஏரிகள், வாய்க்கால்களை சுத்தப்படுத்துதல், உபரிநீர் வெளியேறும் கால்வாயை சுத்தப்படுத்துவது, மதகை சுத்தப்படுத்துவது போன்ற பணிக்காக ஒரு ஏரிக்கு எவ்வளவு தொகை வேண்டுமோ, ரூபாய் 1 கோடி வேண்டுமானாலும் அம்மாவினுடைய அரசு அந்த ஏரிக்கு ஒதுக்கியிருக்கிறது. அந்த ஏரி முழுவதும் செப்பனிடப்பட்டு, சீரமைக்கப்பட்டு, பொழிகின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் இருக்கக்கூடிய திட்டம் தீட்டப்படுகிறது, துவங்க இருக்கிறது, முழுக்க, முழுக்க விவசாயிகளோடு இணைந்து உருவாகிற திட்டம் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தப் பகுதிகளில் கடற்கரை ஓரத்தில், கடல் நீரெல்லாம் மழை நீரோடு கலந்துகொள்கிறது. எனவே, விவசாயம் கெட்டுப்போய் விடுகிறது. அந்த தண்ணீரை பாய்ச்ச முடியாத சூழ்நிலை. அப்படிப்பட்ட காலக்கட்டத்திலே, இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து ஆங்காங்கே தடுப்பணைகள் அமைக்கப்படும்.

உப்பு நீர், நன்னீரை மாசுப்படுத்தாமல் இருப்பதற்காக இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், பொழிகின்ற மழைநீர் வீணாகக் கடலிலே கலக்காமல் இருப்பதற்காக மூன்றாண்டு திட்டமாக அந்த திட்டத்தை எடுத்து, இந்த ஆண்டு முதல் அதை நிறைவேற்றவிருக்கிறது. இந்த மூன்றாண்டு திட்டத்திற்கு ரூபாய் 1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும், ஓடை, நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, பருவ காலங்களில் பொழிகின்ற மழைநீர் தேக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்வதற்கு தண்ணீர் தேக்கப்படுகிறது என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்தெந்த வகையிலே நீர் கிடைக்க வேண்டுமோ அந்த வகையில் நீர் கிடைப்பதற்காக அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்தவிருக்கின்றது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்ன செய்தார்கள்? நீங்கள் ஆட்சிக்கு வந்து என்ன செய்தீர்கள் என்று எதிர்க்கட்சித்தலைவர் கேட்கிறார்? அம்மாவினுடைய அரசுதான் இவ்வளவு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. நீங்கள் சென்று கிராமத்தில் பார்த்தால்தானே தெரியும். அதேபோல, இன்றைக்கு இந்தியாவிலேயே கல்வியில் ஒரு புரட்சி, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருப்பது தமிழ்நாட்டில்தான், வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. அம்மா அவர்கள் 65 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்தார்கள். அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்தது. ஆக மொத்தம், 76 அரசு கலைக் கல்லூரியைக் கொடுத்து ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், விவசாய தொழிலாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி படிக்க வேண்டுமென்பதற்காக 76 கல்லூரியை உருவாக்கித்தந்த அரசு அம்மாவினுடைய அரசு. வேளாண்மைக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, ஐ.டி. கல்லூரி கொடுத்திருக்கின்றோம்.

இப்படி பல்வேறு கல்லூரிகளை அரசின் சார்பாக துவங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகிறபொழுது, பின்தங்கிய மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி துவங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைத்திருக்கின்றேன். அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் அரசின் பல்வேறு துறைகளில், அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட துறை கல்வித் துறை. எந்தவொரு மாநிலத்தில், எந்தவொரு நாட்டில் கல்வி சிறக்கின்றதோ அந்த நாடு வளம் பெறும். எந்த நாட்டில் கல்வி கிடைக்கின்றதோ அந்த நாடு பொருளாதாரத்தில் மேம்படும், அங்கே அமைதி கிடைக்கும், பண்பு கிடைக்கும், உயர்வு கிடைக்கும். அனைத்தும் கிடைக்க வேண்டுமென்றால் கல்வி கிடைக்க வேண்டும். ஆகவே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மற்ற துறைகளைக்காட்டிலும் கல்வித் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்தார்கள். பல்கலைக்கழகத்தின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருந்த 41 உறுப்புக் கல்லூரிகள் அரசுக் கல்லூரியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 46.94 சதவிகிதம். இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் உயர்கல்வி அதிகமாக படிக்கின்றார்கள். இந்தியாவிலேயே உயர்கல்வியில் முதன்மை மாநிலம் தமிழ்நாடு. இதெல்லாம் ஸ்டாலின் கண்ணுக்குத் தெரியாது. ஏழை மாணவர்களுக்கு நல்ல கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காக காலணி, சீருடை, நோட்டுப் புத்தகம், பை, விலையில்லா சைக்கிள்கொடுத்து உதவினார்கள் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதுமட்டுமல்ல, அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வி கிடைப்பதற்காக விலையில்லா மடிக்கணினி அம்மா அவர்கள் கொடுத்தார்கள். யாரும் மறுக்க முடியுமா ? இதுவரை 36 இலட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுத்திருக்கின்றோம்.

அதேபோல இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான், மருத்துவத்துறையில், நம்முடைய தமிழ்நாடு அரசு மருத்துவர்கள், திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதியை சேர்ந்த இரண்டு கைகளையும் இழந்த நாராயணசாமி என்பவருக்கு, இறந்தவர் கையிலிருந்த கைகளை எடுத்து, பொருத்தி, ஸ்டான்லி மருத்துவமனையில் வரலாற்று சாதனை படைத்திருக்கிறோம். கிராமப்புற மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு ஆங்காங்கே அரசு சுகாதார நிலையத்தை உருவாக்கியிருக்கின்றோம். ஏழை, எளியவர்கள், விவசாயிகள் ஆகியோரின் நோய்களை கண்டறிய அனைத்து கிராமங்களிலும் மருத்துவ முகாம்களை அமைத்து, அவர்களுக்கு தேவையான சிகிச்சையை அளித்த அரசு அம்மாவினுடைய அரசு. அதுமட்டுமல்ல, நடமாடும் மருத்துவமனையை அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தி வரலாற்று சாதனை படைத்திருக்கிறது.

அதுபோல சாலை வசதி. கடந்த கால ஆட்சியில் எப்படி இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கின்றது? நெடுஞ்சாலைத் துறை மூலமாக எந்தளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யமுடியுமோ அந்தளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து எல்லா சாலைகளும் சீரமைக்கப்பட்டு இந்தியாவிலேயே சிறப்பான சாலைகளை அமைத்த மாநிலம் தமிழ்நாடு என்று சொல்கின்ற அளவிற்கு சிறப்பான சாலைகளை அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது. கிட்டத்தட்ட 40 மாநில சாலைகள், தேசிய நெடுஞ்சாலையாக தரம்உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 19 சாலைகள் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த மத்திய அரசால் ஒத்துக்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 21 சாலைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, அம்மாவினுடைய அரசு மத்திய அரசை கருத்துரு அனுப்பப்பட்டு, அதுவும் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கின்றது.

உட்கட்டமைப்பு சிறப்பாக அமைய, அம்மாவினுடைய அரசு நிறைய திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது.

அதேபோல, தடையில்லா மின்சாரத்தையும் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில்தான் கொடுத்திருக்கின்றோம். திமுக ஆட்சியில் எப்பொழுது மின்சாரம் வரும், எப்பொழுது போகும் என்று தெரியாது. ஆனால் அம்மா அவர்கள் பதவி ஏற்றவுடன் மூன்றே ஆண்டில் தடையில்லா மின்சாரத்தை வழங்குவேன் என்று சட்டமன்றத்தில் கூறி, கடுமையான முயற்சியின் காரணமாக தமிழகத்தில் தடையில்லாத மின்சாரத்தை அம்மாவினுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல உபரி மின்சாரமும் வழங்கிக் கொண்டிருக்கிறது. அந்தளவிற்கு மின்சாரத்தில் இன்றைக்கு சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றோம். ‘

அதேபோல, ஸ்டாலின், அம்மா ஆட்சி பொறுப்பேற்றவுடன், இந்த ஆட்சி பட்ஜெட் வரை நிற்குமா என்றார், பட்ஜெட் போட்டு முடித்துவிட்டோம். அதற்குப் பிறகு கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை நிறைவேற்றும் வரையாவது இந்த ஆட்சி தாக்குப் பிடிக்குமா என்றார். மக்களின் ஆதரவோடு, வெற்றிகரமாக மானியக்கோரிக்கையையும் நிறைவேற்றினோம். அப்புறம் 6 மாதத்தில் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்றார், ஒரு வருடம் முடிந்து விட்டது, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு ஸ்டாலின் இல்லை, ஓராயிரம் ஸ்டாலின் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசை அசைக்க முடியாது. இந்த இயக்கம் பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆரால் ஆரம்பிக்கப்பட்டு,புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கட்டிக்காக்கப்பட்ட இயக்கம். தொண்டர்கள் இருக்கும்வரை இந்த ஆட்சியை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றுக்கூட ஒரு நிகழ்ச்சியில் பேசினார், கருணாநிதி இருந்திருந்தால் செய்து காட்டியிருப்பார் என்று சொல்கிறார்கள், நானும் செய்து காட்டுவேன் என்கிறார், நீ என்ன செய்து காட்டுவாய் ? கட்சியை உடைக்க நினைத்தீர்கள், முடியவில்லை. சிலபேருக்கு ஆசை வார்த்தை காட்டி, மூளைச் சலவை செய்து, சில சட்டப்பேரவை உறுப்பினர்களை எங்களிடம் இருந்து பிரித்தீர்கள், அதற்கு சில விஷமிகளும் துணை போனார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்தபொழுது இந்த ஆட்சியிலே எவ்வளவோ அனுபவித்தீர்கள், உங்களுக்கு யார் என்று நன்றாக தெரியும், டிடிவி தினகரன். இவர் யார் கட்சிக்கு தொண்டு செய்தாரா, சிறைக்குச் சென்றாரா ? எதையுமே செய்யவில்லை, ஆனால், ஒருவருக்கு சொந்தக்காரர் என்ற ஒரு நிலைதான் இருந்தது. அதை வைத்துக்கொண்டு எவ்வளவு ஆட்டம் போட்டார்கள். எப்படி ஆட்டிப் படைத்தார்கள். இன்றைக்கு அப்படியல்ல, இன்றைக்கு கட்சிக்காரன் சுதந்திரமாக இருக்கின்றான். என்னைப்போல் ஆயிரம் பழனிசாமி உருவாகக்கூடும். நான் இன்று முதலமைச்சராக இருக்கின்றேன். என்னைப்போல் தொண்டர்களும் முதலமைச்சராக எதிர்காலத்திலே உயர்வார்கள். அதற்கு நாம் பாடுபடுவோம். நீங்கள் எவ்வளவு சதிவலைகள் பின்னினாலும், இந்த இயக்கத்தை அழிக்க முற்பட்டாலும், இருபெரும் தலைவர்களின் ஆன்மா இந்த ஆட்சியையும் கட்சியையும் காப்பாற்றும் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

மு.க.ஸ்டாலினுக்கு சட்டமன்றத்திலே எதிர்த்து பேசுவதற்கு தில் இல்லை. தில் இல்லை, தெம்பு இல்லை, திராணி இல்லை என்று சொல்கிறார். யாருக்கு, அவருக்குத்தான் இல்லை. நமக்கா இல்லை ? நாட்டு மக்கள் ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுத்தது எதற்காக ? சட்டமன்றத்திற்கு செல்லவேண்டும், சட்டமன்றத்திற்கு சென்றால்தான் நாட்டு மக்களுடைய பிரச்சினையை எடுத்து வைக்கமுடியும், பிரதான எதிர்க்கட்சியின் மூலமாக

நாட்டுப் பிரச்சனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு நடவடிக்கை எடுத்து, தீர்த்து வைக்க முடியும். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது, நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் சட்டமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டபொழுது, அம்மா அவர்கள் சிங்கம் போல் சட்டமன்றத்திற்கு தனியாக வந்தார்கள். கிட்டத்தட்ட 67 முறை ஆளும்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அம்மா அவர்களிடம் கேட்ட குறுக்குக் கேள்விகள் அனைத்திற்கும் பதில் சொன்னார்கள். எதிர்கட்சித் தலைவராக இருந்துகொண்டு, தன்னந்தனியாக ஒரு பெண், நாட்டு மக்களுடைய பிரச்சினையை சட்டமன்றத்தில் எடுத்து வைத்தார். அந்தத் துணிவுகூட உங்களுக்கு இல்லை. அம்மா அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள். உங்களால் முடிந்ததா ? வெளியில் போய் மாதிரி சட்டமன்றக் கூட்டமாம். அதற்கு எதற்கு ஓட்டுப்போட்டு மக்கள் உங்களை தேர்ந்தெடுத்தார்கள் ? நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைக்கக்கூடிய இடம் சட்டமன்றம். அந்த சட்டமன்றத்திலே நீங்கள் உங்களுடைய வினாக்களை எழுப்பலாம், அதற்குத் தேவையான பதிலைத்தர நாங்கள் தயாராகவிருக்கின்றோம். அதையெல்லாம் விட்டுவிட்டு, இந்த அரசின் மீது பழி சுமத்த வேண்டுமென்பதற்காக மாதிரிக் கூட்டம் நடத்தினீர்கள், மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உங்களை ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்து அனுப்பியது சட்டமன்றத்திற்கு, மாதிரி சட்டமன்றத்திற்கு அல்ல. ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே அம்மாவினுடைய அரசு செயல்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதுமட்டுமல்ல,இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சிக்காலத்தில் மீனவர்களுக்கு நிறைய திட்டத்தைக் கொடுத்திருக்கின்றோம். மீன்பிடி தடை காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தார்கள். பிறகு ரூபாய் நான்காயிரமாக

அம்மா அவர்கள் உயர்த்தினார்கள். அம்மாவினுடைய அரசு ரூபாய் ஐந்து ஆயிரமாக உயர்த்தியிருக்கிறது, மாதந்தோறும். இன்றைக்கு மீன்வளக் கல்லூரி திறக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் மீனவர் சமுதாய மாணவர்கள் படிப்பதற்காக 5 சதவீத ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்காக 50 சதவிகிதம் மானியம் கொடுக்கிறது. நாகை மாவட்டம், பூம்புகார் பகுதியிலுள்ள கிராமத்தில் முகத்துவாரம் தூர்வார அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். தரங்கம்பாடியில் ரூபாய் 120 கோடியில் மீன்பிடி துறைமுகம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
18.06.2018 அன்று மயிலாடுதுறை பொதுக்கூட்டத்தில்
நிகழ்த்திய உரை

கூட்டுறவுத் துறையின் மூலமாக பல்வேறு வகையான கடனுதவிகள் 37,32,626 நபர்களுக்கு ரூ.127.66 கோடி!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

சேலம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய மல்லியக்கரை மற்றும் கருப்பூர் புதிய கிளைகள் துவக்க விழா, கருப்பூர் துணை காவல்நிலைய துவக்க விழா மற்றும் எடப்பாடியில் மத்திய கூட்டுறவினுடைய புதிய கிளை துவக்க விழா, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்றப் பணிகள்

திறப்பு விழா, அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா, அத்தனை திட்டங்களுக்கும் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, துவக்கப்பட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த அற்புதமான நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி, தலைமையுரை ஆற்றிய நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறையினுடைய அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய செல்லூர் ராஜூ அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்றிய மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி மரியாதைக்குரிய சுகுமார் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே! மாநில கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு. இளங்கோவன் அவர்களே! இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் மதிப்பிற்கும் மரியாதைக்குரிய செம்மலை அவர்களே! சேலம் மேற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்களே! சேலம் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சக்திவேல் அவர்களே! வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி. மனோன்மணி அவர்களே! சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ராஜா அவர்களே! ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வெற்றிவேல் அவர்களே! ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய சின்னத்தம்பி அவர்களே! கெங்கவள்ளி சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய மருதமுத்து அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள் மரியாதைக்குரிய மாதேஸ் அவர்களே, கே.கே.மணி அவர்களே! நகர் மன்றத் தலைவர் திரு.கதிரேசன் அவர்களே! முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் மரியாதைக்குரிய ராமு அவர்களே! முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு.ராஜேந்திரன் அவர்களே!

எடப்பாடி மாவட்ட முன்னாள் ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு.மாரீசன் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற நம்முடைய மாநகரத்தின் ஆணையர் அவர்களே! காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களே! மற்றும் அதிகாரி பெருமக்களே! வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே! கழகத்திலே பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!_நன்றியுரை ஆற்றவிருக்கின்ற இணைப் பதிவாளர் மரியாதைக்குரிய ராஜேந்திர பிரசாத் அவர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி நாட்டு மக்களுடைய ஏகோபித்த ஆதரவை பெற்று, முதன்முதலாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நாள் இந்த நாள், 30.06.1977. அதிலிருந்து சுமார் 11 ஆண்டுகாலம் இந்த நாட்டு மக்களுக்கு அற்புதமான ஆட்சியைத் தந்தார்கள். பல்வேறு திட்டங்களை நாட்டு மக்களுக்கு வாரி வழங்கினார்கள். கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் முழுமையாக அவருடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது. அவருடைய மறைவிற்குப் பிறகு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து பணியாற்றி, 15 ஆண்டுகாலம் ஒரு நிலையான ஆட்சியை தமிழக மக்களுக்கு வழங்கிய பெருமை அம்மாவைச் சாரும். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்தார்கள். இன்றைக்கு தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் அனைத்திலும், அம்மாவினுடைய ஆட்சியில்தான் பெரும்பாலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இருபெரும் தலைவர்கள் உருவாக்கிய இயக்கம் இந்த இயக்கம். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை உருவாக்கி, முதன்முதலாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த இனிய நாளில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் பெருமை கொள்கின்றேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு புதிய திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டு, சில திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அதோடு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட ஒரு சிறப்பான நிகழ்ச்சியின் வாயிலாக, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு பயிக்கடன் வழங்குவது பற்றிச் சொன்னார்கள். வறட்சிக் காலத்திலே, விவசாயிகளுக்கு எந்தளவிற்கு உதவிகள் செய்தோம் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். வறட்சிக் காலத்தில், விவசாயிகளின் பயிர் கருகிய காரணத்தால், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக இந்திய வரலாற்றிலேயே அதிகமாக நம்முடைய தமிழகத்தில் தான், பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்காக ரூ.3,200 கோடி ரூபாயை பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை பத்திரமாக பாதுகாக்க கிடங்குகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களின் விலை வீழ்ச்சியடைகின்றபொழுது, அந்த விளைபொருட்களை கூட்டுறவு சங்கத்தால் கட்டப்பட்ட கிடங்குகளில் வைத்து, குறைந்த வட்டியிலே கடனைப் பெற்று, விலை ஏறுகின்றபொழுது அந்த விவசாயிகள் விற்பனை செய்து கொள்ளக்கூடிய வசதியை செய்து கொடுத்திருக்கின்றோம். இதற்கு முன்பாக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே அனைத்துத் தொகுதிகளிலும் கிடங்குகள் கட்டிக்

கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடக்க வேளாண் வங்கியில், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களை வைத்து கடனுதவி பெறலாம். அப்படிப்பட்ட திட்டத்தை அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். வேறு எந்த ஆட்சியிலும் கொண்டு வரவில்லை. ஏனென்றால் விவசாயிகளின் பணி தான் சிறந்த பணி.

கிட்டத்தட்ட 65 சதவிகிதம் விவசாயிகள் வாழ்கின்றார்கள், விவசாயத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் முதன்மையாக இந்த அரசு செயல்படுகின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதனால்தான், அந்த விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை இலவசமாகக் கொடுத்திருக்கின்றோம். சூரிய சக்தியில் இயங்கக்கூடிய மின் மோட்டார்கள் கொடுக்கின்றோம். சொட்டு நீர் பாசனக் கருவி கொடுக்கின்றோம். விவசாயிகள் வளர்க்கின்ற கால்நடைகள் நோய்வாய்ப் படுகின்றபொழுது அதற்கு சிகிச்சை அளிக்கக்கூடிய கால்நடை மருந்துவமனைகள் நிறைய திறந்திருக்கின்றோம், புதிய மருத்துவர்களை நியமித்திருக்கின்றோம். புதிய கால்நடை மருந்துக் கிடங்குகள் திறந்திருக்கிறோம். ஒரு அரசாங்கம் விவசாயிகளுக்கு என்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் அம்மாவின் அரசு செய்திருக்கிறது.

அதுபோல, ஆங்காங்கே ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளி தங்களுடைய நிலங்களுக்கு எருவாக, இயற்கை உரமாக இடுவதற்கான ஒரு நிகழ்ச்சி அம்மாவினுடைய ஆட்சியில்தான் உண்டு, வேறு எந்த ஆட்சியிலும் கிடையாது. அந்தக் காலத்தில் ஒரு லோடு மண் கொண்டு சென்றாலும் பிடிப்பார்கள், இன்றைக்கு அந்த நிலைமை கிடையாது. வீடுகட்டுவதற்குத் தேவையான மணலை அனுமதி வாங்கி அள்ளிக் கொள்ளலாம். இதையும் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கொடுத்திருக்கின்றோம். இப்படி, பார்த்துப் பார்த்து மக்களுக்கு வசதிகள் செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து, உங்கள் மூலமாகவும், அதிகாரிகள் மூலமாகவும் தெரிந்து, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மூலமாக தெரிந்து அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இன்றுகூட, ஊனமுற்றவர்கள் 90 நபர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் கொடுத்திருக்கின்றோம். இவையெல்லாம் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, அந்த சாதாரண மக்கள்கூட நல்லபடியாக பயணம் செய்ய வேண்டுமென்பதற்காக ஒரே நேரத்தில் இவ்வளவு நபர்களுக்குக் கொடுத்திருக்கின்றோம்.

அதேபோல, வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுத்திருக்கின்றோம். இலவச வீட்டு மனை இல்லாதவர்களுக்கு புதிய வீட்டு மனை தருகின்றோம். பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், நீண்ட, நெடிய நாட்களாக, பல ஆண்டுகளுக்கு முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் எல்லாம் மழை பொழிகின்றபொழுது, நீர் கசிகின்றது என்று கூறியதற்கு, அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்து சுமார் 45 ஆயிரம் வீடுகள் வருகின்ற நடப்பாண்டிலே கட்டித் தரப்படும், கூரையை உடைத்து, புதிய கான்கிரீட் கூரை அமைத்துக் கொடுக்கப்படும். கிராமத்திலே வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள்கூட பாதிக்கப்படுகிறார்கள் என்றால், அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால், அவைகளும் நிறைவேற்றித் தரப்படும்.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் பல்வேறு பிரச்சினைகள். பசுமை வழிச்சாலையை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துச் செல்கிறார்கள். அம்மா அவர்கள் இருக்கும்பொழுது, எடப்பாடியில் புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னேன்,

இன்றைக்கு முழுவதும் முடிக்கப்பட்டுள்ளது. சாலை அமைத்த காரணத்தால், கனரக வாகனங்கள் நகரத்திற்குள் வராமல், புறவழிச் சாலை வழியாக செல்வதால் விபத்து குறைகின்றது, பாதுகாப்பான பயணம் ஏற்படுகிறது. சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்றால் எடப்பாடியில் பாதி ஊரே இருக்காது. நகருக்குள் எடுத்துக்கொண்டால், சாலையின் இருபுறங்களிலும் 15 மீட்டர் எடுத்தால் பாதி வீடே இருக்காது. அம்மா அவர்களிடம் சொன்னவுடன், ஆர்.எஸ்.புரத்திலிருந்து புறப்பட்டு, நெடுங்குளம் ரோடு, நெடுங்குளம் ரோட்டிலிருந்து கூலாம்பட்டி ரோடு, கூலாம்பட்டி ரோட்டிலிருந்து ஜலகண்டபுரம் ரோடு, ஜலகண்டபுரம் ரோட்டிலிருந்து கொங்கணாபுரம் ரோடு, கொங்கணாபுரம் ரோட்டிலிருந்து சங்ககிரி ரோடு, என பல்வேறு சாலைகளை இணைக்கின்ற மிகப்பெரிய திட்டம், இந்தத் திட்டங்களெல்லாம், நம்முடைய எடப்பாடி மக்கள் மனமுவந்து நிலம் கொடுத்த காரணத்தினால், அருமையான சாலை அமைக்கப்பட்டு இன்றைக்கு அந்த சாலையை திறந்து வைத்துள்ளேன்.

ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமென்று சொன்னால், உட்கட்டமைப்பு மிக முக்கியம், நல்ல சாலைகள் இருக்க வேண்டும், அப்பொழுதுதான் புதிய, புதிய தொழிற்சாலைகளை அமைக்கமுடியும். இன்றைக்கு இலட்சக்கணக்கான இளைஞர்கள் படிக்கின்றார்கள், இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில்தான் உயர்ந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்தில் இருந்தது, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில், திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்தது. அவர்கள் வீரவசனம் பேசுவார்களேயொழிய, அவர்களுக்கு கொள்கையே கிடையாது. அவர்களுக்கு அதிகாரமும், பதவியும்தான் முக்கியம். முதலில் பாரதீய ஜனதாவை மோசம் என்று சொன்னார்கள், இந்த இடத்தில் பேசக்கூடாது, இருந்தாலும் சில விளக்கங்களை கொடுப்பது பொருத்தமாக இருக்கும்.

முதலில் முடியாது என்றார்கள், கூட்டணியிலிருந்து விலகியவுடன் ஒட்டிக் கொண்டார்கள். ஒரு 5 வருடம் ஒட்டினார்கள். அதேபோல, காங்கிரஸிலும் இடம் பெற்றிருந்தார்கள். 14 ஆண்டுகாலம் மத்தியில் ஆட்சி, அதிகாரத்தில் இருந்தீர்களே, என்ன கொண்டு வந்தீர்கள்? எந்தத் திட்டங்களையாவது தமிழகத்திற்கு கொண்டு வந்திருக்கின்றீர்களா? புதிய திட்டமே வரவில்லை. ஒரு சில திட்டங்களைத் தவிர எதுவுமே வரவில்லை. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் திரு.வாஜ்பாய் அவர்கள் இந்திய நாட்டின் பிரதமராக இருந்தபொழுது சாலைகளையெல்லாம் சிறப்பாக கொண்டு வரவேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு.டி.ஆர்.பாலு தான் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார்கள். அப்பொழுது 3,023 ஹெக்டர் நிலத்தை கையகப்படுத்தினார்கள். இப்பொழுது நாங்கள் சாலை அமைக்க இடம் எடுத்தால், மக்கள் பாதிப்பதாகச் சொல்கிறார்கள்.

சாலை அமைக்க நிலம் கொடுப்பவர்களுக்கு புதிய நில எடுப்பு சட்டத்தின்படி நல்ல இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படுகிறது. தென்னை மரமென்றால் கிட்டத்தட்ட ரூபாய் 35 ஆயிரத்திலிருந்து ரூபாய் 40 ஆயிரம் வரை கொடுக்கின்றோம். நானே என்னுடைய தோட்டத்தில் குத்தகைக்கு விட்டதில், ஒரு தென்னை மரத்திற்கு வருடத்திற்கு ரூபாய் 900 தான் கொடுக்கிறார்கள். ஆனால், நாங்கள் கிட்டத்தட்ட ரூபாய் 35 ஆயிரம் கொடுக்கின்றோம். குறைந்தபட்சம் 6 சதவிகித வட்டி கணக்கிட்டாலும் கிட்டத்தட்ட ஒரு மரத்திற்கு ரூபாய் 2 ஆயிரம் ஆகிறது, பாடுபடாமலே ரூபாய் 2,000 அரசாங்கம் கொடுக்கிறது, யாருக்கும் இழப்பு கிடையாது, மாமரம், நெல்லிக்காய் மரம், பனைமரம் என்று என்னென்ன மரங்கள் இருக்கிறது அந்தந்த மரத்திற்குத் தக்கவாறு விலை நிர்ணயித்து இழப்பீட்டுத் தொகை கொடுக்கின்றார்கள். மாட்டுக் கொட்டகையாக இருந்தாலும் கொடுக்கிறார்கள். வீடு இருந்தால்,

வீட்டிற்குத் தகுந்த இழப்பீட்டுத் தொகை கொடுக்கின்றார்கள். இப்பொழுது பழைய முறையிலெல்லாம் கிடையாது, இன்றைக்கு புதியமுறையை கையாண்டு, மார்பிள் பதித்தால், சதுர அடிக்கு ரூபாய் 300/–, ரூபாய் 400/– கொடுக்கின்றோம், எந்த மாற்றமும் கிடையாது. அதுமட்டுமல்ல, சாலை அமைக்கின்ற இடத்தில் அரை ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலம் எடுக்கப்பட்டால், அவர்களுக்கு அரசாங்கம் இடம் கொடுத்து, அங்கே பசுமை வீடும் கட்டித்தரும். சாலை வசதி, தண்ணீர் வசதி அனைத்தும் செய்து தருகிறோம். எந்தவிதத்திலும் விவசாயிகள் பாதிக்கப்படுவது கிடையாது.

ஆகவே, வேண்டுமென்றே, திட்டமிட்டு, சில அரசியல்வாதிகளும், சில அமைப்புகளும் பொய்யாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பக்கத்திலிருக்கின்ற மலையை எப்படி எடுக்க முடியும். எப்படிப் பொய் பேசுகிறார்கள், பச்சைப் பொய் அத்தனையும், நாட்டு மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள். ஏனென்றால், அரசியல் ரீதியாக யாரும் எங்களைச் சந்திக்க முடியவில்லை, எங்களை எதிர்த்து யாரும் எதுவும் பண்ணமுடியவில்லை, அரசியல் ரீதியாக நேரடியாக எதிர்க்க முடியவில்லை. நாம் கொண்டு வருகின்ற திட்டத்தை எதிர்க்கின்றார்கள். எதிர்காலத்தில் மக்களுக்குத்தான் நன்மை பயக்கின்ற திட்டம்.

இன்றைக்குக்கூட தினகரன் பத்திரிகையில் வருடத்திற்கு 16,214 பேர் சாலை விபத்தில் இறக்கின்றார்கள் என்று பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட வருடத்திற்கு 64,000 சாலை விபத்துக்கள் ஏற்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். இதனால் எவ்வளவு உயிர் இழப்பு ஏற்படுகிறது. இவ்வளவு நபர்கள் இறக்கின்றார்கள் என்று சொன்னால் அவர்களை காப்பாற்றுவது தப்பா ? சாலை விபத்துக்களைத் தடுப்பதற்கு, நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய சாலை அமைக்க வேண்டும். தமிழகத்திற்கு இந்தச் சாலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள். சேலம்

மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் மாவட்டச் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளை விரிவு படுத்தி, தரம் உயர்த்தி, நல்ல முறையில் விபத்தில்லா சாலையை அமைப்பதற்காக அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு கொடுக்கின்றார்கள். இதுவரைக்கும் இவ்வளவு நிதி கொடுத்த வரலாறே கிடையாது. சுமார் 75 ஆயிரம் கோடி தமிழகத்திற்கு தருவதாக மத்திய அரசு நமக்கு தெரிவித்திருக்கிறது.

இன்றைக்கு எத்தனை பாலம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். சேலம் மாவட்டத்தில் மட்டும் ஒரு இரயில்வே கேட்டில்கூட இனி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. சேலம், ஓமலூர் தாலுகா இரயில்வே கடவு எண்.7 சாலையில் பாலம் கட்டுவதற்கு ரூபாய் 18 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டிருக்கிறது. ஓமலூர் தாலுகா, ஓமலூர் இரயில்வே கடவு எண்.10 சாலையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் வழங்கப்பட்டிருக்கிறது. ஓமலூர் தாலுகா, அருகே இரயில்வே கடவு எண்.15இல் ரூபாய் 19.6 கோடி மதிப்பீட்டில், மதிப்பீடு தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. மேட்டூர் தாலுகா காரிப்பட்டி மற்றும் குட்டப்பட்டி இரயில்வே கடவு எண்.18இல் மேம்பாலம் கட்டுவதற்கு ரூபாய் 24.87 கோடி மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. மேட்டூர் தாலுகா இரயில்வே கடவு எண்.21–ல் சாலை மேம்பாலம் ரூபாய் 7.6 கோடி மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. ஆக, இங்கிருக்கிற அனைத்து இரயில்வே கடவுகளிலும் உயர்மட்டப்பாலம் கட்டப்படும். அதேபோல, சேலம் டவுனில், லீ பஜார், செவ்வாய்பேட்டையில் பாலம் முடிவுறும் தருவாயில் இருக்கிறது. சேலம் முள்ளுவாடிகேட் இரயில்வே பாலம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது, மற்றொன்று கட்டப்பட்டு வருகிறது. வாழப்பாடி இரயில்வே கேட்டில் மேம்பாலத்திற்கு நிலம் எடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதேபோல கல்வித் துறையைப் பொறுத்தவரை, தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 49 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

இலவச வீட்டுமனைப் பட்டா ரூபாய் 225.93 கோடி மதிப்பீட்டில் 82,433 நபர்களுக்கு கொடுத்திருக்கின்றோம். சுயமாக மகளிர் தொழில் செய்வதற்காக, மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு, கடனுதவி 86,437 மகளிருக்கு ரூபாய் 2,045 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் மூலமாக பல்வேறு வகையான கடனுதவிகள் 37,32,626 நபர்களுக்கு ரூபாய் 12 ஆயிரத்து 776 கோடியே 31 இலட்சம் மதிப்பீட்டில் கொடுத்திருக்கின்றோம். இத்தனையும் நாங்கள் செய்திருக்கின்றோம், இன்னும் செய்யப்போகிறோம்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமும், எதிர்க்கட்சிகளும் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த ஆட்சி மீது குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் அரசியல் ரீதியாக எதிர்கொள்ள முடியவில்லை. சிறப்பான திட்டங்களை இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அவர்கள் கண்ட கனவை எல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, வேலைக்குச் செல்கின்ற பெண்களுக்கெல்லாம், ரூபாய் 25 ஆயிரம் ரூபாய் மானியத்தில் கிட்டத்தட்ட 3,34,000 நபர்கள் அம்மா இருசக்கர வாகனம் பெறுவதற்கு பதிவு செய்திருக்கிறார்கள், அத்தனைபேருக்கும் படிப்படியாக அம்மாவினுடைய அரசு கொடுக்க இருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவமனை, எடப்பாடியில் ரூபாய் 4 கோடியில் கட்டி முடித்திருக்கின்றோம். கோனேரிப்பட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், நங்கவள்ளி ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். கால்நடை மருந்தகம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். சமுத்திரத்தில் நானே நேரடியாக வந்து ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்துச் சென்றேன். ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய பகுதியிலே சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டிக் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு. அதேபோல, ஆங்காங்கே திருமண மண்டபங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு, ஏழை, எளியவர்களின் அரசு. அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதுதான் எங்களுடைய இலட்சியம். அந்த இலட்சியக் கனவை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு அம்மாவினுடைய அரசு எடப்பாடி நகரத்திற்கு தேவையான நிதிகளை ஒதுக்கி, அம்மாவே அடிக்கல் நாட்டி, அம்மாவே திறந்து வைத்து, இன்றைக்கு தங்குதடையில்லாமல் எடப்பாடி நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவேரி தண்ணீர் கிடைக்கிறது.

அதேபோல, எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கி, அம்மாவே அடிக்கல் நாட்டி, அம்மாவே திறந்து வைத்து, இன்றைக்கு தேவையான குடிநீர் வசதி செய்து கொடுத்திருக்கின்றோம். இப்பொழுது மேச்சேரி, நங்கவள்ளி ஒன்றியத்தில் இருக்கின்ற மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட

காவேரி தண்ணீர் வழங்குவதற்கு அம்மா அவர்கள் அறிவித்தார்கள், அம்மாவினுடைய அரசு அதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்னும் 3, 4 மாதங்களில் அந்தப் பணி நிறைவு பெற்று, தண்ணீர் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட, 48 ஆண்டு காலம் காவேரி நதிநீர் பிரச்சினையை தீர்க்க முடியாத போராட்டத்திற்கு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி அவருடைய வழியிலே இன்று நம்முடைய அரசு உச்சநீதிமன்றத்தின் மூலமாக நல்ல தீர்ப்பைப் பெற்று, இன்றைக்கு காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரண விஷயமல்ல, வரலாற்றுச் சாதனை. அப்படிப்பட்ட வரலாற்றுச் சாதனையை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு படைத்திருக்கிறது, நமக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. காவேரி மேலாண்மை வாரியம், ஜூலை இரண்டாம் தேதி, முதல் கூட்டம் கூட்டவிருக்கிறது. பல ஆண்டுகாலமாக விவசாயிகள் போராடி, தீர்வு காணமுடியாத நிலையில், அம்மா அவர்களால் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையிலே இன்றைக்கு வெற்றி பெற்று, அதை அமல்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். மிகப் பெரிய பிரச்சினை இன்று தீர்ந்திருக்கிறது. நாம் பெறுவதற்கு தேவையான நீரைக் கொடுப்பதற்கு காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் ஏற்படுத்துவதற்கு, அம்மாவினுடைய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து, சட்டப்போராட்டத்தின் மூலமாக தீர்வு காணப்பட்டு, இன்றைக்கு அமல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, விவசாய பெருங்குடி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. இதன் மூலமாக 28 மாவட்ட மக்களுக்கு நிலையான காவேரி தண்ணீர் கிடைக்கிறது. இலட்சக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதற்கு உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகுதியில் மட்டுமல்ல, 234 தொகுதிகளிலும் பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எடப்பாடி சட்டமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகி, அதற்குப் பிறகு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆசி பெற்று, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகி, அதற்குப் பிறகு, 2016ஆம் ஆண்டு கூடுதலாக பொதுப்பணித் துறையும் கொடுத்து, அதற்குப் பிறகு அம்மாவினுடைய மறைவிற்குப் பிறகு முதலமைச்சர் பதவியும் நம்முடைய தொகுதிக்கு கொடுத்திருக்கின்றார்கள். இன்று எந்த இடத்திற்குச் சென்றாலும், எடப்பாடி என்று சொன்னால் முதலமைச்சர் தொகுதியா ? என்று கேட்கின்ற அளவிற்கு மக்கள் அங்கீகாரம் கொடுத்திருக்கின்றார்கள். அந்தப் பெயர் நம்முடைய தொகுதிக்கு கிடைத்திருக்கின்றது. இந்த பெயரும், புகழும் நீங்கள் கொடுத்தது என்பதை இந்த நேரத்திலே நினைவு கூர்ந்து வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
30.06.2018 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். அதனால்தான் தமிழகம் இன்றைக்கு கல்வியிலே இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கக்கூடிய அளவிற்கு வளர்ச்சியைப் பார்க்க முடிகிறது.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்